உதயன்

சுடர் 31 கதிர் 052 வள்ளுவர் ஆண்டு 2047 தை 03, ஞாயிற்றுக்கிழமை 17.01.2016

மகாராஜா பொதிகள் சேவை
UK யில் Watford, Eastham, Wembley ஆகிய நகரங்களில் எமது பொதிகள் சேகரிப்பு நிலையங்கள் விரிவாக்கப்பட்டுள்ளது.
01 Kg கட்டணம் . 449/=
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், 021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 - 4930200

# காணாமற்போனோரை கொன்றவர்கள் யார்?

## பிரதமர் இதனை வெளிப்படுத்தவேண்டும் என்று அவர்களது உறவினர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜனவரி 17
இராணுவத்தினரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டவர்கள், துணை ஆயுதக் குழுக்களால் கடத்தப்பட்டவர்கள் இறந்துபோனார்கள் என்றால், அதற்குக் காரணமானவர்கள் யார் என்பதையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்த வேண்டும். இதற்கு அரசு பதில்சொல்ல வேண்டும். இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் தற்போதும் விடுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தானது தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தியுள்ளது.
இவ்வாறு காணாமற்போனோர் தொடர்பில் கரிசனை கொண்டுள்ள சிவில் அமைப்புக்கள் நேற்றுக் கருத்து வெளியிட்டுள்ளன.

பக். 49

## மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 17
உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளது. மசகுஎண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 29.88 அமெரிக்கடொலர்களாகக் குறைந்துள்ளது.
ஒரு டொலரின் மதிப்பு இலங்கை ரூபாவில் 145 ரூபாவாக உள்ளது. இலங்கைக்கு ஒரு லீற்றர் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 27 ரூபா 25 சதம் மாத்திரமே செல

பக். 06

## போதைப் பாவனையை கட்டுப்படுத்த தொலைபேசி எண்

விரிவு பக். 02

## முதல்வருடன் உறுப்பினர்கள் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17
வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், முதலமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை 9.30 மணிக்கு, முதலமைச்சரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.
வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் கடந்த 11 ஆம் திகதி தனியான சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தனர். இதன்போது நேரம் போதாமை காரணமாகப் பல விடயங்களுக்கு முதலமைச்சர் பதில்அளிக்கவில்லை.

பக். 49

## அரசமைப்புக்கு மக்கள் கருத்தறியும் செயல்முறை நாளை முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 17
புதிய அரசமைப்பு உருவாக்குவது தொடர்பாகப் பொதுமக்களின் கருத்துக்களை உள்வாங்கும் நடவடிக்கை இந்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
இவ்வாறு புதிய அரசமைப்பு உருவாக்குவது தொடர்பான மக்கள் கருத்துக்களை உள்வாங்கும் குழு தெரிவித்துள்ளது.
இந்த நடவடிக்கை, முதற்கட்டமாகக் கொழும்பு மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.
இது தொடர்பில் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளசெய்தியில் குறிப்

பக். 47

## ஒரே குரலில் தமிழர்கள் பேசுவதே சிறப்பானது

*பிரிட்டன் அமைச்சர் கொழும்பில் தெரிவிப்பு*



கொழும்பு, ஜன.17
ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வு என்பது ஜெனிவா தீர்மானம் குறித்த இலங்கையின் அர்ப்பணிப்பை

பக். 49

## முன்னாள் அரச உயர்பீடத்தினருடன் தாஜுதீன் கொலையாளிகள் தொடர்பு

*கொலை நடந்த அன்று தொலைபேசி உரையாடல்*

கொழும்பு, ஜன. 17
பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுதீனின் கொலையுடன் தொடர்புடைய பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், இதனுடன் சம்பந்தப்பட்ட முன்னாள் அரசின் உயர்பீட நபர் ஒருவருக்கும் இடையே, கொலை

பக். 49

முச்சந்தி முரளி



இதுக்கு முதல்ல பதிலைச் சொல்லுங்கோ...

## அரசியல் கைதிகள் விடுதலையை துரிதமாக்க மைத்திரிக்கு வழிகள்

*சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 17
சட்டமா அதிபர் திணைக்களத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்தும் சில வழிமுறைகள் கண்டறியப்பட்டுள்ளன.
இந்தப்புதியவழிமுறைகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவரது ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் நடைமுறைப் படுத்தப்படும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கடந்த வியாழக்

பக். 49



## சர்வதேச அர்ப்பணிப்பால் இலங்கையில் போர் முடிவு

*எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.17
பரந்துபட்ட சர்வதேச அர்ப்பணிப்பின் மூலமே, இலங்கையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
இவ்வாறு நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம்

பக். 06

## மீள்குடியேற்ற அமைச்சரின் குற்றச்சாட்டு முழுப் பொய்

*தமிழ் அரசியல் கைதிகள் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 17
சகல விடயங்களையும் தெரிந்துகொண்டு மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் பொய்யான குற்றச்சாட்டை முன்வைக்கின்றார் என்று தமிழ் அரசியல் கைதிகள் தமது உறவினர்கள் ஊடாகத் தெரிவித்துள்ளனர்.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்றுவதற்காக அவர் இவ்வாறு செயற்படுவதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தேசிய தைப் பொங்கல் விழா

பக். 49

## கட்சி தாவினாலும் அமைச்சர் பதவி கிடையாது

கொழும்பு, ஜன. 17
மகிந்த அணியிலிருந்து, ஆளும் கட்சிக்குத் தாவுபவர்களுக்கு இனிமேல் அமைச்சர் பதவிகள் வழங்குவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபாலவும், பிரதமர் ரணில் விக்

பக். 49




www.sdb.lk
நிலையான வைப்புகளுக்கு
உயர்ந்த வட்டி
ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு
10.75% உச்ச வருட வட்டி
வ.தே.வ. 8.98%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வி.) | 7.25% | 8.25% | 8.75% |
| வ.தே.வ. | 7.45% | 8.42% | 8.75% |

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1 மில்லியன் வரை 15மு வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கு அதி உயர் வட்டியும் உரித்தாகும்.
ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்
011 5 411 411
SDB

# நகைக் கடையை உடைத்து 22 பவுண் நகைகள் திருட்டு

*விசுவமடுவில் சம்பவம்*

கிளிநொச்சி,ஜன.17
விசுவமடுபகுதியில்நகைக்கடை ஒன்றை உடைத்து பல லட்சம் ரூபா பெறுதியான நகைகள் கள வாடப்பட்டுள்ளன என்று கிளி நொச்சி பொலிஸார் தெரிவித் தனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன் தினம் இரவு இடம் பெற்றுள் ளது.

கிளிநொச்சி விசுவமடு புளியடிச் சந்தியில் உள்ள நகைக் கடை யிலேயே நகைகள் திருடப் பட்டுள்ளன. உரிமையாளரால் இரவு 9 மணியவில் கடை பூட்டப்பட்ட பின்னரே திருட்டு இடம்பெற்றுள்ளது.

நகைக்கடையின் கதவுகளை உடைத்து உள்நுழைந்த திருடர் கள் 22 பவுண் நகைகள் மற் றும் பணம் என்பவற்றை களவா டியுள்ளனர். அத்துடன் பணப் பாதுகாப்பு பெட்டியான "அயன்செவ்" பெட்டியையும் உடைத்துள்ளனர். எனினும் அதனை முழுமையாகத் திறக்க முடியாத நிலையில் அதில் இருந்த பணம் மற்றும் நகைகள் களவாடப்பட்டதா என்பதுதொடர்பான விசாரணை களும் மேற்கொள்ளப்படுகின் றது என்று கிளிநொச்சிப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு குறித்த சம்பவம் நடைபெற்ற வேளை இரவு நேரக்காவலாளி கடமையில் இருந்ததாகவும் ஆனால் களவு இடம்பெற்றது தெரியாது எனக் கூறுவதாகவும் தெரிவித்தனர்.

களவு தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் புதுக்குடியி ருப்பு பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ஐ-21,ரி3)

# போதைப் பாவனையை கட்டுப்படுத்த தொலைபேசி எண் அறிமுகப்படுத்துக

*முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கோரிக்கை*

முல்லைத்தீவு,ஜன.17
போதைப் பொருள் பாவ னையை ஒழிப்பதற்காகவும், சமூக விரோத செயற்பாடு களை கட்டுப்படுத்துவதற்கா கவும் பொது மக்களிடமிருந்து இரகசியத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் பிற மாவட்டங்களில் பொலி ஸாரால் அறிமுகம் செய்யப்பட்ட தொலைபேசி இலக்கத்தைப் போன்று முல்லைத்தீவு மாவட் டத்திலும் தொலைபேசி உண் அறிமுகம் செய்யப்பட வேண் டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முல்லைத்தீவு மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி தற்போது அதி கரித்துள்ளது. பிற மாவட்டங் களைச் சேர்ந்தவர்கள் முல் லைத்தீவு, மாவட்டத்தில் தங்கி யிருந்து கஞ்சா வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான சட்ட விரோதச் செயற்பாடுகளை கட்டுப் படுத்துவதற்கும், முற்றாக ஒழிப் பதற்கும் முல்லைத்தீவு மாவட் டப் பொலிஸ் உயர் அதிகாரிகள் முன் வரவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனையை ஒழிப் பதற்காகவும், சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத் துவதற்காகவும், பொது மக் களிடமிருந்து இரகசியத் தகவல் களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இதற்கென தனியான பொதுவான தொலைபேசி இலக்கம் ஒன்றை பொலிஸார் அண்மையில் அறிமுகம் செய்திருந்தனர்.

இது போன்று முல்லைத்தீவு மாவட்டத்திலும் பொதுவான தொலைபேசி இலக்கத்தைப் பொலிஸார் அறிவிக்க வேண் டும். இதனூடாக சட்ட விரோதச் செயற்பாடுகள் குறித்து நேரடி யாக தகவல் தர அஞ்சுபவர் கள், தொலைபேசி வழியாக இரகசியத் தகவல்களை தர முன்வருவார்கள்- எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-102)

# இந்திய மீனவர்களை விடுவிக்கும் அரசு அரசியல் கைதிகளை விடுவிக்கவில்லை

*சாடுகின்றார் வடக்கு கல்வி அமைச்சர்*

முல்லைத்தீவு ,ஜன.17
தைப்பொங்கல் திருநாளில் இலங்கைச்சிறைகளிலே இருந்த இந்திய மீனவர்களை விடுவித்த அரசு, அரசியல் கைதிகளான தமிழ் இளைஞர்களையும் விடு வித்திருக்க வேண்டும். - இவ் வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா தெரிவித்தார்.

வடமாகாணக் கல்வி அமைச்சு, வடமாகாண கல்வித் திணைக் களம், முல்லை, துணுக்காய் கல்விவலயங்களும்இணைந்து செம்மலை மகா வித்தியால யத்தில் நடத்தப்பட்ட தைப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது-

நல்லிணக்கம் என்றால் என்ன ஒரு கூட்டத்தைச்சேர்ந்தவர்களும் இன்னொரு கூட்டத்தைச் சேர்ந் தவர்களும்சேர்ந்து வாழ்வதற்கு பழகிக் கொள்ளுதல். தமிழர்கள் ஆகிய எங்களுடைய பாரம்பரி யங்கள், பழங்க வழக்கங்கள், அபிலாசைகள், நோக்கங்கள், எவ்வாறான அரசியல்வாழ்க்கை வேண்டும் என்பதை எங்களு டைய சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

தைப்பொங்கல் நாளிலே இந் திய மீனவர்களை விடுவித்திருக் கின்ற அரசு, அதேபோல தமிழ் இளஞர்கள் பலர் சிறைகளில் இருக்கிறார்கள் அவர்களில் ஒருசிலரை விடுவித்திருக்கலாம் தானே என்ற கேள்வி எழுகின் றது.

நல்லிணக்கத்தை இருவரும் வெளிப்படுத்தும் போது தான் அங்கே முறையான நல்லிணக் கம் இரு இனங்களுக்கும் இடை யில் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே பாரம்பரிய விடயங் களை எங்களுடைய குழந்தை கள் மற்றவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். அதற்கூடாக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பு வதற்கு முயற்சிக்க வேண்டும்.- என்றார். (ற-ஐ-ரி7,21)



*மூன்று தசாப்தங்களின் பின்னர், கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் தைப்பொங்கல் விழா புகையிரத நிலைய அதிபர் சம்பிக்கவின் வழி காட்டலில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.*

(ஐ-5)

## குரங்காட்டம் பார்த்தவனை பாய்ந்து கடித்தது குரங்கு

சாவகச்சேரி, ஜன.17
குரங்காட்டம் பார்த்துக் கொண்டி ருந்த சிறுவனைப் பாய்ந்து கடித்தது குரங்கு. இந்தச் சம்ப வம் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரிப் பகுதியில் குரங்கு மற்றும் பாம்பு ஆகியவற்றை ஆட்டுவித்து வித்தை காட்டிக் கொண்டிருந்த வேளையில், குரங்கு பாய்ந்து சிறுவனின் காலைக் கடித்துக் குதறியுள் ளது.

காயமடைந்த சாவகச்சேரி கச் சாய் வீதியைச் சேர்ந்த சிறுவன் சாவகச்சேரி வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ற-ஐ-9)

## பருத்தித்துறை - திருமலை இடையே இரண்டு புதிய பஸ்கள் சேவையில்

வடமராட்சி, ஜன.17
பருத்தித்துறை - திருகோணம லைக்கிடையிலான பஸ் சேவை யில் மேலும் இரு புதிய பஸ்கள் நாளை திங்கட் கிழமை முதல் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனப் பருத்தி த்துறை இ.போ.ச. சாலை முகாமையாளர் கே.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு அதிகாலை 4.30 மணிக்கு புறப்படும் பஸ் அங்கிருந்து நண்பகல் 12 மணிக்கு பருத் தித்துறை நோக்கிப் புறப்பட்டு வருகின்றது.

மேலும், அந்தச் சேவையுடன் பருத்தித்துறையில் இருந்து காலை 7.45 மணிக்கும், பிற் பகல் 3 மணிக்கும் திரு கோணமலைக்கு புதிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இந்த சேவையில் ஈடுபடுத் தப்படும் பஸ்கள் தினமும் திரு கோணமலையில் இருந்து காலை 8 மணிக்கும் பிற்பகல் 4.30 மணிக்கும் பருத்தி த்துறை நோக்கிப் புறப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ற-ஐ-173)

# பசு வதைக்கு எதிராக யாழ். நகரில் பேரணி

பட்டிப்பொங்கல் தினமான நேற்று பசு வதையைக் கண்டித் தும், அவற்றை இறைச்சிக்காக



வெட்டுவதையும், விற்பனை செய்வதையும் நிறுத்த வேண் டும் என்று கோரியும் யாழ். நகரில் நேற்று நடைபவனி நடைபெற்றது. பசுக்களை இறைச்சிக்காக வெட்டி உண் பதை விடுத்து அந்தப்பசுக்களை பெண்களை தலைமைத்துவ மாக கொண்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார தேவைக்காக கொடுத்தால் அவர்களுடைய




வாழ்க்கையும் ஒளிமயமாகும் எனவும், பசுக்களை அநியாய மாகவும் கொடூரமாகவும் இறைச் சிக்காக வெட்டுவதை நிறுத்து மாறும் நடை பவனியில் கலந்து கொண்டவர்களால் தெரிவிக் கப்பட்டது. இந்த நடை பவனி யில் பசுக்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டதோடு அவற்றுக்கு நகரப் பகுதியில் உள்ள வர்த்தக உரிமையாளர் களால் உணவுகளும், வழங்கப் பட்டன. நேற்று இடம்பெற்ற குறித்த நடை பவனியில் இந்து, பௌத்த மத குரு முதல்வர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன், தொழிலதிபர். நாகரத்தினம், இந்து மதம் சார்ந்த அமைப் பினர், பொதுமக்கள், சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட னர்.

(ற-21)

# வீதியில் சென்ற பெண்களிடம் சங்கிலி அறுத்த கொள்ளையர்

*ஒருவனைத் துரத்திப் பிடித்தனர் பொதுமக்கள்*

வீதியால்சென்ற ஒருபெண்ணிடம் சங்கிலியைக் கொள்ளையடித்துவிட்டு பின்னர் மற்றொரு பெண்ணிடம் சங்கிலியைக் கொள்ளையடிக்க முற்பட்ட வர்களில்ஒருவன்பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டான். மற்றையவன் தப்பியோடிவிட்டான். பிடிபட்டவன் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டு பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

இந்தச் சம்பவங்கள் ஆனைக்கோட்டை மற்றும் மானிப்பாய்ப் பகுதிகளில் நேற்று மாலை சுமார்30நிமிட இடைவெளியில் நடந்தேறியுள்ளன. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

சைக்கிளில்வேலைக்குச்சென்று திரும்பிக் கொண் டிருந்த திருமணமான இளம் பெண்ணை நெருங்கிய மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பெண்ணிடமிருந்து சங்கிலியை அறுத்ததுடன் அந்தப் பெண்ணைத் தள்ளிவிழுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்கள் முகத்தை மறைத்திருந்ததுடன் அவர்களது நவீன ரக மோட்டார் சைக்கிளின் இலக்கத்தையும் மறைத்துக் கொண்டே கொள்ளையில் ஈடுபட்டுத் தப்பிச் சென்றிருந்தனர். அந்தப் பெண், சங்கிலியைப் பறித்தது மட்டுமன்றி வீதியில் விழுத்தப்பட்டதனால் காயங்களுக்குள்ளானார். அதனால் குறித்த பெண் உடனடியாக யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார்.

இந்தநிலையில், ஆனைக்கோட்டையில் கொள்ளையடித்த அந்த இரண்டு பேரும் பின்னர் மானிப்பாய் டச்சு வீதியால் சென்றுகொண்டிருந்த பெண் அணிந்திருந்த சங்கிலியையும் கொள்ளையடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர் நடந்து சென்றுகொண்டிருந்ததனால் சங்கிலியை விடாது அந்தப் பெண்ணும் பற்றிப் பிடித்தவாறு கூக்குரலிட்டவாறு கொள்ளையனுடன் போராடியுள்ளார்.

பெண்ணின் அலறல் கேட்ட அயலவர்கள் ஓடிச் சென்றுள்ளனர். அதற்கிடையில்கொள்ளையன் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடியுள்ளான். எனினும் பொதுமக்களில் ஒருவர் துணிந்து அந்தக் கொள்ளையனைத் துரத்திச் சென்றுள்ளார். இதன்போது, வந்திருந்த மோட்டார் சைக்கிளை இயக்கிய நிலையில் நின்றிருந்த தனது சகாவிடம் அறுத்த சங்கிலியை கொள்ளையன் கொடுத்துள்ளான். எனினும் மோட்டார் சைக்கிளில் ஏறுவதற்கிடையில் துரத்திச் சென்ற பொதுமகன் சங்கிலி அறுத்த கொள்ளையனைப் பிடித்துவிட்டார்.

பின்னர் பொதுமக்களால் அவன் நையப்புடைக்கப்பட்டான். அதன்பின்னர் மானிப்பாய் பொலிஸாரிடம் அவன் ஒப்படைக் கப்பட்டான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிடிபட்டவன் மல்லாகத்தைச் சேர்ந்தவன் என்றும் தற்போது உடுவில் மல்வம் பகுதியில் வசிப்பவன் என்றும் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநிலையில்ஆனைக்கோட்டையில் சங்கிலியைப் பறிகொடுத்த பெண் மானிப்பாய் பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்யச் சென்றிருந்த போது, கைது செய்யப் பட்டவனை அடையாளம் காட்டியுள்ளார்.

பொலிஸ் விசாரணைகளிலிருந்து அவன் மேலும் பல திருட்டுக்களுடன் தொடர்புபட்டுள்ளான் என்பது தெரியவந்துள்ளதாகவும் அது பற்றிய மேலதிக விசாரணை இடம்பெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் மோட்டார் சைக்கிளுடன் நின்றிருந்து பின்னர் தப்பியோடிய கொள்ளையன் இன்னும் பிடிபடவில்லை. அவன் தொடர்பில் விசாரணைமேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

(வ-4)

## ஐ.தே.க மறுசீரமைப்புக்கு 4 நாள் வேலைத்திட்டம்

கொழும்பு, ஜன.17

ஐக்கிய தேசியக் கட்சியை நவீன யுகத்திற்கு ஏற்றவாறு மறுசீரமைக்க நான்கு நாள் வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க கட்சியின் உயர்பீடம் தீர்மானித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதமரின் சுவிட்ஸர்லாந்து பயணத்தின் பின்னர் இந்த நான்கு நாள் வேலைத்திட்டம் நடத்தப்படும். நவீன தொழில்நுட்பம், தொலைத் தொடர்பு மற்றும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர் காலப் பயணத்திற்கு வழிகோலும் விடயங்களைக் கண்டறியவே இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்ள உள்ளனர். அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் 70ஆவது வருட பூர்த்தி மாநாட்டில் மாற்றியமைக்கப்பட உள்ள கட்சியின் புதிய யாப்புத் தொடர்பிலான தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

(கு-சி)


### வீடு விற்பனைக்கு

மானிப்பாய் பிரதான வீதியில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக மூன்று அறைகள் இரண்டு குளியல் அறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் ஐந்து பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு: 077 322 0722

### காணி விற்பனைக்கு

அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள நிலப்பரப்பு 1¼ விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 1671174
077 728 6061

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, நுணாவில், பருத்தித்துறை வீதியில் வேரக்கேணி பாலா ஸ்ரோர்ஸ்க்கு அருகில் வீட்டுடன் 5½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

இ. பூரணசகாயம் தொடர்பு: 077 758 0871

### தேவை

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்திற்கு அனுபவம் வாய்ந்த வர்ணம் பூசுபவர் [Painter] உடன் தேவை.

தொடர்புக்கு: 077 3614 638
075 6577 856

### வாடகைக்கு

நல்லூர்ப்பகுதியில் அனெக்ஸ் (முற்றிலும் தனியானது) தனிஅறை, இணைந்த குளியலறை, சமையலறை

2 பெண்கள் வசிக்கலாம்.

தொடர்புக்கு: 071 4620 806

### கடை கட்டடம் வாடகைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் 60 அடி நீளம், 11 அடி அகலம் கொண்ட மூன்று மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு.

தொடர்புக்கு: 077 5947 929

### வீடு வாடகைக்கு

யாழ் இந்துக்கல்லூரி அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்புக்கு: 077 5279 446

### SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 449
சீட்டிழுப்பு திகதி 2016.01.16

வெற்றி இலக்கங்கள்
10 57 63 65 R

ரூ. 45,655,400/=

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2726 திகதி: 2016-01-16

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 04 05 39 67 O
போனஸ் இல.: 36
திங்கட்கிழமை ஜக்பொட்: ரூ. 22,259,725/-

Web: www.dlb.lk

நீல நிற டிக்கட்டுக்கள்
2016.01.18 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அக்ஷயா அழகு கலை நிலையம்

★ அழகுக்கலைப் பயிற்சி, இந்திய முறையிலான சாறி வுளவுஸ் கட்டிங் (6), பஞ்சாபி (4), அடிப்படையில் இருந்து தையல் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ★ கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட பருக்கள், கடும் கறை, மஞ்சள் வெள்ளை, கறுப்பு புள்ளிகள் அகற்றும் கிறீம். ★ கழுத்துக் கடும் கறுப்பு, கை, கால் கருமை நீக்கும் கிறீம் ★ கண் கருவளையம் உதட்டுக் கருமை நீக்கும் கிறீம். ★ உடல் எடை கூட்டும் குறைக்கும் குளிசை, பால்மா, கிறீம் ★ ஒட்டிய கன்னங்களை குண்டு கன்னங்களாக மாற்றும் குளிசை ★ இடுப்பு, கால், தொடை பாகங்கள் எடை குறைக்கும் கிறீம். ★ முகத்தில் வளரும் தேவையற்ற முடி அகற்றும் கறீம் ★ மார்பழகு கூட்டும், குறைக்கும் கிறீம், குளிசை, சோப் ★ தலைமுடி வளரச் செய்யும் ஆயுள் வேத எண்ணை, குளிசை, மேற்குறிப்பிடப்பட்டவை எம்மிடம் விற்பனைக்கு உண்டு. ★ முகத்தில் உள்ள கருமை, கழுத்து கருப்பு ஒரே தடவையில் நீக்கும் பேசியல், முகம் மினுமினுப் பாக்கும் பேசியல், ஐப்றோ சேப், பேஸ் திரெட்டிங் செய்து கொள்ளலாம். அயனிங் பேர்மிங் செய்து கொள்ளலாம். றிச் கேக் (ஒன்று 55/=) ஐசிங் ஓடர் ஏற்றுக் கொள்ளப்படும்.

077 21 06 155
(66645) (10.17)

அக்ஷயா
221, நாவலர் வீதி, (பிறவுண் றோட் சந்தி, அருள் கொமினிகேசன் அருகில் - யாழ்ப்பாணம்.)

### ஆயுள்வேத வைத்தியம்

உடற்பருமன் குறைய மற்றும் அதிகரிக்க, முகப்பரு, தலைமுடி உதிர்தல், பேன் போன்ற நோய்களுக்கு விஷேட சிகிச்சை மற்றும் அதிகுருதி அமுக்கம், கொலஸ்ரோல், சலரோகம், முட்டு, வாத நோய்கள், நாள் பட்டசளி, தும்மல், அஸ்மா போன்ற நோய்களுக்கான விஷேட சிகிச்சை

இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட மூலிகைகளிலான.மாத்திரைகள், எண்ணெய் வகைகள், சூரணங்கள், லேகியங்கள் போன்றவற்றிலான விஷேட சிகிச்சை

திவ்விய ஆயுள்வேதம்
இல. 73, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 6664 674

### வேலைவாய்ப்பு

**Park View Hotel (Pvt) Ltd.**

1. விடுதி முகாமையாளர் (Guest House Manager) 02
   தகைமைகள்
   குறைந்தது 2 வருட அனுபவம் தேவை.
   25-50 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
   தங்குமிட வசதி வழங்கப்படும்.
2. சமையலாளர்கள் (Cooks) 03
   தகைமைகள்
   குறைந்தது 2 வருட அனுபவம் தேவை.
   25-50 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
   தங்குமிட வசதி வழங்கப்படும்.

தொடர்பு: 077 248 7215

### கிளிநொச்சியில் கலைமாணிக் கற்கைநெறி வகுப்புக்கள்!!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த கலைமாணிக் கற்கைநெறிக்கு (Bachelor of Arts Degree Programme) புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கான வகுப்புக்கள்
கிளிநொச்சி அன்னை இல்லம்-லிபாரா நூல் நிலையத்தினரால் நடத்தப்படவுள்ளது.

இடம்: அன்னை இல்லம் - லிபாரா நூல் நிலையம்
87, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி.
விண்ணப்பப் பதிவுகளும் இங்கே மேற்கொள்ளப்படுகின்றன!!
01.02.2016 பல்கலைக்கழக விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 021 228 3845, 077 4435661

### SINGER FINANCE இடமிருந்து மட்டுமே

பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக
அதிககடன் தொகை குறைந்த வட்டி வீதத்தில்




தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| சுஜந்தன் | 077 7 391 449 |
| தர்ஷன் | 077 7 009 666 |
| தனு | 077 9 357 124 |

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

## சுற்றுலாக் கப்பல் சேவை

கொழும்பு, ஜன.17

சுற்றுலாக் கப்பல் சேவை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இந்தச் சுற்றுலாக் கப்பல் சேவை கொழும்பு நகரை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது. கொழும்பு, காலி, மற்றும் திருகோணமலை மாவட்டங்களை மையப்படுத்தி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் இந்தக் கப்பல் சேவை இடம்பெறவுள்ளது. (வ)


உங்கள் க.பொ.த உயர்தர பரீட்சை முடிவுகள் வந்துவிட்டதா?
நீங்கள் அவுஸ்திரேலியா அல்லது நியூசிலாந்தில் கல்வியை தொடர நாங்கள் உதவுகின்றோம்

FREE SEMINAR for students & parents

திகதி:
2016 ஜனவரி 31
நேரம்:
காலை 9.30 முதல் நண்பகல் 12 வரை

இடம்:
IIS ஆடிட்டோரியம்,
200,
சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்

To register call
021 5 700 750

கவர்ச்சிகரமான கல்விக் கட்டணங்கள் வருடாந்தம் $11,500 இல் இருந்து

We offer in-house IELTS Class for subsidized prices

எமது அனைத்துச் சேவைகளும் இலவசம்

Meet Edlocate staff together with Tamil speaking counselors for an one on one interview session to learn about:

- Studying in Australia | New Zealand & also UK | Malaysia | Singapore
- Scholarship opportunities for high achieving students
- Financial requirements for VISA purposes
- Post Study Work Visa & PR possibilities in Australia / New Zealand

edlocate
10 years of excellence
Reach Light Beyond Borders
www.edlocate.lk

Jaffna: 200, Sivan Pannai Road, Jaffna
E: counsel3@edlocate.lk

FOLLOW US ON



VACANCIES DOHA-QATAR

| Category | Qty | Salary (QR) |
|---|---|---|
| Cost Controller | 02 | 3000-4000<br>Rs.114,000-152,000 |
| Draftsman | 02 | 3000-4000<br>Rs.114,000-152,000 |
| Planning Engineer | 01 | 5000-6500<br>Rs.190,000-247,000 |
| Swimming Pool Technician | 02 | 3500-4500<br>Rs.133,000-171,000 |
| Agricultural Engineer | 02 | 2500-3500<br>Rs.95,000-133,000 |
| Civil Foreman/ Site Foreman | 01 | 2500-4500<br>Rs.95,000-171,000 |
| Land Surveyor | 02 | 3500-4500<br>Rs.133,000-171,000 |
| Landscaping Engineer | 01 | 4500-5000<br>Rs.171,000-190,000 |
| A/C Technician | 05 | 1500-2500<br>Rs.57,000-95,000 |
| Heavy Vehicle Driver (GCC License Holders) | 20 | 2000-2400<br>Rs.76,000-91,000 |
| Light Vehicle Driver (GCC License Holders) | 05 | 1800<br>Rs.68,400 |
| Building Electrician | 25 | 1200-1500<br>Rs.45,600-57,000 |
| Plumber / Pipe Fitter | 25 | 1200-1500<br>Rs.45,600-57,000 |
| Excavator Operator | 10 | 1400<br>Rs.53,200 |
| Steel Fixer | 25 | 1200-1500<br>Rs.45,600-57,000 |
| Building Painter | 10 | 1200-1500<br>Rs.45,600-57,000 |
| Shuttering Carpenter | 15 | 1300-1500<br>Rs.49,400-57,000 |
| Mason (Brick/Plaster/Tile) | 15 | 1300-1600<br>Rs.49,400-60,800 |
| Helper | 35 | 1000<br>Rs.38,000 |


நிபந்தனைகள்
QR1=RS38

CVs Collection Only
No charges for the CV collection

nihaj OVERSEAS
Travels & tours
No.250 - 1/15, 1st Floor, Liberty Plaza, Colombo - 03
HOTLINE - 0771113186 / 0771038960
Tel: +94 11 7 688 666/67 MOB:0777591777
Email : info@nihajoverseas.com
sales@nihajoverseas.com




HI-VISION 24CH AHD DVR
32CH AHD DVR
16 AUDIO
16 ALARM
NEW




24 CH - SPECIAL PRICE Rs. 45,000/=
32 CH - SPECIAL PRICE Rs. 49,000/=
2X4TB HDD SUPPORT
720P
PTZ SUPPORT
2 YEAR WARRANTY

DUAL HDMI CONVERTER
LKV 372PRO
HDMI PRO TX HAVE LOOP OUT
FOR FIRST DISPLAY
RX SUPPORT 60M
CAT6 CABLE




HI-VISION AHD PTZ
NEW ANALOG HD TECHNOLOGY
AHD CCTV
HI-AH4RE-130
AHD PTZ CAMERA 10X
ZOOM PAN 355° PAN 90°
ZOOM 80M LENS 3.9-39mm
AUTO FOCUS



32000
10X PTZ
960P

AVAILABLE IN JAFFNA
ALDI ELECTRONICS
NO 15, STANLEY ROAD JAFFNA
Phone: 0212222676
HOT LINE 0773604500
Email: info@aldijaffna.LK
Web: www.aldijaffna.lk

HI-VISION AHD PTZ
NEW ANALOG HD TECHNOLOGY
AHD CCTV
HI-AH4RE-200
AHD PTZ CAMERA 10X
ZOOM PAN 355° PAN 90°
ZOOM 80M LENS 3.9-39mm
AUTO FOCUS



39000
10X PTZ
1080P

# வவுனியா செட்டிகுளம் பிரதேச சபை செயலாளருக்கு எதிராக குற்றச்சாட்டு

*ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில்*

வவுனியா, ஜன.17

வவுனியா செட்டிகுளம் பிரதேச சபையின் செயலாளர் மக்களுக்கு சாதகமாக, எந்த அபிவிருத்தியையும் இது வரை செய்யவில்லை என்று செட்டிகுளம் கிராம மக்கள், அதிகாரிகள், மாகாணசபை உறுப்பினர்கள் என அனைவரும் கூட்டாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பிரதேச அடிப்படையிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே அனைவராலும் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் உள்ள வீதிகள் படுமோசமாக காணப்படுகின்ற நிலையில், குறித்த வீதிகளில் ஒரு வீதியை முற்றாக புனரமைத்துத் தருவதற்கு ஒரு தொண்டு நிறுவனம் முன்வந்தது. ஆனால் அதை நிறுத்தி தாங்கள் குறித்த வீதியை புனரமைக்கப் போவதாக கூறிய பிரதேச சபையின் செயலாளர், அந்த வீதியில் ஒரு கிலோ மீற்றர் வரையான வீதியையே புனரமைத்துள்ளார். கேட்டதற்கு தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறித்த அளவு வீதிப் புனரமைப்புக்கே போதுமானதாக இருந்தது என்று தெரிவித்தார்.

அப்படி என்றால் அந்த வீதியை புனரமைக்காது அந்த பணத்தில் அதற்கேற்ற வேறு வீதியை புனரமைத்து விட்டு தொண்டு நிறுவனத்தால் புனரமைக்கப்படுவதாக கூறிய குறித்த வீதியை புனரமைக்க விட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபையின் செயலாளர் தான் நினைத்த படியே செய்கின்றார் எனவும் மாகாண சபை உறுப்பினர்கள் ,செட்டிகுளம் பிரதேச சபைச் செயலாளர் மீது குற்றம் சாட்டிய அதேவேளை கழிவுகளை அகற்றுவற்கான முயற்சிகள் எடுப்பதில்லை, மின்விளக்குகள் போடுவதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை, உட்படபலபிரச்சினைகளையும் குற்றச்சாட்டுகளையும்பொதுமக்களும், அதிகாரிகளும் பிரதேச சபையின் செயலாளருக்கு எதிராக முன்வைத்திருந்தனர். (ಣ-ஜ-21)

# சுண்டிக்குளம் நீரேரியில் இறால் பிடிப்பதற்கு தடை

கிளிநொச்சி, ஜன.17

சுண்டிக்குளம் கடல் நீரேரியில் தற்போது இறால் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று யாழ் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இறால்களின் இனப்பெருக்கம் தற்போது சுண்டிக்குளம் கடல் நீரேரியில் குறைவாக உள்ளது. இறால்களின் இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்காக தற்போது ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இறால் பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காலப்பகுதியில் சட்டவிரோத இறால் பிடியில் ஈடுபடுபவர்கள்கைதுசெய்யப்படுவதுடன், அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. இது தொடர்பில் பளை, கிளிநொச்சி பொலிஸாருக்கு உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ಣ-ஜ-107)

## நாள்காட்டி வெளியீடு

கிளிநொச்சி, ஜன.17

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் தமிழர் தொடர் புத்தாண்டு நிகழ்வும் நாள்காட்டி வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கூட்டுறவு மண்டப முற்றத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில், திருக்குறள் பா ஓதல், தமிழ்ச்சுவை, தமிழ் அறிவோம், சிறப்புரைகள் என்பன இடம்பெறவுள்ளன. (ಣ)

# பஸ் சேவை நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.17

பருத்தித்துறையிலிருந்து மணற்காடு செல்லும் இலங்கைப் போக்குவரத்து பஸ் சேவையில் நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று பருத்தித்துறை பஸ் சாலை முகாமையாளர் க.கந்தசாமி அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் காலை 8 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து மணற்காட்டுக்குப் புறப்பட்ட 762 இலக்க பஸ் எதிர்வரும் திங்கட் கிழமை முதல் காலை 7.30 மணிக்குப் புறப்படவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்குப் பாடசாலைகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகவிருப்பதால்,அங்கு கடமைக்குச் செல்லும் ஊழியர்களைக்கருத்திற்கொண்டே இந்தச் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சேவையானது பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு மந்திகைச் சந்தியினூடாகவல்லிபுரச்சந்தியை அடைந்து மணற்காட்டுக்குச் செல்லவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ಣ-ஜ-422)

# உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள்கள் நீதிமன்றில் ஒப்படைப்பு

சாவகச்சேரி, ஜன.17

கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டு, உரிமை கோரப்படாத நிலையில் காணப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்களை கொடிகாமம் பொலிஸார் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைத்து அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

இதன் போது இந்த மோட்டார் சைக்கிள்களை ஆறு மாத காலத்துக்குள் உரிமை கோரப்படாதவிடத்து ஏலத்தில் விற்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ಣ-ஜ-9)

**தேவை** தொடர்பு 078 208 4149

பயிர் செய்யக்கூடிய தோட்டக்காணி யாழ்ப்பாணத்தில் 10 - 20 ஏக்கர் 5 வருட குத்தகைக்குத் தேவை.

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்நகர் மத்தியில் இயங்கும் பிரபல அழகு சாதனப்பொருள்கள் (Fancy) விற்பனை செய்யும் நிலையம் ஒன்றிற்கு உடனடியாக வேலையாள்கள் தேவை.
(பெண்கள் மட்டும்)
தொடர்பு : 075 9251036

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




10.30 / 1.30 / 7.30 (Tamil Dub) 4.30 p.m.




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30/ 2.30 / 6.30
விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

**நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு அவதானம்**

அதிகளவு சீனிப்பண்டங்களை உண்பதனால் நீரிழிவு நோய் ஏற்பட்டு விரைவாக மரணம் ஏற்படலாம்.

**Sugar kills, consume with care**

அனுசரணை: கிருபா லேணர்ஸ்(தலைமையகம்)
இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 077 722 5292

**பதவி வெற்றிடங்கள்**

* Administrative Officer (Female)
* Personal Assistant (Female)

- O/L, A/L தகைமையுடையவர்கள்ஆங்கிலம், கணினியில் புலமை உள்ளவர்கள் தேவை.
- வயதெல்லை 18 - 28
- சிங்களப் பேச்சாற்றல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- அடிப்படை வேதனம் ரூ. 18.000/-

சுயவிவரக்கோவையுடன் 17, 18, 19 ஆம் (ஞாயிறு, திங்கள், செவ்வாய்) திகதிகளில் 10 am - 1pm நேரில் வரவும்.

WINSTAR JOB BANK 106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.

**ஒப்பந்தகாரர் தேவை**

தப்ரபேன் கடலுணவு நிறுவனத்தின்

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கிளைகளுக்கு பின்வரும் ஒப்பந்தகாரர்கள் தேவைப்படுகின்றனர்.

01. தொழிலாளர்கள் ஒப்பந்தக்காரர் (Labour Contractor)
02. வாகன ஒப்பந்தக்காரர் - BUS (Vehicle Contractor)

உங்களது விவரங்களை குறுஞ்செய்தி (SMS) மூலம் அனுப்பவும்.

தொடர்பு இல: 075 8416 353 (1.00 P.M - 3.00 P.M)

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துதல்.

18.01.2016 திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் கட்டாக்காலி கால் நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையினை மாநகரசபை மேற்கொள்ளவுள்ளது. கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டு மாநகரசபை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தண்டம் அறவிடப்படுவதோடு ஏழு நாள்களுக்கு மேல் உரிமை கோரப்படாத கால் நடைகளை ஏலத்தில் விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே உரிமையாளர்கள் தங்களது கால்நடைகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆணையாளர்
யாழ் மாநகர சபை

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு (கட்டார்)**

| வேலை வகை | சம்பளம் | | அரசால் அங்கீகரிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|
| | QR | SLRS | SLRS |
| வீட்டுப் பணிப்பெண் | 900 | 34200 | இலவசம் |
| வீட்டுவேலைப் பையன் | 900 | 34200 | 110341 |
| வீட்டுச் சாரதி (இலங்கை அனுமதிப் பத்திரமுள்ள) | 1000 | 38000 | 119824 |
| வீட்டுச் சாரதி (வளைகுடா அனுமதிப் பத்திரமுள்ள) | 1200 | 45600 | 125000 |
| வீட்டுச் சமையலாள்- பெண் | 1000 | 38000 | இலவசம் |
| வீட்டுச் சமையலாள்- ஆண் | 1000 | 38000 | 119824 |
| குழந்தை பராமரிப்பாளர்/செவிலி | 900 | 34200 | இலவசம் |
| வேலையாள்கள் | 900 | 34200 | இலவசம் |
| | | | QR 1= Rs 38:00 |

நிபந்தனைகள்:
- உணவு, தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதி இலவசம்
- ஒரு நாளுக்கு 8 மணி, வாரத்திற்கு 48 மணி வேலை
- வேலை நேரம் நாள் ஒன்றுக்கு 12 மணியை விட அதிகரிக்காது
- வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை
- இரண்டு வருட ஒப்பந்தம் (நீடிப்பதற்கான சாத்தியம் உண்டு) பெண்களுக்கு இலவச டிக்கற் (சென்று வர)
- ஆண்களுக்கு இலவச டிக்கற் ( திரும்பிவர)
- இலவச மருத்துவப் பரிசோதனை
- பெண்களுக்கு இலவசப் பயிற்சி

NimaSu
(L.No: 3064)
உடனடித் தொடர்பு : 0779999030 / 0702044666
தொலைபேசி : 0112717277
தொலைநகல் : 0112717277 / 0112610525
மின்னஞ்சல் : nimasu@sltnet.lk, nimasu@yahoo.com

## சர்வதேச

தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான 26 ஆண்டு காலப் போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்தபோதும், இறுதிப் போரில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டோர் வாழ்வை இழந்தும் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டும் உள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அட்லான்டிக் பேரவையின் தென்னாசிய நிலையத்தின் கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே எரிக்சொல்ஹெய்ம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு இந்தியா, நோர்வே, ஜப்பான் ஆகிய நாடுகள் இராஜதந்திர உதவிகளை வழங்கின. ஆனால் சர்வதேச சமூகத்தின் பரந்துபட்ட வலுவான கூட்டமைப்பு அவசியமாகக் காணப்பட்டது.

இலங்கையின் உள்நாட்டுமோதல் போன்ற ஒன்றைக் கையாள்வதற்கு ஆரம்பநாள் முதல் மிகுந்த பொறுமை அவசியமானதாக விளங்கியது.

நீங்கள் பொறுமையாகவிருக்கவும், ஏற்ற இறக்கங்கள் காணப்படும் என்பதை ஏற்றுக் கொள்ளவும் தயாராகவிருந்தால் மாத்திரமே உங்களால் சமாதான முயற்சிகளில் கண்டிப்பாகத் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இலங்கை அரசினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் மூத்த அதிகாரிகளை கையாளும்போது, போதிய தகவல் இன்மை மிகப்பெரிய பிரச்சினையாக காணப்பட்டது. தமிழ், சிங்கள உறவுகளைப் பலப்படுத்துவதற்கும் முக்கியமாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித்துவமான தலைமைத்துவம் பற்றி அறிந்துகொள்வதற்கும் எங்களுக்குப் பெரும் அணி தேவைப்பட்டது. சர்வதேச செயற்பாட்டாளர்களின் பரந்துபட்ட கூட்டணியால் இதனைச் செய்திருக்கமுடியும்.

இறுதிப்போரின் போது இலங்கை இராணுவம் போர்க்குற்றங்கள் இழைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக, போரின் இறுதி நாள்களில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக, ஐ.நா நிபுணர்கள் விசாரணைகள் மூலம் தெரிவித்துள்ளனர். எனினும் இறுதிப்போரில் 9 ஆயிரம் பொதுமக்களே கொல்லப்பட்டனர் என இலங்கை அரசு கூறுகின்றது.

இலங்கையின் நவீன வரலாற்றில் மிகவும் நம்பிக்கையளிக்கக் கூடிய தருணத்தில் உள்ளோம். இதனைவிட எப்போதும் சிறப்பான வாய்ப்பு கிடைத்ததில்லை -என்றார்.(த-வ-5)

## மசகு எண்ணெய்

விடப்படுகின்றது.

இருப்பினும், ஒரு லீற்றர் பெற்றோல் 117 ரூபாவுக்கும், ஒரு லீற்றர் டீசல் 95 ரூபாவுக்கும் இதுவரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

எண்ணெய்விலைச் சூத்திரம் ஒன்றை அறிமுகப் படுத்துவதற்கான யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரையில் அது தொடர்பான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்துள்ள போதிலும் அதற்கு ஏற்ப இலங்கையில் விலைக் குறைப்பு இடம்பெறவில்லை. (த-5)

## அரச சார்பற்ற அமைப்புக்களே புதிய அரசமைப்புக்கு வடிவம்

*விமல் வீரவன்ச குற்றச்சாட்டு*

மக்கள் கருத்துக்களுக்கு அமைய புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என அரசு தெரிவித்த போதிலும் அதன் செயற்பாடுகளை அரசசார்பற்றதனியார் நிறுவனங்களுக்கு (என்.ஜி.ஓ) வழங்கி அரசமைப்பின் வடிவத்தினை உருவாக்கியுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், ஐ.ம.சு.மு. நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்ட புதிய அரசமைப்பொன்று கொண்டுவருவதாக அரசு பொய் நாடகத்தை அரங்கேற்றிவருகின்றது. மக்கள்கருத்துக் கோரும் குழுவை நியமித்துவிட்டு அரசசார்பற்றதனியார் நிறுவனங்களுக்கு (என்.ஜி.ஓ அரசமைப்பு உருவாக்கத்திற்கான செயற்பாட்டை கொடுத்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்காவுக்குமே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டிய தேவையுள்ளது. எமது நாட்டில் அதிகாரத்தை ஒழிக்க இவர்களுக்கு என்ன தேவை. புலிகளின் பணத்துக்காக நாட்டையும், நாட்டின் பொருளாதாரத்தையும் காட்டிக்கொடுக்கின்றனர்.

18ஆவது திருத்தத்தை நீக்கி 19ஆவதுதிருத்தத்தைக் கொண்டு வந்தனர். ஆனால், அது நடைமுறையில் இல்லை. 20ஆவதுதிருத்தச்சட்டம் கொண்டுவருவதாக கூறி ஏமாற்றினர்.

புதிய அரசமைப்பில்பௌத்த மதத்துக்கோ, நாட்டின் இறைமைக்கோ எவ்வித பாதிப்பும் இல்லை என சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார். அவ்வாறாயின் ஏன் சம்பந்தன் துள்ளித் திரிகின்றார். புதிய அரசமைப்பு தற்போது உருவாக்கப்பட்டுவிட்டது. மக்கள் கருத்தை அறிவதாகப் பொய்பிரசாரமே செய்கின்றனர் எனத்தெரிவித்தார். (த-சி)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### இலட்சுமியம்மா அகிலேஸ்வரநாதன்

மண்ணில்: 05.11.1950 விண்ணில்: 13.01.2016



யாழ். வட்டுக்கோட்டை வட்டு மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா தவசிகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமியம்மா அகிலேஸ்வரநாதன் 13.01.2016 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-தையல்முத்து தம்பதியரின் அன்பு மகளும், நல்லதம்பி இரத்தினபரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், பார்த்தீபன் (இலண்டன்) ஜெகதீபன் (இலங்கை) காலஞ்சென்ற குணதீபன் மற்றும் விஜிதா (இலங்கை), பிருந்தா (பிரான்ஸ்) காலஞ்சென்ற வினோதா ஆகியோரின் அன்புத் தாயும், சத்தியபவானியம்மா, காலஞ்சென்றவர்களான கனகம்மா, புவனேஸ்வரியம்மா மற்றும் சற்குணவதியம்மா அருளானந்தம் நேசம்மா, சரவணபவானந்தசிவம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மோகனகுமார், பகீரதன் ஆகியோரின் அன்பு மாமியும், தங்கராசசிங்கம், மதுரசிங்கம், காசிவிசுவநாதர், அரியராசா, கமலாதேவி கமலராணி, கணேஸ்வரி, மதியமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகிர்தமலரின் பாசமிகு மருமகளும், திசாந்த், சப்தமி, சபரிஸ், சுஜித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

024 205 0577,
076 708 1206.

தகவல்:
குடும்பத்தினர்

## 3ஆம் ஆண்டு நினைவில்

தோற்றம் 17 . 07 . 1991



மறைவு 19 . 01 . 2013

### தர்மகுலசிங்கம் பானுஷா

திதி: வளர்பிறை அட்டமி
(17.01.2016)


ஆறாது எம்துயரம் ஆண்டுகள் பல சென்றாலும்
மாறாது எம் மனதில் மதிப்பான உமது உருவம்
நீறாகிப் போனதென்று நினைக்க மனம் இல்லையம்மா!
பேறாகப் பெற்ற பெருமகளே! பிரிந்திருக்க மாட்டோம் யாம்
நினைத்திருப்போம் எந்நாளும்

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

ஆவரங்கால் மேற்கு.
குடும்பத்தினர்.

### பிரம்மஸ்ரீ மகா கணபதீஸ்வர குருக்கள் பாஸ்கரக்குருக்கள்

(யாழ். கடைத்தெரு, வேம்படிப் பிள்ளையார் ஆலய குருக்கள்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மகாகணபதீஸ்வரக்குருக்கள் பாஸ்கரக்குருக்கள் கடந்த (15.01.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகாகணபதீஸ்வரக் குருக் கள்-தங்கமீனாட்சி தம்பதியரின் மூத்த மகனும், கொக்குவிலைச் சேர்ந்த இரத்தினசபாபதிகுருக்கள்-சம்பூர்ண வல்லி தம்பதியரின் மூத்த மருமகனும், காஞ்சனாவின் அன்புக் கணவரும், சரண்யா தேவி, ஹரிஹரசர்மா, சாயித்தியா, சுவஸ்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், வை. பரணிதரசர்மாவின் (லண்டன்) அன்பு மாமனும், சுதாகரகுருக்கள் (திருநெல்வேலி பத்திரகாளி கோயில்), பிரபாகரகுருக்கள் (வேலணை முடிப்பிள்ளையார் கோயில்), கௌசல்யா, சிந்துஜா, சசிகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோமளா, ரேணுகா, விக்னேஸ்வரக்குருக்கள் (யாழ். வண்ணை வைத்தீஸ்வர ஆலய பிரதமகுரு), ஹேமலதா, சண்முகப்பிரியா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயா னத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
0777 149440

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி விமலாதேவி தங்கேஸ்வரன்

மனம் மகிழ 30 . 04 . 1945



மனம் நெகிழ 14 . 01 . 2016

பத்தமேனி, அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி தங்கேஸ்வரன் 14.01.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம்-செல்வபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து- சின்னாச்சி தம்பதியரின் மருமகளும் தங்கேஸ்வரனின் அருமை மனைவியும் தனுஜா, வனஜா(சுவிஸ்), கெங்கா, உமா ஆகியோரின் பாசமிகு தாயும் மகேஸ்வரன், நகுலேந்திரன்(சுவிஸ்), கிருபானந்தன், பவானந்தன் ஆகியோரின் அன்பு மாமியும் சஞ்சயா, பிருத்திகா, அபினாஸ், ஆருசா(சுவிஸ்), தர்மிகன், கபினா, லதுசன், கோபினா, ஆர்மியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீர்த்தாங்குள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பிள்ளையார் கோயிலடி,
பத்தமேனி.

தகவல்:-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் திரிபுரசுந்தரன்

(ஓய்வு பெற்ற மின்னியல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ் மாநகர சபை)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் திரிபுரசுந்தரன் அவர்கள் நேற்று (16.01.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கனகரத்தினம் மனோன்மணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவஜீவன் (Student in Moratuwa University), புஸ்பாஞ்சலி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை-A/L 2016) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்தானலட்சுமி (கனடா), கருணாகரன் (லண்டன்), சிவகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற ஜெகா செந்தில்நாதன் (இளைப்பாறிய அரசாங்க அதிபர்) மற்றும் ஸ்ரீஸ்கந்தன் (இளைஞர் சேவைகள் மன்றம்), விமலாதேவி (லண்டன்) ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01. 2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக யாழ் கோம் பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

459, கே.கே.எஸ் வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

# உள்ளூர் பால் கொள்வனவில் மாற்று ஏற்பாட்டை ஆராய்க

## மில்க்கோ, நெஸ்லே நிறுவனங்களுக்கு கிளிநொச்சி அரச அதிபர் அறிவுறுத்து

கிளிநொச்சி, ஜன.17
உள்ளூர் பால் கொள்வனவில் மாற்று ஏற்பாடு தொடர்பில் கலந்தாலோசித்து எதிர்வரும் 31 ஆம் திகதிகுள் தமக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று மில்க்கோ மற்றும் நெஸ்லே நிறுவனங்களுக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்

“உள்ளூர் நுகர்வுக்குப் பால் போதாமை, விலை நிர்ணயம், கால்நடை வளர்ப்புப் பிரச்சி னைகள் குறைபாடுகள் தொடர்பாக கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.”

கடந்த 12 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்ற கால்நடை உற்பத்தியாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இடம்பெற்ற கலந் துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
உள்ளூர் நுகர்வுக்குப் பால் போதாமை, விலை நிர்ணயம் மற்றும் கால்நடை வளர்ப்புப் பிரச்சினைகள் குறைபாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கே இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தில் பால் கொள்வனவு செய்யும் நிறுவனங் களிடம் எவ்வாறு கொள்வனவு செய்கிறீர்கள்? என்ன விலைக்கு கொள்வனவு செய்கின்றீர்கள் என கேட்டறிந்த அரச அதிபர், மக்கள் நுகர்வுக்கு பின்னர் எஞ்சுகின்ற பாலை கொள்வனவு செய்யலாம் எனத் தெரிவித்தார்.
நெஸ்லே மற்றம் மில்கோ நிறுவனங்கள் பாலைக் கால்நடை சங் கங்கள் ஊடாக பெற்றுக் கொள்வது தொடர்பிலும் அல்லது கொள்வனவு செய்கின்ற பாலை உள்ளூரில் விற்பனை செய்வது தொடர்பிலும் கலந் துரையாடி தமக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் தெரியப்படுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளார். (ற-ஜ- ரி3)

### வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நினைவுக் கல்லை அகற்ற கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன.17
தந்தை செல்வா சதுக்கத்தின் முன்பாகவுள்ள, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நினைவுக் கல்லை அகற்றுமாறு தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழுவின்தலைவர் எஸ்.ஜெபநேசன், கடந்த 10 ஆம் திகதி இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.
கே.கே.எஸ். வீதிப் புனரமைப்பின் போது, வீதிப்புனரமைப்புக்கான நினைவுக் கல் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடுகை செய்யப்பட்டு திறக்கப்பட்டது. இந்த நினைவுக்கல், தந்தை செல்வா சமாதிஅமைந்துள்ளதந்தை செல்வா சதுக்கத்தின் வாயிலுக்கு முன்பாகவுள்ளது.
இதனை அகற்றித்தருமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரைப் பலமுறை கோரியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
தந்தை செல்வாவின் 118 ஆவது பிறந்த தினத்தை எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிகொண்டாடவுள்ளோம்.
அதற்குமுன்னதாக, குறித்த நினைவுக் கல்லை அங்கிருந்து அகற்றி வேறு பொருத்தமான இடத்தில் வைக்க நடவடிக்கை எடுக்குமாறு, அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-5-101)

### பொங்கல் விழா

சாவகச்சேரி, ஜன.17
மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியலாயத்தின் பொங்கல் விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
வித்தியாலய சமூகம், பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவை இணைந்து இந்தப் பொங்கல் விழாவை நடத்தவுள்ளனர் என அதிபர் க. உதயகுமாரன் அறிவித்துள்ளார். (ற-ஜ-9)



மிருசுவில் வடக்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாரதி முன்பள்ளியின் கட்டடம் நேற்று முன்தினம் தைப்பொங்கல் தினத்தன்று திறக்கப் பட்டது. அதில் பிரிவு கிராம அலுவலர், மிருசுவில் அ.த.க.பாடசாலை அதிபர் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர். (ற-ஜ-9)

### கோடாவுடன் துன்னாலையில் ஒருவர் கைது

கரணவாய், ஜன.17
துன்னாலைகுடவத்தைப் பகுதியில் மண்ணினுள் புதைத்து வைக்கப்பட்டிருந்த 70 லீற்றர் கோடாவை நெல்லியடிப் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை அதிகாலை ஒருமணிக்குக் கைப்பற்றியுள்ளனர்.
துன்னாலைகுடவத்தைப் பகுதியில் பெரும் அளவில் கசிப்புக் காய்ச்சுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்தப்பகுதிக்குச்சென்றநெல்லியடிப் பொலிஸார் குறித்த பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் மேற்கொண்ட போது, மண்ணில் புகைக்கப்பட்டிருந்த 20 லீற்றர் கொள்ளளவுடைய நான்கு பரல்களிலிருந்து சுமார் 70 லீற்றர் கோடாவைக் கைப்பற்றியதுடன், சந்தேகத்தின் பேரில் அந்தப்பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்தனர்.
கைது செய்யப்பட்ட நபர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், இது தொடர்பாகப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளது என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-108)

# 15ஆம் திகதிக்கு முன்னதாக அறிக்கையை சமர்ப்பிக்குக

## சனசமூக நிலையங்களுக்கு அறிவுறுத்து

அச்சுவேலி, ஜன.16
வடக்கு மாகாணத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் வருடாந்த பொதுக் கூட்டத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி, அறிக்கை மற்றும் புது வருட நிர்வாகிகள் தொடர்பான விவரங்களை பிரதேச உள்ளூராட்சி சபைகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும். சனசமூக நிலைய பொதுக்கூட்டங்களில் பிரதேச சன சமூக நிலைய உத்தியோகத்தர் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் – இவ்வாறு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.
சனசமூக நிலையங்கள் வினைத்திறனுடன் செயற்படுவதற்கு ஆண்டுதோறும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். அந்த வகையில் இந்த வருடத்துக்கான பொதுக் கூட்டத்தை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டி பொதுக்கூட்ட அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அறி வுறுத்தப்பட்டுள்ளது.
செயற்படு நிலையில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு, ஆண்டு தோறும் உதவி நன்கொடை நிதியாக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுகின்றது. அத் துடன் பிரதேச உள்ளூராட்சி சபை மட்டத்தில் தெரிவு செய்யப்படும் சிறந்த செயற்பாட்டு நிலையில் உள்ள இரண்டு சன சமூக நிலையங்களுக்கு மேலதிகமாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றன.
வடக்கு மாகாணத்தில் செயற்படு நிலையில் ஆயிரத்து 240 சனசமூக நிலையங்கள் உள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 880 சனசமூக நிலையங்கள் செயற்படுகின்றன. (ற-ஜ-11)

### மூத்த பிரஜைகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜன.17
பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் தொண்டு நிறுவனமான விடியலுக்கான பாதை அமைப்பின் அனுசரணையில் உறவுகளின்றி தனிமையில் தவித்த மூத்த பிரஜைகளுக்கான உதவி வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. இதில் 110க்கும் மேற்பட்ட மூத்த பிரஜைகள் கலந்து கொண்டதோடு, அவர்களுக்கு விடியலுக்கான பாதை அமைப்பால் உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடளுமன்ற உறுப்பிணர் சி. சிறீதரன் கலந்து கொண்டார். அங்கு அவர் உரையாற் றும் போது:
மூத்த பிரஜைகள் ஒன்று கூடியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. சந்ததி ஒன்றின் உருவாக்கத்தின் நாயகர்களாக, நாயகிகளாக இருந்த பெரியவர்கள் இன்று தனிமைப்படுத்தப்பட்டுஅன்புஅரவணைப்பு என்பவற்றுக்கு ஏங்குகின்ற சூழலைப் பார்க்கும் போது கவலை தருவதாக உள்ளது. வேராகவும் விழுதாகவும் படர்ந்திருந்த அவர்களது உறவுகள் கொல்லப்பட்டாலும் காணமல் போகச் செய்யப்பட்டாலும்தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். எமது சமூகம், அபிவிருத்தி வளர்ச்சிஎன்றபோர்வையில் எத்தனை கோடி பணம் இருந்தாலும் குடும்ப உறுப்பினரிடையே இருக்கும் பாசம் பெரியது.– என்றார்.
இந்த நிகழ்வில் மூத்த



பிரஜைகள் குழுவின் தலைவர் சின்னையா, ஊற்றுப் புலம்பாடசாலைஅதிபர்உமா சங்கர், அக்கராயன் பிரதேச அமைப்பாளர் கரன் , முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்களான தயாபரன், சுப் பையா ,மத்திய செயற்குழு உறுப்பினர் ஜெயக்குமார்,மாவட்ட இளைஞரணித்தலைவர் சுரேன் எனப்பலரும் கலந்து கொண்டனர்.(ற-ஜ-426)

# மத்தியஸ்த சபைகளுக்கு விரைவில் புதிய தவிசாளர்கள், உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஜன.17
வட பகுதியைச் சேர்ந்த சண்டிலிப்பாய், உடுவில் பிரதேசங்களில் இயங்கிவரும் இரு மத்தியஸ்த சபைகளுக்கும் புதிய தவிசாளர்கள், உறுப்பினர்கள் (மத்தியஸ்தர்கள்) விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.
மத்தியஸ்தசபைகள் ஆணைக்குழு இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
சண்டிலிப்பாய், உடுவில் மத்தியஸ்த சபைகளின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களான மத்தியஸ்தர்களின் பதவி வெறிதாகியுள்ளதால் மீண்டும் தவிசாளர்களையும், உறுப்பினர்களையும் நியமிப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.
இதற்கு முன்னோடியாக புதிய உறுப்பினர்களை நியமிப்பதற் கென நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தகைமையுள்ளவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கென மத்தியஸ்தம் செய்யும் திறன்கள் மற்றும் உபாய மார்க்கங்கள் பற்றிய பயிற்சிக்கற்கைநெறிஒன்றுநடத்தப் படவுள்ளது..
சண்டிலிப்பாய் மத்தியஸ்த சபைக் [illegible] கான இந்தக் பயிற்சிக் கற்கை நெறி சண்டிலிப்பாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்திலும், உடுவில் மத்தியஸ்த சபைக்கான பயிற்சிக் கற்கை நெறி உடுவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்திலும் - நடைபெறவிருப்பதாக சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் ஜோன் பிலிப் தெரிவித்துள்ளார்.
மத்தியஸ்தம் செய்யும் திறன்கள் மற்றும் உபாய மார்க்கங்கள் பற்றிய விரிவுரைகள், செயன்முறைப்பயிற்சிகள், எழுத்துப் பரீட்சை என்பன [illegible] இடம்பெறவுள்ளன.
மேலும், 1991ஜூன் 16ஆம்திகதி பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி இந்தப் பயிற்சிக் கற்கை நெறியில் பங்கு பற்றும் அரச ஊழியர்கள் கடமை விடுமுறை பெற்றுக் கொள்ள முடியுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
இலங்கையில் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் சுமார் 329 மத்தியஸ்தசபைகள் சிறப்புற இயங்கி வருவதுடன், 8000 இற்கும் மேற்பட்டோர் இந்தச் சேவையில் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக் [illegible]

# வவுனியா - யாழ்ப்பாணம் இடையே இனி அரை மணிக்கு ஒரு பஸ் சேவை

## தனியார் போக்குவரத்து பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

வவுனியா, ஜன.17

வவுனியா - யாழ்ப்பாணத்துக்கு இடையே அரைமணி நேரத்துக்கு ஒருதனியார் பஸ்ஸை இயக்குவதற்கு முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. முதற் கட்டமாக ஒரு மாதத்துக்கு வவுனியா மத்திய பஸ் தரிப்பிடத்தில் இருந்து பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. - இவ்வாறு தனியார் போக்குவரத்து பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் வ.இராஜேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இலங்கைப் போக்குவரத்துச் சபை சாலை முகாமையாளர்கள் மற்றும் தனியார் போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்கள் இடையிலான கலந்துரையாடல், வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் முன்னிலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அதன்போதே இந்த முடிவுகள் எட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களுக்கு கல் வீசுவது தொடர்பான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி பயணிகளுக்கான சேவையை வழங்குமாறு பிரதி பொலிஸ்மா அதிபர் கேட்டுக்கொண்டார்.

பிரயாணிகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு, வவுனியா மத்திய பஸ் தரிப்பிடத்திலிருந்து யாழ்ப்பாணம்வரை அரைமணிநேரத்துக்கு ஒருதனியார் பஸ்ஸைநிறுத்திபயணிகளை ஏற்றுவதற்கும், இந்தச் சேவையை தற்காலிகமாக ஒரு மாதத்துக்கு மேற்கொள்வதற்கும் முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. கடந்த வியாழக்கிழமை முதல் இந்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதி பொலிஸ்மா அதியட்சர் காரியாலயத்தில், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மாவட்டத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் இ.எம்.எம்.ஏக்கநாயக்கா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வவுனியா போக்குவரத்துப் பொலிஸார், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களின் இலங்கைப் போக்குவரத்து சபை சாலை முகாமையாளர்கள், பிரதேச செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் என்று தனியார் போக்குவரத்து பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-ஜ-ரி5)



# கைதிகளின் விடுதலை வேண்டி வவுனியாவில் விசேட வழிபாடு

வவுனியா, ஜன.17

வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்தில் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி நேற்று முன்தினம் விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

ஆலய பரிபாலன சபைச் செயலாளர் சிவகஜன் தலைமையில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம், ஆதி விநாயகர் ஆலய பரிபாலன சபை மற்றும் தமிழ் விருட்சம் ஆகியன இணைந்து அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என நெய் விளக்கேற்றி பிரார்த்தனை செய்தனர்.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாணசபை உறுப்பினர் தியாகராஜா, முன்னாள் நகர பிதா சந்திரகுலசிங்கம், சமூக சேவை உத்தியோகத்தர் சிறினிவாசன், இறைபணி செம்மல் தேவராசா, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், ஆதி விநாயகர் ஆலய பரிபாலன சபை தலைவர் க.சுமந்திரன் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-ஜ)

# இ.போ.ச- தனியார் பஸ்களின் சாரதிகளிடையே கைகலப்பு

வவுனியா, ஜன.17

வவுனியாவில் இ.போ.ச பஸ் சாரதிகள் மற்றும் தனியார் பஸ் சாரதிகள் நேற்று முன்தினம் இரவு மத்திய பஸ்தரிப்பிடத்தில் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற இ.போ.ச பஸ்ஸின் சாரதி, வவுனியா மத்திய பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸை நிறுத்திவிட்டு இறங்க முற்படுகையில் அவரை தனியார் பஸ் சாரதிகள் சிலர் தாக்க முற்பட்டுள்ளனர் என்றும், பஸ் தரிப்பிடத்தில் நின்ற ஏனைய இ.போ.ச. சாரதிகள் தடுத்ததுடன், தனியார் பஸ் சாரதிகளைத் துரத்திச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் வவுனியா பஸ் தரிப்பிடத்தில் தரித்து நின்ற பின் திருகோணமலையிலிருந்து வந்த இ.போ.ச. பஸ், யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றபோது, தனியார் பஸ்சாரதி தனது பஸ்ஸைச் செலுத்தி வீதியில் செல்வதற்கு புளியங்குளம் வரை இடம் கொடுக்கவில்லை என இ.போ.ச. பஸ்ஸின் சாரதி பொலிசாரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததையடுத்து இது தொடர்பாக வவுனியா இ.போ.ச. மத்திய பஸ் தரிப்பிடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

பயணிகளை பஸ்ஸில் ஏற்றுவதற்குத் தனியார் மற்றும் இ.போ.ச. சாரதிகளுக்கிடையேஏற்பட்ட போட்டியே இந்தக் கைகலப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ஜ)

# செம்மலையில் தைப் பொங்கல் விழா

முல்லைத்தீவு, ஜன.17

வடக்கு மாகாண கல்வி அமைச்சும், வடமாகாண கல்வித் திணைக்களமும், முல்லைத்தீவு துணுக்காய் வலயங்கள் இணைந்து நடத்திய தைப் பொங்கல் விழா நேற்று முன்தினம் முல்லை கல்வி வலயத்தின் செம்மலை மகாவித்தியாலயத்தில் முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.



இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக ஊற்றங்கரை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இ.பத்மகுமாரக் குருக்களும், சிறப்பு விருந்தினர்களாக அண்ணாவியார் சு.கணேசலிங்கமும், முல்லைத்தீவு மாவட்ட செயலக தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர் பி.பிரதீஸ்கரன், வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சர் த. குருகுலராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் சிறப்புரையை அமைச்சர் த. குருகுல ராஜா நிகழ்த்தினார்.

அத்துடன் இந்த நிகழ்வில் வெலிஓயா கோட்ட பாடசாலை மாணவர்களும், முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவர்களும், தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களும் செம்மலை மகா வித்தியாலய மாணவர்களும் இணைந்து கலை நிகழ்வுகளையும் நிகழ்த்தினர். (ம-ஜ-433)

# வித்தியானந்த கல்லூரியின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழா

முல்லைத்தீவு, ஜன.17

முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரியின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் ஆரம்ப கால அதிபராக கடமையாற்றிய ஓய்வு நிலை அதிபர் ஊ.இராசநாயகமும், சிறப்பு விருந்தினராக முல்லை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தேவதாஸும், கௌரவ விருந்தினர்களாக அயல் பாடசாலையின் அதிபராகிய டி.இராமநாதன் மற்றும் ஓய்வு நிலை உத்தியோகத்தராகிய எஸ்.துரைராஜசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் பரிசளிப்பு நிகழ்வும், மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-ஜ-102)

# கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் பணியாற்றியவர் ஆயர் இராயப்பு யோசப்

## மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் தெரிவிப்பு

மன்னார், ஜன.17

ஆயர் இராயப்பு யோசப் சிறப்பான சேவையாற்றியுள்ளார். மன்னார் மறைமாவட்டத்துக்கு மட்டுமல்ல இலங்கை மற்றும் அகில உலக வாழ் தமிழ் மக்களுக்கும் அவர் சிறந்த சேவையாற்றியுள்ளார்- இவ்வாறு தெரிவித்தார் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை அன்ரனி விக்டர் சோசை.

மன்னார் மறைமாவட்டத்துக்கு புதிய ஆயர் நியமிக்கப்படும் வரை, புதிய அப்போஸ்தலிக்க பரிபாலகராக திருகோணமலை மறைமாவட்டத்தின் இளைப்பாறிய ஆயர் அதிவந்தனைக்குரிய ஜோசப் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.


இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அதி வணக்கத்துக்குரிய ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை கடந்த 23 வருடங்களுக்கு மேல் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக கடமையாற்றியுள்ளார்.

கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலே பணியாற்றியுள்ளார். பல்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும்பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்துள்ளார்.

தற்போது அவரது உடல் நிலை சுகவீனம் காரணமாக ஏற்கனவே ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை பணிப்பொறுப்பில் இருந்து குருக்கள் தொடர்ந்தும் புதிய அப்போஸ்தலிக்க பரிபாலகருக்கு கீழ் தமது பணியை தொடர்ந்து செய்வர்.

இந்த மறைமாவட்டத்துக்காக அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்பார்கள் என்பது எங்கள் அனைவரதும் நம்பிக்கை- என்றார். (ம-ஜ-56)




வவுனியா தெற்கு கல்வி வலயம் வவுனியா வடக்கு கல்வி வலயங்கள் இணைந்து நடத்திய தைப்பொங்கல் விழா நேற்று முன்தினம் வவுனியா தமிழ் மகாவித்தியாலய விநாயகர் ஆலய முன்றிலில் நடைபெற்றது. வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா நகரசபை செயலாளர் பி.ரி.தர்மேந்திரா கலந்து கொண்டார். நிகழ்வில் தமிழரின் பாரம்பரியமாக விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் ஏர் கருவிக்கு மாலையிட்டு சூரியனுக்கு நன்றி செலுத்தி பொங்கல் படைக்கப்பட்டது. தொடர்ந்து தமிழ் பண்பாட்டைச் சித்திரிக்கும் கும்மி நடனம், உழவர் நடனம், கோலநடனம், குடங்களை ஏந்திய நடனம், கவியரங்கு, தமிழ் பாரம்பரிய பாடல் போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-ஜ-402)

# மூடுவதில் காட்டும் அக்கறை பாடசாலை திறப்பதில் இல்லை

## கல்வித் திணைக்களத்தை சாடுகின்றனர் கல்வியியலாளர்கள், பொதுமக்கள்

வலி.வடக்கு, ஜன.17

வட மாகாண கல்வித் திணைக்களம் பாடசாலைகளை மூடுவதில் காட்டும் அக்கறையை பாடசாலைகளை திறப்பதில் காட்ட வில்லை என்று கல்வியலாளர்கள் மற்றும் பொது மக்கள் சாடுகின்றனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாண கல்வி வலயத்துக்கு உட்பட்ட இரண்டு பாடசாலைகளுக்கு மூடு விழா செய்த வட மாகாண கல்வித் திணைக்களம், இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறி எட்டு மாதங்கள் கடந்த நிலையிலும் அந்தப் பகுதியில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளைக் கூட இயக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

> ‟ குறிப்பிட்ட பாடசாலை மருதனார் மடத்தில் உள்ள இராமநாதன் கல்லூரி வளாகத்தில் இயங்கி வருகின்றது. ”

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து தற்போது மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வறுத்தலை விளான் பகுதியில் உள்ள வறுத்தலை விளான் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையை இயக்க இது வரையில் எந்த வகையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதயில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியேறி எட்டு மாதங்களுக்கு மேலாகின்ற போதிலும் குறிப்பிட்ட பாடசாலை உரிய இடத்தில் இயங்காமையால் மீளக்குடியேறிய மக்களின் ஆரம்பப் பிரிவுப் பிள்ளைகள் தூர இடங்களில் உள்ள பாடசாலைகளைத் தேடிச் செல்லும் நிலமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தற்போது குறிப்பிட்ட பாடசாலை மருதனார் மடத்தில் உள்ள இராமநாதன் கல்லூரி வளாகத்தில் இயங்கி வருகின்றது. (ற-ஜ-86)

## சுகாதாரத் திணைக்கள சாரதிகளை மாற்றம் செய்வதை நிறுத்த உத்தரவு

சாவகச்சேரி ஜன.17

சுகாதாரத் திணைக்களத்தில் சாரதிகளாகக் கடமையாற்றுவோரை வேறுதிணைக் களங்களுக்கு இடமாற்றம் செய்ய வேண்டாம்என்றும், அவ்வாறுஇடமாற்றம் வழங்கப்பட்டிருந்தால் உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் வடமாகாண ஆளுநருக்குச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களங்களில் 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் கடமையாற்றிய சாரதிகள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் கடமையாற்றியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் சாரதிகள் சேவை ஒன்றிணைக்கப்பட்டு கடமையாற்றும் சுகாதாரத்திணைக்கள சாரதிகள் வேறு திணைக் களங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

இதுகுறித்து தொழிற் சங்கத்தினர் சுகாதார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து சுகாதார அமைச்சர், வட மாகாண ஆளு நருக்கு அனுப்பிய கடிதத்தில் வட மாகாண சுகாதாரத் திணைக்களச் சாரதிகளுக்கென சங்கம் அமைக்குமாறும், நோயாளர்களுக்கு முதலுதவிகள் வழங்குவது உட்பட பல்வேறு விசேட பயிற்சிகள் பெற்ற சுகாதாரத் திணைக்களச் சாரதிகளை சுகாதாரத் திணைக் களத்துக்குள் இடமாற்றல் செய்யுமாறும், அண்மையில் வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட சுகாதாரத்திணைக்கள சாரதிகளின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய நடவடிக்கைஎடுக்குமாறும்அறிவித்துள்ளார். (ற-ஜ-9)

## தடம்புரண்ட ஓட்டோ இருவருக்கு காயம்

சாவகச்சேரி, ஜன.17

வேகக்கட்டுப்பாட்டைஇழந்த ஓட்டோ, வீதி வளைவில் திரும்பும்போது வீதியோரக் குளத்தில் பாய்ந்து தடம் புரண்டதில்அதில்பயணித்த இருவர் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவம்நேற்றுமுன் தினம்இரவு வரணி கறுக்காய் கந்தசாமி ஆலயத்துக்கு அருகில் இடம் பெற்றது.

காயமடைந்த வரணி மற்றும் மந்துவிலைச் சேர்ந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை,வயலில்காவலுக்குத் தங்கியிருந்தவர், இனந்தெரியாதோரால் திருடனென நினைத்து தாக்குதலுக்குள்ளான சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. காயமடைந்த மட்டுவில்வாசி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-ஜ-9)

## தென்மராட்சியில் 46 பேருக்கு டெங்கு

சாவகச்சேரி, ஜன.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த 14 ஆம் திகதி வரை 46பேர்டெங்குத்தொற்றினாலும், 33 பேர் உண்ணிக் காய்ச்சலாலும் பீடிக்கப்பட்டு விடுதிகளில் தங்கி சிகிச்சைபெற்றுள்ளனரென வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு விடுதிகளில் சேர்க்கப்பட்டு குருதி மாதிரிகள் பரிசோதனையின் பின்னர் டெங்கு மற்றும் உண்ணிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப் பட்டு சிகிச்சையளிக்கப் பட்டுள்ளதெனத் குறிப்பிடப் பட்டுள்ளது.

கடந்த 14 தினங்களிலும் வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் 400க்கும்மேற்பட்டோரின் குருதி மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-9)

## இந்து வாலிபர் சங்கத்தால் மாணவர்களுக்கு உதவிகள்



வலி.வடக்கு, ஜன.17

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலைமாணவர்களுக்கு புத்தகப் பைகள் மற்றும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மற்றும் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பட்டதுடன், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு 10 புதிய வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

இந்த வெற்றிக்கிண்ணங்கள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் வைத்துக் கல்லூரி பிரதி அதிபர் இந்திரா தவநாயகத்திடம்வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் தலைவர்.கு.பகீதரனால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ற-ஜ-86)

## கடற்கரைப் பாதுகாப்பு அரணில் இரவு வேளைகளில் மண் களவு

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி,ஜன.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் படையினரால் கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு மண் அணையிலிருந்து இரவு வேளைகளில் வாகனங்களில் மண் ஏற்றிச் செல்கின்றனர். இதனால் கடல் நீர் ஊருக்குள் புகும் அபாயம் உள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் படையினர் நிலை கொண்டிருந்த வேளையில் தென்மராட்சிப் பிரதேச கரையோரப் பாதுகாப்புக்காக கேரதீவு, அறுகுவெளி, மூன்று பனையடிப்பகுதியில்பெரும் பாதுகாப்பு மண் அணை அமைத்திருந்தனர்.

தற்போது இராணுத்தினர் அங்கிருந்து வெளி யேறியுள்ள நிலையில் அண்மைக்காலமாக இரவு வேளையில் வாகனங்களில் வருவோர் மண் அணையை வெட்டி மண்ணை ஏற்றிச் செல்கின்றனர்.

தற்போது மண் அணையை வெட்டி எடுப்பவர்கள் ஆழமாக கரையோர மண்ணை வெட்டி எடுப்பதால், மழை காலங்களில் வெள்ளம் ஊர் மனைக்குள் புகும் அபாயம்உள்ளதுஎன்றும், இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறி வித்தும் பயன் கிடைக்கவில்லை என்றும் மக்களும் அந்தப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடுவோரும் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்றும்அவர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-9)

# சேவைப் பிரமாணக் குறிப்பு அடிப்படையில் உள்ளூராட்சி உதவியாளருக்கு பதவியுயர்வு

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.17

வடமாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் சகல உள்ளூராட்சி உதவியாளர்களுக்கும் சேவைப் பிரமாணக் குறிப்பு அடிப்படையில் வகுப்பு ஒன்றுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் எனும் தீர்மானம் வடமாகாண சபையில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வட மாகாண சபையில் மீன்பிடி மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் பா. டெனீஸ்வரன் முன்வைத்த பிரேரணையே நிறைவேற்றப்பட்டது.

10 ஆயிரம் பட்டதாரிகள் திட்டத்தின் கீழ் 16.5.1999இல்உள்ளூராட்சிஉதவியாளர்கள் வடக்கு கிழக்கில் நியமனம் பெற்றனர்.

இவ்வாறு நியமனம் பெற்ற உள்ளூராட்சி உதவியாளர்கள் ஏனைய திணைக்களங்களுக்கு,அமைச்சுகளுக்குஇடமாற்றம்பெற்றுச் செல்ல முடியாத மூடிய சேவையில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களங்களில்கடந்த16வருடங்களுக்கு மேலாக முழு சேவையாற்றி வருகின்றனர்.

இவர்களில் ஒரே திகதி, மாதம் , வருடத்தில் நியமனம் பெற்று கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு 2004 இல் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணம் இணைந்த நிர்வாகத்தில் முன்னாள் ஆளுநர் ஏ.கே.அசோகா ஜெயவர்த்தனா, முன்னாள் பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் வே.பொ.பாலசிங்கம் ஆகியோரால் அனுமதிக்கப்பட்டு சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையிலேயே கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர்கள் பதவி உயர்வுகளைப் பெற்று சேவையாற்றுகின்றனர்.

ஆனால், வடக்கில் தற்போது பணியாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள் வகுப்பு 2, வகுப்பு 1 ஆகிய இரு பதவி உயர்வுகளும் அற்ற நிலையில், நியமனத் தரத்தில் காலம் தாழ்த்தப்பட்டு இன்று 16 வருடங்கள் முடிவடைந்த நிலையில் அவர்களது நிலை பற்றி இது வரை எவரும் முன்னு தாரணமான நடவடிக்கை எடுக்கவில்லை.

சகல உள்ளூராட்சி உதவியாளர்களும் வடக்கில் உள்ளூராட்சி மன்ற அபிவிருத்திக்காக தங்களை அர்ப்பணித்து சேவை செய்கின்றனர்.

எனவே வடமாகாண நிர்வாகம் அவர்களுக்கு உரிய வகுப்புக்கு பதவி உயர்வு வழங்க ஒன்றிணைந்த அடிப்படையில் முன்வர வேண்டும்.

பிரதேச சபைகளுக்கு சுப்பிறா தர ஆளணியைப் பெற்று விட்டு உள்ளூராட்சி உதவியாளர்களான பட்டதாரி அலுவலர்களது சேவைகளை முடிவுக்குக் கொண்டு வந்த நடைமுறை ஏற்க முடியாத ஒன்று.

எனவே வட மாகாணத்தில் உள்ளூராட்சி உதவியாளர் பதவியை வகிக்கும் அனைவருக்கும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கியது போன்று, பதவிஉயர்வுவழங்கவேண்டும்-என அமைச்சர் சபையில் தெரிவித்திருந்தார்.(ற-ஜ-50)

# கண்ணிவெடி அகற்றும் பணி மீளவும் ஆரம்பம்

*இராணுவப் பேச்சாளர் தகவல்*

கொழும்பு, ஜன.17

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 64 ஏக்கர் நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு , முகமாலை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர கூறினார்.

சர்வதேச கண்ணிவெடி அகற்றும் குழு மற்றும் இராணுவத்தின் விசேட குழுவொன்றும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

மேலும் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார். (வ)









# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



**மோட்டார் சைக்கிள்விற்பனைக்கு** தொடர்பு: 077 710 9096

HL-xxxx இலக்கமுடைய சிவப்பு 150Pulser நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.

**வீடு காணி விற்பனைக்கு** தொடர்பு: 077 502 6107

வவுனியா. சாந்த சோலை வீதியில் நரசிம்மர் ஆலயத்திற்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு. 3 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (66679) (13.15)

**விற்பனைக்கு** தொடர்பு: 077 079 0775, 077 035 5560

நல்ல இன டாசோன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (66679) (13.15)

**காணி விற்பனைக்கு** தொடர்பு: 077 318 1149, 077 751 3872

யாழ். கொக்குவில் கிழக்கு. இல. 60. உடையார் லேனில் 3¾ பரப்பு வெற்றுக்காணி சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு.

**வீடு விற்பனைக்கு** தொடர்பு: 071 683 3629

யாழ். நகர் கொட்டடிச் சந்திக்கு அருகில் ஆஸ்பத்திரி வீதிக்கு மிகச் சமீபமாக சுமார் 3 பரப்பில் அமைந்த வீடு (சுமார் 2700 ச.அடி) நன்னீர்க் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.(No BROKERS)

**விற்பனைக்கு** 077 110 9408

குளிர்சாதனப் பெட்டி, கோழிக் கூடு விற்பனைக்கு உண்டு. (67633)(13.15)

**காணி விற்பனைக்கு**

*தெல்லிப்பழை. துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து 200m தொலைவில். காசிப்பிள்ளையார் கோயிலுக்குப் பின்னால்.
*K.K.S வீதியிலிருந்து 2ஆம் காணி
*4.5 பரப்பு விற்பனைக்கு உண்டு.

077 551 8002

**காணி விற்பனைக்கு** தொடர்பு: 075 070 3149

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் சீரணிச்சந்தியிலிருந்து 150 மீற்றர் தூரத்தில் சங்கானை செல்லும் பிரதான வீதியில் 10 பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. 4. 6 பரப்புக்களாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.

**விற்பனைக்கு உண்டு**

3 ➙ தேக்கு விறாக்கை - 9X3 அடி அளவு
1 ➙ தேக்கு விறாக்கை - 9X6 அடி அளவு
1 ➙ தேக்கு கௌண்டர் மேசை - 4½ லாச்சியுடன் 4X2½ அடி அளவு.
1 ➙ தேக்கு கௌண்டர் மேசை 4X2½ அடி அளவு.
1 ➙ தண்ணீர் தாங்கி - 500l (பாவித்தது)

021 222 4137, 076 731 2031

**வேலையாள்கள் தேவை** 077 787 2322, 076 659 4296

எமது சேவிஸ்ரேசனுக்கு அனுபமுள்ள வேலையாள்கள் தேவை.
**அம்பாள் சேவிஸ்ரேசன்**
கே.கே.எஸ். றோட், மருதனார் மடம். (66679) (13.15)

**பணியாளர்கள் தேவை**

யாழ்நகரில் இயங்கும் பிரபல விநியோக நிறுவனம் ஒன்றிற்கு **யாழ். கிளிநொச்சி** அலுவலகங்களுக்கு **கணக்கு உதவியாளர்கள்** (பெண்) தேவை.

தொடர்பு: 451,K.K.S.Rd. Jaffna
021 222 3344, 077 468 5764 (66679) (13.15)

**ஆசிரியர் தேவை**

G.C.E (A/L) (EDEXEL)
Economics,Commerce, Accounts
கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.
Beefort International School
136,Navalar Road, Jaffna

**பணியாளர்கள் தேவை** தொடர்பு: 075 902 2330

வவுனியாவிலுள்ள அரிசி ஆலை ஒன்றிற்கு முகாமையாளர் மற்றும் தொழிலாளர்கள் உடன் தேவைப்படுகின்றார்கள்.

**வீடு வாடகைக்குத் தேவை**

திருநெல்வேலி, கோண்டாவில், உரும்பிராய் ஆகிய பகுதிகளில் (பலாலி வீதிக்கு அண்மையில்) 3 அறைகளுடன் கூடிய வீடு சிறிய குடும்பத்துக்கு வாடகைக்குத் தேவை.

076 630 2147

## வேலைவாய்ப்பு

### வேலைவாய்ப்பு

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம். இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் புதிதாக திறக்கப்படவுள்ள தொழிற்சாலைக்கு ஆண், பெண் வேலையாள்கள் உடனடியாக தேவை.(ஜேம், பிஸ்கட், யோகட், டிபிடிபி, நூடில்ஸ்) ஆகிய பிரிவுகளுக்கு (பொதியிடல், லேபல்) கிழமை சம்பளம் பெற்றுக் கொள்ளலாம்.
( 1 Week 10000.00 பெற்றுக் கொள்ளலாம்) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். (50 வெற்றிடம் மட்டும் உள்ளது) (வயது 18 - 55)

076 672 2606, 076 656 5374

எமது பிரதான தொழிற்சாலைகளில் ஜாம், பிஸ்கட், பால்மா, யோகட், ஷம்போ போன்ற பிரிவுகளுக்கு ஆண், பெண்(18 - 50) வயது உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். லேபல். பொதியிடல் பிரிவுகளுக்கு சம்பளம் (25000 - 40000) கிழமை சம்பளம் பெற்றுக் கொள்ளலாம். நாள் சம்பளம் 1400/= O.T - 150. (8HRS வேலை) முஸ்லிம்களுக்கு விசேடமான தொழுகை வசதி செய்து தரப்படும். தொடர்பு கொள்ளவும்.

077 300 2428, 072 390 7665

எமது நிறுவனம் உணவு உற்பத்தி செய்யும் பிரசித்தி பெற்ற நிறுவனமாகும். அதி உயர் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம். (பிஸ்கட், சொக்லெட், கிளவுஸ், குளிர்பானம், லேபல், பொதியிடல் பிரிவுகளுக்கு) OT - 150 மாத சம்பளம் Rs.45000 இற்கு மேல் திறமையானவர்களுக்கு விசேட கொடுப்பனவு கொடுக்கப்படும். உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். நாள் சம்பளம், கிழமை சம்பளம் பெற்றுக் கொள்ளலாம்.
(6மாதம் ஒரு முறை போனஸ் Rs.25000) பெற்றுக் கொள்ளலாம். (வயது 18 - 55)

076 915 5233, 077 165 7473

எமது நாட்டின் தலைநகரான கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கிளினிங், கேட்டரிங், லொன்றி, கிச்சின் போன்ற பகுதிகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. முற்கொடுப்பனவு 25000 - 30000 வரை மூன்று மாத காலங்களின் பின்னர் நிரந்தரமாக்கப்பட்டதுடன் 45000 - 75000 வரை சம்பளம் வழங்கப்படும். வயது எல்லை 18 - 40 வரை.

075 420 4351, 071 921 5892

அரசாங்கம் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தில் ஐஸ்கிறீம், ஜாம், டொபி, டிபிடிபி, பிஸ்கட் போன்ற தொழிற்சாலைகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் உடனடியாக வேலை உண்டு. நாள் சம்பளம் (Rs.1500) மாதாந்த சம்பளம், கிழமை சம்பளம் ஆகியன பெற்றுக் கொள்ளலாம். வயது( 18 - 50) உணவு, தங்கும் இடம் முற்றிலும் இலவசம்.(வருகைக்கான கொடுப்பனவாக மாதாந்தம் - 2000). மாதாந்த சம்பளம்(20000 - 40000) தம்பதியினர், நண்பர்கள், குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். அரிதாக வேலைவாய்ப்பு உள்ளதால் உடனடியாக இணைந்து கொள்ளவும். வரும் நாளிலே வேலை வாய்ப்பு உண்டு. உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

072 223 1516, 071 666 0104

நண்பர்களே இனி வேலை தேடி அலையத் தேவையில்லை குறைந்த உழைப்புக்கு கூடிய வருமானம் ஈட்டிக் கொள்ளலாம். எமது புதிதாக திறக்கப்படும் தொழிற்சாலைக்கு ஆண், பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை. லேபல், பொதியிடல், களஞ்சியப்படுத்தல் பிரிவுகளுக்கு (நாள் சம்பளம் - Rs.1500) கிழமை சம்பளம், மாதசம்பளம் பெற்றுக் கொள்ளலாம். உணவு, தூங்குமிடம், ஆடை முற்றிலும் இலவசம் 6மாத காலம் தொடர்ந்து நீங்கள் வேலை செய்தால் சம்பளத்திற்கு மேலதிகமாக (Rs.25000) போனஸ் வழங்கப்படும். விண்ணப்பங்களுக்கு முந்துங்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். (முன் அனுபவம் தேவையில்லை)

077 401 7543, 075 544 6898

2016ஆம் ஆண்டின் முற்பகுதியில் அதிக சம்பளத்துடன் வேலையை எதிர்பார்க்கும் ஆண், பெண் இருபாலாருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம் ப்ரிமா நூடில்ஸ்(லொக்கா), சொசேயஸ், பால்மா போன்ற கம்பனிகளில் உதவியாளர்கள் உடனடியாகத் தேவை. 1நாள் சம்பளம் 1000/= OT 1 Hour 100/=,35000 - 45000 வரை மாதாந்த சம்பளம் பெற்றுக் கொள்ள முடியும். வயது எல்லை 18 - 50 வரை தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும். உணவும் உட்பட

076 980 4744, 075 286 9947

# ஏனையவை

**தையல் பயிற்சி வகுப்பு**

ஆரம்ப தையல் தெரிந்தவர்களுக்கு 20 நாள்களில் 15 வகையான பெண்களுக்குரிய ஆடைகள் சுலபமான முறையில் வெட்டித் தைத்துப் பழக்குவதற்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்.

077 473 9889, 021 221 7117

**வீடு வாடகைக்கு உண்டு** 076 802 6824, 077 278 9233

திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் விசாலமான மாடி வீடு. வாகனத்தரிப்பிடத்துடன் மாத வாடகைக்கு உண்டு.
ஒரு கிழமைக்குள் தொடர்புகொள்ளவும். (தரகர்கள் தேவையில்லை) (66679) (13.15)

**விசுவமடு தொட்டியடிசித்தி விநாயகர் ஆலய கட்டட வளர்ச்சிக்கான மாபெரும் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்**

| | |
|---|---|
| முதலாம் பரிசு | 5413 - கண்ணன் பல் பொருள் வாணிபம் - விசுவமடு. |
| 2ஆம் பரிசு | 96 -குவிதனன் 10 ஆம் யூனிற் தருமபுரம். |
| 3 ஆம் பரிசு | 5828 - நாகபூசணி, தரவை மிருசுவில் |

**ஆறுதல் பரிசுகள்**

| | |
|---|---|
| முதலாம் பரிசு | 5515 - சுதன்,வரணி (யாழ்) |
| 2ஆம் பரிசு | 3043 -வி.ரசீகரன் 84/2, தொட்டியடி, விசுவமடு. |
| 3 ஆம் பரிசு | 4415 - க.வன்னியசிங்கம் காளிகோயிலடி, 12 ஆம் கட்டை, விசுவமடு. |
| 4 ஆம் பரிசு | 2369 - கோ.தினேஸ்குமார் |
| 5ஆம் பரிசு | 570 -சதீஸ் லேணர்ஸ், முள்ளியவளை. |
| 6ஆம் பரிசு | 2403 - ம.ரிஷ்மிதன், |
| 7ஆம் பரிசு | 5331- செ.ரிஷிவன் |
| 8 ஆம் பரிசு | 4350 - ஜெ.ரதுர்ஷன், |
| 9ஆம் பரிசு | 5168 - ஏ.பிரபாகரன், |
| 10 ஆம் பரிசு | 5068 - வீரமைந்தன் |

(63623) (13.18) -ஆலய நிர்வாகத்தினர்-

**வீடு தேவை** 071 255 1103

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வீடு விற்பனைக்கு வேண்டும். (67589)(13.15)

**வாடகைக்கு** தொடர்பு: குமார் 077 931 0517

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் உணவகம் ஒன்று நாள் வாடகைக்கு உண்டு.



- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**கவரிங் நகைகள்** தொடர்பு: 0757 255 552

சுத்தமான தங்கமுலாம் பூசப்பட்ட கவரிங் நகைகள் விற்பனைக்குள்ளன.

**PERSONAL CLASS**

இரசாயனவியல்
Nimal B.Sc
35 வருட வினாத்தாள் கற்பிக்கப்படும்.
077 869 7256

**பணியாளர்கள் தேவை** தொடர்பு: 077 6468 452

அலுமினியம் பிற்றிங் வேலை செய்வதற்கு வேலை தெரிந்தவர்கள் அல்லது ஓரளவு தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**ELOCUTION வகுப்புக்கள்**

3 வயது முதல் 10 வயது வரையான பிள்ளைகளின் ஆங்கில உச்சரிப்பு முறையை மேம்படுத்தக் கூடிய வகுப்புக்கள்,
**திங்கள், புதன், வெள்ளி நாள்களில் 3.30 - 5.30 வரை**
Beefort International School
136,Navalar Road, Jaffna

**Day Classes**

உயர்தர மாணவர்களுக்கான
⌘ இரசாயனவியல் ⌘ இணைந்த கணிதம்
துரித மீட்டல் வகுப்புக்கள் மற்றும் கடந்தகால வினாக்கள் என்பவற்றுக்கான விசேட வகுப்புக்கள் (Personal Classes)
தொடர்பு : 0772112291
[யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி பிரதேசங்களில்]

# JAFFNA UNIVERSITY COLLEGE

## FIRST TIME IN SRI LANKA

## Build up Great Future.....

**REGISTER TODAY**

**LIMITED OPPORTUNITIES AVAILABLE**

University Colleges established under University of Vocational Technology (UNIVOTEC) invite you to study for **NVQ Level 5 Diploma** and **Level 6 Higher Diploma in Technology.**

University of Vocational Technology (UNIVOTEC) has been established under the parliamentary Act No. 31 of 2008, to provide progressive upward movement to the students in the technical and vocational education and training (TVET). UNIVOTEC is a member of the Association of Commonwealth Universities.

## NVQ Level 5 & 6 Diploma

- **Professional industry qualification for employment in junior management and supervisory levels**
- **Opportunities to follow B.Tec Degree at University Colleges/UNIVOTEC**

- Course Duration: **Three (3) Years, Full Time** (Including 6 months Foundation Course and 6 months On the Job Training)

### University Colleges – Entry Qualifications for Diploma Courses

GCE A/L 3 passes in relevant stream or NVQ Level 4 in relevant occupation as specified below

| | Course | Entry Qualifications |
|---|---|---|
| 03 | **Building Services Technology** (This course includes techniques applied for design, installation, operation and monitoring of modern buildings; ACMV, Electrical and Electronics, Fire, Elevator, escalator, CCTV, PSD and Waste Water Monitoring System) | • GCE (A/L) Science (Maths) or Engineering Technology or Art with Credit Pass for Hard Technology (Civil Technology ,Electrical, Electronic and Information Technology)<br>OR<br>• NVQ Level 04 Certificate of Electrician (E40S001) / Refrigeration and Air Conditioning Mechanic (D29S002) /Construction Site Supervisor (F45S006) / Building Services Technician (F45S015)/ Plumber (E41S001) /Elevator Technician (F45S014) |
| 06 | **Mechatronics Technology** (This course includes the subjects related to designing, operating, maintaining and repairing Hydraulic, Pneumatic Electrical and Electronic Systems. Also include Robotics, PLC and SCADA Systems) | • GCE (A/L) Science (Maths) or Engineering Technology or Art with Credit Pass for Hard Technology (Mechanical or Electrical, Electronic and Information Technology)<br>OR<br>• NVQ Level 04 Certificate of Mechatronics Technician (D33S001)/ Electrician(E40S001)/ Pneumatic Technician (E40S004)/ Machinist (D29S001)/ Industrial Electronic Craftsman (D32S002)/ Tool & Die Maker (D28S003) |
| 07 | **Construction Technology** (This course includes the subjects related to planning of construction works, managing Civil Engineering Works and organizing sites) | • GCE (A/L) Science (Maths) or Engineering Technology or Art with Credit Pass for Hard Technology (Civil Technology)<br>OR<br>• NVQ Level 04 Certificate of Construction Craftsman (Masonry, F45S005)/ Plumber( E41S001)/ Draught Person (F45S009) / Construction Site Supervisor(F45S006)/Wood Craftsman (Building, F45S004/ Furniture(D36S001)/ Aluminium Fabricator (F45S003) |
| 09 | **Production Technology (Mechanical and Manufacturing Technology)** (This course includes the Technology related to designing of machine components, manufacturing drawings, analyzing of products quality, computer numerical control machines and engineering materials) | • GCE (A/L) Science (Maths) or Engineering Technology or Art with Credit Pass for Hard Technology (Mechanical Technology)<br>OR<br>• NVQ Level 04 Certificate of Machinist (D29S001)/ Welder (D28S002) /Tool and Die Maker (D28S003)/ Fabricator (Metal, D28S001) |
| 11 | **Farm Machinery Technology( Agriculture Machinery technology** (This course includes selection, operation, utilization, and maintenance of mechanical devices related to agricultural activities) | • GCE (A/L) Science (Maths/Bio) or Engineering Technology or Art with Credit Pass for Soft Technology (Agro Technology) or Hard Technology (Mechanical Technology)<br>OR<br>• NVQ Level 04 Certificate of Automobile Mechanic(G50S003)/ Three Wheeler Mechanic (G50S007) and Motor Cycle Mechanic ( G50S006)/Field Assistant (Agriculture,A01S003)/ Agricultural Equipment Mechanic (G50S008) |
| 14 | **Food Technology** (This course includes the subjects of analytical chemistry, biotechnology, engineering, nutrition, quality control, and food safety management for selection, preservation, processing, packaging, distribution, and use of safe food) | • GCE (A/L) Science (Bio) or Bio Science Technology or Agriculture, Art with Credit Pass for Soft Technology (Food Technology, Agro Technology)<br>OR<br>• NVQ Level 04 Certificate of Baker (D15S002)/ Cook (H55S003)/ Fruit and Vegetable Processor (D15S001) |
| 22 | **Cosmetology (Beauty Culture)** (This course includes Nutrition, diet and exercise, advance skin care, hair treatment, hair dressing, advance hand and foot care, Ayurvedic beauty therapy and advance make up) | • GCE (A/L) Science, Art, Commerce or Technology<br>OR<br>• NVQ Level 4 Certificate of Beautician(O93S001), Hair Dresser(O93S002) |
| 23 | **Hospitality and Tourism Management** (This course includes tourism management, public relation, front office management, kitchen and restaurant management, reception and house keeping) | • GCE (A/L) Science, Art, Commerce or Technology<br>OR<br>• NVQ Level 4 Certificate of Cook(H55S003), Room Attendant(H55S002), Waiter/Steward(H55S001), Tour Guiding(I63S005) |

- **Age should be below 29 years as at 31.12.2015**

**Course Fee:**

- Rs.60, 000.00 for entire three years - Payment could be made in 6 Installments
- Scholarships are available for Samurdhi Beneficiary families.

**How to Apply:**

1. Download application form and online submission : http://www.ucj.lk OR
2. Forms are also available in the leading bookshops in Jaffna, Kilinochchi, Mullaitivu, Mannar and Vavuniya.

For more details visit our website: http://www.ucj.lk or Our University College at the below mentioned address.
Duly filled application forms can be sent by post or handed over to our office.

**Closing Date 05.02.2016**

Empowering through Skills Development

**The Chief Executive Officer**
**University College of Jaffna**
**29 Brown Road, Jaffna.**
**Tel: 0212217792**

UNIVOTEC

UNIVERSITY COLLEGE

**University College of Jaffna**
**University of Vocational Technology**
**Ministry of Skills Development and Vocational Training.**

**வீடு விற்பனைக்கு** தொடர்பு: 077 322 0722

மானிப்பாய் பிரதான வீதியில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக மூன்று அறைகள். இரண்டு குளியல் அறைகள் உடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் ஐந்து பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

**பிரத்தியேக வகுப்பு** தொடர்பு: 077 534 2025

வீட்டில் வந்து ஆங்கில இலக்கணம் தெளிவாகக் கற்றுக் கொடுக்கப்படும்.

**வீடு வளவு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் K.K.S வீதிக்கு மிகமிக அருகில் 4அறைகள், 2ஹோல், ஒரு குளியலறை, ஒரு சமையலறை, கராஜ், கிணற்றுடன்கூடிய நல்ல வீடு வளவு உடனடி விற்பனைக்குண்டு. வாங்கவிரும்புவோர் 077 905 0274 என்ற தொலைபேசி இலக்கத்துடன் காலை 6 மணிமுதல் காலை 9மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(c 28084) (14,15) (தரகர்கள் தேவையில்லை)

**சேவை** 076 897 0707

உங்களது அன்புக்குரிய முதியோரைவிட, எங்களது முதியோர் இல்லத்தில் ஆதரவுடனும் அரவணைப்புடனும் வைத்திய தாதியர் சேவையுடனும் பராமரிக்கத் தயாராக உள்ளோம். (சி28350)(11.15.16)

**பணிப்பெண் தேவை** தொடர்பு: 077 966 7533

வயோதிப தாய் ஒருவரை பராமரிப்பதற்கு 35 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது

**TATA டிப்பர் விற்பனைக்கு**

NP LI XXXX தொடர் இலக்கம் கொண்ட டிப்பர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. 67000 Km ஓடியது. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

077 248 7228, 077 636 7084, 077 727 1478

முதல் சொந்தக்காரருக்கு உரியது.

**DAMRO**

# ACCOUNTS CLERK
(Trainee)
## Mannar

**APPLICANT SHOULD :**

- be a male below 26 years of age.
- be a permanent resident within 20km from above showroom.
- have G.C.E. (A/L) qualification in commerce subjects.

**Total earnings will not be less than Rs. 30,000/- p.m.**

The selected candidate will be entitled to following benefits.

- Company pension scheme.
- EPF / ETF.
- Annual bonus & other welfare benefits.

If the above position is of interest to you, please forward a detailed resume with your contact number & contact details of two non-related referees to reach us within ten days of this advertisement.

**The Human Resources Manager,
DAMRO
No: 361, Kandy Road,
Nittambuwa.
E-mail: hrm@damro.lk**

வவுனியாவில்

## கல்வியுலகின் புதிய சகாப்தம்

# EDI
Educational Development Institute

கவிஞன் பப்ளிகேசன் அருகாமை, டிரான்ஸ்போமர் சந்தி, பண்டாரிகுளம், 076 8078451

## புதிய பிரிவுகள் ஆரம்பம், 17.01.2016

தரம் 1,2,3,4 இற்கான பிரிவுகள் | தரம் 5 புலமைப்பரிசில் பிரிவுகள்

விசேடமாக பேச்சு சிங்களம், பேச்சு ஆங்கில, மனக்கணித மற்றும் கணனிப் பயிற்சி வகுப்புக்கள் திறமைமிகு பயிற்றப்பட்ட ஆசிரியை குழாம்

இதுவரை காலங்களில் அதிக மாணவர்களை சித்தியடையச் செய்த அனுபவமுள்ள ஆசிரியர்
**திரு.கா.துணைவன்**
B.A (Gen), BEd(Primary), M.A(Tamil), MATE, PGDEM
இவ்வாசிரியரின் வகுப்புக்கள் எமது கல்வி நிலையத்தில் மட்டுமே

**தரம் 6 - 11 வரை
தனித்துவம் மிக்க எமது ஆசிரியர்குழாம்**

கணிதம்: திரு.S.ரூபன், திரு.S.புஸ்பன்
விஞ்ஞானம்: திரு.K.ராகவன்
ஆங்கிலம்: திரு.S.துவாரகன், திரு.S.சூரியதாசன்
வரலாறு: திரு.P.கொங்கன், திரு.N.S.றஜீவ்
தமிழ்: திரு.N.சிவலிங்கம்
சமயம்: திரு.S.சூரியதாசன்
சிங்களம்: திருமதி.பா.சாரதா
சுகாதாரம்: திருமதி தர்சினி
தகவல் தொழில்நுட்பம்: திரு.பாலகலைஞன்

**விசேட கணிதம்**
(மீட்டலுடன் கூடிய வினாவிடை வகுப்புக்கள்)
திரு.எம். என். பால-கண்ணதாசன்

எந்தவொரு பிரிவிலும் 24 மாணவர்கள் மட்டுமே அனுமதி

**பெற்றோர்களே**
உங்கள் பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம் என்பவற்றை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல உங்கள் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வேண்டி நிற்கின்றோம்

## வவுனியா வடக்கு பிரதேசசபை
## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

சபையானது 2016 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**01.பொருட்கள்**

1) காகிதாதிகள் பொருள்கள் எழுது பொருள்கள்
2) அலுவலக உபகரணங்கள்
3) நூலகங்களுக்கான நூல்கள்
4) துணி வகைகள்
5) கட்டடப்பொருள்கள்(சீமேந்து,ஓடுகள்,கம்பிவகைகள்,கொங்கிறிட் தூண்கள்,சீமந்து கற்கள்)
6) கற்கள், மணல், கிரவல்
7) தீந்தைகள் வகைகள் (Paints) மற்றும் நிறம் தீட்டும் பொருள்கள்
8) நீர் வழங்கும் குழாய்கள், கியூம் பைப்புகள் (Hume Pipes) மற்றும் ஏனைய பொருள்கள்
9) வாகன உதிரிப்பாகங்கள், துணை பொருள்கள்
10) மின் வழங்கும் பொருள்கள், மின்பாவனைப் பொருள்கள்
11) எரிபொருள் உராய்வு நீக்கிகள்
12) அருப்புப் பொருள்கள்
13) தீராந்திகள், பலகைகள்
14) பனைமரங்கள், சலாகைகள்
15) வாகனங்களுக்கான டயர் ரியூப் மற்றும் மின்கலன்கள்
16) கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17) சுத்திகரிப்புப் பொருள்கள், கிருமி நாசினிகள்
18) பாதனிகள் தோற்பொருள்கள்
19) அலங்காரப் பொருள்கள்
20) இலத்திரனியல் பொருள்கள்

**02.சேவைகள்**

1) அச்சிடுதல் புத்தகங்கள் கட்டுதல்
2) மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்
3) ஒட்டு வேலைகள், உலோக வகைகள்
4) மின்சாதனங்கள் திருத்தம், மீள மின்வலுவூட்டல் (Battery Charge)
5) இலத்திரனியல் சாதனங்கள்
6) வாகனங்கள் ரியூப் ஒட்டுதல்
7) கோலவுடை, சீருடை தைத்தல்
8) கணினி பிரதியாக்கம் இயந்திரம் திருத்தல், சுத்திகரிப்பு (Service)
9) இறப்பர் முத்திரை தயாரித்தல்

**03.ஒப்பந்த வேலைகள் (ICTAD) பதிவு உள்ளவர்கள் மட்டும்**

1) கட்டட நிர்மாண வேலைககள்
2) கிணறு அமைத்தல்
3) வீதி நிர்மாணம், திருத்த வேலைகள்


பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00 செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2016** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் செயலாளர், தலைமைக்காரியாலயம், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி, வவுனியா, எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும், விண்ணப்பப்படிவங்கள் 08.02.2016 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு 024-3248346 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கந்தசாமி சத்தியசீலன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.

## தொலைக்காட்சித் துறையில் ஆர்வமுள்ளோருக்கு அரிய வாய்ப்பு

உள்ளூர் கலைஞர்களுக்கு ஊக்கமளித்து உற்சாகம் ஊட்டவும், படைப்பாளிகளின் படைப்பை உலகளவில் எடுத்துச் செல்லவும் சர்வதேச தொலைக்காட்சி ஒன்றின் பிரமாண்டமான மெகா தொடர் நாடகம் ஒன்றுக்கு உள்ளூரிலும் வெளிநாட்டிலும் மிக விரைவில் படப்பிடிப்பு நடைபெறவுள்ளது. அதற்காக முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் அதேநேரம்... கலையைத் தொழிலாக மாற்ற விரும்பும் அனைத்துத் தரப்பினரும் விண்ணப்பிக்கலாம்.



கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இயக்கம், நடிப்பு, நடிகர்கள், நடிகைகள், நகைச்சுவை, ஒப்பனை, தனிக்குரல் நடிப்பு, குரல் கொடுத்தல், கமரா இயக்குநர்கள், வசனகர்த்தாக்கள், பேச்சாளர்கள் அல்லது

என்னிடம் ஒரு ஐடியா உள்ளது என நீங்கள் நினைக்கும்.....

எல்லோருக்கும் அல்லது தொலைக்காட்சியோடு சம்பந்தப்பட்ட என்ன கற்பனைக் காட்சி இருந்தாலும் எங்களோடு இணையுங்கள்.

Web site: www.ibceylon.com
Email : ib@ibceylon.com

# விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்

UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டத்தரணிகளால் விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

## VISIT VISA



- சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கள, அவமங்கள காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
- பெற்றோர், பேரன், பேத்தியர்களுக்கான சுப்பர் விசா - கனடா, மணமான தம்பதியருக்கான வதிவிட விசா - சகல நாடுகளுக்கும்.

ONLINE விசாவுக்கான விண்ணப்பம் மற்றும் விசாக்கட்டணக் கொடுப்பனவு செய்து கொடுத்தல்.

**தாமதமாகிய விசாக்கள் - நிராகரிக்கப்பட்ட விசாக்கள் உள்ளதா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சனை உள்ளதா?**

### Refused? Rejected?

- உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்ப்பிக்கத் தவறி விட்டீர்களா?
- உங்கள் விசா முடிந்ததும் இலங்கைக்கு திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- உங்கள் வங்கியில் சேமிப்பு பணம் பற்றாக்குறையா?
- உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் அது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.
- விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- விசா விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- Ticket, Hotel Booking, Travel Insurance செய்து தரப்படும்.
- வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.

## வங்கியில் பணவைப்பு

*Savings Book, Fixed Deposit, Statement*

3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளை பெறலாம்.
**(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).**

## உங்களின் விசா எங்களின் சவால்

**Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals New Applications etc...**

SKYWALK Visa Solutions

## SKYWALK VISA SOLUTION


No. 65, 1/1, Galle Road, Dehiwala. (Food City-1st Floor)
Web: www.skywalk.com

**Hotline:**
**0777 711 905**

FLEX Graphic



## SKILLS COLLEGE OF TECHNOLOGY




உயர்தரப் பரீட்சையின் பின் நீங்கள் எதிர்பார்ப்பது

- உயர் சம்பளம் பெறும்
- குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யக்கூடிய
- சமூகத்தில் நல் அந்தஸ்த்துள்ள

பாடநெறி

- ஏற்றுக்கொள்ளப்பட்ட அனுபவமுள்ள நிறுவனத்தில்
- நியாயமான விலையில்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு

அனைத்துடனும் கற்றுக்கொள்ள...

- Civil Engineering
- Quantity Surveying (QS)
- Motor Vehicle Engineering (Hybrid)
- Electrical & Electronic Engineering
- Mechanical Engineering
- AutoCAD & Revit

டிப்ளோமா பாடநெறியை பூர்த்திசெய்யும் சகலருக்கும் வேலை வாய்ப்பு

பாடநெறியை பூர்த்திசெய்யும் சகலருக்கும் வேலை வாய்ப்பு / பயிற்சி வசதிகள் !

தேவைப்படும் மாணவர்களுக்கு கணிதம் மற்றும் ஆங்கில இலவச பாடநெறிகள்

# City & Guilds Diploma in Engineering

மேலதிக தகவலகளுக்கு
யாழ்ப்பாணம். 021 4 66 66 99

City & Guilds
APPROVED CENTRE

புதிய பாடநெறி ஆரம்பம்
**2016 ஜனவரி**

**Skills College Of Technology - SCOT**

Nugegoda Campus | Kandy Campus | Kurunegala Campus | Jaffna Campus | Matara Campus

Opening Soon
Gampaha Branch
Ampara Branch

# ஐ.தே.கவில் ஒருபோதும் சேரமாட்டாராம் திஸ்ஸ



கொழும்பு, ஜன. 17
அரசின் கொள்கைகளிலும் தனது நிலைப்பாட்டிலும் முரண்பாடுகள் இருப்பதனால் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய எவ்வித நோக்கமும் தனக்கு இல்லை எனவும், எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை இலக்காகக்கொண்டு மகிந்த ராஜ பக்ச தலைமையில் பலமான மூன்றாவது எதிர்க்கட்சியை உருவாக்குவதற்கான பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாக வும் ஐ.தே.க.முன்னாள் பொதுச் செயலாளராக இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்ட முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.
அதேவேளை, தான் ஐக்கிய தேசியக்கட்சியில்மீண்டும் இணைந்து கொள்வதற்காக பேச்சுகளில் ஈடுபட்டுவருவதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இதில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
ஐ.தே.க. மீண்டும் இணைந்த பின்னர் அரசியலிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக வெளியாகியிருந்த செய்தி தொடர்பில் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் கேட்டபோதே அவர்மேற்கண்டவாறுதெரிவித்தார்.
அவர்அங்குமேலும்கூறியதாவது-
தற்போது அரசில் குழப்பகரமான சூழலே காணப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியில் நான் மீண்டும் இணைந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இவ்வாறான பொய்ப் பிரசாரங்களைப் பரப்பி எனது அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைகின்றனர். நான் அவர்களுடன் இது தொடர்பில் பேசவும் இல்லை. அவர்கள் எனக்கு கட்சியில் இணையுமாறு அழைப்பு விடுக்கவுமில்லை.
எனது அடுத்தகட்ட அரசியல் நகர்வு எவ்வாறு அமையும் என்பது தொடர்பில் மேலும் சிலகாலம் கழித்து அறிவிக்கின்றேன். நல்லாட்சி அரசை வெறுத்துள்ள பலர் தற்போது எம்முடன் கலந்தாலோசித்துவருகின்றனர்.முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அரசுக்கு எதிரான பலமான மூன்றாவது கூட்டணி அமைத்துஎதிர்வரும்உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் களமிறங்கவுள்ளோம்-என்றார். (த)

# சமஷ்டியைக் கூட்டமைப்பு முன்வைப்பது தவறில்லை

## ராஜிதவுக்கு திஸ்ஸ விதாரண பதிலடி

கொழும்பு, ஜன. 17
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது தேர்தல் விஞ்ஞாபனத்துக்கமைய சமஷ்டிக் கோரிக்கையை முன்வைக்க முடியும் என்பதுடன், அதனை பொறுப்பு வாய்ந்த அரசு அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் அமைப்பதற்குக் கலந்துரையாட வேண்டும் என்று சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் ராஜித, திஸ்ஸ விதாரண சமஷ்டிக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்சியின் கொள்கை, மாமனார் என்.எம்.பெரேராவின் எதிர்பார்ப்புகளைச் சிதைத்துள்ளதாகவும், அதனால் அவர் என்.எம்.பெரேராவின் மருமகன் அல்ல வீட்டு வேலைக்காரன் என்ற அந்தஸ்துக்கே தகுதி இல்லாதவர் எனும் விதத்தில் கருத்துகளை வெளியிட்டிருந்தார்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த திஸ்ஸ விதாரண,
நான் ஒருபோதும் சமஷ்டிக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்போவதில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. எனினும், இலங்கை சிறிய நாடு என்பதால் முடியுமான வரை ஒற்றையாட்சியின்கீழ் தீர்வைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். அது வெற்றியளிக்கவில்லையெனில் சமஷ்டி முறையில் தீர்வைப்பெற்றுக்கொடுப்பதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை.
முதலில் இலங்கையர்கள் என்ற மனோநிலைக்கு அனைவரையும் கொண்டுவரவேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் என பல்லின மக்கள் வாழும் நாட்டில் சமஷ்டிக் கோரிக்கை அமுல்படுத்துவதிலுள்ள சிக்கல் நிலைகளை அனைவரும் கருத்திற் கொள்ள வேண்டும்.
தமிழ் மக்களுக்கு அவர்கள் தரப்பு நியாயங்களை முன்வைத்து கோரிக்கைகள் முன்வைக்க முடியும். பொறுப்பு வாய்ந்த அரசு அவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதுடன் அதிஉச்ச அதிகாரப்பகிர்வுதொடர்பில்கலந்தாலோசிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (த-சி)

# சுகாதார அமைச்சருக்கு எதிராக விரைவில் வழக்கு

கொழும்பு, ஜன.17
சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அமைச்சின்செயலாளர்ஆகியோருக்கு எதிராக எதிர்வரும் வாரத்தில் சட்டரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகளின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.
மாலபே தனியார் மருத்துவ கல்லூரிமாணவர்களுக்கு, அரச வைத்தியசாலைகளில் மருத்துவப்பயிற்சிபெற்றுக்கொடுத்தல் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பிலேயே இந்த சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள அரச மருத்துவ அதிகாரிகளின் சம்மேளனம் தீர்மானித்துள்ளதாக, அதன் ஊடகப்பேச்சாளர் நவீன்தசில்வா நேற்றுமுன் தினம் கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார். (த-வ)

# 1 கிலோ நாட்டரிசி நெல் 38 ரூபா; சந்தைப்படுத்தல் சபை தீர்மானம்

கொழும்பு,ஜன.17
நெல் சந்தைப்படுத்தல் சபை கிலோ 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்யதுள்ள ஒரு கிலோ நாட்டரிசி நெல்லை, 38 ரூபா வீதம் விற்பனை செய்யவுள்ளது. எதிர்வரும் தினங்களில் கிடைக்கவுள்ள பெரும் போக நெல் விளைச்சல்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு, களஞ்சிய வசதிகளைப் பெறுவதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
கடந்த 6 ஆம் திகதியன்று இடம்பெற்றிருந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமென்றுக்கு அமைவாக இவ்வாறுதீர்மானிக்கப்பட்டுள்ளது.
மேலும் சமுர்த்திப் பயனாளிகளுக்கும், உலக உணவுகள் அமைப்புக்கும் மேலும் ஒரு தொகுதி நெல் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-22)

# பேராளர் மாநாட்டை புறக்கணிக்க கோரிக்கை

அம்பாறை,ஜன.17
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினால்உயர்பீட உறுப்பினர்களுக்கு அறிவிக்கப் படாமல் நடத்தப்படவுள்ள பேராளர் மாநாட்டை அம்பாறை மாவட்ட உறுப்பினர்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். சுபைர் தெரிவித்துள்ளார்.
அண்மைய பொதுத்தேர்தலில் 33 ஆயிரம் வாக்குகள் வழங்கிய மற்றும் ஆதரவு வழங்கிய மக்களை அமைச்சர் றிசாட் பதியுதீன் ஏமாற்றியுள்ளார். தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான அம்பாறை மாவட்டத்துக்கு தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற விடயம் நிராகரிக்கப்பட்டமை போன்ற பல காரணங்களால் அம்பாறை மாவட்ட மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.
எனவே தான் இந்த சிறுபிள்ளைத் தனமான பேராளர் மாநாட்டை அம்பாறை மாவட்ட மக்கள் மட்டுமல்லாது முழு இலங்கையிலும் இருக்கும் கட்சியின் உறுப்பினர்களும், ஏமாற்றப்பட்டுள்ளஉயர்பீடஉறுப்பினர்களும் புறக்கணிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (த-ஜ)

# மலையகத்திலும் இம்முறை சிறப்பான தைப் பொங்கல்



கொழும்பு,ஜன.17
தைத் திருநாளாம் தைப் பொங்கல் நேற்று முன்தினம் உலகளாவிய ரீதியில் இந்துமக்கள் கொண்டாடிய வேளையில், பெருந்தோட்ட மக்களும் அதில் இணைந்து கொண்டனர். மலையகத்தில் காணப்படும் அனைத்து தோட்ட ஆலயங்களிலும் விசேட பூசைகளும், ஆராதனைகளும் நடைபெற்றன.
அதற்கமைவாக புஸ்ஸல்லாவ மெல்போட் தோட்டத்தில் தைப் பொங்கலும், ராமர் பஜனையை முன்னிட்டு ராமர் தேர் பவனியும் நடைபெற்றது. இதில் பெரும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டதுடன், ராமர் பக்தர்கள் ராமர் பாடல்களை பாடி மகிழ்ந்தனர்.
இந்த ராமர் பஜனை ராமர் பக்தர்களால் தொடர்ந்து 30 நாள்கள் நடைபெற்று வந்தன. ராமர், சீதை, அனுமன் ஆகியோரையும், இராமாயணத்தையும் மையமாகக் கொண்டு நடைபெற்ற இந்த ராமர் பஜனை அனைத்துத் தோட்டங்களிலும் நடைபெற்றது. (த-ஜ)

# 2015ஆம் ஆண்டுக்கான ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

கடந்த 03 ஆம் திகதி வெளியான உயர்தரப் பரீட்சை முடிவு களில் பாடசாலைகள் ரீதி யாக எமக்குக் கிடைக்கப் பெற்ற பெறு பேறுகள்.

**யாழ். சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை**
*கலைப்பிரிவு*
எ.அன்ரனற் ஜீவிதா- 3ஏ, அ.சகானா- 2ஏ,சி, றொ.றிபேக்கா- 2ஏ,பி, அ.மேரிக சில்டா- 2ஏ,பி, லி.செபினாலூத்- 3ஏ, மா. கொலஸ்ரிக்கா-ஏ,2பி, எ.கமன்சி- ஏ,பி,சி, பி.ஆன்றொபேக்கா- 2ஏ,சி, டொ.யூலியா விவிலினி- 2ஏ,சி, அ.சுஜி-2ஏ,சி.

**முத்துத்தம்பி ம.வி.**
*கலைப்பிரிவு*
ரா.அறிவழகி- ஏ,2பி, யோ.கேதாரணி- ஏ,பி,சி, க.சோபனா-ஏ,பி,சி, செ.ராஜினி-ஏ,பி,சி, தி.குறிஞ்சி- ஏ,பி,சி, தி.கேதீஸ்வரி- ஏ,பி,சி, கோ.வினோஜிதா- ஏ,2சி, சி.கோகுலமதி- ஏ,பி,எஸ், த.துளசிகா- ஏ,சி,எஸ்.

**யாழ்.புனித சாள்ஸ் ம.வி.**
*கலைப்பிரிவு*
சூ.சூரியபதி- ஏ,2பி, க.மதனராஜ்- ஏ,2பி, சி.மொபின்ராஜ்- ஏ,2பி, ஜெ.ஜெனிஸ்ரன்- ஏ,சி,எஸ், ஆ.மேரியலியானா- ஏ,சி,எஸ், அ.அலெக்சியா- ஏ,சி,எஸ், பி.சஜித்தனுசன்- பி,2சி, ம.சத்தியகௌரி- பி,2சி, ரா.நதீரா- பி,சி,எஸ்.

**யாழ்ப்பாணக் கல்லூரி**
*வர்த்தகப் பிரிவு*
எஸ்.திவ்வியா-3ஏ, எஸ்.நிமாலினி-3ஏ.
*கலைப் பிரிவு*
எஸ்.ஆஷாடிலினியா- 3ஏ, ஜெ.மாதினி- 3ஏ, செ.யமுனாமலர்-3ஏ, ஆர்.பெண்டில்கரன்- 3ஏ.
*விஞ்ஞானப்பிரிவு*
பி.பிரவிந்- 2ஏ,பி, பி.சதுர்வேதன்-2ஏ,பி.
*பொறியியல் பிரிவு*
பு.வைஷ்ணவன் -ஏ,2பி.
ஆங்கில இலக்கியத்துறை
உ.யதுர்ஷா- 2ஏ,சி.

**சென். அன்ரனீஸ் கல்லூரி**
*கலைப்பிரிவு*
ரி. யேராஜ் - 2ஏ,பி, எஸ். சதீஸ்குமார் - 2ஏ,எஸ், கே. தனுராஜ் - ஏ,பி,சி, ஈ. நிரோஜா - ஏ,2சி.
*கணிதப்பிரிவு*
ஜே. ஜோன்ஜெரி - பி,2சி

**காரைநகர் யாழ்ற்ரன்** கல்லூரி
*கலைப் பிரிவு*
க.யசோதா - 2ஏ,1பி, சு.சசிகலா - 1ஏ,2சி, தி.செந்தூரன்- ஏ,பி,சி, ச.சரவணபவன் - 2பி,சி, தி.அம்பிகா - 2பி,சி, யோ.சௌமியா - 2பி,சி, ந.ஜெசிந்தா- பி,2சி.
*வர்த்தகப் பிரிவு*
அ.கஜன் - 2பி,சி, ந.வரா கன் - 2சி,எஸ், ம.பிரதாபன் - 2சி,எஸ்.
*கணிதப் பிரிவு*
செ.ஜஸ்வரியா -சி,2எஸ், ச.சரவணன் - 3எஸ்.

**பெரியபுலம் ம.வி.**
*வர்த்தகப்பிரிவு*
ஸ்ரீ. டிலக்ஷனா - 2ஏ,பி, பா. கனீஸ்வரி - 3பி, சி. டிலக்ஷன் - 2பி,சி, ந. அனு ரேகா - பி,சி,எஸ்.
*கலைப்பிரிவு*
ந. சயந்தா - ஏ,பி,சி, இ. சஜீந்திரன் - ஏ,பி,எஸ், ந.ரம்ஜா - 2பி,எஸ்.

**வல்வை மகளிர் கல்லூரி**
*வர்த்தகப்பிரிவு*
ஆ. தமிழினி- 3ஏ, கோ, பிரியங்கா - ஏ,2பி, ஸ்ரீ. கனுஜா-2பி,சி, கு.நிசாந்தினி -2சி,எஸ்.
*கலைப்பிரிவு*
சு.துளசி - ஏ,2சி, இ.பிரதீபா- ஏ,2சி, மு.வானதி- ஏ,பி,சி அ.மேரிரூபதர்சினி - ஏ,சி,எஸ். (ஐ-50,51,250)

## நல்லூரில் இலவச யோகா வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஜன.17

நல்லூர் ஆலயச் சூழலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் யோகாசன வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் ஆர்வமுள்ளவர்கள் இணைந்து கொள்ள லாம் என்று கோரப்பட்டுள்ளது.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் அந்த மண்டபத்தில் பல வகுப்புக்களை இலவசமாக நடத்தி வருகிறது. அதன் ஒரு பிரிவாக யோகாசனப் பயிற்சி வகுப்புக்களையும் நடத்தி வருகிறது. ஏற்கனவே பல பிரிவுகள் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியுள்ளன.

அதன்படி புதிய பிரிவுகள் 3 பிரிவாக சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறும். அதற்கமைவாக பிரிவு 1 காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையும், பிரிவு 2 காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை யும் இடம்பெறும். இந்த இரண்டு பிரிவு களும் ஆண்களுக்கானது. பிரிவு 3 காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரை இடம் பெறும். இந்தப் பிரிவு பெண்களுக்கானது.

இங்கு மிருதங்கம், வயலின், சங்கீதம், பண்ணிசை வகுப்புக்களும் இலவசமாக இடம் பெற்று வருகின்றது என்று மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-4)

Fonterra
Dairy for life

Join our world of
Dairy Nutrition



Sales & Channel Development Officer

**Job Profile**

The selected candidate will be responsible in achieving all category, brand, channel and customer based objectives whilst building good business relationships with internal and external stakeholders. This position will directly report to the Area Sales and Channel Development Manager. Main accountabilities of the role would include;

- Planning and executing all channel and customer plans to achieve brand/sales objectives in the assigned territories
- Managing consignment agent with the objective of achieving set standards and KPIs
- Understanding In-store standards and execute point of sales placements for all brands
- Analysing route efficiencies and suggesting plans to optimize selling opportunities
- Achieving and maintaining all agreed sales and operational KPI's

**Applicant's Profile**

The candidate should possess a complete qualification in G.C.E (Ordinary Level) Examination with B passes for Mathematics and English. G.C.E (Advanced Level) Examination qualification and Diploma in Sales/Marketing would be an added advantage. 2+ years experience in selling operation in a FMCG or any customer centred experience is required. Excellent communication, interpersonal skills and operational planning skills is a must.

**Remuneration**

A remuneration package on par with the industry standards will be offered to the selected candidate.

**Application Procedure**

If you are keen to build your career with a high performing team, please send in your comprehensive resume within 7 days of this advertisement to **careers@fonterra.com**

**We will correspond only with shortlisted candidates**

Canvassing will be a disqualification

Anchor PediaPro PediaPro Mama Anlene
Like our facebook fanpage Fonterra Brands Lanka Careers




டாட்டா, லேலண்ட், ஹினோ மற்றும் கமின்ஸ் வாகன உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க என்ஜின் பழுதுபார்ப்பிற்காக வழங்கப்பட்ட

எமது சலுகைக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது!

எமது அதிகபட்ச வேலைக் கூலி

| | |
|---|---|
| TATA | 44,000/- |
| LEYLAND | 47,000/- |
| Hino | 46,000/- |
| C | 52,000/- |

நாட்டிலேயே அதிகுறைந்த வேலைக் கூலி

மேற்குறிப்பிட்ட பழுதுபார்ப்பு மீண்டும் தேவைப்பட்டால் அல்லது ஓட்டத்தின்போது தேய்வு காரணமாக என்ஜினை கழற்ற நேர்ந்தால் 2 ஆண்டு காலத்தினுள் வேலைக் கூலி மீண்டும் அறவிடப்படமாட்டாது.

077 66 33 370

# ஓய்வுபெறும் சிப்பாய்களுக்கும் புனர்வாழ்வளிப்பதற்கு முடிவு

## *யாழ்ப்பாணத்தில் கூறினார் ரணில்*



யாழ்ப்பாணம், ஜன.17
தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளித்து சமூகத்துடன்இணைத்ததைப் போல ஓய்வு பெறவுள்ள இராணுவச்சிப்பாய்களுக்கும் பயிற்சியளித்துச் சமூகத்துடன் இணைக்கவுள்ளோம்.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.
தற்போது இராணுவத்தில் ஓய்வு பெறும் நிலையில் பெருமளவான இராணுவச் சிப்பாய்கள் உள்ளனர். அவர்கள் ஓய்வு பெற்று சமூக நீரோட்டத்துக்கு செல்லும்போது அவர்களுக்குப் பயிற்சி அளித்து சமூகத்தில் இணைக்கப்படுவார்கள். அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களுக்கு எவ்வாறு புனர்வாழ்வு வழங்கி சமூகத்துடன் இணைத்தோமோ அதே போன்று தான் இதனையும் செய்யவுள்ளோம்.

> தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களுக்கு எவ்வாறு புனர்வாழ்வு வழங்கி சமூகத்துடன் இணைத்தோமோ அதே போன்றுதான் இதனையும் செய்யவுள்ளாம்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நான் உங்களுக்கு இராணுவ இரகசியம் ஒன்றை இங்கு கூறப் போகின்றேன். எமது முப்படையினரையும் போருக்கு நாம் தயார்படுத்தி வருகின்றோம். மாலி நாட்டில் நடைபெறும் போருக்கு அனுப்புவதற்காகவே அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. ஐ.நா. சபை கேட்டுக் கொண்டால் அவர்களின் அமைதி நடவடிக்கையிலும் எங்களது படையினர் பங்கெடுப்பார்கள்.
இனி வரும் காலங்களில் இளம் மாணவர் படையணியை உருவாக்குவது தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்தன மற்றும் இராணுவத்தளபதியிடம் பேசியுள்ளேன். இந்திய மீனவர்களின் அத்துமீறல் பிரச்சினை முற்றாக ஒழியும் வரை கடற்படையின ரின் தொகையைக் குறைக்க முடியாது.
வடக்கில்உள்ள இராணுவத்தை குறைப்பது தொடர்பில் காலக் கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். வடக்கின் பாதுகாப்பு நிலைமையைக் கருத்தில் கொண்டு அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (த-5)

# விடை பெற்றார் சுபைனே நண்டி



கொழும்பு, ஜன 17
இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியாக கடந்த நான்கு ஆண்டுகளாக கடமையாற்றிய சுபைனே நண்டி தனது பதவிக்காலத்தை கடந்த வியாழக்கிழமை நிறைவு செய்தார்.
இதன் நிமித்தமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து அவரின் பிரியாவிடையைப் பெற்றுக்கொண்டார்.
எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதற்கொண்டு ஐக்கிய நாடுகள் தலைமைப் பணிமனையின் அரசியல் பிரிவில் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்குப் பொறுப்பான தலைவராக அவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

ஒளிப் படச் செய்தி



# அதிகாரிகளே கவனியுங்கள்



முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட தண்ணீரூற்றில் இருந்து முறிப்பு ஊடாக குமுழமுனைக்குச் செல்லும் 10 கிலோ மீற்றர் தூரமான உள்வீதியை உரிய முறையில் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சுமார் ஐம்பது வருடங்கள் பழைமை வாய்ந்த குறித்த வீதி மிக நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்பட்டதுடன், அண்மையில் குறித்த வீதி கிரவல் போடப்பட்டு செப் பனிடப்பட்டது. தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக குறித்த வீதி மீண்டும் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.
நாளொன்றுக்கு நூற்றுக்கணக்கான பயணிகளும், பாடசாலை செல்லும் மாணவர்களும் பயணிக்கும் குறித்த வீதியைப் புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (த-ஐ)



# சு.க. யோசனைக்கு முன்னுரிமை மகிந்த தரப்பின் வாதங்கள் பொய்

## *அமைச்சர் ராஜித திட்டவட்டம்*

கொழும்பு, ஜன 17
அரசமைப்பு தொடர்பில் அரசின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள யோசனை திருத்தங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் அதேவேளை, மகிந்த ஆதரவு தரப்பினரால் அரசமைப்பு தொடர்பில் முன்வைக்கப்படும் வாதங்களில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என அரசு தெளிவுபடுத்தியது.
சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரும், அமைச்சரவைப் பதில் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-
அரசமைப்புத் திருத்தம் அனைத்துத் தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமையும். கூட்டு எதிர்க்கட்சித்தலைவர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்டவர்கள் இவ்விடயம் தொடர்பில் பல பொய்யான பிரசாரங்களை மேற்கொள்ள முனைகின்றனர்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடந்த நாடாளுமன்ற அமர்வின்போது சமர்ப்பித்த 9 யோசனைத் திருத்தங்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் நிராகரித்துள்ளதாகவும், பிரதமர் ரணில் முன்வைத்த யோசனை எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படாது சமர்ப்பிக்கப்பட்ட விதத்திலேயே நிறைவேற்றிக் கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். அது மட்டுமல்லாது, அரசமைப்புத் தொடர்பில் தேசிய அரசுக்குள் பெரிய கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.
எனினும், அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் பல்வேறு தரப்பினரின் கருத்துகளை ஆராய்ந்து ஜனநாயக ரீதியில் அதனை மேற்கொள்வோம். முரண்பாடுகள் ஏற்பட்டாலும் அது ஜனநாயகத்தின் அடையாளமாகும்.
கடந்த காலத்தில் அரசுக்கு எதிராக மூச்சுவிடவும் முடியாத நிலை அமைச்சர்களுக்கு இருந்தது.
கடந்த ஜனவரி 12ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த திருத்த யோசனைகள் தொடர்பில் அரசு நிச்சயம் ஆராயும். அவற்றை உள்வாங்கி பிரதமர் முன்வைத்துள்ள யோசனைகளில் திருத்தங்களை மேற்கொள்வோம். அதனை எதிர்வரும் 26ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்ற கூட்டத்தொடரில் நிறைவேற்றிக்கொள்வோம்-என்றார். (த-சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற் போனோர் குறித்து கரைந்துபோகும் போக்கு!

காணாமற் போனவர்களில் பெரும் எண்ணிக்கையினர் உயிரிழந்து விட்டார்கள் என்றே கருதப்படுகிறது. இந்தச் சமாசாரத்தை வெளிப்படுத்தியிருப்பவர் நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரசின் தைப்பொங்கல் விழாவில் வைத்து அதனை அவர் பிரசித்தப்படுத்தியுள்ளார்.

அந்தத் தகவலைத் தாம் கவலையுடன் தெரிவிப்பதாக வும் அவர் குறிப்பிட்டார். அத்தோடு வடக்கில் மட்டுமன்றி தெற்கிலும் அதே நிலையே உண்டு என்றும் சமப்படுத்தினார்-சமாந்தரமாக்கினார்.

அரசியல் என்பது சுத்துமாத்து; அந்தந்த வேளைக்கு ஏற்ப அரசியல்வாதிகள், தமது கருத்துக்களை வெளிப்படுத் துவர் என்ற ஒரு வகை வாய்ப்பாடு குறித்து, பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி, அரசியல் நிலைமைகளை நாடி பிடித்துப் பார்க்கும் நோக்குநர்களும் பல சந்தர்ப்பங்களில் புட்டுக்காட்டுவதுண்டு.

இதேவேளை -

கடந்து சென்ற 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு (நீதியரசர் நிசங்க உடலகம தலைமையில்) ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

அதே ஆண்டில் ஒரு கட்டத்தில், ஏழு ஆண்டுகளாகத் தேடியும் கிடைக்காதவர்களை, ஓர் இரு நாள்களில் கண்டுபிடித்துவிட முடியாது என்று அப்போதைய இராணுவத்தளபதி ஒருவர், ஊடகவியலாளர்களிடம் சீறிவிழுந்ததும் நினைவுக்கு வருகிறது.

இவற்றுக்கு மத்தியில், இறுதிப் போரின்போது காணாமற்போனோருக்கு, இந்தியாவே முழுப் பொறுப்பு என்றவாறு அப்போதைய அரசின் முன்னிலை மூத்த அதிகாரி ஒருவர் (2013ஆம் ஆண்டில்) குற்றம்சாட்டியதும் காலத்தின் பதிவு!

இவற்றுக்கு மத்தியில், காணாமற்போனவர்களை (காணாமற்போகச் செய்யப்பட்டோரை) இறந்தோர்களாக பதிவு செய்யும் சட்ட விரோத முயற்சியிலும், முந்தைய அரசு கால் பதித்தது. எனினும் அது பிசுபிசுத்துப் போயிற்று!

இத்தகைய தில்லு முல்லுகளுக்கான காரணம் ஒன்று உயர்ந்திருந்தது. ஆள்கள் காணாமற் போகும் போக்குக்கு-- சிக்கலுக்கு......

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் தடுப்புவிதிகளே முழுக்க முழுக்க காரணம் என்று அனைத்துலக ஜுரிகள் ஆணைக்குழு, அப்போதைய இந்நாட்டு அரசின் காதுகளை முறுக்கித் தெரிவித்திருந்தது.

காணாமற் போகச் செய்யப்பட்ட தமது இரத்த உறவுகள் குறித்து நல்லாட்சி அரசு, நல்ல செய்தி சொல்லும் என்று எதிர் பார்த்த வடக்கு, கிழக்கின் ஆயிரக் கணக்கான தமிழ்ப் பெற்றோர்களுக்கும், குடும்பத்தினருக்கும் இடிமேல் இடி விழும் நிலையை முன்னோட்டமாகவும் பூடகமாகவும் தோற்றுவித்திருக்கிறார் பிரதமர்.....!

தமிழர் விவகாரங்களில், இத்தகைய ஒரு நிகழ்ச்சி நிரலுடன் (Agenda) தான் மைத்திரிபால - ரணில் விக்கிரமசிங்க அரசு, தமிழ் மக்களை சகடை வாகனத்தால் ஏற்றி நசிக்கும் போக்கை உத்தேசித்து இருக்கிறதோ? என்ற பென்னம் பெரிய சந்தேகத்தையும், கிலேசத்தையும் கூட நெருப்பாக மூட்டியுள்ளது.

அதனை உள்ளார்ந்து உணரும் சக்தியுடன், உரிய வழியில் கால் பதிக்கவும் அரசு தன்னை மாற்றிக் கொள்ளுமா? அதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க நேரிடுமோ, என்னவோ.....?

# உலக அமைதியைச் சீர்குலைக்கும் ஐ.எஸ். தீவிரவாதம்



சேரலாதன்

ஐ.எஸ். அமைப்பிலிருந்து விலகுமாறு கூறியதற்காகத் தன்னைப் பெற்றெடுத்த தாயையே தீவிரவாதியொருவன் பொதுமக்கள் முன்னிலையில் வைத்துக் கொலை செய்ததாக வெளிவந்தசெய்தித்தீவிரவாதிகளின் இரக்கமற்ற கொடிய தன்மையை வெளிக்காட்டி நிற்கின்றது.

இன்று உலகம் முழுவதும் தீவிரவாத அச்சுறுத்தல் நிறைந்து காணப்படுகின்றது. மத்திய கிழக்கு, தீவிரவாத அச்சுறுத்தலால் உறைந்துபோய்க் கிடக்கின்றது. அங்கிருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து சென்று கொண்டிருக்கின்றனர். தீவிரவாத அச்சுறுத்தல் இருந்தபோதிலும், மேற்குலக நாடுகள் அகதிகளாக வருபவர்களை ஏற்றுக் கொள்வது பாராட்டத்தக்க விடயமாகும். தினமும் ஏதோவொரு காரணத்தைக்காட்டி பொதுமக்களைக் கொலை செய்வது ஐ.எஸ்.தீவிரவாதிகளின் வழக்கமாகவே மாறி விட்டது. பெற்ற தாயையே தனயன் கொலை செய்யும் அளவுக்கு அவர்களின் கொடிய வெறிச் செயல் உச்சத்தைத் தொட்டு நிற்கின்றது.

உலகநாடுகள் இதை இன்னமும் எவ்வளவு காலத்துக்கு அனுமதிக்கப் போகின்றன என்பதே பெரும்பாலான மக்களின் அங்கலாய்ப்பாக உள்ளது. வான் தாக்குதல்கள் மூலம் ஐ.எஸ்.தீவிரவாதிகள் கொல்லப்படுவதாக அவ்வப்போது தகவல்கள் வெளிவருகின்ற போதிலும், அவர்களின் வெறிச் செயல்கள் அடங்கியதாகத் தெரியவில்லை. மாறாக அதிகரித்துச் செல்கின்றன.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இஸ்லாமியத் தீவிரவாதம் வேர் ஊன்றிக் காணப்படுகின்றது. ஆப்கானிஸ்தானில் ஆட்சியை நடத்துமளவுக்கு தலிபான் தீவிரவாதிகள் பலம்மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். பாகிஸ்தானில் அர சின் ஆசீர்வாதத்துடன் தீவிர வாதிகள் இயங்கி வருகின்றனர். இந்தியாவுக்கு எதிராக இவர்களைஏவிவிடுவதேபாகிஸ்தான் அரசின் நோக்கமாகவும் உள்ளது. அண்மையில்கூட இந்தியாவினுள் ஊடுருவி பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. இதனால் இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையே இடம்பெறவிருந்த பேச்சு வார்த்தைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

காஷ்மீர் மாநிலம் எவருக்குச் சொந்தம் என்பதில் இந்தியாவும் பாகிஸ்தானும் நீண்ட காலமாகப் பகை பாராட்டி வருகின்றன. போர்கள்கூட இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் இன்றுவரை தீர்வு எதுவும் கிட்டவில்லை. இதனால் பாகிஸ்தானில் இருந்து செயற் படும் தீவிரவாதிகள் இந்தியாவில் அடிக்கடி தாக்குதல்களை மேற் கொண்டு வருகின்றனர். இத னால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

தற்போது மத்தியகிழக்கில் கால் பதித்துள்ள ஐ.எஸ்.தீவிரவாதிகள் உலகின் பல நாடுகளிலிருந்தும் தமது இயக்கத்துக்கு ஆள்களைத் திரட்டி வருகின்றனர். இதனால் அந்த நாடுகள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளன. மேலும் எந்த வேளையிலும் ஐ.எஸ்.இயக்கத்






> பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இஸ்லாமியத் தீவிரவாதம் வேர் ஊன்றிக் காணப்படுகின்றது. ஆப்கானிஸ்தானில் ஆட்சியை நடத்துமளவுக்கு தலிபான் தீவிரவாதிகள் பலம்மிக்கவர்களாகத் திகழ்ந்தனர்.

தின் தாக்குதல் இடம்பெறலாம் என்ற பீதியும் காணப்படுகின்றது. ஏற்கனவே மேற்கு நாடுகள் சிலவற்றில் இந்தத் தீவிரவாத இயக்கம் தாக்குதல்களை நடத்தியதும், பல உயிர்களைக் கொன்றதும் நினைவு கூரத்தக்கது.

தீவிரவாத இயக்கங்கள் தோன்றுவதற்குப் பல காரணங் கள் உள்ளன. ஒரு நாட்டில் இன ரீதியான பாகுபாடுகள் காட்டப்படும்போது பாதிக்கப்பட்டவர்கள் இனிப் பொறுக்க முடியாது என்ற நிலையில் தீவிரவாதத்தைக் கையில் எடுத்துப் போராடுவதும் உண்டு. எமது நாட்டில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இதுதான் நடந்தது. ஆனால் போராட்டத்துக்கான உண்மையான காரணங்கள் மறைக்கப்பட்டு பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு அழிக்கப்பட்டது தான் வரலாறு. மத்திய கிழக்கில் அமெரிக்காவின் நடவடிக்கை களைப் பொறுக்க முடியாத இளைஞர்கள் ஐ.எஸ். அமைப்பை உருவாக்கியதாகக் கூறப்படுகின்றது. எகிப்து, ஈராக், லிபியா ஆகிய நாடுகளில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்கு அமெரிக்காவின் நடவடிக்கைகளே உதவியுள்ளன. இன்று சிரியாவிலும் அந்த மாற்றத்தை ஏற்படுத் துவதற்கான முயற்சிகள் இடம் பெறுகின்றன. ஆனால் ரஷ்யா இதை விரும்பாததால் ஏட்டிக்குப் போட்டியான தாக்குதல் சம்பவங் கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் சிரிய மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து அகதிகளாக அலைகின்றதொரு நிலை உருவாகியுள்ளது. இந்த மக்கள் மேற்குலக நாடுகளையே அதிகளவில் நாடிச் செல்வதால் அங்கு சமூக ரீதியான பிரச் சினைகளும் உருவாகியுள்ளன. மேலும் இஸ்லாமிய தீவிரவாதிகளே தாக்குதல்களை நடத்தியதால் மதரீதியான காழ்ப்புணர் வும் உள்ளூர் மக்களின் மனங் களில் படிந்து காணப்படுகின் றது. இதனால் அப்பாவி முஸ் லிம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை அமெரிக் காவிலுள்ள சில அரசியல்வாதிகள் முஸ்லிம்களுக்கு எதிராகப் பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.எஸ்.தீவிரவாதிகளால் மத்திய கிழக்கில் மட்டுமல்லாது ஏனைய நாடுகளிலும் பதற்றமானதொரு சூழ்நிலைதான் நிலவுகின்றது. மேலும் ஏராளமான இளைஞர் களும், யுவதிகளும் இந்த இயக் கத்தில் இணைந்து வருகின்றமை பதற்றத்தையும், கலக்கத்தையும் உருவாக்கியுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வெறுமனே வான் தாக்குதல்களை நிகழ்த்துவதால் தீவிரவாதிகளை முற்றாக ஒழிக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிகின்றது. மேலும் தமது தாக்குதலை விரிவுபடுத்தும் பொருட்டு தீவிரவாதிகள் நவீன தொழில் நுட்பங்களைப் பெற்றுள்ளமை அவர்களின் காணொலி ஒளிபரப்புக்களின் வாயிலாகத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. இதனால் எந்த வேளையிலும் எதுவும் நடக் கலாம் என்னும் நிலை தான் தற்போது காணப்படுகின்றது. ஆகவே ஒன்றிணைந்த தரைவழித் தாக்குதல்களின் மூலமா கவே ஐ.எஸ்.தீவிரவாதத்தை அடியோடு ஒழித்துக்கட்ட முடியும். தமது இனத்தவரையே ஈவிரக்கமின்றிக் கொலை செய்து வரும் இந்தத் தீவிரவாதிகளால், உலக அமைதி வெகுவாகச் சீர் குலைந்துவிடும் என்பதை எவருமே மறுத்துக் கூறமுடியாது.

## தனியார் கல்வி நிலையமும் பெற்றோர் படும் பாடும்

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாடக் கற்கை நெறிகள் நடைபெறுகின்ற பிரபலமான தனியார் கல்வி நிறுவனம் அது. யாழ்ப்பாணத்தில் பிறவுண் வீதியில் உள்ள இந்தக் கல்வி நிலையத்தில் 2017 உயர்தரப் பிரிவில் மட்டும் ஆயிரக் கணக்கான மரணவ மாணவிகள் பயிலுகின்றனர். இந்தப் பிரிவில் வகுப்புகள் தினமும் நிறைவடைய வேண்டிய நேரம் மாலை 5.15 ஆகும்.

ஆனால் இதில் ஒழுங்கான நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. வகுப்புக்கு அரைமணிநேரம் பிந்தி வருகின்ற ஆசிரியர் அரைமணிநேரம் பிந்தி வகுப்பை நிறைவு செய்யும் நிலைமை கடந்த காலங்களில் நிகழ்ந்துள்ளது.

இதனால் யாழ் மாவட்டத்தின் தொலை தூரப் பிரதேசங்களிலிருந்து வருகை தருகின்ற மாண்விகள் இருள் சூழ்ந்த வேளைகளில் அச்சத்துடன் பேருந்துகளைத் தேடி ஓடும் நிலை உள்ளது. உரிய பேருந்தைத் தவறவிட்டு விட்டால் அடுத்த பேருந்துக்காக இரவு 8 மணி வரை கூட காத்திருக்க வேண்டிய அவலம். பெற்றோர்களின் மனநிலையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எத்தனை அவசர தொலைபேசி அழைப்புகள்? எவ்வளவு அங்கலாய்ப்புகள்?

கடந்த புதன்கிழமை (2016.01.13) பி.ப. 3 மணிக்கு இரசாயனவியல் பாடத்தில் பரீட்சை நடைபெறும் என்பது அறிவித்தல். எனினும் மாலை 4.15 மணிக்கே வினாத்தாள்கள் வழங்கப்பட்டன. ஊழியர்களின் அசமந்தப் போக்கே காரணம். இதனால் மாலை 6.15 மணிக்கே பரீட்சை நிறைவு பெற்றது.

இதனால் பெண்பிள்ளைகள் வீடு போய்ச் சேர்வதில் பட்ட சிரமங்கள், பதற்றங்கள் சொல்லும் தரமன்று.

இரவு 8 மணிவரை பயத்துடன் பேருந்தை எதிர்பார்த்துக் காத்து நின்ற பெற்றோர்கள் எண்ணற்றவர்கள். அவர்களின் அங்கலாய்ப்புக்கள் கொஞ்சமல்ல. இந்தக்கல்வி நிலை யத்தில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் பெண் பிள்ளைகள் இருக்கக்கூடும். இருப்பினும் காசே கதியாகச் செயற்படும் இவர்களுக்கு ஏனோ இந்தப் பிரச்சினை விளங்குவதில்லை. எனவே சம்பந் தப்பட்ட நிறுவனங்களாவது இதில் அக்கறை கொண்டு வகுப்புகள் நிறைவடையும் நேரத்தை சீர்செய்ய வேண்டும் என்பதே பெற்றோரின் வேண்டுகோள் ஆகும்.

இ.தயாளன், கேணியடி
குப்பிளான்.

## ஏழை மாணவர்களுக்கு கல்வித் திணைக்களம் உதவ வேண்டும்

மாணவர்களைப் பாடசாலைகளில் அனுமதிக்கும் போது பணம் அறவிடுவது குற்றமாகக் கருதப்படுமென அரசின் சார்பில் தெரிவிக்கப்படுகின்றது. தென் பகுதியைச் சேர்ந்த பாடசாலை அதிபர் ஒருவர் இதை மீறும் வகையில் நடந்து கொள்வதால் கைது செய்யப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள சில பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கு பெற்றோரிடம் பணம் கேட்பதாகத் தெரிய வருகின்றது. சிறு தொகைப் பணம் அல்ல பல ஆயிரங்களை உள்ளடக்கிய பெரிய தொகைப் பணத்தை வழங்குமாறு கேட்பதால் வசதி குறைந்தவர்கள் செய்வதறியாத நிலையில் இருப்பதைக் காணமுடிகின்றது.

இங்கு உள்ள பெற்றோர்கள் அனைவரும் வசதியானவர்கள் அல்ல. ஆனால் ஏழ்மை நிலையிலும் தமது பிள்ளைகளைப் படிப்பித்து அவர்களாவது நிம்மதியாக வாழ வேண்டும் என்பதே அவர்களது விருப்பமாகக் காணப்படுகின்றது. ஆனால் சில பாடசாலை அதிபர்களின் செயற்பாடுகள் இதற்கு முட்டுக்கட்டையாக அமைந்து விடுகின்றன. கல்வித் திணைக்களத்தினர் இதில் தலையிட்டு ஏழை மாணவர்களின் வாழ்க்கையில் ஒளியூட்ட வேண்டும் என்பதே எனது வேண்டு கோளாகும்.

பா.வரதராசா, தாவடி.

## சமூகப் பொறுப்புள்ள வசனங்கள்

2016 இல் சபதமெடுப்போம் என்ற தலையங்கத்தின் கீழ் சங்கர் மாமா எழுதிய வாசகர் திருமுகம் எனது மனதை மிகவும் தொட்டுவிட்டது. இவர்களைப்போன்ற சிலர் இருப்பதால்தான் எமது நாட்டில் மழை கூடப் பெய்கிறது. தானுண்டு தனது வேலை உண்டு என்று எத் தனையோ அறிஞர்கள் உறங்கிக் கொண் டிருக்கும் வேளை இது. ஆடம்பரம் வீண் செலவு பகட்டு பண்பாட்டுத்திரிபுகளுக்கு அப்பால் சில தூரம் தள்ளி நின்று உண்மையை உறைப்பாக எழுதி இவர் எனது மன தில் ஒரு பெரும் இடத்தைப்பிடித்துவிட்டார். சரசாலை சங்கர் பற்றி எனக்கு மிக இளமையில் இருந்தே தெரியும். அவர் நாமம் என்றும் வாழும். உதயன் இவர்களது திரு முகங்கள் ஆக்கங்களுக்கு மதிப்பளிக்க முன்வந்தமை பாராட்டுக்குரியது. செய்திகளை இரத்தினச்சுருக்கமாக எழுதும் அருங்கலையை உதயன் எப்போதோ கற்று விட்டான். ஆனால் குறை காண வேண்டும் என்றே கருதி இன்னும் செயற்பட் டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்டங்கள் மிகச் சிறிய காலத்துக்கு மட்டும்தான். கெட்டிக்காரன் புழுகு எட்டுநாளைக்கென்னும் பழமொழி தான் எனது ஞாபகத்துக்கு வருகிறது.

சாவகச்சேரியூரான்

# நல்லிணக்கப் பணியகத்தால் பயனேதும் தமிழருக்கு கிட்டுமா?

போருக்குப் பின்னரும் தொடர்ந்த இன நல்லிணக்கத் தோல்வி, ஒரு வருடத்துக்கு முன்னரான ஜனாதிபதி ஆட்சி மாற்றத்தின் மூலமாகச் சற்று மாறுதல் அடைந்துள்ளதைத் தற்போது அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இன நல்லிணக்கம் மட்டுமன்றி சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் இன்னும் இழுபறி நிலை தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

இந்நிலையில் இப்போது இன நல்லிணக்கம் பற்றி அக்கறை கொண்டுள்ளனர். அதற்காகவே ஒரு பணியகமும் ஆரம்பித்துள்ளனர். இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்கப் பணியகம் என்ற அமைப்பு ஒன்றை அதற்காக உருவாக்கியுள்ளனர்.

அதன் தலைவராக இருப்பவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க. பொங்கல் பொங்கிக் கொண்டாடுவதற்கு என்று நேற்றுமுன்தினம் யாழ். வந்தவர்களில் அவரும் ஒருவர். அவரது பணியகமும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சும் இணைந்து பொங்கல் நிகழ்வு ஒன்றை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நேற்று நடத்தினர்.

தனது ஆட்சியில் சிறுபான்மையினரின் அரசியல் தீர்வுக்காகத்தான் கடுமையாக உழைத்திருந்ததாக அவர் தனது உரையில் கூறி, தனக்கு அப்பொழுதுதான் கண் பார்வை இழக்க வேண்டி வந்தது-என்றார். அதாவது விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் தான் மாட்டிக் கொண்டதை அவர் நாசூக்காகவே வெளிப்படுத்தினார். அதிகமான தமிழர் விரோத அரசியல்வாதிகள் இதுவரை காலமும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகச் சித்திரித்ததோடு வெளிப்படையாகவே அவ்வாறு கூறியும் வந்தனர். ஆட்சி மாறியவுடன் முக்கிய அரசியல் வாதிகள் சிலரது உரைகளில் கருத்து வெளிப்பாடுகளில் பயங்கரவாதிகள் என்று கூறுவதை நிறுத்திவிட்டனர். அவர்களுக்கு அது பயங்கரவாதமாகத் தெரிந்தாலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் மீட்பர்களாகவே இருந்தனர் என்பதை யாரும் மறுக்க முடியாது. அது நடைபெறாமல்போனாலும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாக்குவதை-பயங்கரவாதிகளாகச் சித்திரிப்பதைத் தமிழ் மக்கள் விரும்பியிருக்கவில்லை.

தமிழ் மக்களின் உணர்வில் ஊறிவிட்ட விடுதலைப் புலிகள் பற்றிய விடயத்தைச் சந்திரிகா நாடி பிடித்துப் பார்த்தாரோ என்னவோ பொங்கல் நிகழ்வில் பயங்கரவாதிகள் என்ற பதத்தை அவர் பயன்படுத்தியிருக்கவில்லை. பயங்கரவாதம் என்ற சொல்லை ஒரு தடவை பயன்படுத்தியிருந்தார். பின்னர் பயன்படுத்தவில்லை.

தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாகக் கதைப்பதுகூட இன நல்லிணக்கத்துக்கு ஏற்றதாக இருக்கமாட்டாது என்று அவர் நன்றாக உணர்ந்துவிட்டாரோ தெரியவில்லை. அவரது தற்போதைய பதவிநிலை கூட நல்லிணக்கப் பணியகம்தான். அதனால் தான் அவ்வாறு கதைக்கவில்லையா அல்லது உண்மையில் பற்றுக் கொண்டுதான் செயற்படுகின்றாரா என்பது போகப் போகத்தான் தெரியும்.

நல்லிணக்கப் பணியகத்தின் முதலாவது நிகழ்வும் இதுதான் என்றும் அவரே நேற்றுமுன்தினம் கூறியுள்ளார். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் அவரது பணிகள் செயற்பாடுகள், அவரது பணியகம் என்ன செய்யவுள்ளது என்பதை.

ஆனால் இனநல்லிணக்கம் இன்றித் தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் தான், பிரச்சினை என்பதை அவர்கள் உணரத் தொடங்கிவிட்டனர்போலும். அவர்களுக்கான அழுத்தங்கள் சர்வதேசத்தாலும் இருந்துகொண்டே இருக்கும். தற்போதைய சுமுகமான சூழ்நிலையில் ஏற்படுத்தாத எந்தவொரு மாற்றத்தையும் பின்னர் ஏற்படுத்த முடியும் என்று நம்பவேமுடியாது. தற்போதுள்ள கூட்டிணைந்த அரசு பிரிபடும் நிலைவரின் எல்லாம் கெட்டுப்போய்விடும்.

சந்திரிகாவின் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வின் ஆரம்பம் எந்தளவுக்கு நம்பிக்கையைக் கட்டியெழுப்புகிறது என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அரசியல்வாதிகள் செய்யத் திட்டமிடுவதைச் செய்கிறார்களா, அவர்களுக்குக் கீழ் உள்ள அவர்களது செயற்படுத்துநர்கள் அதனைச் சரியாகச் செயற்படுத்துகின்றனரா? என்பதும் பிரச்சினைக்குரியதொன்றாக உள்ளது. அதனைச் செய்யத் தவறுவதும் பெரும் தவறாகிவிடுகிறது.

இந்த நிகழ்வை இன நல்லிணக்கத்தின் ஆரம்ப நிகழ்வாக அவர் பார்க்கும் அதே வேளை, இறுதியில் நடந்த பரிசளிப்பில் மாணவர்கள் அழைக்கப்பட்ட விதம் அங்குள்ள அதிகம் பேரைக் குத்தியுள்ளது என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது.




அந்த நிகழ்வில் மிக அதிகமானவர்கள் தமிழ் மாணவர்கள். முஸ்லிம் மாணவர்களும் தமிழ் பேசுபவர்கள். குறைந்த அளவில் வந்திருந்த சிங்கள மாணவர்களே சிங்கள மொழி பேசுபவர்கள். ஆனால் நிகழ்வு ஆரம்பித்தபோது ஒழுங்காகத்தான் ஆரம்பித்தது. பின்னர் அந்த ஒழுக்கைக் காணவில்லை. கௌரவிப்புக்காக அழைக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் பெயர்கள் தனிச் சிங்களத்திலேயே அழைக்கப்பட்டுள்ளன. அது அங்குள்ளவர்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அத்தகைய சிறு நிகழ்வுகள் கூட நிகழ்வின் ஒட்டுமொத்த நோக்கத்தையும் கெடுத்துவிடுகின்றது என்பது உண்மை. இது மட்டுமன்றி வெளியே மொழி உரிமை, மனித உரிமைகள், மத உரிமைகள் இன்னும் மீறப்பட்டே வருகின்றன.

எதுவாக இருந்தாலும் நல்லிணக்கப் பணியகம் இதுவரை எதுவும் செய்ததாக அறியமுடியவில்லை. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும், சிறுபான்மையினருக்கு அதனால் ஏதாவது பயனுண்டா என்று.



# பணம் வாழ்க்கைக்கு அவசியம்

யோ.அபிசன்

(நேற்றைய தொடர்ச்சி)

கொழுந்து விட்டு எரியும் ஆசை, சாதிக்க முடியாத காரியத்தைச் சாதிக்கும். எதிர் ஆட்டக்காரர்களை எப்படி வெல்ல வேண்டும் என்ற ஆசை விளையாட்டுவீரர்களை ஊக்குவிக்கிறதோ, அதேபோல் பணக்காரராக வேண்டும் என்ற ஆசையும் நம்மைத் தூண்டிச் செயற்பட வைக்கும். எழுந்தது முதல் தூங்கும் வரையில் எம்முடைய மனம் ஓயாமல் கூற வேண்டிய மந்திரம் பணக்காரனாக ஆக வேண்டும் என்பதே. இந்த மந்திரம் நமக்கு ஒரு வேகத்தை உருவாக்கும். வேகம் பொருளைக் கொண்டு வந்து சேர்க்கும். உலகில் உண்டாக்கப்பட்ட எந்தப் பணக்காரரை எடுத்துக்கொண்டாலும், அவர்களுடைய எண்ணம் எப்பொழுதும் பணம் ஒன்றைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும். ஒரே எண்ணம் தொடர்பான எண்ணங்களுக்கு வழி வகுக்கும். பணம் தானாக வந்து சேரும்.

எம்முடைய அறிவு தூங்கிக் கொண்டிருந்தால் அதைத் தட்டி எழுப்ப வேண்டும். அது மங்கிப் போயிருந்தால் தூண்டி விட வேண்டும். சுடர் விட்டு கொண்டிருந்தால் எண்ணெய் ஊற்ற வேண்டும். பிரகாசமான ஒளியுடன் எமது அறிவைத் தூண்டிவிட்டால் அந்த ஒளியில் பணம் எங்கே இருக்கிறது என்று எமக்கு தெளிவாகத் தெரியும். நாம் வாழ்க்கையிலே வசதி பெற வேண்டும், பணக்காரராக வாழ வேண்டும் இன்பமாகத் திகழ வேண்டும் என்ற அக்கறை எவருக்குமே இருக்காது. ஆனால் எமக்கு இருக்கும். நாமே எம் அறிவைத் தட்டி எழுப்ப வேண்டும். நாமேதான் எம் அறிவைத் தூண்டிவிட வேண்டும்.

ஆண்டவன் உனக்கு எல்லாவற்றையும் படைத்து அளித்திருக்கிறான். ஆனால் அவன் பணத்தை மட்டும் படைக்கவில்லை. கொடுப்பதும் இல்லை. ஏனெனில் ஆண்டவன் பணத்தைப் படைக்கவில்லை அது மனிதனின் படைப்பு! நீ ஒரு மனிதன்! மனிதனுக்கு எல்லா வகையிலும் பணம் அவசியம். அது எல்லா வகை யிலும் கிடைக்கும். அதைப் பெறுவதற்கு எப்படி முயற்சி செய்ய வேண்டுமோ அப்படி எல்லாம் செய்.

பணமில்லாதவன் பிணம் என்ற நடைமொழியை அறியாதவர்களல்ல நாம்! உயிர்ப்பிணமான நாம் காப்பாற்றப்பட பணம் அவசியம். உடல் உயிர் இழந்த பின் கழுகு கொத்தாமலும், நாய் நக்காமலும், காக்கை துளை போடாமலும் காப்பாற்றக்கூட பணம் தேவை!

சிந்தனை செயலுக்கு வித்து. நாம் அடைய விரும்பும் பொருளை நோக்கிச் செல்லும். அது எமது சிந்தனையும் ஊக்கமும் ஒரு முகக் குறிக்கோளும் கொழுந்து விட்டெரியும் ஆவலும் தான் எம்மைப் பணக்காரனாய்ச் செய்வதற்குச் சிறந்த சக்தியை அளிக்கும். சிந்தனைக்கும் செயலுக்கும் இருக்கும் தொடர்பானது உள்ளத்துக்கும் உடலுக்கும் உள்ள உறவைப் போன்றது. உள்ளம் உற்சாகமாக இருந்தால்தான் உடலும் உடலின் எல்லாவித அங்கங்களும் சரிவர வேலை செய்யும். உள்ளம் தளர்ந்தால் உடல் தளரும். செயலில் ஊக்கமும் உற்சாகமும் இருக்காது. சிந்தனை தான் செயலுக்கு ஆதாரமாகிறது. எண்ணியபடி எண்ணியாங்கு ஆவது தான் மனித மனத்தின் வெற்றி. வித்துக்குள் விருட்சம் அடங்கிக் கிடக்கிறது.

“எம்முடைய அறிவு தூங்கிக் கொண்டிருந்தால் அதைத் தட்டி எழுப்ப வேண்டும். அது மங்கிப் போயிருந்தால் தூண்டி விட வேண்டும். சுடர் விட்டு கொண்டிருந்தால் எண்ணெய் ஊற்ற வேண்டும். பிரகாசமான ஒளியுடன் எமது அறிவைத் தூண்டிவிட்டால் அந்த ஒளியில் பணம் எங்கே இருக்கிறது என்று எமக்கு தெளிவாகத் தெரியும்.”

உயிர்த்துடிப்புடன் வாழப் பணம் ஒரு உபகரணமாக இருக்கிறது. வாழ்க்கை என்பதே வாழ்ந்திருந்த காலங்களின் நீள அகலத்தில் இல்லை. ஆனால் பணத் தன்மையில் அமைந்திருக்கிறது. பணத்தின் சிந்தனை, அதனால் தொடங்கப் பெற்ற செயல் ஆகியவற்றின் சரியான கணிப்புத்தான் எம்மைப் பணக்காரராக்கும். நாளும் நாளும் உயர்வதோர் நன்மை பெறுவரே என்று ஞானசம்பந்தர் கூறுகிறார். உடல் வளர்ச்சிக்கு ஏற்ப உள வளர்ச்சியும், உள வளர்ச்சிக்கு ஏற்ப சிந்தனையும், பெற்று நறுமணம் கமழ நானிலம் புகழ பணத்தைச் சம்பாதித்து வாழ்வாங்கு வாழ வேண்டும்.

(தொடரும்)

சூரியகாந்தி




# தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கான தடை அவசியமானதா?

ஸூடோ ஸ்வாமி

தனியார் மருத்து வக் கல்லூரிகள் நிறுவுவதை எதிர்க்கும் வகையிலான முன்னெடுப்புக்கள் பலவும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 13ஆம் திகதி புதன்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தைச் சேர்ந்த மாணவர்களால் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்தப் பேரணியில் ஏறக்குறைய 600 அளவிலான மருத்துவ மாணாக்கர் தமது தொழில்சார் உடையுடன் வீதியில் இறங்கித் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

கடந்த 7ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பான எதிர்ப்பினைத் தெரிவிக்கும் முகமான ஆர்ப்பாட்டம் ஒன்றினை மட்டக்களப்பு நகரில் நடத்தியிருந்தனர். மட்டக்களப்பு - கல்முனை வீதியில் அரசடியில் அமைந்துள்ள மருத்துவ பீடத்தில் ஆரம்பித்த பேரணி, மட்டக் களப்பு நகரைச் சென்றடைந்து மீண்டும் மருத்துவ பீடத்திற்குத் திரும்பியிருந்தது.

இலங்கை சுகாதாரத் துறையை சில வருடகாலமாக ஒரு கலக்கு கலக்கி வருகின்றது. இந்தத் தனியார் மருத்துவக் கல்லூரி விவகாரம். மாலபேயில் அமைந்துள்ள SAITM என அழைக்கப்படும் மருத்துவம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தெற்காசிய நிறுவனம், மருத்துவமாணி, சத்திரசிகிச்சைமாணி (MBBS) பட்டத்தினை வழங்குவதற்கான மாணவர் உள்ளீர்ப்பு எத்தனங்களை அடுத்து இந்த விவ காரம் சூடுபிடிப்பதும் தணலில் உறங்குவதுமான பண்பினைக் காண்பித்து நிற்கிறது.

கடந்த மாதத்தில் மேற்படி நிறுவன மருத் துவ மாணவர்கள் அவிசாவளை தள வைத்தியசாலை மற்றும் கடுவெல சுகாதார வைத்திய பணிமனை என்பவற்றில் தமது மருத்துவப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியுமென சுகாதார அமைச்சு உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்ததனைத் தொடர்ந்து எதிர்ப்பு நடவடிக்கைகள் மீண்டும் களைகட்ட ஆரம்பித்துள்ளன.

தொழில் ரீதியான மருத்துவத்தினை இலங்கையில் முன்னெடுக்க SLMC எனப்படும் இலங்கை மருத்துவச் சபையின் அங்கீகாரம் தேவை. இலங்கையில் அரச பல்கலைக்கழகங்களில் மருத்துவம் பயின்று பின்னர் தொழில்ரீதியாக அங்கீகாரம் பெறுகின்றவர்கள் சாதாரணமாக SLMC பதிவு·தொடர்பில் சிக்கலுக்குள்ளாவதில்லை. எனினும் வெளிநாடொன்றில், SLMC அங்கீகரித்த பல்கலைக்கழகத்தில் மருத்துவமாணி, சத்திரசிகிச்சைமாணி பட்டம் பெற்ற ஒரு மருத்துவர், சட்டமூலம் 16 அல்லது ERPM (Examination for Registration to Practice Med) என்னும் பரீட்சையில் சித்தி எய்திய பின் னரே மருத்துவத்தினை தொழில் ரீதியாக முன்னெடுக்க அனுமதிக்கப்படுவர்.

> "தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கான எதிர்ப்பிற்கு சொல்லப்படுகின்ற ஒரே காரணம் அவை தரம் குறைந்தவையாக இருக்கும் என்று அஞ்சப்படுகின்றமையே! பணத்திற்கு மருத்துவப் பட்டங்களை விற்கக்கூடிய கடைகளாகத் தனியார் மருத்துவக் கல்லூரிகளை அடையாளம் காட்டுகிறார்கள் எதிர்ப்பாளர்கள்.



**மருத்துவர்களுக்கான பற்றாக்குறை**

சுகநலம் சார்ந்த சுட்டிகளில் பல இடங்களில் இலங்கை முன்னிலையில் நின்றாலும், இலவச சுகாதார சேவை முறைமையே நடைமுறையில் இருந்தாலும் மருத்துவர்களுக்கான நெருக்கடி, பற்றாக்குறை இலங்கையை அதிகம் பாதித்து வருகின்றது. 100,000 நபர்களுக்கு இத்தனை மருத்துவர்கள் என்னும் விகிதத்தில் உலகளாவிய மட்டத்தினைவிட குறைந்த அளவிலும் அதேவேளை தெற்காசியாவில் சற்று முன்னோடியான நிலையிலும் இலங்கைகாணப்படுகின்றது. 2015ஆம் ஆண்டளவில் 1,100 நபர்களுக்கு ஒரு மருத்துவர் என்ற நிலையை யாவது இலங்கை எட்டவேண்டும் என்று இலக்கு வைக்கப்பட்டிருந்தது. சர்வதேச ரீதியில் 100,000 நபர்களுக்கு 170 மருத்துவர்கள் என்கிற சராசரி நிலை காணப்படுகின்றது.

சரியாகக் கற்றுத்தேர்ந்த மருத்துவர்களின் பற்றாக்குறை மற்றும் வைத்திய ஆலோசனைச் சேவைக்கான கட்டண அறவீட்டு சுமை என்பன போலி மருத்துவர்களுக்கான சந்தையினை இலங்கையில் திறந்து விட்டிருக்கிறது.

கடந்த ஆண்டுத் தகவல்களின் படி, இலங்கையின் ஐந்து மாகாணங்களில் மாத்திரம் 5,026 போலி மருத்துவர்கள் பணிபுரிகின்றனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார். அதிலும் மாகாண ரீதியாக நோக்கும்போது வட மாகாணத்திலேயே அதிகம் போலி மருத்துவர்கள் உலாவுகின்றனர் என்றும் அவர் தெரிவிக்கிறார்.

மருத்துவர்களுக்கான பற்றாக்குறை, மறுபுறத்தில் கடமைபுரியும் மருத்துவர்களுக்கான கேள்வி (Demand)யினை அதிகரித்துவிட, மருத்துவ ஆலோசனைக்கான கட்டணங்கள் எகிறிக் கொண்டே செல்வது அதன் பின்விளைவாக இருக்கின்றது.

**தனியார் மருத்துவ கல்வி முறைமையால் தீர்வு காண முடியாதா?**

தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கான எதிர்ப்பிற்குச் சொல்லப்படுகின்ற ஒரே காரணம் அவை தரம் குறைந்தவையாக இருக்கும் என்று அஞ்சப்படுகின்றமையே! பணத்திற்கு மருத்துவப்பட்டங்களை விற்கக்கூடிய கடைகளாகத் தனியார் மருத்துவக் கல்லூரிகளை அடையாளம் காட்டுகிறார்கள் எதிர்ப்பாளர்கள்.

அதிகரித்துச் செல்லும் வைத்திய சேவைக்கான தேவை, பொதுமக்களின் கேள்விக்கு போதுமான மருத்துவர்களின்நிரம்பலின்மை,

*தனியார் மருத்துவக் கல்லூரி களுக்கு ஒழுங்கமைப்பு கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் மருத்துவத் தேவையினை வளப்படுத்தத் தேவையான மருத்துவர்களை உருவாக்க முடியாதா என்கிற கேள்வி சமூகத்தில் இல்லாமல் இல்லை. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்கிற மாதிரியான ரீதியில் தனியார் வைத்திய கல்லூரிகள் தொடர்பான தீர்மானம் எதுவும் அரசிடமிருந்து இதுவரை வெளியிடப்படவில்லை.*




வாழ்க்கை முறைமை மாற்றம் என்பன இந்த அடிப்படைவாதச்சிந்தனைகளிலிருந்து விலகி சிந்திப்பதற்கான தேவையை ஏற்படுத்தி நிற்கிறது.

தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒழுங்கமைப்பு கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் மருத்துவத் தேவையினை வளப்படுத்தத் தேவையான மருத்துவர்களை உருவாக்க முடியாதா என்கிற கேள்வி சமூகத்தில் இல்லாமல் இல்லை. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்கிற மாதிரியான ரீதியில் தனியார் மருத்துவ கல்லூரிகள் தொடர்பான தீர்மானம் எதுவும் அரசிடமிருந்து இது வரை வெளியிடப்படவில்லை.

அரச போதனா வைத்தியசாலைகளில் அங்கு வரும் மக்களையே மாதிரிகளாக கொண்டு இளமாணி வரை அரச செலவிலே படித்த மருத்துவர்கள் பலரும் பணியில் இணைந்ததன்பின் அரச இலவசசுகாதாரசேவையை மாற்றாந்தாய் மனநிலையுடன் நோக்குகின்ற நிலையும் இல்லாமல் இல்லை. இதனைவிட இலவசக் கல்வியில் கற்றுயர்ந்த பலரும் மூளைவெளியேற்றம் நிகழ்த்திக்கொண்டிருப்பதும் ஒன்றும் இரகசிய மல்ல. இது, தனியார் மருத்துவக் கல்லூரிகளை எதிரப்பவர்களின் எதிர்ப்பின் வலுவினை குறைத்து விடுகின்றது.

தனியார் மருத்துவக் கல்லூரிக்குச் சார்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுமிடத்து தொழிற்சங்கப் போராட்டங்கள் தலையெடுக்கலாம் என்று நம்பப்படுகிறது. அரசியல் சார்பு சக்திகளின் தலையீடுகள் இந்தப் பிரச்சினையைத் தீவிரப்படுத்துமா சுமுகமாகத் தீர்க்குமா என்பது தொக்கியே நிற்கிறது.

கீரைக்கடைக்குப் போட்டியான கீரைக் கடைகளை நிறுவுவது இரு கடைகளிலும் தரமான கீரைப்பிடிகள் கிடைப்பதனை உறுதி செய்யக்கூடும்.



# இனப் படுகொலை குற்றத்திலிருந்து இலங்கை அரசுக்கு விடுதலையா?

யாழ்.ஆனந்தன்.

தமிழீழத்துக்காகப் போராடிய ஈழத்தமிழ் இனத்தை அந்தப் போராட்டத்தையே வைத்து அழித்த பெருமை இலங்கை, இந்திய அரசுகளுக்கும், சர்வதேசத்துக்கும் உண்டு. அதற்கான இறுதி ஆதாரம் 2009 ஆம் ஆண்டு அழிவுகளுக்கு ஐ.நா.மனித உரிமை அவையின் 2015 ஐப்பசி முதலாம் நாள் தீர்மானமாகும். இந்தத் தீர்மானம் இலங்கை அரசுக்கு அது புரிந்த பெரிய இனப்படு கொலைக் குற்றத்தில் இருந்து விடுதலை அளித்துள்ளது. நீதித்துறையில் குற்றம் இழைத்தவர்கள், அது நிரூபிக்கப்படும் வரை நிரபராதிகள் என்ற வழமைக்கு ஏற்ப, இலங்கை அரசு இன்று சர்வதேச அரங்கில் நிரபராதியாகி உள்ளது. மேலும் தமிழ் தரப்புக்களைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளாத தன்மையும், விடுதலைப் புலிகளைக் குற்றம் சுமத்தும் தன்மையும் காணப்படுகின்றது. இங்கு புலிகள் புரிந்ததாகக் கூறும் குற்றங்கள், இலங்கை அரசுடன் இணைந்த துணை இராணுவக்குழுக்கள் குறிப்பாக கருணா குழு, வரிப்புலிச் சீருடையில் வன்னியில் ஊடுருவி மேற்கொண்டவையே. இவற்றைப் புலிகளுக்கு எதிரான குற்றமாகக் கூறுவது தவறானதாகும். அடுத்து உள்நாட்டு விசாரணை என்பது எஞ்சிய தமிழ் மக்களையும் அடக்குவதற்கான ஆயுதமாகவே கருத வேண்டும். இதனைத் தொடர் தமிழின அழிப்புக்காக ஒரு சர்வதேச அங்கீகாரமாகவே நோக்கல் வேண்டும். தமிழின விடுதலைப் போராட்டத்தை இராஜதந்திர ரீதியில் முடக்குவதற்கு இந்திய, இலங்கை, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பவற்றின் முயற்சிகள் பல துரோகங்களுடன் கைகூடியுள்ளது.

மீண்டும் மக்கள் எழுச்சி ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட போதைப்பொருள் பாவனை முடுக்கிவிடப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்டங்களை முறியடித்தலில், திட்டமிடலில் இளம் சமூகத்தில் குறித்த வீதத்தினரை போதைப் பொருளுக்கு அடிமையாக்கல் மிகவும் முக்கியமானது. இவ்வாறு அடிமையானவர்கள் புரியும் சிறுகுற்றங்கள் முதல் பெருங் குற்றங்கள் வரை அன்றாட வாழ்வுக்கான பேசுபொருளாக அமையும். இதிலும் இலங்கைப் புலனாய்வுத்துறை, தமிழ்ப் பிரதேசங்களில் வெற்றி கண்டுள்ளது. அடுத்து அரசியல்வாதிகள், கல்வியியலாளர்களை பணத்துக்கும், ஏனைய போகங்களுக்கும் அடிமையாக்கி உள்ளது. பலருக்கு இந்தியா, சீனா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு குறுகியகால உல்லாசக் கல்விச் சுற்றுலாவுக்கு உசாத்துணை வழங்கி, அவர்களது பிள்ளைகள் மனித நேயத்திலிருந்து விலக வழிவகைகள் செய்யப்பட்டு உள்ளன.

இந்த நிலையில் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களையும், நம்பகத்தன்மை அற்றவை என ஐ.நா.நிபுணர்குழு அறிக்கையில் உள்ளமையால் ஈழத்தமிழரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கோரியும், ஈழத்தில் நடைபெற்றவை இனப்படுகொலை எனவும், தமிழீழ விடுதலைக்கான தமிழரின் கோரிக்கைகள் நியாயமானவை என்றும், ஐ.நா.மனித உரிமைப் பேரவைத் தீர்மானத்துக்கு அமைய இலங்கையின் எஞ்சிய சாட்சியங்கள் கொல்லப்படவும், தடயங்கள் அழிக்கப்படவும் ஏதுநிலை உள்ளது என்றும், ஐ.நா.மனித உரிமை அவையில் இணை அனுசரணை வழங்கிய நாடுகளுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில், ஈழத்தமிழர்கள் மனுத்தாக்கல் செய்ய வேண்டும். இந்தியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் தமிழர்களின் தமிழீழக் கோரிக்கை யைத் தீர்ந்துபோக வைக்கும் முயற்சியாகவே ஐ.நா.மனித உரிமை அவை தொடர் தீர்மானத்தைக் கருத வேண்டும். தமிழினப் படுகொலைகள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அடக்குவதற்காகவே நிகழ்த்தப்பட்டவை. இதனை இலங்கை அரசு தனது வெற்றுக் ஙககளால் நிகழ்த்தவில்லை. சீனா, பாகிஸ்தான், இந்தியா, இஸ்ரேல், ஈரான், லிபியா போன்ற நாடுகளிலிருந்து ஆயுத உதவி, விமான உதவி, போர்க்கப்பல் உதவி எனப் பலவற்றைப் பெற்றும், நோர்வே, யப்பான் போன்ற நாடுகளிலிருந்து இராஜதந்திர உதவிகளைப் பெற்றுமே தமிழின அழிப்பை மேற்கொண்டது. இவை பற்றி ஐ.நா.மனித உரிமை அவைத் தீர்மானம் கருதாமை, ஈழத்தமிழருக்கு எதிரான பெரிய சூழ்ச்சியாகவே கருதப்படல் வேண்டும்.

எனவே தமிழர் தரப்பு நீதிகளை வலுவாக்க, சர்வதேச நீதிமன்றத்தை அணுகுவதே ஒரு சிறந்த வழியாக அமையும். ஐ.நா. மனித உரிமை இதில் ஐ.நா.மனித உரிமை அவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கிய நாடுகளிடமிருந்து ஈழத்தமிழருக்கான பாதுகாப்பு உத்தரவாதம், தமிழின அழிப்பின் தடயங்களை இலங்கை அரசுடன் இணைந்து அழிக்காது இருப்பதற்கான உத்தரவாதம் ஈழத்தமிழர்கள் அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கான உத்தரவாதம் என்பவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும். ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலை என்பது பன்னாட்டுக் குற்றச் செயல் எனவும், இதனாலேயே உலகம் நழுவல் போக்கில் உள்ளதாகவும் குற்றவாளிகளே நீதிபதிகள்போல் செயற்படுவதாகவும் கருதப்படல் வேண்டும்.

அடுத்து ஐ.நா. செயலர் போரின் இறுதியில் இலங்கை வந்து, இலங்கை ஜனாதிபதியுடன் இணைந்து வெளியிட்ட அறிக்கைக்குப் பின் 6 வருடங்கள் கழிந்தநிலை யிலும், நம்பகமாக நடக்கவில்லை எனவும், பெரிய இன அழிப்புக்களை மறைக்கத் துணைபோயுள்ளவர்கள் என சட்டரீதியான முறைப்பாட்டை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஈழத் தமிழர்களுக்கு உள்ளது.

அண்மைய வரவு–செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத் துறைக்கு 20% நிதி அதிகரிப்புச் செய்யப்பட்டமையும், மாகாண சபைக்கு நிதிகுறைப்புச் செய்யப்பட்டமையும், ஐ.நா.மனித உரிமைத் தீர்மானத்தை நிறைவேற்றாது பின்னடிக்கின்றமையும் ஈழத்தமிழர்களுக்கான அச்சுறுத்தலாகவே கருதப்படல் வேண்டும். இவை ஒரு சூழ்ச்சிகரமான அடக்குமுறை யாகவே கருதல் வேண்டும்.

இந்த நிலையில் அரசின் கபடத்திட்டங்களை வெளிப்படையாகவே எதிர்க்கும் வடமாகாண முதலமைச்சரின் அணுகுமுறைகள் பாராட்டத்தக்கவை. தமிழ்க் கைதிகளின் விடுதலை, இராணுவ விலக்கல், மீள்குடியேற்றம், அரசியல் அதிகாரங்களை ஏமாற்றாது வழங்கல். என்பவற்றின் முதலமைச் சர் தமிழ் மக்களின் கருத்துக்களை தாங்கியவராகக் காணப்படுகின்றார். இந்த நிலையில் தமிழ்மக்கள் வடமாகாண முதலமைச்சரை பலப்படுத்தாவிடின் ஜனநாயக வெளியில் தமிழ் மக்கள் நீதியை பெறுவதற்கான வழியைத் தக்கவைத்தல் கடினமானதாக அமையலாம்.



# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும் 14



## மக்கள் வாழ்வில் மிகப்பெரும் சக்தி

செய்திப் பத்திரிகைகளின் இன்னுமொரு முக்கிய அம்சமாக விளங்குவது அவைகள் விளம்பரங்களுக்கான பரப்புரைக் களமாகவும் இருப்பததாகும். நாம் ஏற்கனவே பார்த்ததுபோல் பத்திரிகைகளின் பிரதான போசகர்களாய் இருப்பவர்களில் விளம்பரதாரர்களும் ஒரு பிரிவினர்களாவார்கள்.

**பத்திரிகையின் பிரதான போசகர்கள் அதன் வாசகர்களே**

வசதியும் வாய்ப்பும் உள்ள ஒருவர் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து விடலாம். அந்தப் பத்திரிகை மக்கள் ஆதரவைப் பெற்று விற்பனையாக வேண்டும். அதை விரும்பி வாங்கிப் படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். அவ்வாறான நிலையிலேயே அந்தப் பத்திரிகையை விளம்பரங்கள் தேடிவரும். விளம்பரங்கள் அதிகரிக்கும்போது பத்திரிகையின் பக்கங்கள் அதிகமாகும்.

> ஒரு பத்திரிகையானது எவ்வாறான கொள்கையைக் கடைப்பிடிக்கின்றதென்பதை எவ்வாறு அறிந்து கொள்வது என்று சிலர் கேட்கிறார்கள். அது கடினமான விடயமல்ல. ஒரு பத்திரிகை எவ்வாறான கொள்கையைக் கொண்டிருக்கின்றது என்பதற்கு அதன் ஆசிரியத் தலையங்கம் வெள்ளிடைமலையாக அமையும்.



இன்று மனிதர்களின் அன்றாட வாழ்விலும் அரசியல் துறைகளிலும் மிகப்பெரிய சக்தியாக வளர்ந்துள்ளது பத்திரிகைத்துறை. மக்கள் மத்தியில் அரசியல் கருத்துக்களை உருவாக்குவது மட்டுமல்ல, சமய நல்லுறவுகளை, கலாசார விழுமியங்களை, சமூக ஒழுக்க சீலங்களை வளர்த்தெடுப்பதிலும் பத்திரிகைகள் பெரும் பங்கில் பணியாற்றுகின்றன. அதேசமயம் மேற்கூறிய நிலைமைகளுக்கு நேர்மாறான விடயங்களின் வெளிப்பாட்டுக்கும் பெரும்பாலான பத்திரிகைகள் துணைபோகின்றன என்பதைக் காணும்போது சமூக நலன்களில் அக்கறை கொண்டவர்களை கவலை கொள்ளும்படியே செய் கின்றன.

இன்று எமது நாட்டில் இனக்குரோதங்கள் மிகமோசமான அளவுக்கு வளர்ந்தமைக்கு தென்னிலங்கையில் பேரினவாதப் பத்திரிகைகள் பெரும் பங்கு வகித்துள்ளன. இந்தக்கைங்கரியத்தில் அரசு துறைப் பத்திரிகைகளுக்கு அதிக பங்குண்டு. பதவியில் அமரும் அரசு எந்தக் கொள் கையை வெளிப்படுத்துகின்றதோ அந்த அளவுக்கு அந்தக் கொள்கைகளை பரப்புரை செய்வது மட்டுமல்ல, அரசு சார்பில் நடக்கும் அடா வடிகள் மற்றும் அநீதிகளை ஆதரித்து சப்பைக் கட்டு கட்டுவதிலும் அவை பின்னின்றதில்லை. எடுத்துக்காட்டாக, வடக்கில் தமிழ்ப் பத்திரிகை நிறுவனங்கள் மீது புலனாய்வாளர்கள்என்றுசந்தேகிக்கப்பட்ட கும்பல்கள் நடத்தியிருந்த தாக்குதல்களுக்கு நியாயம் கற்பிக்கும் வகையில் தென்னிலங்கையில் அரசு சார்ந்த பத்திரிகைகள் பரப்புரை செய்திருந்தமையைக் குறிப்பிடலாம்.

இதில் இன்னொரு விடயம் என்னவென் றால், அரசு சார்ந்த பத்திரிகைகள் ஏனைய பொதுப் பத்திரிகைகளைப் போன்று விற்பனை குறித்தோ வருமானம் குறித்தோ கவலை கொள்ளத் தேவையில்லை. ஏனென்றால் அவை அரசின் கொள்கைகளையே பரப்புரை செய்பவைகளாய் இருப்பதால் அனேகர் அரசின் செயற்பாடுகளை துல்லியமாக அறிந்து கொள்வதற்காக அவைகளை வாங்குகிறார்கள். அவ்வாறு விற்பனை போதுமானவையாக இல்லாவிட்டாலும்கூட தொய்ந்துபோய் விடு வதில்லை. காரணம், அது நீடித்துநிலைப்பதற்குத் தேவையான விளம்பரங்கள் சகல அரசு தரப்பு திணைக்களங்களிலிருந்தும் தாராளமாகக் கிடைத்து விடுகின்றன. அரசு தரப்புப் பத்திரிகைகளைத் தவிர ஏனைய பத்திரிகைகளுக்கு விளம்பரங்களை வழங்குவதில்லை என்ற ஒரு கொள்கையை அரசுக்ள் கடைப்பிடிப்பதுண்டு அல்லது அவ்வாறான ஒரு கொள்கை அரசுகளால் வலியுறுத்தப்படுகின்றது. சிலசமயம் ஏனைய பத்திரிகைகளிலும் அரசின் விளம்பரங்கள் வெளியிடப் படவேண்டிய நிலைமை ஏற்பட்டாலும், அரசு துறை பத் திரிகைகளுக்கு அவை கிடைக்காமல் போவதில்லை.

இதனால் பத்திரிகை விற்பனை குறைந்தாலும்கூட அவை வெளியிடப்படுவது நிறுத்தப்படுவதில்லை. அவைகளின் ஊழியர்களுக்கு வழமைபோல் ஊதியம் சட்டங்களுக்கமைவாக தடைகளின்றிக் கிடைக்கும். அவ்வப்போது அரசு நிர்ணயிக்கும் சம்பள உயர்வுகளும் இதரபடிகள் கொடுப்பனவுகளும் தாராளமாகக் கிடைப்பதுண்டு. பதவிகளில் இருக்கும் அரசுகளின் கொள்கைகள் கோட்பாடுகளையே அவை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் உண்டு. அரசுகள் மாறும்போது அந்தப் பத்திரிகைகளில் பணி புரிபவர்கள் பெரும்பாலும் தாங்களும் மாறிய அரசுகளுக்கேற்ப மாறிவிடுகிறார்கள். பொதுவில் உயர் பதவிகளில் இருப்பவர்கள் தான் அந்த மாதிரி நிலைமைகளில் பதவிகளில் இருந்து விலக நேர்கின்றது. கடந்த அரசு காலத்தில் அரசுத்துறை பத்திரிகைகள் எவ்வாறு செயற்பட்டன என்பதையும், அரசு மாறியவுடன் எவ்வாறு மாற்றமடைந்துள்ளன என்பதையும் அவதானித்தவர்களுக்கு இது புரிவதாய் இருக்கும்.

ஒரு பத்திரிகையானது எவ்வாறான கொள்கையைக் கடைப்பிடிக்கின்றதென்பதை எவ்வாறு அறிந்து கொள்வது என்று சிலர் கேட்கிறார்கள். அது கடினமான விடயமல்ல. ஒரு பத்திரிகை எவ்வாறான கொள்கையைக் கொண்டிருக்கின்றது என்பற்கு அதன் ஆசிரியத் தலையங்கம் வெள்ளிடைமலையாக அமையும். அது மட்டுமல்ல அந்தப் பத்திரிகை செய்திகளை எவ்வாறு வழங்குகிறது என்பதைப் பொறுத்தும்-அதன் போக்கைக் கண்டு பிடித்து விடலாம். சில பத்திரிகைகள் தம்மைப் பொது அல்லது நடுநிலையான கொள்கைகளையே பின்பற்றுவதாக பறைசாற்றிக் கொண்டாலும் செய்திகளை வழங்கும்போது தங்கள் விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்தி விடுவதைக் காணலாம். பொதுமக்கள் விரும்பும் அல்லது அவர்கள் அறிய வேண்டிய விடயங்களைப் பின்தள்ளிவிட்டு தமக்கும் தாம் விரும்பும் தரப்புகளுக்கும் இசைவாக அல்லது பொதுமக்களை திசை திருப்பும் விதத்தில் செய்திகளை திரித்தும்கூட வெளியிடுவார்கள். இவ்வாறான பத்திரிகைகளை நடுநிலைப் பத்திரிகைகள் என்று கருத முடியாது. அதேநேரம் பொதுமக்களும் அவ்வாறான பத்திரிகைகளை இனம் கண்டு விடுவார்கள். அரசியல் கட்சிகளைச் சார்ந்த அல்லது கட்சிகளினாலேயே நடத்தப்படுகின்ற பத்திரிகைகளின் நிலைமைவேறு.



# வரலாற்றில் இன்றைய தினம்

1595 – பிரான்ஸ் ஸ்பெயின்மீது போர்ப் பிரகடனம்.
1773 – கப்டன் ஜேம்ஸ் குக்கும் அவரது சக மாலுமிகளும் அத்திலாந்திகைச் சுற்றிவந்தது.
1899 – பசுபிக் சமுத்திரத்திலுள்ள வேக் தீவை அமெரிக்கா கைப்பற்றியது.
1915 – முதலாவது உலக மகா போர் துருக்கியை ரஷ்யா தோற்கடித்தது.
1945 – இரண்டாம் உலக மகா போர் அழிவடைந்த நிலையிலிருந்த போலந்து வோர்சோ நகரை சோவியத் படைகள் கைப்பற்றின.
1946 – ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தனது முதலாவது தொடரை ஆரம்பித்து.
1961 – தனது பதவியிலிருந்து விலகுவதற்கு மூன்று நாள்கள் முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவா தனது பிரியாவிடை உரையை தொலைக்காட்சி மூலம் நிகழ்த்தினார்.
1961 – கொங்கோ முன்னாள் பிரதமர் பற்றீஸ் லுமும்பா, பெல்ஜியம் மற்றும் அமெரிக்கா அரசுகளுக்கு ஆதரவு தெரிவித்த நிலையில் படுகொலை செய்யப்பட்டார்.
1982 – கடந்த 100 ஆண்டுகளில் என்றுமில்லாதவாறு அமெரிக்காவின் பல நகரங்களில் வெப்பநிலை மிக தாழ்வான நிலைக்கு கீழிறங்கியது.
1991 – வளைகுடாப்போர் பாலைவனப் புயல் நடவடிக்கை அதிகாலை ஆரம்பமானது. 8 ஸ்கட் ஏவுகணைகளை ஈராக் இஸ்ரேல் மீது ஏவியது.
1994 – சூரியகந்த புதைகுழி விவகாரம் தொடர்பாக பூரண விசாரணை நடத்த அமெரிக்க அரசு வலியுறுத்து.
1994 – சூரியகந்த புதைகுழி மாணவரின் பெற்றோருக்குக் கொலைப் பயமுறுத்தல். நீதிமன்ற வாயிலில் இனந்தெரியாத குழுக்கள் நடமாட்டம் எனத் தெரிவிப்பு.
1995 – புலிகள் – இராணுவம் மன்னாரில் சிநேக பூர்வ சந்திப்பு.
1995 – சந்திரிகாவின் சமாதானக் கரத்தை நாம் பற்றிப்பிடிக்கவேண்டுமென யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் செவ்வியில் தெரிவிப்பு.
1995 – இலங்கையில் சமஷ்டி அரசியல் முறையே பொருத்தமான தீர்வு ஒன்றாக அமையும் என 'பொஸ்டன் குளோப்' ஆசிரிய தலையங்கம் தெரிவிப்பு
2002 – கொங்கோ மக்கள் குடியரசில் எரிமலைச் சீற்றத்தால் நான்கு இலட்சம் மக்கள் இடம்பெயர்வு.
2004 – பொங்கு தமிழ் 3ஆம் ஆண்டு நினைவு. பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்றது.
2008 – கிளிநொச்சியில் மிக் தாக்குதல். ஒருவர் சாவு; 6 பேர் காயம் 35 வீடுகள் சேதம்.
2009 – வன்னி மக்கள் பாதுகாப்புக்கு அமைதி வலயங்கள் உடன் தேவையென ஜனாதிபதியிடம் ஆயர்கள் கூட்டாக வலியுறுத்து.
2009 – வன்னி மக்களைக் காப்பாற்றஉதவுமாறு வன்னி மதகுருமார் ஐ.நா. செயலருக்குக் கூட்டாக மனு.
2009 – முரசு மோட்டையில் மீட்கப்பட்ட சிப்பாய்க்கு சத்திரசிகிச்சை அவசியம் என மருத்துவர் சத்தியமூர்த்தியால் கோரிக்கை.
2010 – நைஜீரியாவில் முஸ்லிங்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையேயான கலவரத்தில் 200 பேர் வரை சாவு.

# பறக்கும்போதே உறங்குகின்ற அல்பட்ரோஸ் பறவைகள்


அல்பட்ரோஸ் (ஆல்பட்ரோஸ்) பறவைகள் மிகத் திறனுடன் காற்றோட்ட வேறுபாடுகளைப் பயன்படுத்தி அதிக அலுப்பின்றி வெகு தொலைவு பறக்க வல்லவை. இவை நீரில் வாழும் கணவாய் முதலிய மீன் இனங்களை உணவாக உட்கொள்ளுகின்றன. ஆல்பட்ரோஸ் பறவைகள் கடலிடையே உள்ள சிறு தீவுகளில் பெருங் கூட்டமாக வாழ்கின்றன. ஆல்பட்ரோஸ் பறவைகள் வாழ்நாள் முழுவதும் ஒன்றாகவே (இணை பிரியாமல்) வாழ்கின்றன. இனப்பெருக்கக் காலங்களில் ஒவ்வொன்றும் ஒரு முறை ஒரு முட்டைதான் இடுகின்றன. அல்பட்ரோஸ் தென்முனைப் பெருங்கடலிலும் வட பசிபிக் பெருங்கடலிலும் காணப்படும் கடற் பறவை இனமாகும். இவை பெரும்பாலும் வெண்ணிறக் கழுத்தும் பெரிய அலகும் மிகப் பெரிய இறக்கை விரிப்பளவும் கொண்டவை.




சதை இணைப்புள்ள கால் அடிகள் கொண்டவை. இப் பறவையினம் இன்று உயிர் வாழும் பறவையினங்களிலேயே மிகப் பெரியவைகளில் ஒன்றாகும். இவ்வினத்தின் உயிரியல் வகைப்பாட்டுப்பெயர் டியோமெடைடிடே (Diome deidae) என்பதாகும். இவ்வினத்தில் 21 வகையான இனங்கள் உள்ளன. ஆனால் அவற்றுள் 19 இனங்கள் மிக அருகிய உயிரினப்பட்டியலில் உள்ளன. பெரும் வெண் ஆல்பட்ரோஸ் என்னும் பறவை யின் இறக்கை விரிப்பளவு இன்றுள்ள பறவைகள் யாவற்றினும் மிக நீளமானது.

பூமியின் தெற்குப் பகுதியில் உள்ள கடல் பகுதிகளில்தான் ஆல்பட்ரோஸ்கள் வசிக்கின்றன. முட்டையைவிட்டு வெளிவந்து பறக்கத் தொடங்கிவிட்டால் பிறகு, இந்தக் கடற்பறவைகள் கரையில் இறங்குவதில்லை. கீழே இறங்காமல் ஏறத்தாழ ஐந்து வருடங்கள் தொடர்ந்து பறப்பதற்கு இவற்றால் முடியும். பறப்பதற்கிடையில்தான் இவை உண்கின்றன, உறங்குகின்றன.

இந்தப் பறவைகள் பெரிய இறக்கைகளைக் கொண்டிருக்கின்றன. ஒரு பகுதி இறக்கை, ஏறத்தாழ மூன்று மீற்றர் நீளமுடையதாயிருக்கும். இந்த இறக்கைகளை இருபுறமும் விரித்தால், மணிக்கணக்காகவோ அல்லது நாள்கணக்காகவோ இவற்றால் ஆகாயத்தில் அப்படியே பறக்க முடியும். கடலில் உள்ள மீன்களும், சிறிய பிராணிகளும்தான் இவற்றின் உணவு. நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 640 கிலோ மீற்றர் தூரம் இவை பறப்பதுண்டு. மிக விரைவாகப் பறக்கும் திறமை உள்ள ஸ்விப்ட் எனும் கடற் பறவையும் பறக்கும்போதுதான் உறங்கும்.



நி.கிருத்திகன்
தரம் – 3
புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்



சிவகுகன் பிருத்வி,
வளர்மதி முன்பள்ளி, கொக்குவில்

# பொது அறிவு

1. உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
நெதர்லாந்து.
2.கடற்கரை மணலைச் சுத்தம் செய்யும் கருவியின் பெயர் என்ன?
பீச் கோம்பர்.
3.நமது ஒவ்வொரு கண்ணிலும் எத்தனை தசைகள் உள்ளன?
ஆறு தசைகள்.
4.அறிவியல் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
பெப்ரவரி 28.
5.நாய்களே இல்லாத ஊர் எது?
சிங்கப்பூர்.
6.மனிதர்களைக் கண்டு பயப்படும் வியாதிக்குப் பெயர் என்ன?
ஆன்ட் ரோ ஙபோபியா.
7.வைரத்தில் மொத்தம் எத்தனை மூலைகள் உள்ளன?
ஆறு மூலைகள்.
8. சிரிக்கவும், உம்மென்றிருக்கவும் எத்தனை தசைகள் அவசியமாகின்றன?
சிரிக்க – 17 தசைகள்
உம் – 43 தசைகள்
9.மனிதனை அடையாளம் காண கைரேகை பயன்படுகிறது. அதுபோல மாட்டை அடையாளம் காண பயன்படுவது எது?
மூக்கு ரேகை.
10. கண்கள் இருந்தும் பார்வை இல்லாத பிராணி?
வெளவால்
11. உலகிலேயே பெண் எம்.பிக்கள் அதிகம் உள்ள நாடு எது?
சுவீடன்.
12. விமானத் தபால்தலைகள் வெளியிட்ட முதல்நாடு எது?
பாரதம் 1929.

# நன்றி மறக்காத எறும்பு

ஒரு கட்டெறும்பு தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

மரத்திலிருந்துஇதைப்பார்த்தபுறாஒன்று மரத்திலிருந்த இலை ஒன்றைப் பறித்து நீரில் வீசியது.

எறும்பும் தத்தித் தத்தி வந்து அந்த இலையின் மேல் ஏறிக் கொண்டது. அந்த இலை காற்றில் அசைந்து மெதுவாகக் கரைப்பக்கம் ஒதுங்கக் கரையில் ஏறித் தப்பியது அந்த எறும்பு.


மற்றொரு நாள் ஒரு வேடன் அந்த புறாவைக் குறி வைப்பதைப் பார்த்தது அந்த எறும்பு.

ஆனால் புறாவோ இதை அறியாமல் வேறெங்கோ கவனமாக இருந்தது. அன்று தன்னைக் காப்பாற்றிய புறாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது தனது கடமையாக எண்ணியது எறும்பு.

விரைந்து சென்று வேடனின் காலில் நறுக்கென்று கடித்தது.

கடியின் வலி தாங்க முடியாமல் கத்திய வேடனின் குறி தப்பியது. சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய புறா தனக்கேற்படவிருந்த ஆபத்தை அறிந்து அந்த இடத்தை விட்டுப் பறந்தது.

அன்று புறா நமக்கென்ன என்று அலட்சியம் செய்யாமல் உதவி செய்ததால்தான் புறாவின் உயிர் தப்பியது. அந்தச் சிறிய உருவம் கொண்ட எறும்பும் நன்றி மறக்காமல் செயல்பட்டது.



எவருக்கும் எந்த நேரத்திலும் நம்மால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும். அதுபோல் நமக்குச்செய்த நன்றியையும் எந்தக் காலத்திலும் மறக்கக் கூடாது.




# ஆணின் வாழ்க்கையில் பெண்

இணையவள்

ஆண் இன்றி பெண்ணும், பெண் இன்றி ஆணும் உறவு அமையாது. ஒவ்வொரு ஆணின் வாழ்க்கையிலும் பெண் என்பவள் பல பாத்திரங்கள் கொண்டு பயணிக்கிறாள்.

அதில், தாய், தங்கை, தோழி, காதலி, மனைவி, மகள் போன்ற பாத்திரங்கள் தான் ஆணின் வாழ்கையை முழுமைப்படுத்துகிறது. இவர்கள் ஓர் ஆணின் வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமாக இருக்கிறார்கள், இவர்களது பங்கு ஆணின் வாழ்க்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைப் பார்க்கலாம்.

தாயாக ஓர் ஆணின் வாழ்க்கையில் மிகப்பெரிய பங்கு வகிக்கிறாள். இந்த உலகுக்கு அறிமுகப்படுத்துவது மட்டுமன்றி, இவள் மூலமாகதான் உறவுகளும் நமக்கு அறிமுகம் ஆகிறது.

ஓர் ஆண் முதன் முதலாக காவலனாக இருப்பது அவனது சகோதரிக்கு தான். ஒவ்வொரு மகளின் முதல் ஹீரோ அப்பா என்றால், முதல் காவலன் அவளது சகோதரனாக தான் இருக்க முடியும்.

உறவினர், தாய், சகோதரிக்கு பிறகு ஓர் ஆணுக்கு கிடைக்கும் முதல் வெளியுலக பெண் உறவு, தோழி தான். ஓர் உண்மையான தோழியுடன் ஆண் தன் வாழ்க்கையின் அனைத்து சுக, துக்கங்களையும் பகிர்ந்துக் கொள்கிறான். ஏனெனில், அந்த ஒரு தோழியினால் தான் அவனது துக்கத்தைக் குறைக்கவும், சுகத்தைப் பெருக்கவும் முடியும்.

சிலருக்கு காதலி மனைவியாக அமைகிறார்கள், சிலருக்கு மனைவி தான் காதலியாக அமைகிறார்கள். ஏதோ ஒரு வகையில் அனைவருக்கும் ஒரு காதலி கிடைத்துவிடுகிறாள். ஒவ்வொரு ஆண்மகனின் பருவ வயது ஏக்கம் காதல். ஆனால் அது பதின்ம வயதை தாண்டியும் நிலைத்து நின்றால் மட்டுமே புனிதம் ஆகிறது. காதல் என்பது ஓர் ஆணின் வாழ்க்கையை சொர்க்கமாக்குகிறது.

தன் பதியை நம்பி உடல், பொருள், ஆவியில் பாதி அங்கம் கொடுப்பவள் மனைவி. மனைவி தவறு செய்யும் போது கணவன் கண்டிப்பான், அதே கணவன் தவறு செய்யும் போது மனைவி திருத்துவாள். இதுதான் கணவன், மனைவிக்கு இடையில் இருக்கும் வித்தியாசம். உண்மையிலேயே மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் தான்.

ஒவ்வொரு ஆணின் வாழ்க்கையிலும், பெண்ணுடனான உறவு என்பது, ஒரு பெண்ணின் கருவறையில் தொடங்கி, மற்றொரு பெண்ணின் கருவறையில் முடிவடைகிறது. தாயின் கருவறையில் இருந்து இவ்வுலகில் தொடங்கி, மனைவியின் கருவில் இருந்து உதித்த மகள் எனும் புதிய உலகம் என ஒவ்வொரு ஆணின் வாழ்க்கையிலும் இரண்டு உலகங்கள் இருக்கின்றன.

முதுமை எட்டிய பிறகு ஓர் ஆண் அதிகம் மனம் மகிழ்ந்து புன்னகைக்கிறான் எனில் அதற்கு முக்கிய காரணம் அவனது உயிரில் இருந்து ஜனனித்த உயிரின் உயிராக தான் இருக்க முடியும். தாத்தா ஆரம்பித்து பேர்த்தி கேட்கும் விடைகளுக்கு ஏதேனும் ஒரு பதிலை அவன் கொடுத்துக் கொண்டே தான் இருக்கிறான்.

> உலகளாவில் நடத்தப்பட்ட 50 ஆராய்ச்சிகளின் அடிப்படையில் மூன்றிலொரு பெண் என்ற விகிதத்தில் அவர்கள் உடல். உள, பாலியல் ரீதியான வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது தெரிய வந்துள்ளது. எல்லாவற்றுக்கும் ஒரு சுய கட்டுப்பாட்டை அவளே நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

# பெண்களின் தற்போதைய நிலை



ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்ட அடிமைகளாக பேச்சுரிமை, கல்வி கற்கும் உரிமை, விவாக உரிமை, வழிபாட்டுரிமை அற்றவர்களாகவும் சாபத்துக்கு உரியவர்களாகவும் கேவலமான போகப் பொருளாகவும் பெண்கள் சித்திரிக்கப்பட்டனர்.

ஆனால், இன்று ஜனநாயக ரீதியிலான உரிமைகள் முற்போக்குத்தனமான எழுச்சிகள், புரட்சிகரமான தூண்டல்கள், சிந்தனைகள் என சகல வழிகளிலும் சுதந்திரக் காற்றை அனுபவித்தவளாக பெண் முன்னேறி சகல துறைகளிலும் பணியாற்றிக் கொண்டிருக்கிறாள். மண்ணிலிருந்து விண் வரை சகல துறைகளிலும் சாதித்துக் கொண்டிருக்கிறாள்.

பெண்ணின் பெருமை இப்படி ஒரு புறமிருந்தாலும் இந்த நூற்றாண்டில் இன்று வரை பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. ஒழிந்த பாடும் இல்லை. இன்னமும் (பலசந்தர்ப்பங்களில்) பெண் வர்க்கத்தினர் மீது கட்டவிழ்த்து விடப்படும் அட்டகாசம், காழ்ப்புணர்வு, வக்கிரத்தன்மை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன.

பெண் எவ்வளவு தான் உழைத்து முன்னேறினாலும் குடும்பத்தில், சமூகத்தில், சமுதாயத்தில் அவளுக்கு மறைமுக இரண்டாம் பட்ச நிலைதான் கிடைக்கிறது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் உலகளவிலும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. படிக்கின்ற, பணிபுரிகின்ற பெண்களில் ஐம்பது சத வீதமானவர்களுக்கு அத்துமீறல்கள் நடக்கின்றன. ஊடகங்களை எடுத்து நோக்கினாலும் நாள் ஒன்றுக்கு பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான ஒரு வன்முறைச் சம்பவமேனும் பதிவு செய்யப்படாமல் வெளிவருவதில்லை. இன்று பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பல கோணங்களில் வியாபித்திருப்பதைக் காணலாம்.

குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை, பாலியல் தொல்லைகள், உடல், உள ரீதியிலான துன்புறுத்தல்கள், உணர்வுத் துஷ்பிரயோகம் எனத் தொடர்ந்து விரிவாக நோக்கினால் சீதனப் பிரச்சினை, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களின் பிரச்சினை, அகதி முகாம் பெண்களின் நிலைமை, சிறைச்சாலையில் வாழும் பெண்களின் பிரச்சினை, விதவைகளின் நிலைமை, போர்ப் பாதிப்புகளின் விளைவுகள் ஏற்படுத்தும் பிரச்சினை என அடுக்கிக் கொண்டே போகலாம்.

உலகளாவில் நடத்தப்பட்ட 50 ஆராய்ச்சிகளின் அடிப்படையில் மூன்றிலொரு பெண் என்ற விகிதத்தில் அவர்கள் உடல், உள, பாலியல் ரீதியான வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது தெரிய வந்துள்ளது. எல்லாவற்றுக்கும் ஒரு சுய கட்டுப்பாட்டை அவளே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

ஒழுக்கமான இலட்சியம் வேண்டும். குடும்பத்தின், சமூகத்தின், நாட்டின் கட்டுக்கோப்புக்கு அச்சாணியாக இருப்பவள் பெண்தான். அனைத்து மதங்களும், கட்டுப்பாட்டையும், ஒழுக்கத்தையுமே போதிக்கின்றன.






# புதிய பிளாவில் பழைய கள்ளு

சாமிப் புலவன் (ஜி.எம்.குமார்) பிரபலமான இசைக் கலைஞர். இவருடைய மகன் சன்னாசி (சசிகுமார்), தாரை தப்பட்டை மற்றும் கரகாட்டக் குழுவை நடத்தி வருகிறார். அதில் பிரதான நடனக்காரி சூறாவளி (வரலட்சுமி). சூறாவளிக்கு சன்னாசி மீது தீராக் காதல். சன்னாசிக்கும் சூறாவளி என்றால் கொள்ளைப் பிரியம் ஆனால் வெளிக் காட்டுவதில்லை. செல்லும் இடங்களில் எல்லாம் சூறாவளிக்குச் சிறப்பான வரவேற்புக் கிடைக்கிறது. அவளுடைய ஆட்டத்தைத் தொடர்ச்சியாகக் காணும் அரச ஊழியர் கருப்பையா (ஆர்.கே.சுரேஷ்) சூறாவளியை மணமுடிக்க விரும்புகிறார்.

ஆயுளுக்கும் ஆட்டக்காரியாக அவள் அவதிப்பட வேண்டாம் நிம்மதியாக வாழட்டும் என நினைக்கும் சன்னாசி, தனது காதலைத் தியாகம் செய்கிறான். திருமணத்துக்கு மறுக்கும் சூறாவளியைச் சம்மதிக்கவைக்கிறான். அவனுடைய விருப்பத்துக்காகச் சூறாவளி கருப்பையாவை மணமுடிக்க ஒப்புக்கொள்கிறாள். திருமணமான பின்பு சூறாவளி சந்தோசமாக இருக்கிறாளா? சன்னாசியின் குழுவுக்கு என்ன நடந்தது போன்றவற்றைத் தனது பாணியில் தாரை தப்பட்டையாக்கியிருக்கிறார் பாலா.

ஜி.எம்.குமாருக்கு அழுத்தமான வேடம். கர்வமிக்க இசைக் கலைஞராகப் படம் முழுக்க வலம் வருகிறார். மகன் மீது பிரியத்தைக் கொண்டிருந்தாலும் அதை வெளிப்படுத்துவதில்லை அவர். அதைப் போலவே சன்னாசியும். அவருக்கும் தன் தந்தை என்றால் உயிர். மேலும் தனக்குத் தொழில் கற்றுத் தந்த குரு என்பதால் கூடுதல் மரியாதை.

அன்றாட வாழ்வு நடத்த வேண்டி பிணத்தின் முன்னர் பாட்டுப் பாடி ஆட்டம் ஆட நேர்ந்தது பற்றிய வேதனையுடன் வந்தபோது சாமிப் புலவன் நையாண்டி செய்வதால் வெகுண்டு எழுந்து தந்தையைத் திட்டி, முகத்தில் காறி உமிழ்ந்து விடுகிறார். அந்த அவமானம் சாமிப் புலவனைப் புரட்டி எடுத்துவிடுகிறது. அதைப் போக்கும் வகையில் ஆஸ்திரேலிய ஆளுநர் முன்னிலையில் அவர் பாடும் என்னுள்ளம் கோவில் அங்கே உண்டு தெய்வம் பாடல் சுகமான ராகம். மொழிபுரியாத ஆளுநருக்குப் பாடலைப் புரியவைத்ததில் நிறைவு கொண்டு, அவரது பரிசை அவருக்கே தந்து செல்லும்போது கலை மிடுக்கை வெளிப்படுத்துகிறார்.

சூறாவளியாக வரலட்சுமி சரத்குமார். மாமா மாமா என்று சன்னாசியையே சுற்றி சுற்றி வருகிறார். மாமனாருடன் அமர்ந்து ஒன்றாக மது அருந்துகிறார். தனது உடம்பைக் கேட்கும் பெரிய மனிதர்களைப் போட்டுப் புரட்டி எடுக்கிறார்.

தனக்கு அளிக்கப்பட்ட வேடத்தைப் பாலா எதிர்பார்த்த வகையில் நிறைவேற்றியிருக்கிறார். கருப்பையாவாக நடித்திருக்கும் ஆர்.கே.சுரேஷ், நடிகர் விக்ரமின் உடல்மொழியை நினைவுபடுத்துகிறார். அப்பாவியாகவும் குரூரமாகவும் வெளிப்படும் இரு வேறுபட்ட முகங்களிலும் நன்றாக வித்தியாசம் காட்டியிருக்கிறார். இளையராஜாவின் ஆயிரமாவது படம்! மெலடி பாடல்களும் பின்னணி இசையும் நயம்.

ஒளிப்பதிவு இயக்குநர் செழியன் காட்சிகளைத் துல்லியமாகவும் ரசனையோடும் படம்பிடித்திருக்கிறார். நாட்டுப் புறக் கலைகள் கவனிக்கப்படாமல்போகும் சோகத்தைச் சொல்லப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பை உருவாக்கும் கதை, திடீரெனத் தடம் மாறிச்செல்கிறது.

வழக்கமான பழிவாங்கும் கதையாக மாறிவிடுகிறது. கதையின் பலவீனம் திரைக்கதையைச் சுவாரசியம் அற்றதாக்குகிறது. தன்மேல் உயிராக இருக்கும் சூறாவளியைக் காதலித்தும் அவளைக் கைப்பிடிக்காமல் மற்றொருவருக்கு மணமுடித்து வைப்பதற்கான காரணம் அழுத்தமானதாக இல்லை. அந்தமானில் அம்போவாக நிற்கும் குழுவினர் எப்படித் தாயகம் வந்தார்கள்? சட்டென திரைக்கதை தாவிவிடுகிறது.

நாயகி மது அருந்துவது, அதிர்ச்சிகரமான வார்த்தைகளைப் பிரயோகிப்பது - இதெல்லாம் என்ன? மகாத்மா காந்தி சிலையின் முன்பு காசுக்காகக் குறைவான ஆடைகளுடன் ஆடுவது போன்ற அவலச் சுவைக் காட்சியின் காலம் எப்போதோ முடிந்துவிட்டது.

முதலிரவில் தன்னுடன் இருக்கும் நபர் தன் கணவன் அல்ல என்பது தெரியாமலா ஒரு பெண் இருப்பாள்? நாயகியைக் கல கக்காரியாகக் காட்டுவதில்இயக்குநருக்குஇருக்கும்முனைப்பு, அவளை நுண்ணுணர்வு கொண்டவளாகக் காட்டுவதில் இல்லை.

கதைக்கோ திரைக்கதைக்கோ தேவையற்ற, அளவுக்கு அதிகமான குரூரம், வன்முறை, குரோதம் போன்றவற்றை வெளிப்படுத்தித்தான் மனித நேயத்தை உணரவைக்க வேண்டுமா? பாலா தனது இந்தப் பாணியில் இருந்து வெளியே வந்தாக வேண்டும். பிதாமகன், நான் கடவுள், அவன் இவன் போன்ற அவரது பல படங்கள் இப்படி ஒரே பாணியிலேயே பயணிக்கின்றன. பழிவாங்கும் படலம்தான் கதை இந்தப் படமும் அப்படியான ஒரு பழிவாங்கும் கதைதான். புதிய பிளாவில் விடப்பட்ட பழைய கள்ளு. வேறு எதுவும் கிடையாது.



# அம்மாக்கள் அலுவலகம் போவது எவ்வளவு முக்கியம்?

லதாங்கி

என்னுடைய 2 வயது மகன் ஓடி வந்து காலைக் கட்டிக் கொண்டு கெஞ்சுகிறான்; அம்மா, ப்ளீஸ் ஆபீஸ் போகாதைங்கம்மா! வேலைக்குப் போகும் இளம் தாய்மார்களைக் கொண்ட வீடுகளில் இது ஒன்றும் அதிசயமான காட்சியில்லை என்றே கருதுகிறேன்.

சமீபத்தில் ஒரு சனிக்கிழமை குளித்துவிட்டு வீட்டுடையை அணிந்து கொண்டதைப் பார்த்ததும் அவன் உற்சாகமாகக் கூவினான், "இன்டைக்கு ஒப்பீஸ் இல்லை!" மேலும் மேலும் பெண்கள் என்னைப் போல வேலைக்குச் செல்வது அதிகரித்துக் கொண்டே வருகிறது. அப்படிச் செல்வது குடும்பச் செலவுக்குப் பணம் சம்பாதிப்பதற்காக மட்டுமல்ல, தலைமுறை தலைமுறையாகப் பெண்களுக்குக் கிடைக்காமல் இருந்த சமூக அங்கீகாரத்தைப் பெறுவதற்காகவும்தான்!

தினமும் அலுவலகத்துக்குப் புறப்படுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னால், என் மகன் விதவிதமான கோரிக்கைகளோடு என்னையே சுற்றிச்சுற்றி வருவான். என்னைக் கையில் தூக்கிக்கொள், எனக்காக ஒரு பஸ் படம் வரைந்து காட்டு, ஒரு பாட்டுப் பாடு என்று அவனுடைய கோரிக்கைகள் வெவ்வேறு விதமாக இருக்கும்.

என்னிடம் மட்டுமல்ல, என்னுடைய கணவரையும் இப்படியே முற்றுகையிட்டு கழுத்தைக் கட்டிக் கொள்வான். "ஒப்பீஸுக்குப் போக வேண்டாம் அப்பா!" என்று அவரிடமும் கெஞ்சுவான். இந்த நாடகமெல்லாம் முடிந்து நாங்கள் இருவரும் காரில் போய் அமர்ந்ததும் அவனைப் பற்றியே நினைப்போம். விக்கிக்கு மட்டும் எல்லாம் புரிகிற வயதாக இருந்தால், நாங்கள் வேலைக்குப் போகா விட்டால் உன்னுடைய எதிர்காலத்துக்குளப்படிச் செலவு செய்ய முடியும்? என்று கேட்க முடியும் என்று பேசி ஆறுதல் அடைவோம்.

ஆனால், ஆழ் மனதில் ஏதோ செய்யக் கூடாததைச் செய்வதைப் போல ஒரு குற்றவுணர்ச்சி இருந்து கொண்டே இருக்கிறது. என்னுடைய மகனுடன் வீட்டில் நான் அன்றாடம் செலவிடும் நேரத்தையும் என்னுடைய மாமியார் அல்லது அம்மா செலவிடும் நேரத்தையும்கணக்கிட்டுப் பார்ப்பேன். வார இறுதி நாள்களைக்கணக்கிட்டால்சற்றே திருப்திகிடைக்கும். வேலைக்குப் போகும் நாளில் குறைவாக இருந்தாலும், வார இறுதி நாள்களில் அதிக நேரத்தைச் செலவிடுவதால் பரவாயில்லை. அது போக, இரவு முழுக்க நாங்கள் அவனருகில்தான் படுத்துக் கொள்கிறோம். லேசாகச் சிணுங்கினால் கூட நானோ அவரோ எழுந்து சமாதானப்படுத்தித் தூங்கச் செய்கிறோம். குளியலறைக்கும் இருவரில் யாராவது ஒருவர் சென்று குளிக்க வைக்கிறோம்.

கடந்த ஆண்டு என்னுடைய சகோதரியின் 12 வய்து மகன் திடீரென அவளைப் பார்த்துக் கேட்டான், "நீங்க ஏன் ஒப்பீஸ் போறீங்க? என்னுடைய நண்பர்களின் ஒரேயொரு அம்மாகூட ஒப்பீஸ் போவதில்லையே?" என்று. அவர்கள் இருப்பது அரசு ஊழியர்கள் அதிகம் இருக்கும் பகுதி. அங்கே பெரும்பாலும் இல்லத்தரசிகள்தான். என் சகோதரி மட்டும்தான் வேலைக்குப் போகிறவள். அதனால்தான் அந்தக் கேள்வியை அவளுடைய மகன் கேட்டான்.

முதல்முறையாக நான் என்னையே கேட்டுக்கொண்டேன், வேலைக்குப் போயாக வேண்டியது எந்த அளவுக்கு முக்கியம்? இதற்கான பதில், என் கணவர் வேலைக்குப் போவது அவருக்கு எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்கு என்று என்னிடமிருந்தே பதில் வருகிறது.



# எளிமையே என்றும் இனிமை

எஸ்.சிவராஜா

எளிமை என்பது மனித வாழ்வில் என்றும் இனிமையானதே. மனிதன் ஓடி ஓடி உழைக்கின்றான். உண்கிறான், வாழ்கிறான், உறங்குகிறான் இறுதியில் வாழ்வு முடிவடைகின்றது. இதற்கிடையில் எத்தனையோ சம்பவங்கள் நடந்து முடிவடைந்து விடுகின்றன. எனவே ஒருவனுக்கு உழைப்பு எவ்வளவு முக்கியமோ இவைபோல் ஓய்வும் சேமிப்பும் எளிமை வாழ்வும் இன்றியமையாததாகும். இன்றைய கணினிவேக பணம் பண்ணும் உலகில் எளிமையாக வாழ்வோர் மிகச் சிலரே. அந்தவகையில் மிகவும் எளிமையாக வாழ்ந்த ஒரு நாட்டின் தலைவரைப்பற்றிப் பார்ப்போம்.

தென்னமெரிக்கக் கண்டத்திலுள்ள குட்டி நாடுதான் உருகுவே அல்லது உருகுவை என்று அழைக்கப்படும் நாடாகும். இந்த நாட்டைப் பற்றிப் பலருக்குத் தெரிந்துகொள்ள வாய்ப்புக் குறைவாக இருந்தாலும் உலக உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு இந்தநாட்டின் உதைபந்தாட்ட அணியைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. 2014ம்ஆண்டு இடம்பெற்ற உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தில் பெரும் பெரும் நாடுகளை கதிகலங்க வைத்த குட்டிநாடு. இப்போட்டியில் அபாரமாகவிளையாடி உலகத்தின் கவனத்தை ஈர்த்துக்கொண்டாலும் இறுதிப் போட்டிக்குச் செல்லாமை உலக ரசிகர்களுக்குச் சிறிது கவலையை ஏற்படுத்தியது என்றே கூறவேண்டும்.

இந்த உருகுவே நாடு தென்னமெரிக்காக் கண்டத்தில் பிறேசில் ஆர்ஜன்ரீனா நாடுகளையும் கடலையும் எல்லையாகக்கொண்ட நாடாகும். 1.76.215 சதுரகிலோமீற்றர் பரப்பளவுகொண்ட இந்த நாட்டின் மொழி ஸ்பானிஸ் மொழியாகும். பிறேசில் நாட்டிடமிருந்து 1825.08.25ஆம் திகதியன்று விடுதலைபெற்ற இந்த நாட்டின் சனத்தொகை3.4 மில்லியனாகும். 47 வீதமானோர் கத்தோலிக்க மதத்தினராவர். இந்த நாட்டின் முன்னாள் தலைவரைப் பற்றியதுதான் இந்த எளிமையின் விடயமாகும்.

இந்தநாட்டின் தலைவராக கடந்த பத்து வருடங்களாக இருந்து அண்மையில் ஓய்வு பெற்றவர்தான் 79 வயது நிரம்பிய முயிகா (Mujica) இவர் தனது ஆட்சிக் காலத்திலும் இன்றும் குடிசையில்தான் ஆடம்பரமில்லாமல் எளிமையாக வாழ்ந்து வருகின்றார். தனது குடிசை வீட்டில் தனது மனைவி மற்றும் வீட்டுப் பிராணிகளுடன் வாழ்ந்து வருகின்றார். (மேலேயுள்ள படத்தில் அவரின் குடிசை வீடு காணப்படுகின்றது.) இவை மட்டுமல்ல 1985ஆம் ஆண்டு வாங்கிய காரையே இன்றும் பாவிக்கின்றார். அதாவது நாடாளுமன்றத்துக்குப் போவதாயினும்மற்றும் தனிப்பட்டபிரயாணங்களாயினும் இந்த வண்டியையே இவ்வளவு காலமும் பாவித்து வருகின்றார் என்னும் போது ஆச்சரியப்படாமல் இருக்க முடியுமா!..





ஆம்.. நாட்டின் தலைவர், மந்திரிமாரின் தலைவர். ஆடம்பரமாக மாடாமாளிகையில் வாழ்ந்திருக்கலாம். பாதுகாப்புப் படைகள் புடைசூழ, காவலாளிகள், ஏவலாளிகள், பணிப் பெண்கள் எனச்சேவை செய்ய வீட்டில் சுகபோகங்களுடன் வாழலாம் இவர், அனைத்தையும் வேண்டாம் என்று ஒதுக்கி சாதாரண குடிமகன்போல் மக்களோடு மக்களாக வாழ்ந்து வருகின்றார். கடைகளுக்குச் செல்வதும்தினமும்தினசரிப் பத்திரிகைகள் வாங்கிப் படிப்பதும், நடைபயிலலும், வீட்டுத் தோட்டத்தில்வேலைசெய்வதும் இந்த 79 வயதான நாட்டுத் தலைவரின் அன்றாட வேலைகளாகும்.

இவற்றைவிட மந்திரிசபை நாடாளுமன்றக் கூட்டங்களில் ஒழுங்காகக் கலந்துகொண்டு அரச கடமைகளைச் செய்து வந்த இவரையே உலகத்தின் எளிமையான நாட்டுத் தலைவர் என உலகின் பல ஊடகங்கள் வர்ணித்திருப்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். பாராட்டுக்குரிய இவரைப் போன்ற தலைவர்களை உலகில் இன்றுஎங்குகாண்பது. இவரைப் போற்றாமல் இருக்கமுடியுமா?

இன்றைய நாட்டுத்தலைவர்களைப் பாருங்கள் சர்வாதிகாரம், ஆட்சி அதிகாரம் சகல சௌபாக்கியம், ஆடம்பரம், அரச பணத்தில் வாழ்வு, சந்ததி சந்ததியாக பொது மக்களின் பணத்தை கொள்ளையடிப்பதும் வரிப் பணத்தில் வாழ்வதும் சர்வசாதாரணமாகி விட்டது. இன்னும்பல தலைவர்கள் அரச படைகளின் பலத்துடன் ஏகபோக உரிமைகளோடு பல பெண்களை அடிமைகளாக்கி வாழ்கிறார்கள். ஆனால் இந்த உருகுவே நாட்டின் தலைவர் எந்தவித பாதுகாப்பும் இல்லாமல் சாதாரண பிரசைகளைப் போல் மக்களோடு மக்களாக இணைந்து வாழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது இவர் தான் மக் களின் உண்மையான தலைவன் எனப் போற்றலாம்.

ஆகவே நாம் எங்கு எப்படி ஆடம்பரமாக சகல வசதிகளுடன் வாழ்ந்தாலும், ஆடம் பரத்தில் மூழ்கி முத்தெடுத்தாலும் எப்போதும் எளிமையைக் கடைப்பிடித்து வாழவேண்டும். சக மனிதருக்கு உதவிபுரிந்து வாழ வேண்டும். நீதியுடனும் நேர்மையுடனும் உழைப்புடனும் மக்களோடு மக்களாக வாழ்வோமானால் எங்கள் வாழ்வு முடிந்தாலும் எங்கள் வாழ்வுஎன்றும்வாழ்ந்து கொண்டு தான் இருக்கும். இந்த மனிதரின் வாழ்க்கைப் பாடத்தையும் பின்பற்றி வாழ்வோம்.. எளிமையை எப்போதும் கடைப்பிடித்து வாழ்வோமாக...!

## சொற்சிலம்பம் - போட்டி இல: 403

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | 6 | 7 |
| 8 | | | 9 | | | | |
| | | | 10 | | | | |
| 11 | | 12 | | | 13 | | 14 |
| 15 | | | | 16 | | | |
| 17 | | | 18 | | | | |
| | | 19 | | | 20 | | |
| | 21 | | | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................................
பூரணமான தபால் விலாசம்: ........................................................
........................................................
கையொப்பம்:........................................................

### இடமிருந்து வலம்

1. தண்டிகை
4. ஒரு சரக்கு
8. பதில் உதவி
10. வாயினால் கவ்வு
11. சான்று
13. தகைமை
15. செதுக்கும் கலையில் வல்லவர்.
16. தன் சபதம் நிறைவேறும் வரை
17. மேல் நாட்டுக் குடி வகை ஒன்று
18. நிலைவரம் பற்றிய தன்மை
19. இல்லாள்
20 . பல அல்ல
21. அரைவாசி
22. சடப்பொருள்களின் நிலைகளுள் ஒன்று

### மேலிருந்து கீழ்

1. புறாவுக்காகத் தனது சதையை அறுத்துக்கொடுத்த சக்கரவர்த்தி.
2. காம நோய்
3. சிறைப்பிடிக்கப்பட்டவன்
4. தேசிய விளையாட்டுக்களில் ஒன்று
5. தோழன்
6. கை கூப்பு.
7. இதுவும் ஓர் ஆயுதம்
9. மிக நீண்ட கால அளவீடு
11. வரவேற்று உதவுவது
12. மன்மதன் மனம் கவர்ந்தவள்
13. ஒன்றை வழிப்படுத்தும் பொறுப்பு
14. வேல்
16. தலையில் எழுதப்பட்டது
18. மறக்காமல் ஞாபகம் கொள்
19. நிலா
20. சைவநாமம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 401 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1)விவாதம் (4)அமுது (7)வேட்டி (8) கழகம் (9) கடுப்பு (11) கம்பி (12)புத்தன் (15)திண் (16) நகை (17) கத்திரி (19) குடி (20)முதிரை (21) களப்பு (23) குனி (24) கரும்புலி

### மேலிருந்து கீழ்

(1)விவேகம் (2)வாட்டு (3)தடிப்பு (4)அழகன் (5)முகம் (6)தும்பிக்கை (10) புத்திரி (13)தண் (14) பத்தினி (16) நடிப்பு (17)கமுகு ((18) திரை (19) குளம் (21) கரு (22)புலி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 401 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
ச.ஜசிந்தன்,
இலக்கணாவத்தை,
உடுப்பிட்டி

**2 ஆம் பரிசு**
கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை

**3 ஆம் பரிசு**
வி.சுகந்தி,
1 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

**4 ஆம் பரிசு**
அஞ்ஜே ஆனல்ட்
இல 33 5/3 அருத்துஷாலேன்,
கொழும்பு -6

**5 ஆம் பரிசு**
நா.இராசசிங்கம்,
இல. 90/1 முதலாம் ஒழுங்கை,
உக்கிளாங்குளம் வவுனியா.

**பாராட்டுப் பெறுவோர்**

ஏ.பெஞ்சமின்,
இல.25 வேளாங்கண்ணி வீதி,
சாவல்கட்டு, மன்னார்.

ச.யுவவதனி
பொன்னகர், நட்டாங்கண்டல்


வே.இராசநாயகம்,
சோறன்பற்று,
பளை.

சொற்சிலம்பம் போட்டி
இல.403
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(27.01.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.403இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 31.01.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 401 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**



# யார்க்கெடுத்துரைப்பது...!

இரா. இராஜேஸ்வரன்

அறிவிற்காககல்வியா? அல்லது வேலைக்காக கல்வியா ? என்பதை அதிகம் யோசிக்க வைக்கின்ற காலமாக இன்றைய அறிவுலகம் மாறியிருக்கிறது. 'நாலு விடயம் தெரிந்தவன் எங்கும் போய் எதையும் சாதித்துக்கொள்வான், அவர் ஒரு விடயம் தெரிந்த விண்ணர் எதையும் வெட்டி ஆடுவார் என்ற சொல்லடைகள் முன்பு புழக்கத்தில் இருந்தன. இன்று நிலைமை முற்றிலும் மாறியிருக்கிறது. அறிவுக்காகப் படிப்பதன் பின்னணியில் ஒரு பூரணமான, நின்மதியான, சந்தோசமான வாழ்க்கை இருக்கிறது என்பதை மறந்துவிட்டோம். படிப்பிற்காகவும், சாதனை முயற்சிகளுக்காகவும், நேர்மை, பணிவு, துணிவு என்பவற்றுக்காகவும் கொடுக்கப்பட்ட கௌரவத்தையும் மரியாதையையும் இழந்துவிட்டோம். தற்காலத்தில் பணத்துக்காகமட்டுமேவாழ்க்கை என்கின்றநுகர்வு முறைமைக்குள் வீழ்ந்துள்ளோம்.

இதனால் படித்தவர்கள், பெரியவர்கள், அனுபவசாலிகள் போன்றோர் குறைத்து மதிப்பிடப்படுகிறார்கள். ஆளுமையோ நற்குணங்களோ இல்லாதஆனால் குறித்தவொரு பரீட்சையில் மாத்திரம் சித்தியடைந்து உத்தியோகம் பார்க்கின்ற மனிதர்கள், சமூகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்தும் பார்க்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சமூக நலன் பற்றிய எந்தவிதமான அக்கறையுமின்றி தலைமைப் பொறுப்புகளையும் பதவிகளையும் எடுத்துக்கொண்டு, எப்படி சமூக பொறுப்புணர்வோடும்நட்புணர்வோடும் மக்களை அணுக வேண்டும் என்பதே தெரியாமல் தங்களையும் எதிர்கால தலைமுறையையும் குழப்புகிறார்கள்.

மதிப்பான எண்ணங்களை பெருக்குவதைத் தவிர்த்து மதிப்பெண்களை பெற்றுக்கொள்வதான கல்விமுறையொன்றையே நாம் பின்பற்றுகின்றோம். அதற்காக இந்தக் கல்வித்திட்டத்தை உடனடியாக தூக்கிப்போட்டுவிடவேண்டும் என்று சொல்லவில்லை. மாறாக இதே கல்வித்திட்டம் இருந்த கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் ஆசிரியர்கள் பாடத்திட்டம் தவிர்ந்த பல விடயங்களை மாணவர்களுக்குப்போதித்தார்கள். பொறுப்புணர்வு, நல்லொழுக்கம், மதிப்பளித்தல், நேர்மை, தலைமையேற்றல் என்று சொல்லிக்கொண்டே போகலாம். இன்று தேர்வுகளுக்கு தயார்ப்படுத்தப்படுகின்ற இயந்திரங்களைப் போலவேமாணவர்கள் வார்க்கப்படுகிறார்கள்.

இந்த நிலைமைக்கு ஆசிரியர்கள்மட்டுமேகாரணமல்ல. பெற்றோர்கள், சமூகம், பாடசாலைச் சூழல் என்பனவும் பெருங்காரணங்களாகும். பெற்றோர்கள் நினைப்பது, எப்படியாவது தனது பிள்ளை எந்தத்துறையிலும் முதலிடத்தைப் பெற்றுவிடவேண்டுமென்பது மட்டுமே. அதாவது ஓட்டப்பந்தயமானாலும் சரி, பாட்டு, பேச்சுப்போட்டியானாலும் சரி, முதலிடம் பெற வேண்டும் அவ்வளவுதான். முதலாம் இடம் என்பது யாராவது ஒருவருக்குத் தானே கிடைக்கமுடியும். அப்படியானால் ஏனையவர்கள் என்ன செய்வது? சரி, குறித்த ஒரு துறையில் முதலாமிடம் பெறுபவர்களெல்லாம் மகா கெட்டிக்காரர்கள் என்றும், ஏனையவர்கள் மந்தமானவர்கள் என்றும் முடிவு செய்துகொள்ள முடியுமா என்ன? இங்கே பங்குபற்றுதல் தானே முக்கியமானது. பங்குபற்றுதல் பெரும் அனுபவங்களை தரவல்லது, வாழ்தலைக்

> **முன்பெல்லாம் ஆசிரியர்கள் பாடத்திட்டம் தவிர்ந்த பல விடயங்களைமாணவர்களுக்குப்போதித்தார்கள். பொறுப்புணர்வு, நல்லொழுக்கம், மதிப்பளித்தல், நேர்மை, தலைமயேற்றல் என்று சொல்லிக்கொண்டே போகலாம். இன்று தேர்வுகளுக்கு தயார்ப்படுத்தப்படுகின்ற இயந்திரங்களைப் போலவே மாணவர்கள் வார்க்கப்படுகிறார்கள்.**

கற்றுத்தருவது. இந்தநிலைமைதான்கற்பித்தலிலும் தொடர்கிறது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்அதிகமதிப்பெண்கள் எடுப்பதற்காக பெற்றோரும் ஆசிரியர்களும் படும்பாடு பெரும்பாடு. புலமைபரிசில்பரீட்சை கொண்டு வரப்பட்டதன் நோக்கமே, வறியகுடும்பங்களைச் சேர்ந்த புலமையான மாணவர்களுக்கு ஓர் ஊக்கத் தொகையை வழங்குவதற்குத்தான் அது இன்று அரச உத்தி யோகத்தர்களின் பிள்ளைகளாலும், பணக்கார வீட்டுப்பிள்ளைகளாலும் தட்டிப் பறிக்கப்படுகிறது.

இதில் துரதிர்ஷ்டம் என்னவென்றால், புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கே பெரிய பாடசாலைகள் என்று சொல்லப்படுகின்ற பாடசாலைகளில் நுழைவுத்தகுதிகள் கிடைக்கின்றன. ஆக, புலமைப் பரீட்சையில் சித்தியடைவதற்காக கடுமையாக உழைத்து கிராமப்புறத்துப் பாடசாலைகளில் கற்று, சித்தியடைந்ததும் அதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி நகர்ப்புற பாடசாலைகளுக்கு சென்றுவிட்டால் கிராமப் பாடசாலைகள் எப்போது முன்னிலை பெறுவது.

அடுத்துக.பொ.த உயர்தரம் வரை படித்து சிலர் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுவார்கள். பலர் வேலைத்தளங்களை நோக்கிப்படையெடுபார்கள். அப்போதுதான் இந்தத் தனியார்துறை நிறுவனங்கள், அந்தச் சான்றுதல் வைத்திருக்கிறீர்களா? இந்தச் சான்றிதல் வைத்திருக்கிறீர்களா? என்று நச்சரிப்பார்கள். இந்த மாணவர்களும் வேறுவழி இல்லாமல், தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு செல்வார்கள். அங்கே முறையான பயிற்சிகளோ அனுபவங்களோகிடைக்காவிட்டாலும், சிவனே என்று இருந்து, குறித்த நிறுவனங்களின் வரவுப்புத்தகத்தையும் நிறைத்து பெருந்தொகைப் பணத்தையும் இறைத்து சான்றிதழ் பெற்றுக்கொள்வார்கள்.

சான்றிதழ் பெற்ற துறை சம்பந்தமான எந்த ஆழமான அறிவோ அனுபவமோ இன்றியே சான்றிதழ்களைத் தாங்கி நேர்முகத்தேர்வுகளுக்குப்போகிறார்கள். திறமையை எண்பிப்பதற்கு சான்றிதழா? அல்லது திறமையே சான்றிதழ்தானா? என்று யோசிக்கவேண்டியிருக்கிறது.

இது ஒரு நவயுக வாடிக்கையாகிவிட்டதால், சில பெற்றோர்களும் மாணவர்களும்கூட மேற் போந்த கற்கை நிலையங்களுக்குச் சென்று கற்கை நெறிகளுக் குரிய பணத்தினை முழுமையாகச் செலுத்தி, கற்காமலேயே சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். யார் மீது குற்றம் சொல்வது?

தொழிலையும் பணத்தையும் தூரத்திலே தள்ளி வைத்துவிட்டு, முதலில்வாழ்வதற்காகக் கற்றுக்கொள்ளப் பழகவேண்டும். 'கற்றதனால் ஆய பயன் என்ன' என்றால், கற்றுக்கொண்டதைத்தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? கற்றுக்கொண்டது தானேபெரிய பயன்.



அசுரவேக உலகவோட்டத்தில் ஒருகணம் நின்று நிதானித்து வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கு யாருக்குமே நேரம் கிடையாது. இந்த வேகப்பயணம் எங்கேயாவது முட்டிக்கொண்டு நின்றுவிடும் போதுதான், நாம்இழந்தவிட்ட இள்மை, வாழ்க்கை எல்லாவற்றையும் புரிந்துகொள்வோம். அப்போது வயதும் இளமையும் காணாமல்போயிருக்கும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை முறையாக வளர்த்து ஆசிரியர்களின் கைககளில் கொடுக்கவேண்டும். ஆசிரியர்கள்தான் மாணவர்களை வடிவமைத்து மனிதர்களாக்கும் சிற்பிகளாக இருக்க வேண்டும்.

ஆசிரியத்துவத்தின் உன்னதத்தை உணர்ந்தவர்களாக, தேச உருவாக்கத்தின் சிருஸ்டிகளாக ஆசிரியர்கள் திகழ வேண்டும்.

# இந்த வாரம் 17.01.2016 முதல் 23.01.2016 வரை

# உங்களுக்கு எப்படி?

## மேடம்

சுக்கிரன், சந்திரன், கேது நன்மை தருவர். சிறு செயலில் கூட, அதிக நன்மை உண்டாகும். உறவினர்களால் உதவி கிடைக்கும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும். பூர்வீகச் சொத்தைக் கவனமுடன் பாதுகாப்பது நல்லது. இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடத்துவீர்கள். வழக்கு, விவகாரத்தில் தீர்வு பெற தாமதமாகலாம். மனைவியின் பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். பணியாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்பும், பணவரவும் கூடும். பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர். மாணவர்கள் சிறப்பாக படிப்பர். ஐயப்பனை வழிபட்டால் வெற்றியளிக்கும்.

## இடபம்

குரு, செவ்வாய், புதனால் நன்மை உண்டாகும். வாழ்வில் இனிய அனுபவம் பெறுவீர்கள். பேச்சும், செயலிலும் மகிழ்ச்சி வெளிப்படும். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை கூடும். வாகனப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். புத்திரர்கள் நற்செயலில் ஈடுபட்டு பாராட்டுப் பெறுவர். வழக்கு விவகாரத்தில் சமரசத் தீர்வு கிடைக்கும். தொழிலில் விற்பனை சீரான அளவில் இருக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து அதிக தேர்ச்சி பெறுவர். கோமாதா வழிபாடு, சகல வளத்தையும் தரும்.

## மிதுனம்

சனீஸ்வரர், ராகு, சந்திரனால் நன்மை கிடைக்கும். உங்களைப் புகழ்ந்து பேசுபவரிடம் நிதானித்து பழகவும். வீட்டுக்கு உரிய பாதுகாப்பும், வாகனத்தில் மித வேகமும் பின்பற்றவும். பிள்ளைகள் கவனக் குறைவாகச் செயற்பட வாய்ப்புண்டு. வீட்டுச் செலவுகளில் சிக்கனம் தேவை. உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் விற்பனை அதிகரிப்பதால் இலாபம் உயரும். பணியாளர்கள் தொழில்நுட்ப அறிவில் மேம்படுவர். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் வெளியிடங்களில் சுற்றுவதைக் குறைக்கவும். அம்பிகை வழிபாடு சகல நன்மையைத் தரும்.

## கடகம்

சுக்கிரன், சூரியன், புதன் அதிக நன்மையைத் தருவார்கள். நற் செயல்களில் ஈடுபட்டு நற்பெயரும், புகழும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் கூடும். பணவரவுக்கான புதிய வாய்ப்பைப் பயன்படுத்துவீர்கள். வாகனப் பயணம் இனிய அனுபவம் தரும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கப் பிடிவாதம் செய்வர். கடன் தொந்தரவு குறையும். மனைவி வழி சார்ந்த உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சிக்கு, புதிய உத்திகளைக் கையாள்வீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை தவறாமல் பின்பற்றவும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். சனீஸ்வரனை வழிபட்டால் சங்கடம் தீர்க்கும்.

## சிங்கம்

செவ்வாய், குரு, சுக்கிரன் அதிக நன்மை தருவர். உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். முருகப் பெருமானின் நல்லருள் துணை நிற்கும். முக்கியமான பணிகள் சிறப்பாக நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். தம்பி, தங்கைகளின் சுப மங்கள பேச்சு சுமுகமாகும். புத்திரர்கள், உங்கள் சொல்லை மதித்து நடப்பர். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டுவர். வீட்டில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் கூடும். உடல் நிலை சீராக இருக்கும். மனைவி பாசத்துடன் நடந்து கொள்வார். ஆதாய பணவரவு சேமிப்பாகும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும். பெண்கள் நகை, பொருள் வாங்க அனுகூலம் உண்டு. மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் பின்பற்ற வேண்டும். பெருமாள் வழிபாடு, செல்வ வளத்தை தரும்.

## கன்னி

சுக்கிரன், கேது, புதன், சனீஸ்வரர் அதிக நன்மை தருவர். கேலி செய்தவர்கள் வியந்திடும் வகையில் செயற்படுவீர்கள். பேச்சில் நிதானம் ஏற்படும். அறிமுகமில்லாதவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். பிள்ளைகள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். தாய் வழி சார்ந்த உறவினர்களின் உதவி கிடைக்கும். புதிய வாடிக்கையாளர்கள் ஆதரவினால் தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்கள் திறமையுடன் பணிபுரிந்து வெகுமதி பெறுவர். பெண்களுக்கு உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர். விநாயகர் வழிபாடு, வினை தீர்க்கும்.

## துலாம்

ராகு, சுக்கிரன், சந்திரனால் நன்மை ஏற்படும். பழகுபவர்களின் மனம் அறிந்து பேசுவீர்கள். குழப்பமான சூழ்நிலை விலகிப் புதிய வளர்ச்சிப்பாதை உருவாகும். தம்பி, தங்கைகள் உதவுவர். பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள் உங்கள் கருத்தை ஏற்க மறுக்கலாம், பொறுமை தேவை. உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். மனைவி கருத்து இணக்கத்துடன் நடந்து கொள்வார். அதிக உழைப்பினால், தொழிலில் உற்பத்தி, விற்பனை கூடும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில், பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர். சிவன் வழிபாட்டால், சகல வளமும் தரும்.

## விருச்சிகம்

குரு, சுக்கிரன் சிறப்பான பயன் தருவர். பேச்சு வசீகரமாக அமைந்து நற்பெயர் பெற்றுத் தரும். சிரமமான செயல்களில் வியத்தகு நன்மை உண்டாகும். தம்பி, தங்கைகளுக்கு பண உதவி தருவீர்கள். வாகனத்தில் பராமரிப்பு மேற்கொள்வதால் பயணங்கள் எளிதாகும். புத்திரர்கள் பொது அறிவு, வேலைத் திறனில் மேம்படுவர். உடல்நிலையில் கவனம் வேண்டும். குடும்பத்தேவை ஓரளவு பூர்த்தியாகும். மனைவி வழி சார்ந்த உறவினர்களால் நன்மை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் இலக்கை அடைய சற்று முயற்சிக்க வேண்டி வரும். பெண்கள், குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர். முருகன் வழிபாடு, தைரியத்தைத் தரும்.

## தனுசு

கேது, சந்திரன், சுக்கிரன் செவ்வாய் அதிக நன்மை தருவர். மனம் உற்சாகமாக இருக்கும். இஷ்டதெய்வ அருளால், முயற்சிகள் நிறைவேறும். குடும்பத்தில் ஒற்றுமை வளரும். பயணங்கள் குறையும். புத்திரர்கள் திறமை மிகுந்த செயலால் பாராட்டுப் பெறுவர். பூர்வீக சொத்தில், வளர்ச்சியும் பணவரவும் கூடும். சுற்றுலா சென்றுவர திட்டமிடுவீர்கள். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் வேலைப் பளுவால் சிரமப்படலாம். பெண்கள், உறவினர்களை உபசரித்து நற்பெயர் பெறுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர். வைரவர் வழிபாடு, சங்கடம் தீர்க்கும்.

## மகரம்

குரு, சனி, சுக்கிரனால் நன்மை உண்டாகும். செயல்கள், குறித்த காலத்தில் நிறைவேறும். உறவினர்கள், நண்பர்களுக்காக பணப்பொறுப்பை ஏற்க வேண்டாம். முக்கிய பிரச்சினைகளில் இருந்து விலகுவதால் சிலர் குறை சொல்வர். புத்திரர்கள் இணக்கமாக நடந்து கொள்வர். உடல்நிலையைப் பாதுகாக்க, வேலையைக் குறைத்து, ஓய்வை அதிகரிக்கவும். மனைவி குடும்ப நலனுக்கான பணிகளை மேற்கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து, ஆதாய பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் மன நிறைவுடன் வேலைகளை விரைந்து முடிப்பர். பெண்கள் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் பெற்றோர், ஆசிரியரின் வழிகாட்டுதல்படி செயற்படுவர். தட்சிணாமூர்த்தி வழிபாடு மங்கல வாழ்வைத் தரும்.

## கும்பம்

சூரியன், புதன், சந்திரன் நன்மை வழங்குவர். ராசியில் உள்ள கேது, மனதில் ஆன்மிக சிந்தனை தருவார். உறவினர்களைக் குறை சொல்ல வேண்டாம். குடும்பத் தேவைக்கான பணத்துக்குச் சற்று போராட வேண்டி வரும். வாகன பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்களின் பாசம், மனதை நெகிழ வைக்கும். பயணங்களை பயன் அறிந்து மேற்கொள்ளலாம். மனைவியின் செயற்பாடு குழப்பத்தை உருவாக்கும். கடின உழைப்பால் தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனையை சரி செய்யலாம். பணியாளர்களுக்கு சோம்பல் குணம் மேலோங்கும். பெண்கள் சேமிப்புப் பணத்தை செலவுக்கு எடுக்க வேண்டி வரும். மாணவர்கள் நண்பரின் உதவியால் படிப்பில் மேம்படுவர். துர்க்கை வழிபாடு, சிரமத்தைப் போக்கும்.

## மீனம்

பெரும்பான்மை கிரகங்கள் நற்பயன்தரும். முயற்சி எளிதாக நிறைவேறும். பணிகள் வேகமாக முடியும். அக்கம் பக்கத்தவர் உதவி கிடைக்கும். குடும்பத்தில், மங்கல நிகழ்வு ஏற்படும். பயணங்கள், இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் ஆடம்பரச் செயல்களில் ஆர்வம் கொள்வர். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி, உங்கள் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பார். தொழில், வியாபாரம் செழித்து, சேமிப்புக் கூடும். பணியாளர்கள் சொந்த தொழில் தொடங்க அனுகூலம் உண்டு. பெண்களின் நீண்டநாள் பிரார்த்தனை நிறைவேறும். மாணவர்கள் நன்றாகப் படித்துப் பாராட்டுப் பெறுவர். அம்மன் வழிபாடு, செல்வ வளம் தரும்.

சந்திரசேகர ஆசாத்

# புதிய அரசமைப்பும் நியாயமான எதிர்பார்ப்பும்

ஒரு நாட்டின் அரசியல், சமூக, பாதுகாப்பு எனச் சகல அம்சங்கள் தொடர்பான கொள்கைகள் நடைமுறைகள் என்பன அரசியலமைப்புக்கு உட்பட்டே தீர்மானிக்கப்படுகின்றன. நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்கள்கூட அரசமைப்புச்சட்டத்திலிருந்து விலகிச் செல்லுமானால் அவற்றை ரத்துச் செய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றுக்கு உண்டு. அந்தவகையில் ஏற்கனவே இருந்த அரசமைப்புச் சட்டத்துக்குப் பதிலாக ஒரு புதிய அரசமைப்பை உருவாக்கும்போது இது தொடர்பாகச் சகல தரப்பினரும் தீவிரமான அக்கறை செலுத்துவது தவிர்க்க முடியாத தேவையாகும்.

அந்த வகையில் கடந்த 9 ஆம் திகதி புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் நோக்குடன் நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாகச் செயற்படும் பிரேரணை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட நிலையில் பல சர்ச்சைகளும், வாதப்பிரதி வாதங்களும், ஆலோசனைகளும் ஆரம்பித்துள்ள அதே வேளையில் பல்வேறு சந்திப்புக்களும் இடம்பெற்று வருகின்றன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாமற் செய்தல், விகிதாசாரத் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வருதல், இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வமான, நிலையான தீர்வை ஏற்படுத்தல் என்பன புதிய அரசமைப்பின் பிரதான பேசுபொருள்களாக இருந்து வருகின்றன.

தமிழ் மக்களைப் பொறுத்த வரை புதிய அரசமைப்பில் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு எட்டப்படும் வகையிலான ஓர் அடித்தளம் அமைக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பே பிரதானமானதாக உள்ளது. அதிலும் இன்றைய அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே ஒரு நல்லுறவு நிலவி வரும் நிலையில் அது சாத்தியமாகக் கூடும் என்ற நம்பிக்கையும் சிலரிடம் உண்டு.

கடந்த காலங்களில் 1972, 1978 என இரு காலப் பகுதிகளிலும் இரு வேறு அரசமைப்புக்கள் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட போதிலும் அவற்றுக்கு தமிழர் தரப்பின் பங்களிப்புக் கிட்டவில்லை. இரு அரசமைப்புக்களுமே இனப்பிரச்சினை தொடர்பான தீர்வை எட்டும் முயற்சிகளுக்கு இடமளிக்காது. அதை மேலும் சிக்கலாக்கும் விதிகளையே கொண்டிருந்தன. அதன் காரணமாக தமிழ் மக்கள் முற்றாகவே அவற்றை நிராகரிக்கின்றனர்.

1972 ஆம் ஆண்டில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையிலான அரசால் கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்பில் சிங்களத்துக்கும் பௌத்த மதத்துக்கும் முதன்மை நிலை வழங்கியதால் இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் அரசமைப்பு ரீதியாக இரண்டாம் தரப் பிரசைகளாக்கப் பட்டனர்.

அந்த அரசமைப்பு சில முற்போக்கான அம்சங்களைக் கொண்டிருந்தன என்பது உண்மை. அதன் மூலம் இலங்கை ஓர் இறைமையுள்ள குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் நடைமுறையில் இருந்த சோல்பரி அரசலமைப்பின்படி நாடாளுமன்றத்தில் எந்த ஒரு சட்டம் நிறைவேற்றினாலும் செனற் சபை அங்கீகரிக்க வேண்டும். செனற் சபையில் பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியான மகாதேசாதிபதியினால் அரைவாசிப்பேரும், மிகுதி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தாலும் நியமிக்கப்படுவார்கள். 1972 ஆம் ஆண்டின் யாப்பு மூலம் செனற் சபை ஒழிக்கப்பட்டது. முன்பு ஒரு சட்டம் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டு செனற் சபையும் ஏற்றுக்கொண்ட பின்பும் மகாதேசாதிபதி கையெழுத்திடாவிட்டால் அது செல்லுபடியாகாது. நீதித்துறைகூட பிரிட்டனின் மேலாதிக்கத்திலேயே இருந்தது. இலங்கையின் நீதிமன்றத் தீர்ப்பை லண்டனிலுள்ள பிரிவு கவுன்சில் மாற்றவோ, ரத்துச் செய்யவோ அதிகாரத்தைக் கொண்டிருந்தது. அந்த முறை முற்றாகவே நீக்கப்பட்டு நீதித்துறையில் முழு அதிகாரமும் உயர் நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

1972 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு இலங்கையில் இறைமையையும் சுய ஆதிக்கத்தையும் உறுதி செய்த அதே வேளையில், சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்ட 29 விதி மூலமான பாதுகாப்பு இல்லாமல் செய்யப்பட்டது. அது திருத்தங்கள் மூலம் மாற்றப்பட முடியாததாக வலுப்பெற்று இருந்த போதிலும், புதிய யாப்பினால் அது நிராகரிக்கப்பட்டு விட்டது. அதே சோல்பரி யாப்பு நடைமுறையில் இருந்த போது தான் மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டமை, தனிச் சிங்களச் சட்டம் என்பன நிறைவேற்றப்பட்ட போதும் 29 ஆவது விதி சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு என்றே கருதப்பட்டது.

> தமிழ் மக்களை பொறுத்த வரை புதிய அரசமைப்பில் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு எட்டப்படும் வகையிலான ஓர் அடித்தளம் அமைக் கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பே பிரதானமானதாக உள்ளது.

எனவே 1972 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பை எதிர்த்து தந்தை செல்வநாயகம் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்தார். பின்பு 1974 ஆம் ஆண்டு இடம்பெற்ற காங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தலில் அரசியல் அமைப்பை நிராகரித்தமைக்கு மக்களின் ஆணை கோரிப் போட்டியிட்டார். தமிழ் மக்கள் அமோகமான வாக்குகளால் அவரை வெல்ல வைத்து ஆணை வழங்கினர். அந்த வகையில் 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு முற்றாகவே தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டு முன்னைய யாப்பு தூக்கி எறியப்பட்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் தலைமையிலான அரசால் புதிய அரசியல் யாப்பு கொண்டு வரப்பட்டது. இதில்கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதற்கான எவ்வித வழி வகைகளும் முன்வைக்கப்படவில்லை.

மேலும் காலத்துக்குக் காலம் அரசியலமைப்பில் புதிய திருத்தங்கள் செய்யப்பட்டும், புதிய சட்டங்களும் உபவிதிகளும் இயற்றப்பட்டும், தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகள் வலுப்படுத்தப்பட்டன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மூலம் தனிமனித சர்வாதிகாரம் வலுப்பெறும் சூழல் நிலவியது.

1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித் தமிழீழத்துக்கு ஆணைகோரிப் போட்டியிட்டது. தமிழ் மக்கள் 95 வீதத்துக்கும் அதிகமான வாக்கு களை வழங்கி தனிநாட்டுக் கோரிக் கைக்கு ஆணை வழங்கினர். தமிழ் மக்கள் ஏகமனதாக வழங்கிய இந்த ஆணை எவ்வித விவாதத்துக்கோ பரிசீலனைக்கோ உட்படுத்தப்படாத வகையில் நிராகரிக்கப்பட்டது. அது மட்டுமன்றி அந்தக் கோரிக்கையை சட்டவிரோதமாக்கும் வகையில் அரசியலமைப்பில் 157 ஆவது சரத்து வரையப்பட்டது.

அதாவது 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பின் 157 ஆவது சரத்தின் 'ஏ'பிரிவின்படி எந்த ஓர் அரசியல் கட்சியோ, அமைப்போ தனியான அரசொன்றை நிறுவ முயற்சித்தால் அல்லது அதே நோக்கத்துடன் செயற்பட்டால் அந்தக் கட்சி தனி அரசை உருவாக்கும் நோக்கத்துடன் செயற்பட்டது எனப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் எனவும், அத்துடன் அந்தக் கட்சியின் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

எனவே அந்த அரசமைப்பு தமிழர் தரப்பால் முழுமையாகவே நிராகரிக்கப்பட்டது. அப்படியான நிலையிலும்கூட மேலும் அரசமைப்புக்கு கொண்டு வந்த 6 ஆவது திருத்தத்தின் 5 ஆவது பிரிவின் அடிப்படையில் பிரிவினைவாதக் கட்சி எனப் பிரகடனப்படுத்தப்படும் கட்சி ஒன்றின் தலைவர்களின் நாடாளுமன்றப் பதவியைப் பறிக்க முடியுமெனவும் அதன் தலைவர்களின் அரசியல் உரிமையை 7 வருடங்களுக்கு இல்லாமல் செய்ய முடியும் எனவும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

எனினும் இந்திய அரசின் அழுத்தத்தின் பேரிலும், தீவிரமடைந்து வந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வீச்சை மழுங்கடிக்கும் வகையிலும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்றுவரை அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாதது மட்டுமன்றி அதன் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பின்வந்த திருத்தங்களால் பறிக்கப்பட்டன. அதேபோன்று 1988 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 18 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் சிங்களமும் தமிழும் இலங்கையின் அரசகரும மொழிகளாக்கப்பட்டன. எனினும் இது வெறும் ஏட்டளவிலேயே நின்றுவிட்டது.

பின்பு அதை நடைமுறைப்படுத்தும் வகையில் அரச கரும மொழிகள் திணைக்களம் ஆணைக்குழுவாக மாற்றப்பட்டு அதற்கென ஓர் ஆணையாளரும் 1991 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டும் எவ்வித முன்னகர்வும் மேற்கொள்ளப்படவில்லை. மகிந்த ராஜபக்ச ஆட்சியில் வாசுதேவ நாணயக்கார தேசிய நல்லிணக்க அமைச்சராக நியமிக்கப்பட்ட போதிலும் சிங்கள அதிகாரிகளை வடக்குக் கிழக்குக்கு அனுப்பியவை மட்டுமே இடம்பெற்ற முன்னெடுப்புக்களாக அமைந்தன. ஒட்டுமொத்தத்தில் 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புச் சட்டங்களால் தமிழ் மக்களின் உரிமைகள் முழுமையாக நிராகரிக்கப்பட்டன. இந்த நிலையில் வேறு வழியின்றி தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற ஆயுதப் போராட்டத்தைத் தெரிவு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதுவும் பயங்கரவாதகமாகச் சித்திரிக்கப்பட்டு கொடூரமான இன ஒடுக்குமுறையும் இனப்படுகொலைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த அரசமைப்புக்களால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் காரணமாக புதிய அரசமைப்பு ஒன்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதே வேளையில் அது தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்வதற்கான வலுவான அடித்தளத்தைக் கொண்டுள்ளதாக அமைய வேண்டும். கடந்த அரசமைப்புக்கள் உருவாக்கத்தின்போது தமிழ் மக்கள் அதில் முற்றாகவே புறக்கணிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இந்தமுறை தமிழ் மக்களும் இந்த உருவாக்கத்தில் கலந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையில் நாம் இரண்டு விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவை உண்டு. ஒன்று மகிந்த குழுவினர் சிங்கள மக்கள் மத்தியில் இனவாத முன்னெடுப்புக்களைத் தூண்டி அரசமைப்பின் மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயங்களைத் தடுக்க முயல்வர். மற்றது நல்லதைச் செய்வதாகப் போக்குக் காட்டிக் கொண்டு இன்னொரு புறம் எல்லாவற்றையும் குழப்பியடிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின், நரித்தனம். இது 1985 தொடக்கம் 1989 வரை தமிழரசுக் கட்சி, ஐ.தே.கட்சி அரசில் பங்கு வகித்தபோதும் கடைசி யில் டட்லி–செல்வா ஒப்பந்தத்தைத் தூக்கி எறிந்தமையையும் புலிகள்–ரணில் சமாதானப் பேச்சுக்கள் ஒரு நிலையான தீர்வை எட்டும் நோக்கில் நகர்ந்தபோது, புலிகள் அமைப்பிலிருந்து கருணாவை உடைத்தமை போன்றவற்றை நாம் மறந்து விடமுடியாது. எனவே தமிழர் தரப்பு மிகவும் அவதானத்துடனும் உறுதியுடனும் இருக்க வேண்டிய சந்தர்ப்பம் இது.

இந்த நிலையில் ராஜதந்திரம், எல்லோரும் ஏற்கக்கூடிய தீர்வு போன்ற சுலோகங்களை உச்சரித்தவாறு மீண்டும் ஒருமுறை கோட்டை விட்டு விடக் கூடாது.

2010, 2015 ஆகிய நாடாளுமன்றத் தேர்தல்களிலும், மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு இணைந்த உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கத்துக்கு தெளிவான ஆணையை வழங்கியுள்ளனர். அதேபோல் ரணில்–புலிகள் பேச்சுக்கள் ஒன்றிணைந்த இலங்கைக்குள் வடக்கு, கிழக்கு இணைந்த உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கம் என்ற அடிப்படையிலேயே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு திருமதி சந்திரிகா விஜய குமாரதுங்கவும் கையொப்பமிட்டிருந்தார்.

இது பெரும்பான்மைக் கட்சிகளாலும், தமிழ் மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தீர்வு. அது எமது கண்முன் உள்ள நிலையில் நாம் அது தொடர்பாக உறுதியாகவும், நேர்மையாகவும் விலைபோகாத வகையிலும் நிற்க முடியும். இந்த விடயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட சகல தரப்பினரும் ஒருமித்து நின்று செயற்பட வேண்டியது அவசியமாகும்.

# அழகை அதிகரிக்க ஐஸ் கட்டி பேஷியல்



### மசாஜ் செய்யும் முறை

ஐஸ் கட்டிகளை ஒரு சுத்தமான துணியில் வைத்து, அதனைக் கொண்டு முகத்தை வட்ட வடிவில் மசாஜ் செய்ய வேண்டும். மேலும் இந்த மசாஜ் முறையை காலையில் குளிக்கும் முன்பும் செய்யலாம். முகத்தை சோப் அல்லது பேஸ் வோஷ் பயன்படுத்தி கழுவும் முன்பும் செய்யலாம் அல்லது இரவில் படுக்கும் முன்பும் செய்யலாம்.

### சருமத்துக்கு புத்துணர்ச்சியூட்டும்

ஐஸ் கட்டிகளைக் கொண்டு முகத்தை மசாஜ் செய்து வருவதால், சோர்ந்து காணப்படும் முகம் புத்துணர்ச்சியுடன் காணப்படும். அதிலும் எப்போதெல்லாம் முகம் சோர்வுடன் இருக்கிறதோ, அப்போது ஐஸ் கட்டிகளைக் கொண்டு முகத்தை மசாஜ் செய்தால், முகம் புத்துணர்ச்சி யுடன் இருக்கும்.

### முகப்பருக்களைப் போக்கும்

ஐஸ் கட்டிகளைக் கொண்டு முகத்தை மசாஜ் செய்தால், சருமத் துளைகளின் அளவு குறையும். இதனால் முகத்தில் பருக்கள் வருவது குறையும். எனவே உங்களுக்கு பருக்கள் அதிகம் வந்தால், ஐஸ் கட்டி களைக் கொண்டு முகத்தை மசாஜ் செய்யுங்கள். இதனால் விரைவில் நல்ல மாற்றம் தெரியும்.

### சூரியக்கதிர்களால் ஏற்பட்ட சரும எரிச்சல்

சில நேரங்களில் அதிகப்படியான வெயிலினால் சருமம் எரிச்சலுக்கு உள்ளாவதுடன், காயங்களும் ஏற்படும். அப்படி சூரியக்கதிர்களால் பாதிக் கப்பட்ட சருமத்தை சரிசெய்ய, ஐஸ் கட்டிகளைக் கொண்டு மசாஜ் செய்தால், நல்ல இதம் கிடைக்கும்.

### முதுமைத் தோற்றத்தைத் தடுக்கும்

சிலருக்கு இளமையிலேயே சருமத்தில் சுருக்கங்கள் இருக்கும். இது முதுமைத் தோற்றத்தைக் கொடுக்கும். இதனால் முகத்தில் இரத்த ஓட்டம் அதிகரித்து, இளமையான தோற்றத்தை மீண்டும் பெறலாம். ஆனால் எதையும் அளவுக்கு அதிகமாக செய்யவேண்டாம்.

# இரவுக் கிறீம் உபயோகப்படுத்துவதால்



1. இரவு கிறீம் பொருள் கள் உங்கள் முகத்தில் இருக்கும் உலர்ந்த பாகங்களுக்கு ஈரப்பதம் தருகிறது. எனவே, உங்கள் முகத்தில் நீரேற்றம் நன்றாக பாது காக்கப்படுகிறது.
2. அது உங்கள் முகத்தை மென்மையாக்குகிறது.
3. இது உங்கள் தோலுக்கு ஒரு நேர்த்தியான தோல் அமைப்பை கொண்டு சேர்த்து அத்துடன் நிறம் தருவதை உறுதி செய்கிறது.
4. இரவு கிறீம் உங்கள் தோலிலுள்ள சவ்வைக் கூட்டுகிறது.
5. இந்தக் கிறீம் மேலும்.நல்ல குருதி ஓட்டத்துக்கு உதவுகிறது.
6. உங்கள் முகத்தில் சுருக்கங்கள் மற்றும் வரிகளை குறைக்கிறது.
7. தோல் சுருக்கத்தில் இருந்து தடுப்பதற்கு இரவு கிறீம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.
8. இது உங்கள் தோலை மென்மையாக மற்றும் மிருதுவாக மாற்று கிறது.
9. உங்கள் வயதான பழைய தோலை மறைத்து அதன் நெகிழ்ச்சி யிலிருந்து உங்கள் தோலை மீட்க உதவுகிறது.
10. செல்களை புதுப்பித்தலுக்கு உதவுகிறது மற்றும் உங்கள் தோலைப் புதுப்பிக்கிறது

# ரோஸ் வோட்டர்



உங்களுக்கு வறட்சியான சருமம் என்றால் சுத்தம் செய்த பின்னர் விரைவில் உலர்ந்துவிடும். அப்போது ரோஸ் வாட்டரை சருமத்தில் தடவினால், மென்மையான மற் றும் அரிப்பில்லாத சருமத்தைப் பெறலாம்.

### பவுடர் அல்லது எண்ணெய்

நீங்கள் மென்மையான சுத்தம் செய்யும் முறையை மேற்கொண்டிருந்தால், அத னால் சிவப்பாக மாறும் சருமத்தை சரி செய்ய பவுடர் அல்லது எண்ணெய் தடவிக் கொள்வது நல்லது.

# முட்டை கட்லெட்



தேவையானவை:
முட்டை 5
மிளகாய்த்தூள் 1 கரண்டி
மசாலாதூள்
1 தேக்கரண்டி
உருளைக்கிழங்கு
அரைக்கிலோ
வெங்காயம் 1
தேங்காய்ப்பால் அரை கப்
மிளகுதூள் 1 தேக்கரண்டி
மைதா மா 2 தேக்கரண்டி
எண்ணெய் 250 கிராம்.

### செய்முறை

முட்டை, உருளைக்கிழங்கு ஆகியவற்றை வேகவைத்து தோல் எடுக்க வேண்டும். முட்டையை இரண்டாக வெட்ட வேண்டும். ஒரு முட்டையை சிறிது உப்பு மிளகு போட்டு கலக்கி வைக்க வேண்டும்.

வெங்காயத்தை மிகப் பொடியாக நறுக்க வேண்டும். உருளைக்கிழங்கைக் கட்டியில்லாமல் மசித்து அதனுடன் தேங்காய்ப் பால், வெங்காயம், மைதா மா போட்டு நன்கு பிசைந்து சின்ன உருண்டைகளாக உருட்டி வைக்க வேண்டும். அதனைக் கையில் வட்டமாகத் தட்டி நடுவில் முட்டையை வைத்து மூட வேண்டும். அதனை கலக்கி வைத்த முட்டையில் நனைத்து ரொட்டித் தூளில் நனைத்து எண்ணெயில் போட்டு இருபுறமும் சிவக்க விட்டு எடுக்க வேண்டும்.





# ஜல்லிக்கட்டை முழுதாக நிறுத்துவது சரியல்ல!

ஆதி வள்ளியப்பன்

தமிழர்களின் புத்தாண்டின் ஒரு பாரம்பரியமான விளையாட்டாக, இன்று ஜல்லிக்கட்டு என்று சொல்லப்படும் ஏறு தழுவுதல் நிகழ்ந்து வருகிறது. ஆனால் இந்த முறை ஜல்லிக்கட்டுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் தடை விதித்து விட்டதன் காரணத்தால் பெரும் சர்ச்சை வெடித்துள்ளது.

ஜல்லிக்கட்டு ஏன் வேண்டும், ஏன் வேண்டாம் என்பது தொடர்பாக ஒவ்வோராண்டும் விவாதங்கள் தொடர்ந்தபடி உள்ளன. விலங்குநல ஆர்வலர்கள் குறிப்பிடுவதுபோல விலங்கையோ அல்லது சிலர் கவலையுறுவதைப் போல மனிதர்களையோ துன்புறுத்துவதே ஜல்லிக்கட்டு என்ற பார்வை எத்தனை தூரம் சரி? மற்றொருபுறம் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவானவர்கள் கூறுவதுபோல, அது வெறும் வீர விளையாட்டு மட்டும்தானா? இந்த இரண்டு பார்வைகளுமே ஒட்டுமொத்த விசயத்தைக் கவனப்படுத்தவில்லை. ஜல்லிக்கட்டு வேண்டாம் என்று அவசரப்பட்டு முடிவுக்கு வரும் முன், ஜல்லிக்கட்டு என்ற நிகழ்வின் பின்னணியை முதலில் புரிந்துகொள்ள முயற்சிக்கலாம்.

**மாட்டைப் பற்றித் தெரிந்தது என்ன?**

சிந்துச் சமவெளி நாகரிகத்தின் மொகஞ்சதாரோ பகுதியில் கிடைத்த ஒரு முத்திரையில் ஜல்லிக்கட்டுக் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. கல்லால் ஆன அந்த முத்திரை 5,000 ஆண்டுகளுக்கு முந்தையது. 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய சங்க இலக்கியங்களிலும் ஜல்லிக்கட்டு விவரிக்கப்பட்டுள்ளது. அதன் பெயர் ஏறு தழுவுதல்.

மாடு வீட்டு விலங்காகப் பழக்கப்படுத்தப்பட்ட தொன்மையான நாகரிகங்களில் முதன்மையானது இந்தியா. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்து, இந்தியாவில் உள்ளூர் மாட்டினங்கள் உருவாக்கப்பட்டுவருகின்றன.

மாடுகளின் நலனுக்காகக் குரல் கொடுக்கும் விலங்குநல ஆர்வலர்களுக்கு உள்நாட்டு மாட்டினங்கள், அவை வளர்க்கப்படும் முறை, அவற்றின் முக்கியத்துவம் பற்றி என்ன தெரியும்? தோலின் மேற்புறம் கறுப்பு நிறம் விரவிய காரிக் காளைக்கும், எருமை மாட்டுக்கும் அவர்களுக்கு வித்தியாசம் தெரியுமா என்று கேட்கிறார்கள் விவசாயிகள். ஆண்டு முழுவதும் மாடுகளுடனும் சாணியுடனும் உழலும் விவசாயிகளைவிட, வேறு யாருக்கு மாடுகளைப் பாதுகாப்பதில் அதிக அக்கறை இருக்க முடியும்?

> **ஜல்லிக்கட்டில் இயல்பாக வெற்றி பெறுபவை மரபணு ரீதியில் வீரியமிக்க காளைகளே. இதன் மூலம் உள்ளூர் மாட்டினங்களின் மரபணு வளம் பராமரிக்கப்படுகிறது. வீரியமிக்க காளைகளின் குட்டிகளையே விவசாயிகள் அதிகம் விரும்புகிறார்கள்.**

இந்தியாவில் நூறு ஆண்டுகளுக்கு முன்புவரை 130க்கும் மேற்பட்ட உள்ளூர் மாட்டினங்கள் இருந்தன. இன்றைக்கு 37 மாட்டினங்களே உள்ளன. தமிழக மாட்டினங்களான காங்கேயம், புளியகுளம் போன்றவற்றின் மேம்பட்ட இனப்பெருக்கத்துக்கு ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி அடிப்படையாக இருக்கிறது. ஜல்லிக்கட்டு முடக்கப்படுவது இந்த மாட்டினங்களின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணம் என்கிறார், சேனாபதி காங்கேயம் மாடுகள் ஆராய்ச்சி அறக்கட்டளையின் அறங்காவலர் ஹிமாகிரண்.

உழுவதற்கு, போக்குவரத்துக்கு, விவசாயத் துக்கு ஊட்டம் தரும் எருவுக்குத் தேவையான சாணம், பஞ்சகவ்யம், அமிர்தக்கரைசல் தயாரிப்பதற்கு, சத்து நிறைந்த ஏ2 பாலைப் பெறுவதற்கு என மனித சமூக வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்துக்கும் உள்ளூர் மாடுகள் ஆதாரமாகத் திகழ்ந்து வந்துள்ளன. டிராக்டர், பம்ப் செட் உள்ளிட்ட இயந்திர வேளாண்மையின் ஆதிக்கத்தால் உள்ளூர் மாட்டினங்களை வளர்ப்பது ஏற்கெனவே நெருக்கடிக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஜல்லிக்கட்டு போன்ற பண்பாட்டு விழாக்களும் நசுக்கப்படுவது உள்ளூர் மாட்டினங்களுக்குச் சாவு மணி அடிப்பதாகவே அமையும். அவற்றைச் சார்ந்திருக்கும் விவசாயிகளின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகும்.

**ஜல்லிக்கட்டில் என்ன நடக்கிறது?**

காளையைக் கொடுமைப்படுத்தும், காளையை வதைக்கும் விளையாட்டு அல்ல ஜல்லிக்கட்டு. ஒரு மனிதர் காளையின் திமிலைப் பிடித்துக்கொண்டு 20-30 அடி தூரத்துக்கு, அதிகபட்சமாக 10-20 விநாடிகள் ஓடுவதுதான் ஜல்லிக்கட்டு. அதனால்தான் ஏறு தழுவுதல் எனப்பட்டது.

வாய்ப்பிருந்தால், பரிசுத்தொகை கட்டப்பட்ட துண்டைக் கொம்பால் குத்தப்படாமல் அவிழ்ப்பதில்தான் ஜல்லிக்கட்டின் லாகவம் அடங்கியிருக்கிறது. சினிமா நாயகர்கள் போலியாகச் சித்தரிப்பதைப் போல, எந்த ஊரிலும் மாட்டைத் தனியாகப் பிடிக்க யாரும் முயற்சிப்பதில்லை; கொம்பைப் பிடித்து அடக்க முயற்சிப்பதும் இல்லை. காளைகளைப் போற்றும் திருவிழா ஜல்லிக்கட்டு. ஒரு காளை குருதி சிந்தினால்கூட ஜல்லிக்கட்டு நிறுத்தப்படும் என்பது விதி.

தமிழகத்தில் பொலி காளைகள்தான் ஜல்லிக்கட்டில் விடப்படுகின்றன. வெற்றி பெறும் காளைகள் உள்ளூர் பசுக்களுடன் இனச்சேர்க்கைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த இரண்டு அம்சங்களுக்காக மட்டுமே அவை பயன்படுத்தப்படுகின்றன. கிராமங்களில் கோயில் காளைகள் இலவசமாக இனச்சேர்க்கைக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

ஜல்லிக்கட்டில் இயல்பாக வெற்றி பெறுபவை மரபணுரீதியில் வீரியமிக்க காளைகளே. இதன் மூலம் உள்ளூர் மாட்டினங்களின் மரபணு வளம் பராமரிக்கப்படுகிறது. வீரியமிக்க காளைகளின் குட்டிகளையே விவசாயிகள் அதிகம் விரும்புகிறார்கள். அந்த வகையில் ஒரு பகுதியிலுள்ள காளைகளை, ஊருக்குக் காட்சிப்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பு ஜல்லிக்கட்டு. அதன் தொடர்ச்சியாக தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் மாட்டுச் சந்தைகள் நடப்பதையும் கவனிக்க வேண்டும்.

ஒரு உள்ளூர் மாட்டினத்தைப் பாது காப்பதற்கான சிறந்த வழி, அது உருவான நிலப்பகுதியில், அதன் இயல்புடன் இனப்பெருக்கம் செய்வதுதான் (Indsitu conservation) என்கிறது ஐ.நா சபையின் உயிர் பன்மய சாசனம்.

(34 ஆம் பக்கம் பார்க்க



# சலூன்காரர் சடகோபன்!

## அறிமுகப்படுத்துகிறோம் - 04

நான் சொன்னா என்ன விட்டா என்ன சலூன்காரர் சடகோபன் அருமையான மனிதர் தான். ஆனால் இப்ப வர வர மோசம்! ஏனெனில் தொழிலில் எங்களுக்கு அவர் அருமையாக இருந்த காலம் போய் அவருக்கு நாம் அருமையாகத் தலையைக் காட்டுவதுவமாய் இருக்கலாம்.

ஒரே வீதியில் நாலைந்து யார் இடைவெளிக்கு ஒரு சலூனாக முளைத்து விட்டதால் இப்பொழுது அவருடைய அருமை பெருமை எங்கே நமது இளசுகளுக்கு விளங்கப்போகிறது?

அந்தக் காலம் வேளைக்கு முடித்துக் கொண்டு வந்திடலாம் எண்டு போனால் வந்த முறைப்படிதான் என்று கூறி நீண்ட கியூவில் இருத்தி வைக்கின்ற மனிதர், இப்பொழுது கடை முன்பாகப் பலகைத் துண்டைப் போட்டுக்கொண்டிருந்து இலையான் கலைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் வயிறுதான் எரியுது.

இதுக்கெல்லாம் என்ன காரணம்? "நாட்டில் பயிர் நட்டு வளர்க்க முடியாததுகள் எல்லாம் தலையில மயிர் வளர்க்க ஆரம்பித்து விட்டதல்லால் வேறென்ன?" என்றவர் கூறுகையில் விடும் நளினம் தனிதான்.

அந்த நிலைமை தொடர்ந்தாலும் அவரந்தச் சலூனை வைத்தே சீவியம் போக்காட்டுகிறார் என்றால், எப்பாலும் இருந்திட்டு கடையில் பழைய நிலமை தோன்றாமலும் இல்லை என்பதைக் கூறத் தேவையில்லை அல்லவா?

எப்பிடி இருப்பினும் தொழில் விசயத்தில் அவர் அனுபவசாலிதான். இல்லை எண்டால் றெயினுக்கு இன்னம் ஐஞ்சு நிமிசம்தான் இருக்கு. அதுக்கிடேல்ல முடிஞ்சிடுமே.... என்று அவசரப்பட்டு வருபவருக்கு அது போனால் போகுது தம்பி அடுத்த றெயின்தான் இருக்கவே இருக்கே.... எனக்கூறி எப்படியும் ஆளை நிறுத்தி வேலையை முடித்தே அனுப்பும் திறமை எங்காலை?

சொந்தமும் இல்லே; ஒரு பந்தமும் இல்லே. சொன்ன இடத்தில் அமர்ந்து கொள்கிறார்.... நாங்க மன்னரும் இல்லே; மந்திரி இல்லே. வணக்கம் போட்டுத் தலையைச் சாய்க்கிறார்... என்னும் பழைய பாடல் வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கேட்டால் அது சாட்சாத் சலூன்காரர் சடகோபனாகவே இருப்பார்.

"நம்ம தொழிலாளியள் பாடுவதைப்போல அமைஞ்சிருக்கு இந்தப் பாட்டு அதால நானும் பாடமாக்கி பாடத் துவங்கிட்டன்..." என்கிற சடகோபனுக்கு, வானொலியில் எப்போதாவது ஒலிபரப்பாகும் அப்பாடல் காதுகளில் விழுந்தால்போதும்; முடியும் வரை வானொலிப் பெட்டிக்கருகில் நிண்டு விளக்கம் சொல்லி விட்டே மறுவேலை பார்ப்பார்.

சலூனுக்கு வருகை தரும் அறிஞர், கலைஞர், சாதாரணிகள் எனப் பலரோடும் கதைத்துப் பேசிப் பல விடயங்களை தன்னுடைய மண்டையிலும் ஏற்றி வைத்திருக்கும் பல்துறை விற்பன்னரல்லவா சட கோபன்!

சர்வகலாஞானி, பல்கலை வேந்தன், பொறுக்கிப் புலவன் இத்தியாதிப் பட்டங்களுக்கு முற்றுமுழுதும் பொருத்தமானவர் நமது சலூன்காரர் சடகோபனென்றால் மிகையாமோ! சலூனுள் நின்று எதற்காகவாவது அவர் விளக்கம் சொன்னால் பல்கலைக் கழக விரிவுரையாளர்களே அது போல் விளக்க முடிவதில்லை.

அவர் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக இன்றைய அரசியல் நிலைமை எப்படி இருக்கிறது..... என்றொரு கேள்விக்குண்டைத் தூக்கிப் போட்டுவிட்டால்போதும். இந்த மனிதரிடம் ஏன்தான் இப்பபோய் வாயைக் கிளறினேன் என்றிருக்கும் நிலைமையும் வந்திடும். அப்ப தொழில் செய்ய முடியாத அளவுக்கு உணர்ச்சி வசப்பட்டு போவார்.

உங்களில் எவருக்கேனும் நான் சொன்னது சந்தேகமெண்டால் ஒரு தடவை சலூன்காரர் சடகோபனிடம் தலையையும் கொடுத்து அரசியல் கேள்வியையும் கேட்டுத்தான் பாருங்களேன்!

சடகோபன் என்னும் நாமகரணத்தைப் பார்த்ததும் சடாரெனக் கோபம் வரக்கூடியவரோ என்றஞ்ச வேண்டாம். அதற்கு எதிர்மாறாகத்தான் இருப்பார். இன்னும் ஓர் இரகசியம் கூறுகிறேன் பாருங்கள்.

வயதுக்கு வந்திட்ட பெண்களைத் திருமணம் செய்து வைக்கப் பார்த்திருக்கும் பெற்றோர் வரன் தேடும் வேட்டையில் இறங்கினால் அணுகுவது நமது சலூன்காரர் சடகோபனைத்தான். ஊரிலுள்ள இளைஞர்களைப் பற்றி ஒன்றும் விடாமல் தெரிந்து வைத்திருப்பவர் சடகோபன் ஒருவர்தானே!

அதுவும் இந்தக் காலங்களில் பொய்த்தேவிட்டது. பெண்களைப் பெத்தவர் வரன்களைத் தேடிப் பிடிக்க முன்னமே பிள்ளைகள் கண்களுக்கு மூக்கும் முழியுமாக இருக்கும் இளைஞர்களைப் பிடித்துக் கொண்டு ஹனிமூன் போய் விடுகிறார்களே!

அவ்விடயத்திலும் சலூன்காரர் இந்தக் காலத்தில் கொடுத்து வைக்காதவரே! சுடிதார் அணியும் நவநாகரிக யுவதிகளெல்லாம் சோட்ஸ் அணியும் ஆடர்வர்களைத் தானே அதிகம் விரும்புகிறார்கள். அதனால் இளைஞர் மத்தியில் இருந்து வந்த கியாதியும் அவருக்கு இல்லாமல் நழுவி விட்டது.

சடகோபன் குறைபட்டுக் கொள்வது சக தொழிலாளர்களைத்தான். எந்தவிடயத்திலும் ஒத்துப் போவதில்லை என்றும் குட்டிக் கெறுக்கும் பிடித்தவர்களென்றும் கூறுகிறார். அவர் வருவாய் கருதிச் செய்யும் தொழிலையே அவரது அளப்பரிய சாதனையாகக் கருதவேண்டும். எண்ணிக்கை அறிய இயலாத கேசங்களை எத்தனை அழகாக ஸ்ரைல் கட்ஸுகள் வெட்டி ஒழுங்குபடுத்தி விடுகிறார் இல்லையா?

---

# ஜல்லிக்கட்டை ...

(33ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சாசனத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. அதன்படி உணவு, விவசாய மேம்பாட்டுக்காக உள்ளூர் கால்நடைகளைப் பெருக்குபவர்கள், அவற்றைப் பயன்படுத்துபவர்கள் ஓர் உயிரினத்தின் மரபணு வளத்தைப் பாதுகாக்கிறார்கள் என்பதை அங்கீகரித்து, அவர்களுடைய பாரம்பரிய அறிவு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை உணர வேண்டும். உள்ளூர் மாட்டினங்கள் நம் மரபார்ந்த சொத்து.

**யார் எதிர்க்கிறார்கள், என்ன காரணம்?**

புத்தாயிரம் ஆண்டுக்குப் பின்னர் பெடா (PETA), புளூ கிராஸ் போன்ற பெரு நகரங்களை மையமாகக்கொண்ட விலங்குநல அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட பார்வையே ஜல்லிக்கட்டைத் தடை செய்ய வேண்டும் என்பது. காளைகள் துன்புறுத்தப்படுவதால், அதைத் தடை செய்தே தீர வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அவர்கள் செயல்பட்டார்கள். ஆனால், உண்மை என்னவோ அவர்கள் சொல்வதற்கு மாறாக இருக்கிறது.

அவர்கள் சொல்வதுபோல ஜல்லிக்கட்டில் மாடுகள் கொடுமைப்படுத்தப்படுகின்றன என்றால், அந்தச் சம்பவங்கள் ஏன் மிகப் பரவலாக இல்லாமல், குறைவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன? அல்லது அது எப்படி அதிக அளவில் ஊடகங்களின் வெளிச்சத்துக்கு வராமல் போகிறது? அதேநேரம், காளைகள் - காளைக் கன்றுகள் இறைச்சிக் கூடத்துக்குப் பெருமளவு செல்வதைத் தடுப்பதில் அவர்களுடைய அக்கறை இவ்வளவு வீரியமாக ஏன் வெளிப்படவில்லை? ஜல்லிக்கட்டு நடக்காத நாட்டின் மற்ற பகுதிகளில் காளைக் கன்றுகள் இறைச்சிக்கூடத்துக்குத்தான் பெருமளவு செல்கின்றன.

அதற்குத் தடை விதிக்குமாறு அவர்கள் கூறவில்லையே! கோயிலில் யானைகள் கட்டி வைத்து பயன்படுத்தப்படுவதைப் பற்றி இந்த அமைப்புகளின் நிலைப்பாடு என்ன? என்று கேள்வி எழுப்புகிறார் மூத்த சூழலியல் எழுத்தாளர் சு.தியடோர் பாஸ்கரன்.

**ஜல்லிக்கட்டுத் தடைக்கு வேறு பின்னணி உண்டா?**

உலகமயமாக்கலுக்குப் பின்னர் இது போன்ற உள்ளூர் கலாசார நிகழ்வுகளை ஏதாவது ஒரு வழியில் வலிந்து நிறுத்துவதற்கு உலக நிறுவனங்கள் முயற்சிப்பதை உற்று நோக்க வேண்டும்.

பன்னாட்டு நிறுவனங்கள் மேற்கத்திய மாடுகளுடன் பெரும் பால் பண்ணைகளை அமைப்பதற்கு, உள்நாட்டு மாட்டினங்களைக் கொண்டாடும் ஜல்லிக்கட்டைப் போன்று ஆழ வேரூன்றிய விழாக்கள் மிகப் பெரிய தடையாக உள்ளன. உள்ளூர் மாட்டினங்கள் மீதான பிடிப்பை, தங்களுக்கு எதிரானதாகப் பன்னாட்டு வணிக பால் நிறுவனங்கள் கருதுகின்றன.

வளரும் நாடுகளின் விவசாயத்தில் விதை உற்பத்தி, விதை விற்பனையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான மான்சான்டோ முயற்சிப்பதைப் போல, ஜெர்சி, ஃபிரீசியன், பிரவுண், ஸ்விஸ் போன்ற வெளிநாட்டு மாட்டினங்களைப் புகுத்துவதற்குப் பல பன்னாட்டு நிறுவனங்கள் தீவிரமாக முயற்சித்துவருகின்றன. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அவ்வை ஊடுருவுவதற்குப்பண்பாட்டுநிகழ்வுகளை நிறுத்துவது, அது சார்ந்த வெறுப்பைப் பரவலாக்குவது இவர்களுடைய ஓர் உத்தி.

**இனிமேல் ஜல்லிக்கட்டு நடக்க வழியே இல்லை என்றால், என்ன ஆகும்?**

ஜல்லிக்கட்டு போன்ற உள்ளூர் பண்பாட்டு - உயிர் பன்மயப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தடுக்கப்படுவது, இயற்கையான இனச்சேர்க்கை மூலம் மரபணு வளம் மிகுந்த நம் நாட்டு மாட்டினங்களின் எண்ணிக்கை பெருகுவது தடுக்கப்படும். இதற்கு மாற்றாகக் கூறப்படும் செயற்கைக் கருவூட்டலை மேற்கொள்வதற்கு அரசையோ, தனியார் நிறுவனங்களையோ விவசாயிகளைச் சார்ந்திருக்க வைத்திருப்பது ஒருபுறம் என்றால், மறுபுறம் மாட்டினங்களின் மரபணு வளமும் வீழ்ச்சியடைகிறது.

**ஜல்லிக்கட்டை முறைப்படுத்தி நடத்தக் கூடாதா?**

மாட்டுக்கும் மனிதர்களுக்கும் பங்கம் இல்லாமல் ஜல்லிக்கட்டைப் பாதுகாப்பாக நடத்த வேண்டும் என்பதில் இரு வேறு கருத்தில்லை. அதற்கான விதிமுறைகள், கட்டுப்பாடுகளை வரையறுத்து முறையாக் கடைப்பிடிக்க வேண்டும். மாறாக, ஜல்லிக்கட்டையே ஒழிக்க வேண்டும் என்று வலியுறுத்துவது முறையல்ல!

*(நன்றி: தி இந்து)*




# தமிழரின் ஒட்டுமொத்த குரலாக ஓங்கி ஒலித்தவர் ஆயர் இராயப்பு ஜோசப்

அதிரன்

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். கடந்த 14ஆம் திகதி முதல் அவர் ஓய்வு பெறுவதாக மன்னார் மறைமாவட்ட திருச்சபை தெரி வித்துள்ளது.

இந்நிலையில் மன்னார் மறைமாவட்டத்துக்கு புதிய ஆயர் நியமிக்கப்பட்டு அவர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வரை, திருகோணமலை மறை மாவட்டத்தின் ஓய்வு பெற்ற ஆயர் ஜோசப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட ஆயராக பொறுப்பேற்ற வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை 24 வருடங்களாக மன்னார் மறைமாவட்ட ஆயராக இருந்துள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்துக்கு மட்டுமல்ல இலங்கை மற்றும் அகில உலக வாழ் தமிழ் மக்களுக்கும் ஆயர் இராயப்பு ஜோசப் சிறந்த சேவையாற்றியுள்ளார். கடினமான சூழ் நிலைகளுக்கு மத்தியிலே பணியாற்றியிருக்கின்றார்.

பல்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு மத்தியிலே அவர் பணியாற்றினார்.

இராயப்பு ஜோசப் யாழ். மாவட்டத்தில் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை நெடுந்தீவிலும், முருங்கனிலும் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் பயின்றார். உயர்கல்வியை யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் பயின்றார். யாழ்ப்பாணத்தில் தேசிய குருமடத்தில் இணைந்து சமயக் கல்வியைத் தொடர்ந்தார். 27ஆவது வயதில் குருப் பட்டமும் பெற்றார். யோசப்பு திருச்சபைச் சட்டத்தில் முனைவர் பட்டத்தை உர்பானியானா பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

போர் இடம்பெற்ற காலங்களிலும், தொடர்ந்து மனித நேய நெருக்கடி மிகுந்த கட்டங்களிலும் . மிகுந்த துணிச்சலுடன் கிறிஸ்தவ மத விழுமியங்களுடன், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தவர் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை .

இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக, அப்பாவித் தமிழ் மக்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் நீதி வேண்டித் துணிந்து சாட்சியம் அளித்தவர்.


அந்த ஒரே காரணத்தை முன்வைத்து ,அவரின் தனித்துவத்தையும் , நன்மதிப்பையும் புறந்தள்ளி புலனாய்வுப் பிரிவினர் அவரை விசாரணைக்கு உட்படுத்தினர். நாடாளுமன்றத்திலும் அவர் சிங்கள அரசியல்வாதிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்க ஆட்சி அதிகாரத்தின் கீழ், சுதந்திரமாகக் கருத்துக்களை கூறுவதற்கும் ,உண்மைகளை வெளிப்படுத்துவதற்கும் கடினமான சூழல் நிலவிய காலகட்டத்தில் மன்னார் ஆயரின் குரல் இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் ஓங்கி ஒலித்தது.

இதனால் அவர் பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொண்டார்.

தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்த வேளை திடீரென சுகவீனமுற்ற ஆயர் சில மாதங்களாக சிங்கப்பூர் சென்று சிகிச்சை பெற்றிருந்தார். இதன் பின்னர் கடந்த மாதம் அவர் நாடு திரும்பியிருந்தார். ஆயரின் சுகவீனம் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல சர்வதேச நாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் பெரும் மனவலியை அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதி எதுவாயினும் அவற்றை துணிந்து நின்று எதிர்ப்பதில் அவருக்கு நிகர் அவரே.


அப்போது ஆட்சியில் இருந்த மகிந்த அரசுடன் அவர் மோதிக் கொண்ட விதம் அனைவருக்கும் நன்கு தெரியும். மகிந்த அரசினால் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள், ஏகப்பட்ட அடக்குமுறைகள் என்பவற்றுக்கு எதிராக மன்னார் ஆயர் மகிந்த அரசை கடுமையாக விமர்சித்து வந்தவர். மகிந்த அரசினால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயற்பாடுகளை இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டு அரச தலைவர்களிடமும் இராஜ தந்திரிகளிடமும் அச்சமின்றி தெளிவாக புட்டு வைத்தவர் அவர். இதனால் அரசின் நேரடியான கோபத்தை சம்பாதிக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. ஆயினும் அவர் அதனை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வுகளில் தொடர்ச்சியாகப் பங்கு கொண்டு இறுதிப் போரில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள், காணாமற் போனவர்கள் தொடர்பாக நீதியான விசாரணைகள் வேண்டும் என சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்தியவர். போரின் போது ஈழத் தமிழர்கள் அனுபவித்த வேதனைகளையும் அவர்களது சொத்திழப்புக்கள், உயிரிழப்புக்களையும் சர்வதேச சமூகத்திடம் விரிவாக எடுத்துரைத்து தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று பாடுபட்டவர்.



இவ்வாறான ஒருவர் ஓய்வு பெறுவதென்பது ஈழத் தமிழர் மட்டில் ஒரு பெரும் வெற்றிடமாகவே உள்ளது. அவருக்கு ஈழத் தமிழ் மக்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அவர் சிங்கப்பூரிலிருந்து நாடு திரும்பியதும் தமிழ் மக்கள் சற்று ஆறுதல் அடைந்தனர். ஈழத் தமிழர்களுக்கான ஆயரின் பணியும் பங்கும் தொடரும் என்றே அவர்கள் நம்பியிருந்தனர். ஆயினும் தனது உடல் நிலை காரணமாக எவரும் எதிர்பாராத வகையில் ஆயர் தனது ஓய்வினை அறிவித்துவிட்டார். அவரது ஓய்வு அறிவிப்பை பாப்பரசரும் ஏற்றுக்கொண்டுள்ளார். இதனையடுத்து மன்னார் மறைமாவட்டத்துக்கு புதிய ஆயர் ஒருவர் நியமிக்கப்படவிருக்கிறார். அதுவரை ஓய்வுபெற்ற திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மன்னார் மறை மாவட்டத்தின் பரிபாலகராக பாப்பரசரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

எது எவ்வாறாயினும் ஈழத் தமிழர்களுக்காக - அவர்களது உரிமைகளுக்காக - நிரந்தர தீர்வுக்காக சர்வதேச மட்டத்தில் ஓங்கி ஒலித்த மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தமிழர் வரலாற்றில் நீங்காத இடம்பிடித்த ஒருவராகிறார் என்பதில் ஐயமில்லை.



# சொந்த மண்ணில் சாதிப்பதில் ஸ்ரெயினுக்கு வந்த சிக்கல்

கடந்த பல வருடங்களாக சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாளர் என்ற அந்தஸ்தைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டிருந்த ஸ்ரெயினுக்கு கடந்த சில மாதங்கள்சொல்லிக்கொள்ளும் படியாக சிறப்பாக அமையவில்லை. இந்தியாவுக்கு எதிரான தொடரில்உடல்தகுதியை இழந்த ஸ்ரெயின் மீது ஒன்றின் பின் ஒன்றாக பல அடிகள் விழுந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில்அவ்வப்பொழுது ஏற்பதசைப் பிடிப்புக்களுடன் பங்கெடுத்த ஸ்ரெயின் டெஸ்ட் தொடரில் இரண்டாவது ஆட்டத்துடன் உடல் தகுதி இன்மையாலும் காயம் காரணமாகவும் பவிலியனில் இருத்தப்பட்டார்.

இந்தியத் தொடர் முடிவடைந்த பின்னர் இங்கிலாந்து 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிவருகிறது. இதில், டெஸ்ட் ஆட்டங்களில் 402 இலக்குகளுடன் தொடரை ஆரம்பித்தார் ஸ்ரெயின். தென்னாபிரிக்க பந்துவீச்சாளர் ஒருவர் டெஸ்ட் ஆட்டங்களில் வீழ்த்திய அதிகூடிய இலக்குகளாக பொலக்கின் 422 இலக்குகள் உள்ளன. மேலதிகமாக 20 இலக்குகளை வீழ்த்திவிட்டால் தென்னாபிரிக்க மண்ணில் வைத்து அதிக இலக்குகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமையை ஸ்ரெயினால் எட்ட முடியும்.

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் 4 இலக்குகளை வீழ்த் தினார். குறித்த ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் காயம் ஏற்பட்டமையால் இடையிடையே பந்துவீசுவதும் பவிலியன் திரும்புவதுமாக இருந்தார். இந்த இன்னிங்ஸில் ஓர் இலக்கைத்தானும் அவரால் வீழ்த்த முடியவில்லை. இந்த டெஸ்ட்டில் தென்னாபிரிக்கா தோல்வியடைந்தது. இரண்டாவது டெஸ்ட்டில் காயம் பெரிதானதால் ஸ்ரெயின் களமிறங்கவில்லை. இந்த ஆட்டம் சமநிலை கண்டது. மூன்றாவது டெஸ்ட்டில் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கடைசி நேரத்தில் விலகுவதாக அறிவிக்கப்பட்டது.

நான்காவது டெஸ்ட் இந்த மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் ஸ்ரெயினைக் காணலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்த ஆட்டத்தில் விளையாடினாலும் தென்னாபிரிக்கா மண்ணில் வைத்து அதிக இலக்குகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்கா வீரர் என்ற சாதனையை எட்டுவதென்பது சந்தேகமே. இந்த மைல் கல்லை எட்டுவதற்கு ஸ்ரெயினுக்கு இன்னும் 16 இலக்குகள் தேவைப்படுகின்றன. இந்த ஆட்டத்தில் விளையாடினாலும் 20 இலக்குகளில் 16 இலக்குகளை அவரால் வீழ்த்திவிட முடியும் என்பது கண்மூடித்தனமான கருத்தாக அமைந்துவிடும்.

காயத்தினால் சொந்த மண்ணில் வைத்து ஓர் சாதனையை நிலைநாட்ட முடியாததைவிட வேதனையான விடயமாக அமைந்துள்ளது தரப்படுத்தலில் அவரது பின்னடைவு. சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் அசைக்க முடியாத சக்தியாக பல வருடமாக முதலிடத்தில் நீடித்து வந்த ஸ்ரெயின் தனது சிம்மாசனத்தை அஸ்வினிடம் இழந்துள்ளார். வருடத்தின் ஆரம்பத்தில் வெளியாகிய தரப்படுத்தலில் ஸ்ரெயின் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு அஸ்வின் முதலிடம் பிடித்தார். இவற்றையெல்லாம் வைத்து அலசி ஆராய்ந்த சில விமர்சனப் பிரியர்கள் ஸ்ரெயினின் டெஸ்ட் வாழ்க்கை முடிவுக்கு வருவதாக முடிவெடுத்துவிட்டனர்.

இலக்குகளை உடைத்துஎறியும் அளவுக்கு சக்தி வாய்ந்த ஸ்ரெயினின் வேகம் இன்னும் குறைவடையவில்லை. அவர் மீண்டும் வருவார். மீண்டு வருவார்.



# வெற்றியில் நடைபோடும் மிர்சா கிங்கிஸ்

சர்வதேச ரென்னிஸ் உலகத்தை கடந்த வருடம் கட்டிப்போட்ட பெண்கள் இரட்டையர் பிரிவின் இணையான இந்தியாவின் சானியா மிர்சா, சுவிட்சர்லாந்தின் மாட்டினா கிங்கிஸ் இருவரும் இந்த வருடமும் தமது வெற்றிப்பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். இரட்டையர் பிரிவில் அதிக வெற்றிகளைக் குவித்த இணை என்ற சாதனையை இந்த வருடத்தின் தொடக்கத்திலேயே இந்த இணை நிலைநாட்டியுள்ளமை சிறப்பம்சமாக அமைந்துள்ளது.

நடப்பு வருடத்துக்கான சர்வதேச ரென்னிஸ் தொடர்களில் முதலாவதாக ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் இன்று ஆரம்பமாகிறது. சர்வதேச அந்தஸ்துப் பெற்ற ரென்னிஸ் தொடர்களுக்கு முன்பாக அதற்கு வீரவீராங்கனைகளைத் தயார்ப்படுத்தும் விதமாக சிறுசிறு தொடர்கள் நடத்தப்படும். இந்த வகையில் ஆஸ்திரேலியத் தொடரின் தயார்ப்படுத்தல் தொடர்களாக பிரிஸ்பெயின் ரென்னிஸ் தொடர், சிட்னி ரென்னிஸ் தொடர் போன்ற தொடர்கள் நடைபெற்றன. கடந்த வருடத்தில் விம்பிள்டன் உட்பட (இங்கிலாந்து ரென்னிஸ் தொடர்) 9 கிண்ணங்களைக் கைப்பற்றிய மிர்சா கிங்கிஸ் இணை இந்த வருடத்திலும் தனது ஆதிக்கத்தை பெருமளவுக்கு நிலைநாட்டும் என்று எதிர்வுகூறப்பட்டது. அதற்கேற்ப சானியா– கிங்கிஸ் இணையும் வருடத்தை வெற்றியுடனேயே ஆரம்பித்தது. சிட்னி ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்குத் தகுதி பெற்றதன் மூலம் அதிக ஆட்டங்களில்



தொடர்ச்சியாக வெற்றிபெற்ற கிகி பெர்னாண்டஸ் - சுவரேவா இணையின் சாதனையை 22 ஆண்டுகளுக்குப் பிறகு முறியடித்து வரலாறு படைத்துள்ளது.

கடந்த பல மாதங்களாக தரப்படுத்தலில் முதலிடத்தில் நீடித்து வந்த மிர்சா- கிங்கிஸ் இருவரது சாதனைப் பட்டியலில் தற்பொழுது புதிதாக ஓர் சாதனை எழுதப்பட்டுள்ளது. இன்று ஆரம்பிக்கும் ஆஸ்திரேலியத் தொடரில் இருந்து இறுதியாக நடைபெறவுள்ள அமெரிக்கத் தொடர் வரை மிர்சா கிங்கிஸ் இருவர் மீதும் பெருமளவான எதிர்பார்ப்புக்கள் இருக்கத்தான் செய்கின்றன. வெற்றியில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் மிர்சா கிங்கிஸ் இந்த வருடம் தமது தொடர் வெற்றிகளை எந்தளவு தூரம் கொண்டு செல்லப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.




# பெண்கள் விரும்பும் வளையல்கள்

வளையல்களில் டிசைனர் வளையல்கள், தினமும் அணிந்து கொள்ளும் வளையல்கள், அகலமான துக்கடா வளையல்கள், சிமெட்ரிக் டிசைன் வளையல்கள், மிகவும் லைட் வெயிட்டான வளையல்கள், அலுவலகத்துக்கு அணிந்து கொள்ள ஏற்ற போன்ற வளையல்கள், நான்கு கம்பிகளால் செய்யப்பட்ட இனாமல் வளையல்கள், டி வடிவமுள்ள வளையல்கள், பூ வளையல்கள் எட்டு முகம் கொண்ட சிமெட்ரிகல் ஷேப் வளையல்கள், ரூபி எமரால்டு கொண்டு செய்யப்பட்ட வளையல்கள் என்று வளையல்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

வளையல் என்றால் முன்பு வட்ட வடிவில் முழுவதும் பொன்னால் அல்லது சிவப்பு, வெள்ளை, பச்சை மற்றும் வைரக்கற்களால் செய்யப்பட்ட வளையல்களைத்தான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இப்பொழுதோ வளையல்களில் இத்தனை ரகமா? என்று வாயைப்பிளக்கும் அளவுக்கு மிகவும் அழகான டிசைன்களில் ஏராளமான வளையல்கள் வந்து விட்டன.

டிசைனர் வளையல்கள் எப்பொழுதும் இருக்கும். டிசைன் போன்று இல்லாமல் மிகவும் பேனாக வடிவமைக்கப்பட்டிருக்கும் இவை வைபவங்களுக்கு அணிய ஏற்றவை.

தினமும் அணிந்து கொள்வதற்கென்றே பிரத்தியோகமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் வளையல்களில் மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுகள் இல்லாமல் சாதாரணமாக இருக்கும். இவற்றை அழுக்குகள் சேராதவாறு பிளெயினாக இருக்கும். அன்றாடம் அணிந்து கொள்ள இவை ஏற்றவை. சாய்வான கம்பிகளாக வளையல் டிசைன் இருக்கும். இவற்றை துக்கடா வளையல்கள் என்கிறார்கள். இலை இரண்டு விரலைச் சேர்த்துவைத்தாற்போல், மூன்று விரலை சேர்த்து வைத்தாற் போல் உள்ளது.

மிகவும் நிறை குறைவாக அதேசமயம் பார்வையாக உள்ள வளையல்களை மக்களின் விருப்பத்துக்கேற்ப மிகவும் அற்புதமாக வடிவமைக்கிறார்கள்.

அலுவலகத்துக்கு அணிந்து மிகவும் பட்டையான டிசைன்கள் இருப்பதில்லை. மிகவும் மெல்லிய வளையல்களில் சிறிய குண்டுகள் இணைக்கப்பட்டது போன்று மிகவும் நாகரிகமான தோற்றத்தை தருவதாக அவ்வகை வளையல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 120 | 60 | 60 | 35 | 40 |
| கத்தரி | 150 | 100 | 140 | 150 | 120–140 | 120 | 120 | 160 |
| கரட் | 200 | 200 | 180–400 | 180 | 200–300 | 320 | 180 | 280 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40–50 | 60 | 30 | 30 |
| பயிற்றை | 200 | 120 | 150 | 180 | 160 | 140 | 140 | 200 |
| பாகல் | 150 | 150 | 150 | 180 | 140–160 | 300 | 140 | 250 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 70–80 | 120 | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 80–100 | 90 | 63 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 130 | 120 | 120–140 | 140 | 120 | 160 |
| பூசணி | 50 | 50 | 60 | 50 | 40–50 | 60 | 40 | 50 |
| தக்காளி | 70 | 80 | 70 | 80 | 50–60 | 60 | 60 | 40–50 |
| வாழைக்காய் | 180 | 60 | 60 | 60 | 60–70 | 30 | 50 | 40 |
| கீரை | 40 | 50 | 40 | 20 | 30–40 | 40 | 35 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 40 | 30–40 | 30 | 10 | 15 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 360 | 300 | 300–320 | 600 | 250 | 400 |
| புடோல் | 70 | 80 | 100 | 30 | 80–100 | 120 | 70 | 80 |
| கோவா | 100 | 120 | 140 | 120 | 100–120 | 160 | 80 | 80 |
| வெண்டி | 160 | 120 | 120 | 120 | 120–140 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 200 | 180 | 180 | 140 | 200–220 | 260 | – | 200 |
| லீக்ஸ் | 100 | 120 | 100–160 | 160 | 100–120 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 50 | 38 | 50 | 40–50 | 40–45 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 70 | 70 | 70–80 | 60 | 60 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 120 | 80–100 | 40 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 280 | 300–340 | 400 | 200 | 300 |
| இராசவள்ளி | 100 | 140 | 160 | 120 | 160 | 120 | 100 | 100 |



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 800 | 600 | 500 |
| நண்டு | 250 | 400 | 400 | 300 | 400 | 350 | – |
| கணவாய் | 600 | 600 | 600 | 400 | 600 | 650 | – |
| பாரை | 450 | 600 | 600 | 600 | 600 | 600 | 430 |
| சுறா | 300 | 600 | 600 | 600 | 800 | 600 | – |
| சீலா | 250 | 400 | 500 | 500 | 450 | 300 | 350 |
| விளை | 500 | 500 | 300 | 600 | 600 | 400 | 450 |
| முரல் | 250 | 400 | 400 | 400 | 350 | 300 | – |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 | 400 | 300 | 250 |
| கிழாக்கன் | 400 | 800 | – | – | 400 | – | – |
| ஓரா | 300 | 400 | 300 | – | 300 | – | 350 |
| திரளி | 200 | 300 | 200 | 250 | 250 | 300 | 350 |
| நகரை | 150 | 300 | – | – | 300 | – | 400 |
| சூடை | 130 | 150 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 200 | 250 | 250 | 200 | 200 | 200 | 200 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | 300 | 200 | 130 |
| மதனம் | 250 | 250 | 220 | 300 | 250 | 300 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 100 | 250 | 300 | 300 | 400 | 200 | – |
| வாழை | 150 | 150 | – | 400 | 200 | 300 | 300 |




## காரம் பொரி

**தேவையானவை**

பொரி - 1 கப்
பொட்டுக்கடலை - 1 மேசைக்கரண்டி
கரட் துருவல் - 2 கரண்டி
பீட்ரூட் துருவல் - 2 கரண்டி (விருப்பப்பட்டால்)
காய்ந்த மிளகாய் 2
மசாலாத்தூள் - அரைக்கரண்டி
வறுத்த வேர்க்கடலை - 2 கரண்டி
பூண்டு - 5 பல்
பெரிய வெங்காயம் - 5 (பொடியாக அரிந்தது)
தட்டுவடை - 4 (விருப்பப்பட்டால்)
தேங்காய் எண்ணெய் - 2 கரண்டி
உப்பு - சிறிது

**செய்முறை:**

பூண்டுடன் காய்ந்த மிளகாய், சிறிது தண்ணீர், தேங்காய் எண்ணெய் ஒரு கரண்டிவிட்டு நைசாக அரைக்கவும். ஒரு அகண்ட பாத்திரத்தில் பொரி, பொட்டுக்கடலை, வறுத்த வேர்க்கடலை, கரட் துருவல், பீட்ரூட் துருவல், சிறிது மசாலாத்தூள், அரைத்த விழுது, பொடியாக அரிந்த பெரிய வெங்காயம், உப்பு அனைத்தையும் போட்டு தேங்காய் எண்ணெய் சிறிது விட்டு கலக்கவும். அதில் விருப்பப்பட்டால் தட்டுவடையை ஒன்றிரண்டாக உடைத்தும் சேர்க்கலாம்.

### நாளை

தை-04
திங்கட்கிழமை 18.01.2016
திதி: நவமி பி.ப.03.26
நட்சத்திரம்: பரணி பி.இ.12.07
ராகுகாலம்: 08.05-09.35 வரை
சுபநேரம்: 12.35- 02.05 வரை

### இது புதுசு




## புளூருத் ஸ்பீக்கர்

புளூருத் ஸ்பீக்கர் எனப்படும் இந்த சாதனம் 20 - 25 மீற்றர் வலையமைப்பில் பாவிக்கக் கூடியது. கையில் அலைபேசியை வைத்துக் கதைக்க வேண்டியது இல்லை. பாட்டுகளைச் சத்தமாகவும் கேட்க முடியும். சார்ஜ் செய்த பின் 12 மணிநேரம் இதனைப் பயன்படுத்த முடியும். இதன் விலை 2,500 ரூபா ஆகும்.

# வருகிறது மூன்றாம் உலகப்போர்




தமிழில் உருவாகியுள்ள இராணுவப்படம் மூன்றாம் உலகப்போர். டி.ஆர்.எஸ்.ஸ்ருடியோ ட்ரீம் பேக்டரி என்ற புதிய நிறுவனம் சார்பில் பெரும் பொருட் செலவில் தயாராகியுள்ள இந்தப்படத்தில் சுகன் கார்த்தி இயக்கத்தில் கிசோர் கதாநாயகனாக நடித்துள்ளார். தேவ் சங்கர் இசையிலும், தேவாவின் ஒலிப்பதிவிலும் உருவாகவுள்ளது மூன்றாம் உலகப்போர்.

2025 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் போர் வந்தால் என்ன நடக்கும் என்பது தான் படத்தின் கதை. அந்த காலப் பகுதியில் இராணுவத்தில் பயன்படுத்தக்கூடிய ஆயுதங்கள், இராணுவ உத்திகள் என்பவற்றைச் சிறப்பாக சொல்லும் வகையில் உருவாகியுள்ள இந்தப் படத்தில், போரில் பங்குபற்றும் தமிழ்நாட்டு இராணுவ வீரனுடைய காதல் கதையூடாக போர்க் காலப்பகுதி தெளிவாகக் காட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 22ஆம் திகதி வெளியாகவுள்ள மூன்றாம் உலகப்போர் தமிழ் சினிமா வரலாற்றில் ஒரு புதிய முயற்சி என்பதும் முதலாவது முழுநேர இராணுவப் படம் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** முக்கியமான செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் இடுவீர்கள். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**இடபம்:** மாறுபட்ட நிகழ்வு மனதில் சஞ்சலம் தரலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். மின்சார உபகரணங்களைக் கவனமாகப் பயன்படுத்தவும்.

**மிதுனம்:** வீண்பேச்சுப் பேசுபவரிடம் விலகவும். கூடுதலாக உழைத்தாலும் தொழில், வியாபாரத்தில் சுமாரான இலக்கையே அடைய முடியும். பணவரவு ஓரளவுக்கு இருக்கும். குடும்பத்தில் சிறு பிரச்சினை வரலாம்.

**கடகம்:** யாரிடமும் விவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். மிதமான பணவரவு கிடைக்கும். ஆடம்பர எண்ணத்தால் அதிக செலவாகும். மாணவர்கள் சிறப்பாகப் படிப்பர்.

**சிங்கம்:** செயல்களில் திறமையும், நேர்த்தியும் அதிகரிக்கும். தொழில், வியாபார வளர்ச்சி அதிகரிக்கும். அதிர்ஷ்டகரமான வகையில், பண வரவு கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கன்னி:** இஷ்ட தெய்வத்தின் அருள் துணை நிற்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடினாலும் வெற்றிகரமாக முடிந்து விடும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உருவாகும். விரும்பிய பொருள் வாங்குவீர்கள்.

**துலாம்:** குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு மனதுக்கு நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் உள்ள இடையூறைச் சரி செய்வீர்கள். சேமிப்புப் பணத்தைச் செலவுக்கு எடுக்க வேண்டி வரும். போக்குவரத்தில் கவனமாக இருக்கவும்.

**விருச்சிகம்:** பதற்றமான சூழ்நிலையால், நல்லவரையும் தவறாக கருதும் நிலை வரலாம். தொழில், வியாபாரத்தில் தேங்கிய பணிகளை விரைவு படுத்துவீர்கள். புதிய இனங்களில் செலவு அதிகரிக்கும். உடல்நலம் கருதி சிகிச்சை பெறுவீர்கள்.

**தனுசு:** சவால்களை வென்று சாதனை புரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். உங்களைச் சார்ந்தவர்களுக்கு உதவுவீர்கள்.

**மகரம்:** உறவினர்களிடம் இதமாக பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால் பணவரவு சீராகும். உடல் நிலையில் மிகுந்த கவனம் வேண்டும். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி விகிதம் அதிகரிக்கும்.

**கும்பம்:** திறமையுடன் செயல்பட்டு பணியை எளிதாக்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் பெறும். பணம் கிடைக்கும். மனைவிக்கு விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மீனம்:** உங்களின் யதார்த்த பேச்சு, சிலர் மனதை கஷ்டப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிப்பால், குறைந்த பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணங்களைத் தவிர்க்கவும். புத்திரர்களின் செயல் பெருமை தேடித்தரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 5 | | | | 6 | | |
| | | | 6 | | | | | |
| | 4 | 6 | | 8 | | | 1 | 5 |
| | | 7 | | 9 | 1 | 4 | | |
| | 5 | | | | | | 3 | |
| | | 1 | 5 | 2 | | 7 | | |
| 8 | 2 | | | 5 | | 3 | 7 | |
| | | | | | 2 | | | |
| | | 3 | | | | 8 | | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 8 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 7 | 5 | 2 | 9 | 3 | 6 | 8 | 1 | 4 |
| 9 | 4 | 8 | 7 | 2 | 1 | 5 | 6 | 3 |
| 5 | 1 | 7 | 6 | 8 | 3 | 9 | 4 | 2 |
| 6 | 8 | 4 | 2 | 7 | 9 | 1 | 3 | 5 |
| 3 | 2 | 9 | 1 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 2 | 9 | 3 | 5 | 6 | 7 | 4 | 8 | 1 |
| 8 | 7 | 1 | 4 | 9 | 2 | 3 | 5 | 6 |
| 4 | 6 | 5 | 3 | 1 | 8 | 2 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

"உங்களுக்கு சீனி இல்லை" என டாக்டர் சொல்லும் போது சந்தோஷமாகவும்...



ரேஷன் கடைக்காரன் சொல்லும் போது கஷ்டமாகவும் இருக்கிறது...!



வாழ்க்கையில் முன்னேற ஐந்து வழிகள்
5. மதுப் பழக்கம் கூடாது
4. காதலில் விழக் கூடாது
3. பெத்தவங்க பேச்ச கேக்கனும்.
2. பேஸ்புக்கில் இருக்கக் கூடாது.
1. முக்கியமான ஒன்னு, இன்ஜினியரிங் படிக்கவே கூடாது

**பேஸ் புக்கில் பிடித்தவை...**

( ஷதா மூங்கில் ) and 3 others

ஸ்ரீ ( SRI ) @KeethaSj · 40m
மகான் போல்
வாழ வேண்டும் என்றில்லை.
மனசாட்சிப்படி வாழ்ந்தால் போதும்...!
15 1

விக்டர Talks and 6 others follo

indiavaasan @indiavaasan
நடுநிலை தவறுதல் நன்மையே தந்தாலும் அவ்வாறான எண்ணத்தை அப்போதே ஒழித்துவிட வேண்டும்.
(நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை அன்றே யொழிய விடல்–113)

# கணவன்- மனைவி

மனைவி;– "என்னங்க.. அந்த உப்பு டப்பாவை... எடுத்துக் கொண்டு வாங்க...!"
கணவன்;– "எங்க..வச்சிருக்க.. காணோமே...?"
மனைவி;– "உங்களால..என்ன செய்ய முடியும்...! உங்க அம்மா உங்கள எப்படித்தான் வளர்த்தாங்களோ..! உருப்படியா.. ஒரு வேலை செய்ய..முடியுதா...? உங்கள கட்டி வச்சு...எங்கட வீட்டுக்காரங்க... என்னை ரொம்ப ஏமாத்திட்டாங்க...! நீங்கெல்லாம்..
கணவன்;– "இல்ல..நிஜமாவே காணோம்..!"
மனைவி;– "உங்கள..நம்பி ஒரு வேலையை ஒப்படைக்க.. முடியுமா..? உங்களால ஒரு வேலையும்.. உருப்படியா செய்ய முடியாதுன்னு தெரிஞ்சு.. தான் உப்பு டப்பாவ நான் ஏற்கனவே... இங்க கொண்டு வந்துட்டேன்...!!




# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சின்னராசா

(ஓய்வுபெற்ற புகையிரத தொழில்நுட்ப உத்தியோகத்தர், நாடகக் கலைஞர்)

மண்ணில்
16 . 02 . 1941



விண்ணில்
12 . 01 . 2016

யாழ்.அம்பனை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கந்தரோடை கந்தையா உபாத்தியார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சின்னராசா 12.01.2016 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், அன்புக்கரசி, கலையரசி, தமிழரசி, இங்கர்ஷால் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,திருநாவுக்கரசு, மங்கையற்கரசி, பொற்கொடி, காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி, திருஞானசம்பந்தர், இரத்தினம், முத்தம்மா, சரஸ்வதி, கனகம்மா, தருமலிங்கம், மார்க்கண்டு, செல்லத்துரை, வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சந்திரசேகரம், யோகேஸ்வரன், தனேந்திரன், சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும்,சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பவித்திரா, சுமித்திரா, டபித்திரா, யனுஷன், கயோனா, சுயானி, தமிழவன், அருஸ், அரிஷா, மிதுலேஷ், யவினேஷ், நீலேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


கந்தையா உபாத்தியார் வீதி,
கந்தரோடை மேற்கு,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(67635)(11,15)

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- இலங்கை - 021 224 0388, 077 417 1255,
இங்கர்ஷால் - பிரித்தானியா - +447 951 352462

## துரைராசா இரத்தினம்



நவக்கிரியைப் பிறப்பிடமாகவும், சங்கோலை மாவிட்டபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும், k.k.s வீதி, இணுவில் மேற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட துரைராசா இரத்தினம் 15.01.2016 வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், அழகேஸ்வரியின் பாசமிகு கணவரும், இன்பலதா (ஆசிரியர் - யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்), இன்பரூபி, இன்பமோகன் (நியூ லலிதாஸ் ஜூவெல்லறி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபன், திருவரன் (மாயவன் அரைக்கும் ஆலை - கிளிநொச்சி), சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரகாசினி, திகழினி, அஸ்வினி, தர்விகா, கவிசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் பாலையா, சரஸ்வதி ( கனடா), தியாகராஜா (சுவிஸ்), இராஜேஸ்வரி, கமலாம்பிகை, கணேசலிங்கம் (கனடா), சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருநாவுக்கரசு, சங்கரப்பிள்ளை (லண்டன்), சோதிமலர், இந்திராணி, காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் தருமபூபதி (சுவிஸ்), காலஞ்சென்ற அற்புதராசா, சந்திரசேகரம், வேதநாயகி (கனடா), தருமதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S வீதி,
இணுவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- 077 791 1432

# மரண அறிவித்தல்

## ஜோசப் பீற்றர் ஜேசுராஜன்

(ஓய்வு பெற்ற தேசிய சேமிப்பு வங்கி உதவிமுகாமையாளர்)



பிறப்பு
24.12.1953

இறப்பு
14.01.2016

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப்பீற்றர் ஜேசுராஜன் 14.01.2016 (வியாழக்கிழமை) கர்த்தருக்குள் நித்திரையானார்.

### அன்னாரது தகவல்கள்

| | |
|---|---|
| பெற்றோர் | : ஜோசப் பீற்றர் - மேரிப்பிள்ளை (காலஞ்சென்றவர்கள்) |
| மாமா, மாமியார் | : ஐயாத்துரை - இராசமணி(காலஞ்சென்றவர்கள்) |
| மனைவி | : மனோரஞ்சிதமலர் |
| சிறிய தாய்மார் | : லில்லி ஜோசபீன், தெரேசம்மா(காலஞ்சென்றவர் - ஓய்வு பெற்ற ஆசிரியர்) |
| சகோதரர் | : ஜோர்ஜ் (இந்தியா) |
| பிள்ளைகள் | : ஜொபிற்றா மேசி(லண்டன்), ஜஸ்ரின் ஜெயந்தன்(கனடா), யூட் ஜீவன்(RDA), ஜெராட்ஜோன்சன்(NSB), ஜேம்ஸ் யூலியன் (RAM Construction), ஜெனிஜெரோம்(Manorajan Construction) |
| மருமக்கள் | : கிருபானந்தன்(லண்டன்), ஜெனந்தி(கனடா) |
| பேரர் | : அஞ்சனன், அகல்யன், அஞ்சயன்(லண்டன்), அனஞ்சா (சக்தி - கனடா) |
| மைத்துனர் | : சந்திரவதனா(கனடா), இராமச்சந்திரா(காலஞ்சென்றவர் - RMC (RDA, RDD )), மேனகா(இந்தியா) |
| சகலர் | : மெய்யழகன்(கனடா - ஓய்வுபெற்ற அதிபர்), இந்திரமதி(ஓய்வு பெற்ற ஆங்கில விரிவுரையாளர்) |
| பெறாமக்கள் | : சிந்துஜா, கிருஷாந்தி(இந்தியா), சசிகலா(பிரான்ஸ்), மேகலா (கனடா), குகன்(கனடா), அச்சுதன்(பிரான்ஸ்), ஜெயகலா (கனடா) |
| மருமக்கள் | : நிருஷா(லண்டன்), Dr.தர்ஷா(யாழ் போதனா வைத்தியசாலை), துளஷா(ஆங்கில ஆசிரியர்), கௌஷா(சம்பத்வங்கி) |

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.01.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் வடக்கு லூர்து மாதா தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் பிற்பகல் ஒரு மணியளவில் மட்டுவில் வடக்கு லூர்து மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:
077 172 7650(பேபி), 0044 795 775 1315 (ஜொடி), 0016 477 179 743 (ஜெயந்தன்), 077 193 0443(யூட்), 077 963 8342(ஜொராட்), 077 247 9796(யூலி), 077 053 5389(ஜோய்)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 10 . 1948



மறைவு 16 . 01 . 2012

அமரர் கனகராயர் சிவபாலன்(துரை)

ஓய்வு பெற்ற கணக்காளர் இலங்கை போக்குவரத்து சபை (C.T.B)கோண்டாவில்

**திதி: தை அபரக்க அட்டமி**

பாசத்தை சுமந்து வழிகாட்டியாக
எம்மை வழிநடத்திய தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

"அருளானை"
அம்பனைச்சந்தி,
பன்னாலை, தெல்லிப்பழை.

என்றும் உங்கள் நினைவில் வாழும் குடும்பத்தினர்.

## 33 ஆம் நாள் நினைவலைகள்



அமரர் சண்முகம் குகதாசன்

(ஓய்வு நிலை C.W.E - லிகிதர்)

மண்ணில் 21.10.1935

விண்ணில் 16.12.2015


மண்ணில் வந்த காரியங்கள்
மனநிறைவாய் முடிந்ததென்றோ
விண்ணில் சென்று வீற்றிருக்கும்
விமலன் பாதம் அடைந்தீரோ
இறைவன் பாத நிழலிருந்து
இங்கு தவிக்கும் எங்களுக்கும்
வளமாய் வாழ வழி காட்டி வம்சம் தழைக்க வாழ்ந்திடுவீர்

முதலியாவளவு ஒழுங்கை,
இமையாணன்,
உடுப்பிட்டி. (67705)(13.15)

மனைவி, மக்கள்.

## கண்ணீர் அஞ்சலிகள்

மண்ணில் 15 . 10 . 1934



விண்ணில் 13 . 01 . 2016

சின்னத்துரை கோபாலுப்பிள்ளை

வேலணையூரின் மைந்தனாய் வந்து
சாதனைகள் பல படைத்தவரே
சாரத்தியமுடன் வாணிபமதிலும்
வல்லவனாய் திகழ்ந்தவரே
நன் மக்களை நானிலத்தில் தந்து
நலன் பேணி உழைத்தவரே
பெரு விருட்சமாக் கிளை பரப்பி
விழுதுகளாய் நாம் வாழ வைத்தவரே
காலமெலாம் உடனிருந்து எமை
காத்திடுவாய் என்றிருந்தோமே
பொல்லாத காலனும் பொறுக்க முடியாமல்
நோய்வடிவில் வந்து கவர்ந்தானே
நெஞ்சமதில் வஞ்சமற குடிபுகுந்த உந்தன்
ஆத்ம சாந்திக்காய் அஞ்சலிக்கின்றோம்

இல.29, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
இல.15, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் துயருறும்
கீர்த்தனா ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்,
குடும்பத்தினரும்.

தொடர்பு: 077 335 3644

## துயர்பகிர்வு

திருமதி நீலாம்பிகை சண்முகலிங்கம் (Nee-சுப்பிரமணியம்)

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயர் அடைவதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி:திருமதி நவமணி (ராணி) செல்வராஜா
57, அரசடி வீதி,யாழ்ப்பாணம். (67704)(13.15)

## 60 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 12 . 06 . 1974



ஆண்டவன் மடியில் 21 . 11 . 2015

அமரர் வில்வராஜா சுதாகர்

கடந்த 21.11.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வில்வராஜா சுதாகர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் **செவ்வாய்க்கிழமை (19.01.2016) முற்பகல் 11 மணியளவில் லட்சுமி மண்டபத்தில்** (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவ பீடத்துக்கும் இடையில்) நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்ததும் வைத்தியசாலைக்கும், வீட்டுக்கும் ஓடோடி வந்து பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும், ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


அத்துடன் தொலைபேசி, முகநூல் மூலம் ஆறுதல் கூறியோருக்கும், இரங்கல் உரையாற்றியோருக்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும், பத்திரிகை, பதாகைகள் மற்றும் மலர் வளையங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் அவரின் இறுதிக்கிரியை நல்ல முறையில் நடைபெற உதவி புரிந்தவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் இதுவரை எம்முடன் தோள்கொடுத்துக் கொண்டிருக்கும் நட்புக்கள், உறவுகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

திருநெல்வேலி. (67706)(11.17.18) குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி | முதலாம் ஆண்டு நினைவஞ்சலி


பிறப்பு 04.10.1959



இறப்பு 20.03.2011

அமரர் தில்லையம்பலம் அரியரத்தினம்

பிறப்பு 09.02.1967



இறப்பு 27.01.2015

அமரர் தில்லையம்பலம் கேசவன்

திதி: வளர்பிறை அட்டமி

ஜனனமும் மரணமும் இயற்கையென்பர்
மாண்டவர் மீண்டிடார் என்பதும் வழமை
காலனவன் காவு கொண்ட எமதுறவுகளே
கானலாய் போனதுவோ உம் வாழ்வதுவும்
ஆண்டுகள் பல ஓடினாலும்
ஓயாது உம் நினைவலைகள்

வத்திராயன் தெற்கு,
தாளையடி.

குடும்பத்தினர்.

## வருடாந்த பொதுச்சபைக் கூட்டம்

ஆலங்கட்டை மயான பராமரிப்புச் சபையின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நெல்லியடி, நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் தலைவர் உமாபதி கயிலாயநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வடமாகாண மீன்பிடிப் போக்கு வரத்து கிராம அபிவிருத்தி வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலன், வடமராட்சி தெற்குமேற்குபிரதேச செயலர் ச.சிவசிறி ஆகியோர் கலந்து கொள்வர்.

(த-ஐ-35)

## கூட்டமைப்புக் காரியாலய பெயர்ப்பலகை சேதம்

கரணவாய் ஜன.17

கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்திற்கருகில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேசக் காரியாலயத்தின் பெயர்ப்பலகை நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெயர்ப்பலகையின் மீது கழிவு ஓயில் வீசியிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு பெயர்ப்பலகை இனம் தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

(த-108)

## சதொசவில் அரச ஊழியர்களுக்கு விசேட சலுகையில் பொருள்கள்

கொழும்பு,ஜன.17
அனைத்து அரச ஊழியர்களுக்கு இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் (சதொச) ஊடாக விசேட சலுகை விலைகளில், நுகர் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் செயற்றிட்டமொன்றை விரைவில் நடைமுறைப் படுத்த விருப்பதாகத் தொழில்துறைகள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.
இந்த வாய்ப்பு வெகு விரைவிலேயே அரச ஊழியர்களுக்குக் கிட்டவுள்ளதோடு, முப்படைகளுக்கும் தேவையான உணவுகள் , பானங்கள் தொடர்பாக அவசியப்படும் பொருள்களை லங்கா சதொச மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
தற்போது 300 ஆக இருக்கும் லங்கா சதொச கிளைகளை, இந்த ஆண்டின் முடிவில் 500 வரையில் அதிகரித்து விடுவதற்கும் நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

(த-ஜ-22)

## தீர்வையின்றி இறக்குமதியான கார் தம்புத்தேகமவில் சிக்கியது

கொழும்பு,ஜன. 17
ஜப்பானில் இருந்து மோட்டார் வாகனங்களின் உதிரிப்பாகங்களை தருவிக்கும் போர்வையில் கொள்கலனொன்றுக்குள் களவாக ஒளித்து, தீர்வை வரிகள் இல்லாது நாட்டுக்குள் எடுத்து வரப்பட்டிருந்த மோட்டார் கார் ஒன்றுடன் சந்தேக நபரொருவர் கடந்த வாரம் தம்புத்தேகம பொலிஸாரால் கலுந்தேகமவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.
தம்புத்தேகம பொலிஸ் நிலையத்தின் குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்திருந்த இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் சந்தேக நபருடன் கார் கைப்பற்றப்பட்டிருந்தது.
இது தொடர்பாக தம்புத்தேகம பொலிஸாரினால் சுங்கத் திணைக்களத்துக்குத் தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

(த-ஜ-22)

# சுற்றாடலுடன் இணைந்ததாகவே இனிக் கட்டடங்கள் நிர்மாணிப்பு

இலங்கையில் நிர்மாணிக்கப்படும் கட்டடங்கள் அனைத்தும் இனிமேல் சுற்றாடலுடன் ஒன்றிணைந்ததாகவே நிர்மாணிக்கப்படும். இந்த நடவடிக்கை இந்த வருடம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.
கட்டடத்தினுள் சுகாதாரமான சூழல் ஏற்படுத்தக்கூடிய சக்தி, நீர் மற்றும் ஏனையவற்றின் பாவனையை மட்டுப்படுத்தும் வகையில் இந்த மர கட்டட எண்ணக்கருவை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதன் முதற்கட்டமாக அரச மற்றும் அரை அரச நிறுவனங்களின் கட்டடங்கள் சுற்றாடல் நட்பு கொண்டவையாக நிர்மாணிக்கப்பட்டு பராமரிக்கப்படுவதற்குத் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டவரைவின் வழிகாட்டலை வழிகாட்டியாக்குதல் மற்றும் அதற்கான செயற்பாடுகளை திட்டமிட அதிகாரிகள் குழுவொன்றை நியமித்தல் என்பன முன்மொழியப்பட்டுள்ளன.
இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த முன்மொழிவு அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

(த-4)

## மரண அறிவித்தல்கள்

### விநாயகமூர்த்தி விஜயரூபன்



விசுவமடுவைப் பிறப்பிடமாகவும் வேலணைப் பெருங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி விஜயரூபன் 15.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் விநாயகமூர்த்தி - காலஞ்சென்ற பத்மாவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி மற்றும் சிவயோகம் தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பலதாவின் அன்புக் கணவரும், தனுஜன், யதுஷன் ஆகி யோரின் அன்புத் தந்தையும், பத்மநாதன், விசிதரன், யசோதா, விஜயரஞ்சன், நாகேஸ்வரி (ஈசு), விஜயதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகிழ்ந்தா, செல்விராசேஸ்வரி, அம்பிகா, சிவானந்தன், யோகவாசு ஆகியோரின் அன்பு மைத்துன ரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக் காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருங்குளத்தடி,
அம்மன் கோயிலடி,
வேலணை கிழக்கு.
(87640)(11,15,18)

தகவல்:
குடும்பத்தினர்.

077 828 0459

## மரண அறிவித்தல்கள்

### சந்திரன் சுதர்சன் (சுதன்)



நாவலடி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரன் சுதர்சன் 2016.01.13 புதன்கிழமை நாவலடி உடுப்பிட்டியில் காலமானார்.
அன்னார் சந்திரன் - ரஞ்சினி தேவி தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற செந்தில்வேல் மற்றும் பூமணி தம்பதியரின் மருமகனும், தாட்சாயினியின் (தீபா) பாசமிகு கணவரும், சுஜீபா, சுனந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அனுஷியின் அன்பு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக் காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிசான் தொலைத்தொடர்பகம்,
நாவலடி, உடுப்பிட்டி.
(சி/28706)(11,15,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- 077 694 3178, 077 934 3299

### பூஜின் மரியாம்பிள்ளை
(சட்டத்தரணி, மனித உரிமைகள் இல்லம்)



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் V.T.V.Court கொட்டாஞ் சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட பூஜின் மரியாம்பிள்ளை 15.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான V.P. மரியாம்பிள்ளை - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுசீலாவின் அன்புக் கணவரும் சகிலா மேரியின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பூலின் மற்றும் தார்சீசியஸ் (கனடா), மேரியோசவ்வின், அலோசியஸ்(கனடா), சுயசிந் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலாசேவியர், அருட்சகோதரி கமலா (நாவாந்துறை கன்னியர் மடம்), அமலதாஸ்(நோர்வே), தேவதாஸ், பமிலா(இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக மாதம்பிட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


426/11, 4/10 V.T.V.Court
Bloemendhal Road,
Colombo - 13

தகவல்:
பே.அமலசீலன்
மைத்துனர்

தொடர்பு: 011 238 8008, 072 213 7916

### Dr.சரவணபவன் (நிரஞ்சன்) நடராஜா

தோற்றம்
21
.
07
.
1962



மறைவு
14
.
01
.
2016

இலங்கையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.சரவணபவன் நடராஜா 14.01.2016 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற நடராஜா மற்றும் அற்புதமலர் (கனடா) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற பூலோகராஜா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், லலிதராவின் அன்புக் கணவரும், பாலாஜி, சத்யா, பிரசாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மஞ்சுளாதேவி (U.K), மங்களேஸ்வரி (கனடா), திருஞானபவன் (கனடா), சதானந்தபவன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிதரா (கனடா), சசிதரன், ரவிதரன், சந்திரமோகன் (U.K), பிரபாகரன் (கனடா), தீபா (கனடா), நீரஜா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (18.01.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி28700)(11,15,18)

தகவல்:
குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி



திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் காலஞ்சென்ற பிரதமகுருக்கள், மகாகணபதீஸ்வரக்குருக்கள் அவர்களின் புத்திரரும் தற்போதைய பிரதமகுருக்களாகிய

சுதாகரக்குருக்களின்

மூத்த சகோதரரும் எமது ஆலயத்தின் முன்னாள் நித்திய பூசகரும் ஆகிய

பிரம்மஸ்ரீ பாஸ்கரக்குருக்கள்

அவர்களின் திடீர் மறைவால் கலங்கி நிற்கும் அன்னாரின் குடும்பத்தவர் துயரில் எமது தேவஸ்தானமும் அடியவர்களும் பங்கு கொண்டு கலங்கி நிற்கின்றனர்.

திருநெல்வேலி பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்.
பரிபாலன சபை.

25 ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கோவிந்தன் பரமேஸ்வரி

திதி:- 17.01.2016

அன்பான அம்மாவே! கால் நூற்றண்டு
காலம் சென்று விட்டாலும் உங்களது
நினைவுகளும், நாம் வாழ்ந்த பசுமையான
பொற்காலங்களும் இன்றும் மனதில் தெரிகிறது
என்றுமே உங்கள் நினைவுகளுடன்
வாழ்கின்றோம்.

மகன், குடும்பத்தினர்.
5ஆம் ஒழுங்கை, முல்லைவீதி,
பரந்தன்.

பிறப்பு 06.08.1948
இறப்பு 23.01.1991

3 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் கனகசுந்தரம் சிவராசா

மண்ணில் 23.06.1953
விண்ணில் 19.01.2013

திதி: பூர்பக்க அட்டமி

இமை மூடித் திறப்பதற்குள்
மூன்றாண்டுகள் சென்றதப்பா!
நினைக்கவே நெஞ்சம் வெடிக்குதப்பா!

கோயிலாமனை,
கொடிகாமம்.
(60705) (13.15)
குடும்பத்தினர்.

# ஒழுக்காற்று ஆசிரியரின் இடமாற்றத்துக்கு பழைய மாணவர் சங்கம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன.17

பாடசாலைக்கு ஒழுக்கவீனமாக வந்த மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த ஒழுக்காற்று ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமைக்கு குறித்த பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஆனால் குறித்த ஆசிரியரின் ஒழுக்காற்று நடவடிக்கை மிக மோசமானதாக இருந்ததாகத் தெரிவிக்கும் கல்வி அமைச்சுச் செயலர், மாகாணப் பாடசாலைக்குரிய அவர் தேசியப் பாடசாலையில் கல்வி கற்பிக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லாததாலும் இடமாற்றம் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டள்ளதாவது:

குறித்த பாடசாலையில் கற்பிக்கும் உடற்கல்வி ஆசிரியரே பாடசாலையில் மாணவர் ஒழுக்குக்குப் பொறுப்பாகவும் உள்ளார். மாணவர்கள் சீரான முறையில் சீருடைகள் அணியாமல் வருவது தொடர்பில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து மாணவர்களை வழிநடத்துவது அவரது பொறுப்பு.

இந்தநிலையில் குறித்த ஆசிரியர் திடீரென வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி தி.திருவருள் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் உரிய சீருடைகளை அணிந்து பாடசாலைக்கு சமுகமளித்து வந்திருந்தமையை பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன பாடசாலை நிர்வாகத்துக்குச் சுட்டிக் காட்டியிருந்தோம்.

இதன் காரணமாக பாடசாலையில் அக்கறை கொண்ட ஆசிரியர்கள் சிலர் சீருடை தொடர்பில் கவனமெடுத்து வந்திருந்தனர். ஆனால் மாணவர்களைச் சீருடையில் மாற்றத்தைச் செய்யுமாறு கோரியும் சில அதிகாரிகளின் பிள்ளைகள் எனத் தம்மை அடையாளப் படுத்துபவர்கள் இதற்கு இடையூறாகக் காணப்பட்டதுடன் சீருடையை மிக மோசமாக அணிந்து வந்திருந்தனர்.

இதன்போது ஆசிரியர் ஒருவர் நடவடிக்கை எடுத்திருந்தார். அதில் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளாரின் மகனும் உள்ளடங்கியுள்ளார். இவ்வாறான நிலையில் அவரது மகனும் பாடசாலை ஒழுங்கைக் கடைப்பிடிக்கவில்லை எனக் கூறப்பட்டது. இதனால் அந்த மாணவனுக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததால் குறித்த ஆசிரியரைக் கல்வி அமைச்சின் செயலாளர் உடனடியாக இடமாற்றம் செய்துள்ளார். இந்த நடவடிக்கை தொடர்பாகச் சட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளதாகத் திருவருள் தெரிவித்தார்.

இது தொடர்பில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனிடம் கேட்டபோது, குறித்த ஆசிரியரின் ஒழுக்காற்று நடவடிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. பாடசாலைக்கு ஒழுக்கவீனமாக வரும் மாணவர்களின் நீளக் காற்சட்டையை கால் பகுதியுடன் சிலருக்கு வெட்டியுள்ளார். தாடி, மீசையை உரியமுறையில் வெட்டாது வரும் மாணவர்களுக்கு ஒரு பக்க மீசையை அல்லது ஒரு பக்கத் தாடியை அவர் வெட்டியுள்ளார். அது பற்றிய முறைப்பாடுகள் முன்னரும் கிடைத்துள்ளன. எனது மகனுக்கும் நீளக் காற்சட்டையை கால் பகுதியுடன் வெட்டியுள்ளார். எனது மகன் பாடசாலைக்குப் பிந்திச் சென்றதால் அவ்வாறு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

அந்த ஆசிரியரின் ஒழுக்கநெறிக் கட்டுப்பாடுகள் ஏற்றதாக இல்லை. பாடசாலை மாணவர்களுக்கு வருடத்தில் ஒரு தடவை துணி வழங்கப்படுகிறது. அவ்வாறு வெட்டிவிட்டால்பிறகு மாணவர்கள் எதனை அணிந்து பாடசாலை செல்வது?

ஒழுக்க முறையை மீறி பாடசாலைகளுக்குச் செல்பவர்களுக்கான நடவடிக்கை அப்படிப்பட்டதல்ல. எதனையும் முறையான ஒழுங்கு முறைப்படியே செய்ய வேண்டும்.

அந்த ஆசிரியர் மாகாணப் பாடசாலையில் பதிவு பெற்றுள்ள போதும் தேசியப் பாடசாலையிலேயே கல்வி கற்பிக்கிறார். ஆனால் மாகாணத்திணைக்களத்திலிருந்தே சம்பளம் பெற்று வருகிறார். தற்போது அவருக்கு அங்கு வெற்றிடம் இல்லாததால் அவர் முன்னர் போன்று மாகாணப் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். கடந்த புதன்கிழமை அதற்கான கடிதம் வழங்கப்பட்டுள்ளது-என்றார். (த-ஐ-4)

ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் 10.07.1985
உதிர்வு 27.01.2015

அமரர் க.சுதாஜினி

திதி :- (வளர்பிறை அட்டமி)

எங்கள் அன்பின் மகளே ஆசை செல்வமே
நீ சென்று ஓராண்டு ஆனாலும் ஆறாதம்மா எம் துயரம்
உன் உடல் எங்களை விட்டு பிரிந்தாலும்
உனது முத்தான சிரிப்பும்.உள்ளம் கனிந்த பேச்சும்
உன் அழகான தோற்றமும்.அன்பான பார்வையும்,
அரவணைக்கும் கைகளும்.ஓடித், திரிந்த கால்களும்.
எங்கள் மனக் கண்முன் எப்போதும் நிழலாடுதம்மா
எங்களை எல்லாம் இவ்வுலகில் தவிக்கவிட்டு
மிக விரைவாக ஜோதியுடன் கலந்ததேனோ!!!

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம் !!

பட்டாணிச்சூர்.
வவுனியா
குடும்பத்தினர்

## 98 ஆசிரியர் பயிற்சி மையங்கள் வலயங்கள் ரீதியாக அமைப்பு

கொழும்பு,ஜன.17

ஆசிரியப்பயிற்சியைசெயற்றிறன் மிக்கதாக மீளவும் ஆரம்பிப்பதற்காக ஒவ்வொரு வலயப் பணிமனைகளுடனும் இணைந்ததாக 98 ஆசிரியப் பயிற்சிமையங்களை நிறுவு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் அரசியல் நியமனங்கள் போன்றே பல தரப்பட்ட காரணிகளால் கல்விச் சீர்கேடுகள் ஏற்படுத்தப்பட்டன. ஒரேயடியாக நூற்றுக்கு நூறு வீதமான இந்தச் சரிவை நிறுத்தி விட இயலாது.

எதிர்காலத்தில் தேசியப் பாடசாலைகளுக்கான அதிபர்நியமனங்களைசரியான முறைமை யொன்றுக்குக் கொண்டு வரவுள்ளோம்.

இந்த ஓராண்டு காலத்துக்குள் கல்வித்துறையில் 825 பதவி வெற்றிடங்களைநிரப்புவதற்குச்செயற்பட்டிருந்தமை போன்றே இந்த ஆண்டில் மேலும் 4 ஆயிரம் பேர் சேர்த் துக் கொள்ளப் படவுள்ளனர்.

கடந்த ஆண்டில் 600 பாடசாலை அதிபர்களுக்கு உள் நாட்டில் பயிற்சி பெறுவதற்கும், 120 அதிபர்களுக்கு வெளி நாட்டுப் பயிற்சியைப் பெறுவதற்கும் வாய்ப் பளிக்கப்பட்டுள்ளது. அந்தப் பயிற்சிகள் மூலமாக எதிர் காலத்தில் கல்வித் துறையை மேம்படுத்தி விடுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

மேலும் 250 மில்லியன் ரூபா செலவில் பாடசாலைகளுக்கு பல்சத்திர சிகிச்சை நிலையங்கள் நிறுவி வழங்கப்படவுள்ளன. எதிர் காலத்தில் கல்வி அமைச்சினால் மாகாணங்கள் மட் டத்தில் பாடப் புத்தகங்களுக்கு மேலதிகமான வாசிப்புப் புத்த கங்களும் பாடசாலை களுக்கு வழங்கப்படவுள்ளன.

வரலாற்றில் என்று மில்லாதவாறு கல்வித்துறைக்கு இந்த முறை 67 பில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளது. விஞ்ஞான பீடங்களுக்கான கட்டடங்களை அமைத்து விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழில் நுட்பம் போன்ற துறைகளுக்கு ஆசிரியர்களைப் பெருமளவில் பயிற்றுவிப் பதற்குச் செயற்படவுள்ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (த-ஐ-22)

## பயண மார்க்க அறிவித்தல் பலகை தமிழில் இல்லாதிருப்பின் வழக்கு

கொழும்பு,ஜன.17

மேல் மாகாணத்தில் முதற்றடவையாக நடைமுறைப்படுத்தப்படும் பயணமார்க்கங் கள் சட்டம் தொடர்பாகத் தமிழ் மொழியிலும் காட்சிப் படுத்தப்படும் அறிவித்தல் பலகை களை எதிர் வரும் இரு வார காலத்துக்குள் வீதியில் பொருத்தி விடுமாறு தேசிய சகவாழ்வு கருத்தாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

இவ்வாறு செயற்படாது விடில் வழக்குத் தொடுப்பதற்கு செயற்படவுள்ளதாகவும் மேற்படி அமைச்சுப் பிரிவுகள் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் மூலமாக தெரியப்படுத்தியுள்ளன.

இன்றளவில் பயண மார்க்கங்களுக்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்ற அறிவித்தல் பலகைகள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரம் நடப்பட்டிருப்பதும் அது பற்றி தமிழ் மொழியில் குறிப்பிடப் படாதிருப்பதுமே இந்த நடவடிக்கைக்குக்காரணமாகவுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதத்தின் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பமாகியுள்ள இந்த பயண மார்க்கங்கள் சட்டத்தின் கீழ் கடந்த டிசெம்பர் 23ஆம் திகதி வரையில் அந்தச் சட்டத்தை மீறியிருந்த 62 ஆயிரத்து 728 சாரதிகள் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (த-ஐ-22)

## முதியோர் கௌரவிப்பு இன்று

புரட்சித்த தலைவர் எம்.ஜி.ஆரின் 99ஆவது பிறந்த தினைத்தை முன்னிட்டு பாசையூரில் அவரது உருவச்சிலை அமைத்துள்ள திடலில் முதியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வில் விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் இ.ஆனல்ட் கலந்து கொள்வார். (த-ஐ-23)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து, கிளிநொச்சி பரந்தன், மன்னார் பெரியகடை, வட்டக்கண்டல், ஆட்காட்டிவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொருளாதார ரீதியில் மிகவும் நலிவுற்ற குடும்பங்களுக்கு தேவைகளின் அடிப்படையில், துவிச்சக்கர வண்டிகளை வழங்கிவைத்தார். (ஐ-21)



புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புலம் நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களும், மாணவர்களும். (ஐ)



கொட்டடி சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற புதிய நிர்வாக சபைத் தெரிவின்போது வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் வழங்கினார். (ஐ-135)



வடக்கு மாகாணசபை உறுப்பினர் பசுபதிப் பிள்ளை, கிளிநொச்சி கிருஷ்ணன் ஆலயத்தில் திருப்பாவை பாடல்களைப் பாடிவரும் மாணவத் தொண்டர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார். (ஐ-426)



கிளிநொச்சி–இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாடு இடம்பெற்றது. மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி அடியார்களுக்கு தாயகத்தில் முதன் முதலாக சக்தி மாலை அணிவித்தலும் இருமுடி செலுத்தலும் இடம்பெற்றுள்ளது. (ஐ-426)



நல்லாட்சியின் ஓராண்டு நிறைவையொட்டி வேலணைப் பிரதேச செயலகத்தில் மரம் நடும் நிகழ்வு இடம்பெற்றது. வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், பிரதேச செயலக முன்றிலில் மரக் கன்றுகளை நட்டு வைத்தார். (ஐ-7)



வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற சுற்றாடல் முன்னோடி பாசறை நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், மரநடுகைமேற்கொள்ளப்படுவதையும்காணலாம். (ஐ)





வட பிரதேச நல்லொழுக்க சம்மேளத்தின் ஒழுங்கமைப்பில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டில் புற்றுநோயாளர்களுக்கு அன்பளிப்புப் பொருள்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-29)





முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுமார் 15 மாணவர்களுக்கு நல்லூர் றோட்டரிக் கழகத்தால் சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இதற்கான நிதி உதவியை சுவிஸ் நாட்டைச் சேர்ந்த தம்பையா ரமேஸ் என்பவர் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவுப் பொது நூலகத்தின் தேசியவாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. (ஐ)




தென்மராட்சி பனை தென்னை வள உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி வளாகத்தில், நெல்லியடி வட்டம் லயன்ஸ் கழக ஆதரவில் இடம்பெற்ற நிகழ்வில், வரணி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவி செல்வி ரே.மதுஜாவுக்கு லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் எஸ். தவச்செல்வம் பரிசில் வழங்கினார். (ஐ-122)






காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் க.நேத்திரானந்தன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஓய்வு நிலை பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர். விழாவில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-250)



அனலைதீவு, வடலூர் அ.த.க.பாடசாலைக்கு வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தனது 2015 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் 'பாண்ட்'வாத்திய உபகரணங்களை வழங்கி வைத்தார். (ஐ-86)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராஜ், பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து கூமாங்குளம் கிராமத்தில் உள்ள வீதிகளுக்கு பெயர் பலகை நட்டு வைத்தார். (ஐ)





சமய விழுமியங்கள் மூலம் மாணவர்களிடையே ஒழுக்கத்தை விருத்தி யாக்கல் தொடர்பான செயலமர்வு அண்மையில் பதுளை மாகாண அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வில் செயல் நூலை கல்வி அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி பா.தனபாலன் வெளியிட்டு வைத்தார். (ஐ-29)



சுழிபுரம் ஸ்ரீராம் முன்பள்ளி மீண்டும் ஆரம்பித்து வைக் கப்பட்டுள்ளது. (ஐ-29)



இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் கிறிஸ்தவ ஊழியர் சங்கத்தினால் அண்மையில் ஒளி விழா நிகழ்வு நடத்தப்பட்டது. அதில் விருந்தினர்கள்அழைத்துச் செல்லப்படுவதனைக் காணலாம்.(ஐ-4)



இயற்றாலை அ.மி.த.க.பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் ப்டசாலை அதிபர் ஐ.தேவராஜன் தலைமையில் நடைபெற்றது. (ஐ)





ஆஸ்திரேலியா தமிழ் இலக்கியக் கலைச் சங்கத்தின் வருடாந்த தமிழ் இலக்கிய விழா மெல்பேர்ண் நகரில் நடைபெற்றது. நிகழ் வில் இலங்கைப்பிரதி நிதிகளும் பங்கு பற்றி யிருந்தனர். (ஐ)





மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலாசார விழாவில் தும்பளை யோகா சாந்தி நிலையத்தினரால் நடத்தப்பட்ட யோகாசன கண் காட்சி. (ஐ)





நெல்சிப் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட சங்கானை நவீன மீன் சந்தைக் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (ஐ-29)



சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் அண்மையில் இடம்பெற்ற சிறுவர் சேமிப்புக் கணக்கில் இணைந்துள்ள சிறுவர்களுக்கு அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-29)

மருத்துவர் யமுனாநந்தா

# இடர் காவு கொண்ட சமூக உளம்

(இடர்காவு கொண்ட சமூக உளம் என்ற தலைப்பில் கடந்த வாரம் பிரசுரமான கட்டுரையில் இடரினால் பாதிக்கப்பட் டோருக்கான ஆதரவு வட்டம் குறித்துப் பார்த்தோம். அதன் தொடர்ச்சி கீழே பிரசுரமாகிறது.)

பின் அவர்களுக்கும் மனஅழுத்தம் ஏற்பட்டுவிடும். ஆரம்பநிலையில் செவி மடுத்தல், ஆதரவு, உணர்வுகளை வெளிப்படுத்தல், துயரத்தைத் துறத்தல் என்பனவற்றை மேற்கொள்ள வேண்டும்.

இறுதியில் விரக்தியை எதிர்கொள்ளல், கோபத்தை எதிர்கொள்ளல், தவறான தோற்றப்பாடுகளை மாற்றல் என்பன மேற்கொள்ளப்படும். தனிநபர்களுக்கு உணர்வு பூர்வமான ஆதரவு தேவை. இடரால் உயிரிழப்பு, சொத்து இழப்பு,சூழல் வளம் பாதிப்பு என அவர்கள் துன்பத்திலும் மீளாத் துயரிலும்,பதகளிப்பிலும் கோப உணர்விலும் இருப்பர். இந்த இடர் கள் தனிப்பட்ட ரீதியில் மன அழுத் தங்களாகவும் அமையும்.

சமூக ரீதியில் சமூகக் கட்டமைப்புக்கள் உடைவதால் அவர்களுக்கு உரிய இயற்கைத் தாக்கங்கள் இல்லாது போகின்றன. அதாவது சாதாரண சூழலில் இழப்பு ஏற்படும்போது சமூகத்தில் ஏனையவர்கள் உதவக்கூடிய நிலையில் இருப்பர். ஆனால் இந்த இடர் வீட்டுக்கு வீடு வாசற்படி என்பதை காட்டியது. இந்தப் பெரிய இடர் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் பாதித்துள்ளது. உணவு, உடை, உறையுள் என அத்தியாவசியத் தேவைகள் பாதிக்கப்பட்டு உள்ளன. ஆரோக்கியமான உளவளத்துக்கு மீள்வதற்கு காலத்துடன் திட்டமிட்ட புனர்வாழ்வுத் திட்டங்கள் அவசியம்.

தனிநபரில் உடனடியாக ஏற்படும் உணர்வு மாற்றங்களாக பதற்றம்,பதகளிப்பு, பீதி என்பன காணப்படும். சற்றுப் பின் கழிவிரக்கம், பதகளிப்பு, இயலாமை, அனுசரித்துப் போகமுடியாமை,மரத்துப்போன நிலை, மிகை எழுச்சி, குற்ற உணர்வு, இடம் தெரியாது அலைதல், சம்பவங்கள் மீள மீளவரல், பயங்கரக் கனவு என்பன ஏற்படும். தாமதமாக ஏற்படும் மாற்றங்களாக செயற்றிறன் குறைதல், போதைப் பொருள் பாவனை, தற்கொலை, உடல் மாயநோய்கள், திருமண முறிவு, குடும்பத்தை நடத்துவதில் பிரச்சினைகள், தகாத பாலியல் தொடர்புகள் என்பன ஏற்படும்.

சக உளத்தேவைகளை அறிவதற்கு நெருக்கீட்டின் விளைவுகளைத் தெளிதல் வேண்டும். நடத்தை மாற்றம், செயற்றிறன் குன்றல், சக்தியற்ற நிலை, ஆறுதலடைய முடியாமை, கிரகிக்க முடியாமை, நித்திரையின்மை, மீள நினைத்தல், ஞாபகமறதி, போதைப்பொருள் பாவனை என்பன நெருக்கீட்டால் ஏற்படும் சமூக உளமாற்றங்களின் அடிப்படை, உடல் மாற்றங்களாக தலையிடி, களைப்பு, தசைப்பிடிப்பு, பதற்றம் , இதயத்துடிப்பு அதிகரித்தல், உணவில் நாட்டமின்மை, வயிற்றுநோ, வாந்திக் குணம் தொடர்பற்ற உடல்நோ என்பன காணப்படும். உணர்வுகளில் ஏற்படும் மாற்றங்கள் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

எரிந்து விழல், பயம், படபடப்பு, இயலாத நிலை, துயரம் தோய்ந்த நிலை, ஆதரவு அற்ற நிலை, குற்றநிலை, ஒரே நினைவு மீளமீள வரல், மறதி, தற்கொலை எண்ணம் என்பன ஏற்படும். உறவு முறையில் மாற்றங்கள் ஏற்படும். இதனால் தனிமனித உறவுகள் பாதிக்கப்படும். குறைந்த ஆதரவுநிலை உருவாகும். நம்பகத் தன்மை குன்றும். இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் வாழ்க்கைப் பாத்திரத்திலும் பொறுப்பேற்பிலும் மாற்றங்கள் ஏற்படும். மற்றவர்களில் தங்கி வாழும் நிலை ஏற்படும்.

ஒருவர் துன்பத்தில் உள்ளபோது அவருடன் நெருங்கிப் பழகுபவர்களிடம் பற்று ஏற்படும். இத்தகைய இடரின்போது கணவன், மனைவியை இழந்தோர் அல்லது எதிர்ப்பாலோர் ஒருவருடன் ஒருவர் வைத்துக்கொள்ளும் உறவு, ஒருவரை மற்றவரில் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் தங்கவைத்து விடுகின்றது. இதுவே தகாத பாலியல் உறவுக்கு வழிவகுக்கின்றது. இடருக்குப் பின்னரான தந்தையற்ற பிள்ளைகளுக்கும், திருமண முறிவுகளுக்கும் இதுவே காரணம். இத்தகைய விழிப்புணர்வு இருந்தால் இத்தகைய சமூக உளப்பிரச்சினை ஏற்படும் சந்தர்ப்பங்களைக் குறைக்கலாம்.



இறுதியாக சமூக உளஆதரவு மூலம் உணர்வுகளை எதிர்கொள்ளவும், இழப்புக்களை எதிர்கொள்ளவும் புறநிலை உதவி வழங்கல் மூலம் மீள் வாழ்வைக் கட்டி எழுப்பி, புத்துயிர் பெற்ற சமுதாயத்தை உருவாக்கலாம். இங்கு அன்பானவர்களின் இழப்பு என்றென்றும் இன்பமான வடுவாக அமையும்.

1. சிறுவர் நலன் பேணல் அமைப்பு பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவ நிர்வாக சேவையினரது அர்ப்பணிப்புடன் உருவாக்கப்படல் வேண்டும்.
2. பாதிக்கப்பட்ட சிறுவர்களின் விவரங்கள் அறிதல்.
3. உளவளத்துணை வழங்கலும் பாதிப்பில் இருந்து மீட்டலும்.
4. தொடர்ச்சியான சமூக உளவள வசதிகள் ஏற்படுத்தலும் கல்வி வசதி அளித்தலும்
5. விவரங்களை ஆவணப்படுத்தலும் பாதிப்புக்களை உணரலும் முன்னேற்றங்களை காலத்துடன் அதாவது 6 மாதங்கள் ஒரு வருடம், 5 வருடங்கள், 10 வருடங்களில் அவதானித்தலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளலும்.

போராலும் அநாதைகள் ஆக்கப்பட்ட சிறுவர்களின் பராமரித்தலில் சமூக சூழல் ஆதரவாகக் காணப்படவில்லை. எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்தது. ஆனால், அண்மைய இடரின் பின் னரானநிலைவேறு. பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உருவாக்கப்பட்டது. எனவே, புதிய சிறுவர் நலன் பேணும் நிர்வாகம் அமைக்கப்படல் வேண்டும்.




பாதிக்கப்பட்ட சிறுவர்களை தாய், தந்தையை இழந்தவர்கள் தந்தையை இழந்தவர்கள், சகோதரர்களை இழந்தவர்கள், ஏனைய இழப்புக்களை நேரில் கண்டவர்கள் என வகைப்படுத்தலாம். பொதுவாகசிறுவர்கள்தங்கள்குடும்பத்துடன் அன்றேல் நெருங்கிய உறவினர்களுடன் வாழ்வதே சிறந்தது. அப்பொழுதே அவர்கள் தங்கள் சமூகத்துடன் உறவை வளர்ப்பர். இதற்கு அந்தச் சிறுவர்களை பராமரிக்கும் உறவினர்களுக்கு பொருளாதார உதவி வழங்கல் வேண்டும். இதனை சிறுவர் நலன் பேணும் அமைப்பு மேற்கொள்ளும். மேலும் அவர்களுக்குத் தேவையான சமூக உள வசதிகள் அளிக்கப்படும். பிற்காலத்துடன் முன்னேற்றங்கள் அவதானிக்கப்படும்.

உறவினர் எவராலும் பராமரிக்க வசதியற்ற சிறுவர்களுக்கு விசேட பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்படலாம். ஆனால் இவர்கள் அமைப்பு ரீதியாக பராமரிக்கப்படும் போது குடும்ப உறவு, சமூகத்தில் மீண்டும் செல்லல் என்பன சில தாக்கங்களை ஏற்படுத்தும். ஐந்து வயதுக்கு உட்பட்டவர்களுக்கு 5 சிறுவர்களை ஓர் இளம் சமூக சேவகி பராமரிக்கலாம். இதனால், அந்தச் சிறுவர்கள் ஒரு தாய்க்கு உரிய அன்பைச் செலுத்தி வாழ்வார்கள். அந்தச் சமூக சேவகியும்5 வருடங்களுக்காவது அந்தச் சிறுவர்களுக்கு சேவை செய்ய வேண்டும். 5-10 வயதுக்கு உட்பட்டோரில் 10 சிறுவர்களை ஒரு சமூக சேவகி பராமரிக்கலாம். 10-15 வயதில் 20 சிறுவர்களை ஒரு சேவகி பராமரிக்கலாம். இதன்மூலமே சிறுவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கலாம். மூன்றாவது அம்சமான, பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளத்துணை வழங்கலும். பாதிப்புக்களில் இருந்து மீட்டலும் மிக முக்கியமானது. பாதிப்புக்கள் சிறுவர்களின் வயதுக்கு ஏற்ப வேறுபடும். இரண்டு வயது வரை குழந்தைகளுக்கு சிறிதளவு காரண காரிய அறிவு உள்ளது. அவர்கள் அழுது கொண்டிருப்பார்கள். இரண்டு வயதில் இருந்து ஆறு வயது வரை அதிக அளவு பாதிப்பு காணப்படும். இந்தக் குழந்தைகள் குறைந்த அளவு சொற்களையே பாவிப்பர். தொடர்பாடல்குறைவு, பெற்றோரின் செய்கைகளால் இலகுவில் பாதிக்கப்படுவர். பெரியோரின் ஆதரவைத் தேடுவர், கைவிடப்படும் நிலை காணப்படும். இறப்பின் நிரந்தரத் தன்மையை உணரமாட்டார். அதாவது அம்மா வரவா தம்பி படுத்திட்டான் எனக் கூறுவர். சித்திரங்கள் வரையவிடல், விளையாட்டுச் சிகிச்சை, ஆடல், பாடல், அபிநயம் என்பன இவர்களுக்கு உதவும்.

6-12 வயது வரையான சிறுவர்கள் இழப்பின் நிரந்தர இயல்பை உணர்வர். அவர்கள் பல எண்ணங்களுடன் இருப்பர். சம் பவங்கள் பற்றிக் கதைக்க விரும்புவர். பல உணர்வு மாற்றங்கள் காணப்படும். இவர்களுக்கு உணர்வுகளை ஆற்றுப்படுத்தலும் மீளக் கட்டியமைத்தலும் மேற்கொள்ளல் வேண்டும்.

13-18 வயதுவரையானசிறுவர்களுக்கு உளவளத்துணையின் மூலம் அவர்களது உணர்வுகளுக்கும் எண்ணங்களுக்கும் மதிப்பளித்தல் வேண்டும். ஆபத்தான நடத் தைகளில் ஈடுபடாதிருக்க அவதானிக்க வேண்டும். கூட்டான நடவடிக்கைகளில் ஈடு படலை ஊக்குவிக்க வேண்டும். பொதுவாக இந்த இடரால் பாதிக்கப்பட்ட சிறார்களுடன் உரையாடும்போது, நாம் எதுவும் இடரைப் பற்றி கதைக்காதபோதுகூட அவர்கள் அத னைப்பற்றி கதைப்பதை அவதானிக் கலாம்.

இது ஏன் சம்பவித்தது? நான் எங்கே போவேன்? இது மீண்டும் நிகழுமா? எனக்கும் ஏற்படுமா? என்ற கேள்விகள் சிறுவர்களின் மனதில் எழும். இதனை நாடகங்கள் மூலம் வெளிப்படுத்தி விளக்கலாம். நாடகச் சிகிச்சை மூலம் மேற்கூறியவர்களை தாமாக நடிக்க விட்டு அவர்கள் உணர்வை வெளிப்படுத்தலாம். அமைதியாக உள்ள வர்களில் எம்மால் உருவாக்கப்படும் நாடகங்கள் அதாவது மேலே கூறிய வார்த்தைகள் அடங்கலாக உணர்வுகளை வெளிப்படுத்த உதவும்.

இதேபோல் சித்திரங்களைக் கீறிவிடுவதன் மூலமும் களிமண் விளையாட்டுக்கள் மூலமும் உணர்வுகளை வெளிப்படுத்தலாம். பாதிக்கப்பட்ட பகுதிகளை படிப்படியாக பார்வையிடுவதால் அதன் அச்சத்தை கலந்துரையாடி, விளையாடி நீக்கலாம். நான்காவது, தொடர்ச்சியான சமூக உள்வளத்துணை வழங்கல் என்பது சிறுவர்களுக்கு அவர்களைப் பராமரிப்பவர்களுக்கு பொருளாதார உதவி, கல்வி வசதி, பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் என்பவற்றை வழங்கல், கர்நாடக இசை, நாட்டியம், மிருதங்கம், வயலின் என்பவற்றை கற்பிக்கலாம். மேலும் குடும்பங்களில் பிரச்சினைகள் வராது அவதானித்தல் என்பன அடங்கும்.

ஐந்தாவது, ஆவணப்படுத்தலும் பாதிப்புக்களை உணரலும் முன்னேற்றங்களை காலத்துடன் அவதானித்தலும் ஆகும். இது எமது செயற்பாட்டின் உண்மைத் தன்மையை கணிதப்புள்ளி விவரத்துடன் தரும். மேலும், காலத்துடன் காலம் செய்ய வேண்டிய மாற்றங்களை எதிர்வு கூறும். மேலும், பொருளாதாரத் தேவைகளை கணிப்பிட உதவும். மேலும் சர்வதேச சிறுவர் நிதியம் போன்ற சிறுவர் நலனில் அக்கறை உள்ளோருக்கு [illegible] தகவல்களைக் கொடுக்கும். மேலும், சிறுவர்கள்ள உறவினருடன் வாழவிடும்போது அவர்களது முன்னேற்றத்தை அவதானிப்பதற்கும் தேவையான சமூக உளவசதிகளை ஏற்படுத்தவும் வசதியாக அமையும்.

இன்றைய சிறுவர்களே நாளைய சிற்பிகள். எனவே அவர்களை எவ்வளவு நாம் மேம்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு அவர்களால் எதிர்காலத்தில் நாமும் நமது நாடும் பலன் பெறும் என்பது உறுதி.

உளவளத்துணை புலனீர்ப்புப் பட்டியல்

I. இடரின் தாக்கங்கள்

1. உடல் ஊறுகள், 2. உளஊறுகள், 3. சமூகத் தாக்கம், 4. பொருளாதாரத் தாக்கம்.

II. இடர் ஏற்படுத்தும் உணர்வு மாற்றங்கள், நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

1. உடனடியானவை -பதகளிப்பு, பதற்றம், பீதி
2. ஒரு மாதத்துக்குள் ஏற்படுபவை- கவலை, பற்றின்மை, விறைத்த நிலை, மிகை எழுச்சி நிலை, குற்ற உணர்வு, அனுசரிக்க முடியாத நிலை, அலைந்து திரிதல்,நினைவுகள் மீண்டும் மீண்டும் வரும்.
3. 6 மாதத்துக்குப் பின் ஏற்படுபவை- கழிவிரக்கம்,மாறுபட்ட அறிகுறிகள், மனச்சோர்வு, உளத்தாக்கத்துக்குப் பின்னான மன வடு.

III. சமூக உளத்தேவைகள்

1. நெருக்கீட்ட அனுபவத்தை விளக்கல்
2. உடலியல் மாற்றங்களை விளக்கல்
3. உணர்வு மாற்றங்களை விளக்கல்
4. உறவு மாற்றங்களை விளக்கல்

IV. சமூக, உள ஆதரவு

**ஒருவர் துன்பத்தில் உள்ளபோது அவருடன் நெருங்கிப் பழகுபவர்களிடம் பற்று ஏற்படும்.**

1. உணர்வு மாற்றங்களை எதிர்கொள்ளல்
2. இழப்புக்களை எதிர்கொள்ளல்
3. புறநிலை உதவி வழங்கல்
4. தனிப்பட்ட வாழ்க்கையை மேம்படுத்தல் சமூகத்தை மீளக்கட்டியமைத்தலும்

V. சமூக உளவள மேம்படுத்துநரின் பங்களிப்பு

1. அவர்களில் உடலிலும் மனதிலும் ஏற்பட்ட மாற்றங்களை விளங்க வைத்தல்.
2. உடல் ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் பாதிக்கப்படுதலைக் குறைத்தல்
3. வாழ்க்கையை மீளக் கட்டியமைக்க உதவுதல்

வீடு, வாழ்க்கைப் பொருள்கள், சட்ட உதவி, நட்டஈடு, மருத்துவ வசதி, நீதி, உரிமை, சமூக உளகவனிப்பு

VI. சமூக உளவள மேம்படுத்தல்கள் சமூக உளநலம்

1. உணர்வுகளை வெளிப்படுத்தல்
2. உள்ளார்ந்த உணர்வைப் பெறல்
3. உயிரோட்டமான செவிமடுத்தல்
4. புறச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
5. சமூக ஆதரவு
6. மனதை சாந்தப்படுத்தலும் பொழுது போக்குகளும்

VII. ஆன்மிகம்

1. தனிநபர்களிடம்குழந்தைகள், பெண்கள் முக்கிய கவனம்
2. குடும்பம்
3. சமூகம்

VIII. உளத்தாக்கத்துக்கு பின்னான மன வடுவுக்கான உளவளத்துணை

1. ஆர்வத்தை ஏற்படுத்தல்
2. நிகழ்வு பற்றிய கருத்தை அறிதல்
3. எதிர்வு கொள்ளும் முறைகளை அறிதல்
4. விலத்தல் பற்றி அறிதல்
5. மனதில் மீட்டும் எண்ணங்களை அறிதல்
6. பழைய பாதிப்புகளை மீள் எழல்
7. எரிந்து விழக்காண்படின் அடையாளம் காணல்
8. பதகளிப்பு நிலையை அறிதல்
9. மதுப்பாவனையை அவதானித்தல்
10. வாழ்க்கை நிலையை அறிதல்
11. முந்தைய நிலையை அறிதல்
12. தற்கொலை எண்ணம்
13. உதவி இருத்தலை அறிதல்

(தொடரும்)

## அரசமைப்புக்கு

பிடப்பட்டுள்ளதாவது:-
நாளை திங்கட்கிழமை முதல் 22 ஆம் திகதி வரை கொழும்பு, கொம்பனிவீதியில் அமைந்துள்ள விசும்பாயவில் புதியஅரசமைப்புஉருவாக்குவது தொடர்பான மக்கள் கருத்துக்களை உள்வாங்கும் நடவடிக்கை இடம்பெறும்.
இதன் பிரகாரம் காலை 09.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை பொது மக்கள் ஆலோசனை வழங்க முடியும். இதில் அனைத்துப் பொதுமக்களும் இணைந்து கொள்ளுமாறு புதியஅரசமைப்புஉருவாக்குவது தொடர்பான மக்கள் கருத்துக்களை-உள் வாங்கும் குழு பொதுமக்களிடம் கோரியுள்ளது.
இது தொடர்பாக 0112 437 676 என்ற தொலைபேசி இலக்கத்துக்கும் 0112 328 780 என்ற தொலைநகல் இலக்கத்துக்கும் பொதுமக்கள் ஆலோசனை வழங்க முடியும் -என்றுள்ளது. (த-வ)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராணி சிவலிங்கம்



பிறப்பு: 27.02.1958 இறப்பு: 13.01.2016

யாழ்.பருத்தித்துறை, வராத்துப்பளையைப் பிறப்பிடமாகவும், கனடாவை (மொன்றியல்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி சிவலிங்கம் 13.01.2016 புதன்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மரியதாஸ் மற்றும் அருளம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், மகிந்தன், ராகுல் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மேரிபோலின், காலஞ் சென்றவர்களான ஜெயபாலன், ஜெயராணி மற்றும் ஜெயசாந்தினி, ஜெயரூபன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அருமைத்துரை மற்றும் தேவசகாயம், மலர் (இந்தியா), ராஜதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், ஜெயசீலன் (பிரான்ஸ்), றெஜினோல்ட், ஜெய நிறோஜினி, ராஜினி, ஜென்சா, றெனிபேட் (உதயன்-சுடரொளி) மற்றும் காலஞ் சென்ற றொனால்ட் ஆகியோரின் அன்புச் சிறிய தாயும், சிவபாலன், ராஜன், சுரேன் (லண்டன்), பிரியங்கா (கனடா), யுவபாரதி (கனடா), மீரா (கனடா) ஆகியோரின் அத்தை யும், றெஜிம்ஷா, றெக்ஷா, ஜெஸ்லியா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு (கனடா நேரம்) Aeterna funeral home, 55 Rue, Gince, Saint-Laurent, QC H4N 1J7, Canada என்னும் முகவரியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(62250)(11,15,17,18) தகவல்: குடும்பத்தினர்.

தொடர்பு:- 021 205 6134, 021 300 8105

## மரண அறிவித்தல்

### திருமதி கனகமணி சுந்தரம்



மிருசுவில் வடக்கு மிருசுவிலைச் சேர்ந்த திருமதி கனகமணி சுந்தரம் 15.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-தெய்வானப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான இராசய்யா, நல்லம்மா ஆகியோரின் சகோதரியும், நாகபூரணமலர் (கனடா), சிவசுப்பிரமணியம், துளசிராணி, பிரேமமல்லிகா, சிவநேசன், சிவபாலன் (**ISA** கிளிநொச்சி வலயம்), சிவரூபன் ஆகியோரின் பாசமிகு தாயும், கனகரட்ணம் (கனடா), புஸ்பராணி, இராசா, வேலுப்பிள்ளை, சசிகலா, உதயகலா (ஆசிரியர், விடத்தற்பளை, கமலாசனி வித்தியாலயம்), துஷ்யந்தி (முகாமைத்துவ உதவியாளர், சுகாதார அமைச்சு, திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு மாமி யும், மிதிலா, லாவண்ஜா, மதுஷன், மலரவன், பிந்துஜன், தரணிஜன், கிரூபிகா, கீர்த்தனா, கிரிகரன், கிரித்திகா, ஜாதவி, கிருத்திக், கிரிசாயினி, இளவேணி, அபிஷாலினி, சங்கீதன், ஓவியா, தூரிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2016) திங்கட்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மிருசுவில் வடக்கு பெரியானோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 5542901

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் சிவப்பிரகாசம்



புங்கன்குளம் கணக்கர் சந்தியை பிறப்பிடமாகவும் நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிவப்பிரகாசம் நேற்று (16.01.2016) சனிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் - அன்னமலர் தம்பதியரின் சிரேஷ்ட புத்திர ரும், காலஞ்சென்ற முருகேசு-சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், தனலட்சுமி (தனம்) அவர்களின் பாசமிகு கணவரும், பாலுகோபன் (பிரான்ஸ்), சிற்சபேசன் (லண்டன்), விமலேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளினி (பிரான்ஸ்), பிரேமவதனி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற புனிதவதி மற்றும் சிவசோதி காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் சிவநாதன் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் சிவராணி (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரனும், அபிநிஷா, ஆகாஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் நவக்கிரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் நவக்கிரியில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராச வீதி, நவக்கிரி
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசேந்திரம் பூரணம்



வட்டுக்கோட்டை துணவியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் மூத்த விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் பூரணம் நேற்று (16.01. 2016) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து- சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான குமாரு-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், சரஸ்வதி, சிவபாலு (அனோஜன் வார்ப்பு தொழிற்சாலை), சிவராசா (ஜேர்மனி), அருளானந்தராசா, கனகராசா (பிரான்ஸ்), சந்திரவதி, குணவதி (ஜேர்மனி), இந்திரா (கனடா), சுதேந்திரா (மீன்பிடி போக்குவரத்து அமைச்சு) சுதேந்திரராஜன் (லண்டன்), தர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், அழகேந்திரம், தவமலர், வனிதா (ஜேர்மனி), சுபாஜினி (பிரான்ஸ்), செல்வராணி, தேவராசா (யாழ். மாநகரசபை), ரஞ்சிவதனன் (ஜேர்மனி), சுதாகர் (கனடா), வசந்தன், வனிதா (லண்டன்), தயாபரன் (சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற அனுசியா மற்றும் நிரோஜன் (ஜேர்மனி), சயந்தன், சுகன்ஜா, பிரதீபா, அனோஜன் (பிரான்ஸ்), நிசாந்தன் (வேலணை கல்வி வலயம்), பிரவீனா, சதீஸ்காந்த், டினேஸ் (ஜேர்மனி), சபீனா (ஜேர்மனி), சாரங்கன் (பிரான்ஸ்), ஜெய ரங்கன் (பிரான்ஸ்), நிஜிதா, தர்சன், தனுசா, மதுமிதா, லெஸ்ஷாயினி, சுகந்தனி, சியா மினி (மீன்பிடி போக்குவரத்து அமைச்சு), தயீன் (ஜேர்மனி), துஷான் (ஜேர்மனி), சுயீன் (கனடா), ஜோஜெல் (கனடா), ஜெருசா (கனடா), கபீஸ் (லண்டன்), கரிஸ்மா (லண்டன்), தனீஸ், பிரவீன், கஜனிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணியளவில் 41, கொண்டலடி வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

41, கொண்டலடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 1525

தகவல்:
குடும்பத்தினர்.

## இலவச கணினி வகுப்புக்கள்

தரம் 10, O/L, A/L மாணவர்களுக்கான
(i) Diploma in Ms - Office
(ii) Diploma in Internet Technology

ஆரம்பம் : 24.01.2016

- தைப்பூம் அன்று புதிய பிரிவுகள்
- பெறுமதி மிக்க சான்றிதழ்
- காலம் 3 மாதங்கள்

IPS Thirunelveli
தொடர்புகட்கு: 076 6852 529



## தேவை

கட்டட நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வரும் எமது நிறுவனத்திற்கு [Decon] உப ஒப்பந்தக்காரர்கள் [மேசன், கூலி] [Sub Contractor] தேவை.

தொடர்புக்கு: 077 3614 638 075 6577 856


## அரச சேவைகள் தாமதமாவதற்குக் காரணம் கைபேசி

அரச சேவைகள் தாமதமாவதற்கு கைத் தொலை பேசிகளும் ஒரு காரணம் என்று அரச தொழில் சங்க சம்மேளனம் மேற்கொண்டுள்ள ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. கைத் தொலைபேசி பாவனைப்பழக்கம் அதிகரித்துள்ளதால் அரச ஊழியர்கள் மாதம் ஒன்றிற்கு 40மணித்தியாலயங்களை எந்தவித பிரயோசனமும் இன்றி கழிப்பதாக அதில் தெரிவிக்கப் பட்டுள் ளது. அரச அதிகாரிகள் நாளொன்றுக்கு 08 மணித்தியாலங்கள் வேலைசெய்ய வேண்டும் எனினும், 60 வீதமான அரச சேவையாளர்கள் இரண்டு மணித்தியாலங்களுக்கும் அதிக நேரத்தை தொலைபேசியுடன் செலவிடுவதாக அரச தொழில் சங்க சம்மேளனத்தின் செயலாளர் அஜித் கே.திலகரத்ன குறிப்பிட்டுள்ளார். அரச துறையின் வினைத்திறனை முன்னேற்ற வேண்டுமாயின் இந்த நிலைமை தொடர்பில் பொது நிர்வாக அமைச்சு கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (வ-5)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி இன்பலதா பிரதீபன்
அவர்களின் தந்தை
**துரைராசா இரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மல்லாகம் ம.வி.
ஆசிரியர் நலன்புரிக் கழகம்.


## நிரந்தர வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் உள்ள தொழிற்சாலைகளான ஜேம்/ டொபி/ கிஸ்வுஸ்/ சொக்லட்/ யோகெட்/பால்மா போன்றவற்றின் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/தரம்பிரித்தல் போன்ற பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண்,பெண் உடன்தேவை. (நண்பர்கள்- குழுக்கள்- தம்பதியினர்) சம்பளம் - 22000/- 38000/-

தொடர்புக்கு : 077 4969 340



## தேவை

கட்டட நிர்மாணப்பணியினை மேற்கொண்டு வரும் நிறுவனத்திற்கு [Decon] அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் [T/O],கணிய அளவியலாளர் [Q/S] தேவை. (ஆண்கள் மட்டும்)

தொடர்புக்கு: 077 3614 638 075 6577 856


## கண்ணீர் அஞ்சலி



எமது கொக்குவில் மேற்கு, சொர்ணவடலி ஸ்ரீ சொர்ணசித்திவிநாயகர் ஆலய குருக்கள்

**கணபதிக்குருக்கள் பாஸ்கரக் குருக்கள்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

கொக்குவில் மேற்கு, சொர்ணவடலி
சொர்ணசித்தி விநாயகர்
தேவஸ்தான பரிபாலன சபை.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 18.12.2015 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர்
**பாலன் யோகரத்தினம்**
(உரிமையாளர், றோயல் வைன் சொப், மானிப்பாய்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

கனகசபை வீதி, மானிப்பாய்.
குடும்பத்தினர்.


பணிப்பெண் தேவை / தொடர்பு: 071 4308 881

வெள்ளவத்தையில் வயதான தாயாரைப் பராமரிப்பதற்கும் மூவர் அடங்கிய குடும்பத்திற்கு வீட்டு வேலையில் செயற்படக்கூடிய 40 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் உடன் தேவை.
சம்பளம் - 17000/-



## ஆள்தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ளவரும், பழக விரும்புபவரும் தொடர்புகொள்ளவும். தொடர்பு: 077 2026295



## தேவை

தொடர்பு: 077 217 1483

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.



## வாடகைக்கு 077 741 6630

புளியங்கூடல் வடக்கு ஊர்காவற்றுறை சின்னமடுவடியில் 5 அறைகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு. நல்ல தண்ணீர், மின்சாரம் என்பன உண்டு.



## வாடகைக்கு

இல.146,144, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் (K.K.S வீதிக்கு அருகில், அரசடி) வீட்டுடன் (கீழ்+ மேல்) விசாலமான பிளாட்கடையும் சேர்த்து வாடகைக்குக் கொடுக்கப்படும்.

077 536 1370, 077 152 6874


## தவறிவிட்டது

மடிக்கணினி மற்றும் பெறுமதியான ஆவணங்களுடன் பொதி ஒன்று பருத்தித்துறை பிரதேச சபைக்கும் - யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவற விடப்பட்டடுள்ளது.

கண்டெடுத்தவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 9672 613 077 1336 789


## விற்பனைக்கு

Hero Honda achiever 150cc NP - VSXXXX
Japan chaly NP-GX Honda chaly

077 373 4107, 021 222 1995
திருநெல்வேலி



## வீடு வாடகைக்குண்டு

தொடர்பு: 077 710 9096

உடுவில் டச்சு வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.


## 19 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
1964 . 08 . 31



அநியாய அழிப்பில்
1997 . 01 . 16

**அமரர் சீவரத்தினம் உதயகுமார்**
**(கலட்டிக் கண்ணன்)**
திதி: அட்டமி

வானத்து சூரியனாய் வாழ்வில் மிளிர்ந்த ஒளி
எம்மை இருளில் சாய்த்தது தான் ஏனோ!
பாவிகளின் சதியால் நம் வாழ்வுச்சக்கரம் வழிமாறியதே
தலைவனை இழந்து தவிக்கின்றோம் கண்ணா
நீங்கள் இருந்து நிகழவேண்டிய நிகழ்வுகள் எல்லாம்
நீங்கள் இல்லாமலும் நிகழ்கின்றன எனினும்
நீங்கள் இருப்பதுபோல இல்லையே அப்பா-ஒவ்வொரு நிகழ்விலும்
நீங்களே எம் நினைவில் வந்து போகின்றீர்கள்
நீர்கண்ட கனவுகள் மெய்யாகுதே அதை
காணும் கொடுப்பனவு உமக்கில்லையே - நீர்
அழிந்தாலும் உம் ஆசி எம்மோடு தான் - நாம்
வாழ்கின்ற வாழ்வு உம் நினைவோடுதான்
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
ஆறாத்துயரம்பா - உங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
91, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.


1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

## மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials) Pedicure, Manicure (கைகள்,கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-01-2016
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-01-2016
திங்கள் காலை 9.30 மணி

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)







மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

## கட்சி தாவினாலும்

கிரமசிங்கவும் தீர்மானித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தவைத் தலைவராகக் கொண்ட கூட்டு எதிர்க்கட்சியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேர், ஆளும் தேசிய அரசில் இணைய விருப்பம் வெளியிட்டிருந்தனர்.

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அமைய அமைச்சர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் புதிதாக ஆளும் கட்சியில் இணைந்து கொள்பவர்களை அமைச்சரவைக்குள் உள்ளீர்த்தால் அது 19 ஆவது திருத்தச் சட்டத்தை மீறும் செயலாக மாறிவிடும் என்று ஜனாதிபதியும் பிரதமரும் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளனர்.

எனினும் அரசுடன் இணைய வரும் உறுப்பினர்களில் சிலருக்கு இராஜாங்க அமைச்சுக்களையும், பிரதியமைச்சுக்களையும் வழங்க முடியும் என்று இரண்டு தலைவர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, 'தேசிய அரசுக்குள் இணையவுள்ள மகிந்த வின் தரப்பினரில் அரைவாசிப் பேர், அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 30 இலிருந்து 53 ஆக உயர்த்தப்படுவதற்கு எதிர்ப்பை வெளியிட்டவர் கள்' என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (த-5)

## மீள்குடியேற்ற

வில் கலந்துகொண்ட மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை அவர்களது சட்டத்தரணிகளே தடுக்கின்றனர் என்று குற்றம் சுமத்தியிருந்தார். தமிழ் அரசியல் கைதிகளின் புனர்வாழ்வுக்கான கோரிக்கை நீதிமன்றத்தில் முன் வைக்கப்படும் போது, அரசியல் கைதிகளின் சட்டத்தரணிகள் அதனை நிராகரிப்பதாக தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தமிழ் அரசியல் கைதிகள் தங்களின் அதிருப்தியை தமது உறவினர்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர்.

அரசினால் புனர்வாழ்வுக்கு அறிவிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகள் உள்ளன. ஒரு வழக்குக்கு மாத்திரம் புனர்வாழ்வு என்றும் எஞ்சிய வழக்குகளின் தண்டனைகள் முடிந்த பின்னரே அந்தப் புனர்வாழ்வும் வழங்கப்படும் என்றுக்கேயே, எமது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இந்த உண்மை நிலை அமைச்சர் சுவாமிநாதனுக்கும் தெரியும். அவர் எங்களை வந்து சந்தித்த போது மேற்படி விக்கிரமசிங்க தெளிவாக எடுத்துக் கூறியிருந்தோம். அவரும் அதனை ஏற்றுக் கொண்டதுடன், சட்டமா அதிபர் திணைக்களத்திடமாலேயே இந்த விடயங்கள் குழப்பப்படுவதாகத் தெரிவித்திருந்தார்.

எங்களுக்கு முன்பாக அவ்வாறு தெரிவித்துவிட்டு, பொது நிகழ்வில் வைத்து அதற்கு எதிர் மாறாகப் பேசுவது பொருத்தமானது அல்ல. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அவ் வாறு அவர் செய்யக் கூடாது - என்று தமிழ் அரசியல் கைதிகள் அவர்களின் உறவினர்கள் ஊடாகத் தெரிவித்துள்ளனர். (த-5)

## முன்னாள் அரச

நடந்த தினத்தன்று தொலைபேசிக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இந்தத் தொலைபேசிக் கலந்துரையாடலுக்கான ஆதாரங்கள் தங்களிடம் இல்லை என்று தெரிவித்திருந்த தொலைபேசி சேவை வழங்கும் தனியார் நிறுவனம், தற்போது அதற்கான ஆதாரங்கள் அனைத்தையும் விசாரணை நடத்தும் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளது.

இந்த ஆதாரங்களை இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வசீம் தாஜுதீன் கடந்த 2012 ஆம் ஆண்டு கொழும்பு நாரஹேன் பிட்டியில் தீயில் கருகியிருந்த கார் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதுவொரு விபத்து என்று முன்னர் கூறப்பட்டிருந்தபோதிலும், இது திட்டமிடப்பட்ட ஒரு கொலை என்று நீதிமன்றத்தில் தெரிவித்த இரகசியப் பொலிஸார், அதற்கான பாதுகாப்புக் கமராக்களினால் பதிவாகிய காணொலி ஆதாரங்களையும் சமர்ப்பித்திருந்தனர். காணொலிகளை வெளிநாட்டுக்கு எடுத்துச்சென்று, ஆய்வு நடத்துவதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியிருந்தது.

இந்த நிலையிலேயே தற்போது தொலைபேசிக் கலந்துரையாடல் ஆதாரங்களும் இரகசியப் பொலிஸாரிடம் சிக்கியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வரான யோசித ராஜபக்ச, வசீம் தாஜுதீனின் படுகொலையுடன் தொடர்புபட்டிருப்பதாக குற்றச்சாட்டுக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## காணாமற்போனோரை

காணாமற்போனவர்களில் பெருமளவானவர்கள் இறந்தவர்களாகவே கருதப்பட வேண்டியுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை, எமது அமைப்பு கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாகக் காணாமற்போனோர் விடயத்தில் கரிசனையுடன் பல விடயங்களை முன்னெடுத்து வருகின்றது.

எமது மக்கள், காணாமற்போன தமது உறவுகள் இன்னமும் உயிரோடு இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையில் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறானதொரு நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான்தோன்றித்தனமாக அவர்கள் இறந்து போனார்கள் - காணாமற்போனவர்கள் இல்லை என்று சொல்ல முடியாது. அரசு பதில் சொல்லவேண்டும்.

இராணுவத்தினரிடம் சரணடைந்த, இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட, அடையாளம் தெரிந்த துணை ஆயுதக் குழுக்கவால் கடத்திச் செல்லப்பட்ட, வெள்ளை வான்களில் கடத்திச் செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வெளிக் கொண்டு வரப்படவேண்டும். அவர்கள் இறந்து போனார்கள் என்று பொதுவில் சொல்லிவிட்டு இந்த விடயத்திலிருந்து நழுவ முடியாது. அவர்கள் இறந்தார்கள் என்றால், அது எப்படி நடந்தது ? அதற்கு காரணமானவர்கள் யார்? என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும். இதனைப் பிரதமர் தெரிவிக்கவேண்டும்.

பிரதமர் தனது உரையில், வடக்கில் காணாமற்போன சம்பவங்களையும், தெற்கில் காணாமற்போன சம்பவங்களையும் ஒன்று படுத்தியுள்ளார். ஆனால் அவை இரண்டும் வேறு வேறு. இதனைக் கண்டிக்கின்றேன். பிரதமர் உண்மையை வெளிப்படுத்தத் தவறினால் சாத்வீகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும். மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் கருத்தைக் கண்டிக்கவேண்டும்-என்றார்.

காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் தெரிவிக்கையில், இந்தக் கருத்து தனிப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தா அல்லது அரசின் கருத்தா என்பது தெரியவில்லை. அரசின் கருத்தாக - அறிக்கையாக இருந்தால் இதனை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர், இரகசிய முகாம்களிலிருந்து பலர் விடுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதற்குப் பல சாட்சியங்கள் உண்டு. முதலில் இரகசிய முகாம்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும்.

தமிழ் மக்களை, அவர்களது பண்டிகை நாளில் புண்படுத்திய கருத்தாகவே பிரதமரின் கருத்து அமைந்துள்ளது - என்றார். (த-5)

## ஒரே குரலில்

மதிப்பிடுவதாக அமையும். தமிழ் மக்கள் ஒருமித்த குரலில் பேசினால் அதுசிறந்தவிடயமாகவிளங்கும் என பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய இராஜாங்க அமைச்சர் ஹியுகோ ஸ்வைர்கருத்துத்தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் அரசு முன்னெடுத்துள்ள நல்லிணக்க முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்துமா என்ற செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்,

நான் இந்தப் பயணத்தை முடித்துக்கொண்டு அதிகளவு நம்பிக்கையுடனேயே பிரிட்டன் செல்கிறேன் என மேலும் தெரிவித்த அவர் ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வு என்பது ஜெனிவா தீர்மானம் குறித்த இலங்கையின் அர்ப்பணிப்பை மதிப்பிடுவதாக அமையும் என வும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைக் குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் வழங்கிய வாக்குறுதிகளை நான் வரவேற்கிறேன். அவற்றில் முன்னேற்றத்தை காண்பிப்பது மிகவும் அவசியம், ஜூன் மாதம் இடம் பெறவுள்ள மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கை இந்த விடயத்தில் எட்டியுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்படும். ஆகவே, இலங்கை அந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் காண்பிப்பது அவசியம்.

பிரிட்டன், இலங்கைஜெனிவாவில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அந்த நாட்டிற்கு உதவுவது குறித்து அதிகளவு உறுதிப்பாட்டுடன் காணப்படுகின்றது. நான் இந்த விஜயத்தை முடித்துக்கொண்டு அதிகளவு நம்பிக்கையுடனேயே பிரிட்டன் செல்கிறேன். இலங்கையில் அமைச்சர்கள் ஜெனீவாத் தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் அர்ப்பணிப்புடன் உள்ளனர்.

இலங்கைக்கு ஜிஎஸ்பி வரிச் சலுகை மீண்டும் கிடைப்பதற்கு பிரிட்டன் முழு உதவியையும் வழங்கும், எனினும், இலங்கை இதனைப் பெறுவதற்காக மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் போன்ற விடயத்தில் முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு புதிய சட்டமொன்றை உருவாக்கும் முயற்சிகளுக்கு பிரிட்டன் உதவத்தயார் என நான் உங்கள் பிரதமரிடம் தெரிவித்தேன். இலங்கை இராணுவத்திடம் உள்ள நிலங்கள் மீள்கையளிக்கப்படுவது இடம்பெறும் வேகம் குறித்து வடபகுதியில் கரிசனைகள் காணப்படுகின்றன. அரசு இதனை மேற்கொள்ளும் என்பது குறித்து பெரும் எதிர்பார்ப்புகள் காணப்படுகின்றன. பிரதமர் இதுகுறித்து மிகுந்த அர்ப்பணிப்புடன் காணப்படுகின்றார்.

ஒரு வருடத்திற்குப் பின்னர் இங்கு மாற்றமடைந்துள்ள சூழல் குறித்து விசேடமாகத் தெரிவிக்க வேண்டும். குறிப்பாக வடபகுதியில் அங்கு காணப்பட்ட நம்பிக்கையின்மையும் அச்சமும் காற்றில்கரைந்துபோயுள்ளன. அதிகளவு ஊடக சுதந்திரம் காணப்படுகின்றது. இதற்கான பாராட்டுகள் அரசாங்கத்திற்கே செல்லவேண்டும். எனினும் இந்தவிடயத்தில் இன்னமும் முன்னேற்றம் காணவேண்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் விரைவில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். அவருடன் நான் கலந்துரையாடியதில் ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வு என்பது ஜெனிவா தீர்மானம் குறித்த இலங்கையின் அர்ப்பணிப்பை மதிப்பிடுவதாக அமையும்.

இலங்கையில் தற்போது காணப்படுவது ஜனநாயகரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசு. மக்களே வாக்களித்து அவர்களைத் தெரிவு செய்தனர். இந்த அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான கால அவகாசத்தை, ஆதரவை மக்கள் வழங்கவேண்டும். அதனைக் குழப்ப முயல்பவர்களை அரசு பொறுப்புக்கூறச் செய்யவேண்டும். இலங்கையின் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் பிரிட்டனின் அழுத்தம் எதுவும் கிடையாது. அதே வேளை அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்க வேண்டும்.

போர்க்குற்றங்களிற்கு பொறுப்பைக் கூறுவதற்காக பொறிமுறை குறித்து இலங்கை அரசு ஆராய்ந்து வருகின்றது. வெளிவிவகார அமைச்சர் இதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றார். எனினும் அது இலங்கையில் உருவாக்கப்பட்ட பொறிமுறையாகவே காணப்படும். ஆனால் சர்வதேசத்தின் பங்களிப்புக் காணப்படும். மேலும், இதுசர்வதேசநீதியில் திணிக்கப் பட்டதுமல்ல. தமிழ் மக்கள் ஒருமித்த குரலில் பேசினால் அது நல்லது. எனினும் இது ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாடு. கூட்டணி ஆட்சி காணப்படு கின்றது. பிரிட்டனில் இதுபோன்ற விடயங்களை நான் அனுபவப்பட்டுள்ளேன். எனினும் தமிழ் மக்கள் ஒருமித்த குரலில்பேசினால் அதுசிறந்தவிடயமாக விளங்கும். பிரிட்டன் பிரதமர் இலங்கை குறித்து அதிகளவு ஆர்வம் கொண்டுள்ளார். இலங்கையில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதில் அவர் தனிப்பட்ட முதலீடுகளை மேற்கொண்டுள்ளார். உலகநாடுகளிற்கு அவர் மீண்டும் பயணம் மேற்கொள்ள ஆரம்பிக்கும்போது அவரது முதல் தெரிவு இலங்கையாக அமையலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

## முதல்வருடன்

இதனால் இன்றைய தினம் கூட்டம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

வினைத்திறன் உள்ள மாகாண சபை, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பாகச் செயற்படுதல் என்ற இரண்டு விடயங்களிலுமே இன்றைய சந்திப்பில் பேச்சு நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் முதலமைச்சருக்கும் இடையில் இன்று இடம்பெறும் மூன்றாவது சந்திப்பிலேயே, முதல் தடவையாக அமைச்சர்களும் அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## அரசியல் கைதிகள்

கிழமை மாலை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மீள்குடியேற்ற, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர் வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன், நீதியமைச்சர் விஜேய தாஸ ராஜபக்ச, சட்டம் ஒழுங்கு மறுசீரமைப்பு அமைச்சர் சாலக ரத்னாயக்க, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பங்கெடுத்த கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதாக, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார். கைதிகள் விடுவிப்பு விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பல்வேறு இடைஞ்சல்கள் - தாமதங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன. முன்னைய சட்டமா அதிபர் ஓய்வு பெற்றுள்ளார். இதனால் புதிய சட்டமா அதிபரின் ஊடாக - புதிய சூழ் நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடயங்களை எப்படி முன் கொண்டு செல்வது என்பது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் சில வழிமுறைகள் கண்டறியப்பட்டுள்ளன. அவ்வாறு கண்டறியப்பட்டுள்ள வழிமுறைகள் ஊடாக அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். இந்த வழிமுறைகள் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவின் பரிந்துரைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டார்.

என்ன வழிமுறைகள் என்பது தொடர்பில் கேட்டபோது, ஜனாதிபதியின் பரிந்துரை கிடைப்பதற்கு முன்னர் அதனை வெளிப்படுத்துவது பொருத்தமானதாக இருக்காது என்று பதிலளித்தார். (த-5)

# வில்லியர்ஸை இன்று வீழ்த்துவாரா டெஸ்ட் தலைவர் விராட் கோக்லி

அதிவேகமாக 7ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற சாதனையை நிலைநாட்ட கோக்லிக்கு இன்னும் 19 ஓட்டங்களே தேவைப்படுகிறது.

சர்வதேச ஒருநாள் ஆட்டங்களில் 7ஆயிரம் ஓட்டங்களை எடுத்த வீரர் என்ற சாதனை தற்பொழுது வில்லியர்ஸிடம் உள்ளது. அவர் 166 இன்னிங்ஸில் 7ஆயிரம் ஓட்டங்களைக் குவித்திருந்தார். இவரது சாதனையை நெருங்கி வருகிறார் இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லி. 160 இன்னிங்ஸ்களை எதிர்கொண்டுள்ள கோக்லி 6ஆயிரத்து 981 ஓட்டங் களைக் குவித்துள்ளார். வில்லியர்ஸின் சாதனையை முறியடிக்க கோக்லிக்கு இன்னும் 5 இன்னிங்ஸ்களில் 19 ஓட்டங்கள் தேவைப்படுகிறது.

இந்தியா–ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஆட்டம் மெல்பேர்ண் மைதானத்தில் இன்று ஆரம்பமா கிறது. இந்த ஆட்டத்தில் கோக்லி இந்த மைல்கல்லை எட்டுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களிலும் இந்திய அணி தோல்வியடைந்துள்ள நிலையில் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றால் மட்டுமே தொடரில் தனது இருப்பை நீடிக்கமுடியும்என்றநிலைமையும் ஏற்பட்டுள்ளது. தவான் தொடர்ச்சியாக தடுமாறிவரும் நிலையில் இன்றைய ஆட்டத்தில் இருந்து அவர் நீக்கப்படவும் வாய்ப்புக்கள் உள்ளன.

(ம)



# நெருக்கடியில் நியூசிலாந்து


*இரண்டாவது ரி-20 இன்று*

பாகிஸ்தான் – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி–20 தொடரின் இரண்டாவது ஆட்டம் நியூசிலாந்தின் கமில்டன் மைதானத்தில் இன்று இலங்கை நேரப்படி மு.ப 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதலாவது ரி–20 ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ள காரணத்தினால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்குகிறது நியூசிலாந்து. (ம)



இலங்கை கராத்தே சம்மேளனத்தின் அங்கீகாரம் பெற்ற பிரதம பயிற்றுனரும், ஜப்பான் நாட்டுக் கராத்தே அமைப்புக்கான அமெரிக்காவின் வெளிவிவகார பணிப்பாளருமான அன்ரே டினேஸ், தான் எழுதிய தற்காப்புக்கலை வரலாறு மற்றும் நுட்பங்கள் என்னும் தமிழ் நூலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார். (ம–23)



# ரூட் சதம், ஸ்ரோக்ஸ் அரைச்சதம் மீண்டும் மிரட்டுகிறது இங்கிலாந்து

இங்கிலாந்து–தென்னாபிரிக்கா அணிகளுக்குஇடையிலானநான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் இன்னிங்ஸ் 313 ஓட்டங்களுடன் முடிவு கண்டதுடன், பதிலுக்கு துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து நாள் முடிவில் 238–5 என்ற நிலை யில் உள்ளது.

நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து முதல் நாள் முடிவில் 267–7 என்ற நிலையில் இருந்தது. மொறிஸ் 26 ஓட்டங்களுடனும், ரபாடா 20 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். இருவரும் முழுதாக 30 ஓட்டங்களை எட்டவில்லை. மோர்கலும் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 313 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது தென்னாபிரிக்கா.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக ஸ்ரோக்ஸ்மூன்றுஇலக்குகளையும், புரோட், பின் இருவரும் தலா இரு இலக்குகளையும் மொயின் அலி, அண்டர்சன் இருவரும் தலா ஓர் இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்துக்கும் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. ஓரே ஓட்டத்துடன் வீழ்ந்தார் கேல்ஸ். 18 ஓட்டங்களுடன் அறிமுகவீரரானவில்யோனிடம் வீழ்ந்தார் குக். தற்பொழுது இங்கிலாந்து 22–2. ரூட், கொம்டன் இணை மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 50 ஓட்டங்கள் வரை தாக்குப் பிடித்தது. 80 என்ற சராசரியில் விளையாடிக் கொண்டிருந்தார் ரூட். 26ஓட்டங்களுடன்கொம்டன் ஆட்டமிழந்ததுதான் தாமதம் வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினார் ரெயிலர். அரைச்சதம் கடந்தார் ரூட். ரூட்டை விட அடித்தாடினார் ஸ்ரோக்ஸ். ஸ்ரோக்ஸ் அரைச்சதம் கடக்க மறுமுனையில் சதத்தை நிறைவுசெய்தார் ரூட். 56 ஓட்டங்களுடன் ஸ்ரோக்சின் இன்னிங்ஸ் முடிவுக்குவர நாள் முடிவில் இங்கிலாந்து 238–5. ரூட் 106 ஓட்டங்களுடனும், பரிஸ்ரௌவ் 4 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக மொர்கல், ரபாடா இருவரும் தலா 2 இலக்குகளையும், வில்யோன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

(ம)

# ஆட்டம் இன்று ஆரம்பம்

நடப்பு வருடத்தின் முதலாவது சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடரான ஆஸ்திரேலியத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. மெல்பேர்ண் ஆடுகளங்களில் ஆட்டங்கள் முழுவதும் நடைபெறவுள்ளன. ஆண்கள் பிரிவில் ஜோகோவிக், பெடரர், நடால் பெண்கள் பிரிவில் செரீனா, செரபோவா, வோஸ்னியாக்கி, இரட்டையர்பிரிவில் சானியா–கிங்கிஸ் ஆகியோர் மீது எதிர்பார்ப்புக்கள் அதிகம் உள்ளன. கடந்த வருடம் ஆஸ்திரேலிய கிண்ணத்தைக் கைப்பற்றிய செரீனா நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்குகிறார். (ம)



வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளை முன்னிட்டு வல்வை சிதம்பராக் கல்லூரி மாணவர்களுக்கு இடையிலான வீதியோட்ட நிகழ்வு நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. வல்வை நெடியகாடு விநாயகர் ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமான இவ்வீதியோட்டம் கடற்கரை வீதியூடாக தொண்டமானாறு சந்தியை அடைந்து பின்னர் பாடசாலை முன்றிலில் முடிவடைந்தது. (ம–108)

# துணைவி நியூஸ்ராரிடம் கிண்ணம் சென்றது

யாழ்ப்பாணம், ஜன. 17

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் உழவர் திருவிழாவைமுன்னிட்டுநடத்திய கால்பந்தாட்டத் தொடரில் துணைவி நியூஸ்ரார் அணி சம்பியனாகியது. அராலி மாவத்தை விளை யாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் அராலி ஏ.எல். அணியைஎதிர்த்து துணைவி நியூஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில்துணைவி நியூஸ்ரார் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. சிறந்த வீரனாக துணைவி நியூஸ்ரார்அணியின்கஜறூபனும். சிறந்த கோல் காப்பாளராக துணைவி நியூஸ்ரார் அணியின் கரனும் தெரிவானார்கள். (ம–23)



## பங்களாதேஷ்; - சிம்பாப்வே இரண்டாவது ரி-20 இன்று

பங்களாதேஷ்– சிம்பாப்வே அணிகளுக்குஇடையிலான்ரி–20 தொடரின் இரண்டாவது ஆட்டம் இலங்கைநேரப்படிஇன்றுபிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாக வுள்ளது. தொடரில் நான்கு ஆட்டங்கள். ஏதேனும். இரண்டு ஆட்டங்களில் வெற்றிபெறும் அணி தொடரை இழக்கும் நிலையில் இருந்து தப்பித்துக்கொள்ளும். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ்வெற்றிபெற்றிருந்தது.இதனால் இன்றைய ஆட்டத்தின் முடிவும் பங்களாதேஷுக்குசாதகமாக அமைந்தால் கிண்ணத்தை இழக்கும் நிலைமையில் இருந்து அந்த அணி தப்பித்துக்கொள்ளும். அதேநேரம் இறுதி இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற இக்கட்டான நிலை சிம்பாப்வேக்கு ஏற்படும். (ம)

# மிகப் பெரிய வெற்றியுடன் சம்பியனானது ஹென்றிஸ்

## யாழ். பாடசாலைகளின் கால்பந்தாட்டத் தொடரில்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாண பாடசாலைகளின் விளையாட்டுச்சங்கம் நடத்திய 19 வயதுப்பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் நெல்லியடி மத்திய கல்லூரியை வீழ்ததி கிண்ணத்தைக் கைப்பற்றியது சென்.ஹென்றிஸ்.

சென்.ஹென்றிஸ் கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் மின்னொளியில் இடம்பெற்றது இந்த இறுதியாட்டம். ஆட்டத்தின் ஆரம்பித்திலிலேயே (6ஆவது நிமிடத்தில்) மதுசனின் உதவியுடன் சென்.ஹென்றிஸின் கோல் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. அடுத்த சில சில நிமிடங்களில் தனேஸ் மற்றுமொரு கோலை அடிக்க ஹென்றிஸின் வாய்ப்புக்கள் பலம்பெற்றன. பதிலுக்கு நெல்லியடி மத்திய கல்லூரி அணியினுடைய முன்கள வீரன் விதுசன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். ஹென்றிஸின் மைந்தர்களான சுமன் 17ஆவது நிமிடத்திலும், அன்ரனிராஜ் 28ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முதல்பாதியின் முடிவில் 4:1 என்று முன்னிலை பெற்றிருந்தது ஹென்றிஸ்.



இரண்டாம் பாதியிலும் ஹென்றிஸின் ஆதிக்கம் மிகையாக பதிவாகியது. நெல்லியடி மத்தியால் ஈடுகொடுக்க முடியவில்லை. மேலும் மூன்று கோல்கள் சென்.ஹென்றிஸின் கோல் கணக்கில் உயர்வுபெற முடிவில் சொந்த மண்ணில் வைத்து 7:1 என்ற கோல் கணக்கில் சம்பியனானது சென்.ஹென்றிஸ்.

தாக்குதல் பாணியுடைய வீரனாக நெல்லியடி மத்திய கல்லூரி அணியின் விதுசன் சிறந்த கோல் காப்பளாராகக் ஹென்றிஸின் அமல்ராஜ், சிறந்த முன்கள வீரனாகச் சென்.பற்றிக்ஸின் கில்மன்ராஜ், சிறந்த வீரானாக ஹென்றிஸின் தனேஸ், தொடராட்டநாயகனாக ஹென்றிஸின் யூட்சுமன் ஆகியோர் தெரிவானார்கள்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து புங்குடுதீவு மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் சென்.பற்றிக்ஸ் 2:0 என்ற கோல் கணக்கின் அடிப்படையில் வெற்றிபெற்றது. முன்னதாக இடம்பெற்ற காட்சி ஆட்டத்தில் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதின. இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபரும் யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் தலைவருமான எஸ்.எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினராக ஐக்கிய இராச்சியத்தின் யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு சங்கத்தலைவர் எஸ்.சற்குணசீலன், வட மாகாண பிரதி கல்விப் பணிப்பாளர்எஸ்.சத்தியபாலன்ஆகியோர் கலந்துகொண்டனர்.(ம-23-86)

## இன்றைய மோதல்கள்

**ஜொலி ஸ்ரார் வி.கழகத் தொடர்**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெறவுள்ளன. மாலை 4 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் பட்டபிளை அணியை எதிர்த்து திருக் குடும்ப கன்னியர் மட அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியை எதிர்த்து ஜொலி ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**றோயல்வி.கழகத்தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வட மாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங் காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென்.யூட் அணி மோதவுள்ளது. (ம-23)

## சம்பியனானது ஆவரங்கால் இந்து இளைஞர்

யாழ்ப்பாணம், ஜன. 17

மல்லாகம் சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணத்தைக் கைப் பற்றியுள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் மல்லாகம் சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்திவந்த கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம்கடந்தவியாழக்கிழமை மல்லாகம் சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் இடம் பெற்றது. இதில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதிக் கொண்டது. 5செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25:23, 25:18, 25:22 என்ற நேர்செற் கணக்கில் இளவாலை மத்தியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது. சிறந்த வீரானாகவும், மக்கள்மனம்கவர்ந்த வீரனாகவும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த லக்சன் தெரிவானார். இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கஜதீபனும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் மனோகரனும் கலந்து கொண்டனர். (ம-23)



முல்லைத்தீவு கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில், முள்ளியவளை வித்தியா அணியை ஐந்து இலக்குகளால் வீழ்த்தி சம்பியனாகியது செல்வபுரம் சந்திரன் அணி. (ம-102)



தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு வல்வெட்டித்துறை விக் னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்திய விசித்திரப் பட்டம் விடும் போட்டியில் ஏற்றப்பட்ட சில பட்டங்கள். (ம-108,422)



# சமநிலையில் முடிவடைந்த ஆட்டங்கள்

இங்கிலாந்து பிறீமியர் லீக்கின், கடந்த புதன் கிழமை இடம்பெற்ற போட்டிகளில் ஆர்சனல்-லிவர்பூல் அணிகளுக்கிடையிலான போட்டியும் மன்செஸ்டர் சிற்றி - எவெர்ற்றன் அணிகளுக்கிடையிலான போட்டியும் செல்சி, வெஸ்ட் புரோம் அணிகளுக்கிடையிலான போட்டியும் சமநிலையில் முடிவடைந்ததோடு லெய்செஸ்டர், சௌதாம்டன், ஸ்டோக், சந்தர்லேண்ட் ஆகிய அணிகள் வெற்றி பெற்றுள்ளன. இதில், ஆர்சனல், லிவர்பூல் அணிகளுக்கிடையிலான போட்டியின் இறுதி நிமிடத்தில் லிவர்பூலின் ஜோ அலென் பெற்ற கோலின் மூலம், 3-3 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. அலென் தவிர, லிவர்பூல் சார்பாக ரொபேர்டோ பிளெமிங்கோ 10ஆவது 19 ஆவது நிமிடங்களில் கோல்களைப் பெற்றிருந்ததோடு, ஆர் சனல் சார்பாக ஆரோன் ரம்ஸே 14ஆவது நிமி டத்திலும் ஒலிவர் ஜிரோட், 25ஆவது, 55 ஆவது நிமிடங்களிலும் கோல்களைப் பெற்றிருந்தனர்.

இதேவேளை, மன்செஸ்டர் சிற்றி - எவர்ற்றன் அணிகளுக்கிடையிலான போட்டியில், இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது. இந்நிலையில், செல்சி, வெஸ்ட்புரோம் அணிகளுக்கிடையிலான போட்டியின் இறுதி நிமிடங்களில் வெஸ்ட் புரோமின் ஜேம்ஸ் மக்கெலன் பெற்ற கோலின் மூலம், 2-2 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. வெஸ்ட் புரோம் சார்பாக மக் கெலன் தவிர, கிரேய்க் கார்ட்னரும் கோலைப் பெற்றிருந்ததோடு, செல்சி சார்பாக சீஸர் அப்பிலிகுவாட்டா கோலைப் பெற்றதோடு, 'ஒவ்ண்' கோல் முறையில் ஒரு கோல் கிடைத்திருந்தது. ஏனைய போட்டிகளில் லெய்செஸ்டர், 1-0 என்ற கோல் கணக்கில் டொட்டேன்ஹாமை தோற்கடித்திருந்ததோடு, சௌதாம்டன், 2-0 என்ற கோல் கணக்கில் வட்போர்ட்டை தோற்கடித்ததோடு, ஸ்டோக், 3-1 என்ற கோல் கணக்கில் நோர்விச்சை தோற்கடித்திருந்தது. (கு)

அலுவலக உதவியாளர் தேவை
தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக உதவியாளர் (ஆண்) தேவை.
தொடர்பு: 071 5232 232

வேலைவாய்ப்பு
✦ அச்சு இயந்திரம் இயக்குநர்
✦ உதவியாளர்
(18.01.2016)
திங்கட்கிழமை நேரில் சமுகம் தரவும்
(அனுபவம் உள்ளவர்கள்விரும்பத்தக்கது)
தொடர்பு: ES Printers 159, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மின் ஒட்டுநர் தேவை
கேற், பெயர்ப்பலகை போன்ற வேலைகள் தெரிந்த மின் ஒட்டுநர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
திங்கட்கிழமை நேரில் சமுகம் தரவும்
தொடர்பு: 021 492 7471

கடை வாடகைக்குத் தேவை
யாழ் நகரினை அண்டிய பகுதிகள், பலாலி வீதியில் யாழ்நகர்- திருநெல்வேலி சந்தி, இடைப்பட்ட பகுதிகளில் கடை வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 5782684

ICT . Education . Traininig & Development Centre
EXAMPOINT
O/L & A/L
மாணவர்களுக்கான 5 நாள் கணனி மற்றும் ஆங்கிலப் பயிற்சி நெறி.
பயிற்சி கட்டணம் இலவசம்
பயிற்சி நெறியின் உள்ளடக்கம்
* Introduction about computer
* Graphics Designing
* Internet and e-mail
* MS Office
* Methodology of spoken english
விண்ணப்பத்துக்கு முந்துங்கள்
இப்பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
ExamPoint (Pvt) Ltd. 0776 28 48 45
No- 120/6, Palaly Road, Kantharmadam, Jaffna.
Tel : 021 221 6400 Email :info@exampoint.lk Web :www.exampoint.lk



# சிட்னி ரென்னிஸ் தொடரில் சானியா கிங்கிஸ் சம்பியன்

சர்வதேச ரென்னிஸ் தொடர் இன்று ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் ஆரம்பமாகிறது. இதற்கான தயார்ப்படுத்தல் தொடரான சிட்னி ரென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் மிர்சா கிங்கிஸ் இணை கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

இறுதி ஆட்டத்தில் சானியா - கிங்கிஸ் இணையை எதிர்த்து கரோலின் கார்சியா கிறிஸ்டினா இணை மோதியது. முதல் செற்றை 16 என்று இழந்த மிர்சா கிங்கிஸ் இணை, இரண்டாவது மற்றும் மூன்றாவது செற்களை முறையே 75, 105 என்ற செற்கணக்கில் கைப்பற்றி கிண்ணத்தைக் கொண்டுசென்றது. சானியா கிங்கிஸ் இணையின் தொடர்ச்சியான 30ஆவது வெற்றி இதுவாகும். (ம)

## இலங்கை அணியில் மோதல் எதுவுமில்லை

***மத்தியூஸ் விளக்கம்***

இலங்கை அணியில் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன என்று வெளியாகிய குற்றச்சாட்டை இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் மறுத்துள்ளார்.

இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடியது. இந்தப் பயணத்தில் இலங்கை வீரர்கள் மது விருந்தில் கலந்து கொண்டு மோசமாக நடந்து கொண்டதாகவும், வீரர்கள் தங்களுக்குள்ளே மோதிக்கொண்டதாகவும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இந்த முறைப்பாடுகளை மத்தியூஸ் மறுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் நியூசிலாந்தில் இருந்த போது பல குற்றசாட்டுகளை கேட்டோம். ஆனால் வீரர்களுக்குள் எந்த மோதலும் இல்லை. எங்களுக்குள் நல்ல உறவு இருக்கிறது. மேலும், பயிற்சியாளரான ஜெரோமை எனக்கு 8-9 வருடங்களாக தெரியும். எங்களுக்குள் எந்த வித மோதலும் கிடையாது. இது போன்ற வதந்தி



எங்கிருந்து வந்தது என்று எனக்கு தெரியவில்லை-என்றார். (ம)

மொழி வகுப்புகள்
திருமண பந்தத்தின் மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவாக சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய முறையில்
ஜேர்மன் Deutsch,
நெதெர்லாந்து - Dutch,
ஆங்கிலம், French,
Italian வகுப்புகள் நடைபெறுகின்றன

## இன்னும் இதை மறக்கலையா?

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடர் நடைபெறும் எனவும், நடைபெறாது எனவும் மாறிமாறி கருத்துக்கள் வெளியாகியிருந்த நிலையில் நடப்பு வருடத்தில் தொடர் நடைபெறும் என நம்பிக்கை தெரிவித்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. இந்தியா - பாகிஸ்தான் அணிகள் கடைசியாக கடந்த 2012ஆம் ஆண்டு இரு தரப்புத் தொடரில் விளையாடின. அதன்பின் இரு நாடுகளுக்கும் இடையே நேரடித்தொடர் நடைபெறாமல் உள்ளது. இந்த நிலையில் நடப்பு வருடத்தில் இந்தியா-பாகிஸ்தான் தொடர் நடைபெறும் என் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.